Arimaa Nokku

18 : 3 அக்டோபர் 2024

அரிமா நோக்கு

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842

அரிமா நோக்கு

18 : 3 அக்டோபர் 2024

ஆசிரியர்

ஈரோடு தமிழன்பன்

இணையாசிரியர்

வ. ஜெயதேவன்

ஆசிரியர் குழு

நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதா லட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்

அறிவுரைக் குழு

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

அச்சீட்டாளர்

என். சிவகுமார்
கிருஷ்ணராஜ் பிரிண்டர்ஸ்
36 தேவராஜன் தெரு
சென்னை 600 014

பொருளடக்கம் CONTENTS

ஞானபீட விருது 2023	வ. ஜெயதேவன்	03
அல்லிநகர வீரப்ப அய்யனார் வழிபாட்டுமுறைகள்	க. விஜி	05
Women and Trauma: Exploring war to study psychological changes in the memoir of Lynda De Vanter	Padmavathi. R.	09
எஸ். ராமகிருஷ்ணன் நாவல்களில் சமுதாய அவலங்கள்	ச. பிந்து	13
Indian Popular Folktales: A Cultural Exploration of Animals - Tiger and Leopard in Ruskin Bond's Stories	R. Jayasri	17
ஜோ. டி. குருஸின் புதினங்களில் பரதவர் நம்பிக்கைகள்	செ. விமலாபாய்	20
Alice Walker's main focus on Black Women Characters in her Novels	R. Suresh	23
நற்றிணை காட்டும் குறுநில மன்னர்கள்	பி. ராமர்	25
சொற்பிரிப்பு நெறிமுறையில் வினை வடிவங்களின் பயன்பாடு	போ. ஜான்சன்	29
சங்ககால வள்ளல்கள் கடையேழு வள்ளல்களாஅஅ..?	இரா. பசுபதி	35
இந்தியச் சமூகத்தில் 'திருமண முறை' தோன்றிய பின்னணி	ச. ஜீவானந்தம்	39
ராஜம் கிருஷ்ணனின் உத்தரகாண்டம் புதினத்தில் முதல்நிலை மாந்தர் படைப்பு	ரா. மீனா	42
கவிஞர் மு. மேத்தாவின் பார்வையில் பெண் அவலங்கள்	க. நித்யா	45
இஸ்லாமும் பெண்ணுரிமையும்	டி.மை. சாகிதா பானு	49
மச்சமுனி நாயனாரின் திருமந்திரம் – 800	வினோத் வாசுதேவன்	52
A Study to analyse the Organaizational Culture among Silk Weavers using Octapace Model with special reference to Thanjavur District	Chitra Isac	55
பேரறிஞர் அண்ணாவின் சொற்பொழிவும் சொல்லாற்றலும் – ஓர் ஆய்வு	ந. லெனின்	59
கணக்கியலைக் காட்சிப்படுத்தும் தமிழன் எளிமை	சம்பந்தம் ஏகாம்பரம்	63
கலித்தொகையில் உள்ளுறை, இறைச்சி	வே. ரத்னா	67
முல்லைக்கலியும் புராணக்கதைகளும்	அ. ஜெயக்குமார்	70
தொல்காப்பியத்தில் இளமைப்பெயர்கள்	ப. மகேஸ்வரி	75
மருக்கை நாவலில் இனவரைவியலும் குடும்பச் சிதைவுகளும்	மு.பெ. சுப்புலட்சுமி	77
தமிழக நடுகல் மரபும் திரைக்கதைத் தளங்களும்	சு. நாகரத்தினம்	82
பெண் மைய வாழ்வியல்: அன்னை வயல் புதினத்தை முன் வைத்து...	க. மாரிமுத்து	87
கவியரசு நா. காமராசன் கறுப்பு மலர்கள் கவிதைத் தொகுப்பில் சமூகச் சிந்தனைகள்	ரா. ஜெயஸ்ரீ	91
நவீன கால நளாயினி	த. தனஞ்செயன்	94
கட்டடக் கலை	அ. ஸ்ரீதேவி	96
பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனை	ப. பிரபு	98
திரிகடுகம் வலியுறுத்தும் புணை நெறி	இரா. ஹேமலதா	101
திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்	அ. ஷமீலா பேகம்	104
திருக்குற்றாலக் குறவஞ்சி: குறத்தி குறிசொல்லும் பான்மை	க. நித்தியா	108
கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்	இரா. கலாவதி	114
தொல்காப்பியம்...வாகைத்திணையில் பாடவேறுபாடு	கு. செந்தமிழ்ச்செல்வி	117
நீதி இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் அறங்கள்	சு. ஆறுமுகம்	120
Role of Infant-Directed Speech in the Holistic Development of a Child	Thulasidass Rajesh	124
அப்துல் ரகுமான் கவிதைகளில் சமுதாய விழிப்புணர்வுச் சிந்தனைகள்	வே. சதீஷ்	127

ISSN 2320-4842



தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

அலகிலா விளையாட்டை ஆதரித்து வளர்ப்போம்

அண்மையில் இரண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. உலகெங்கும் அவ் விளையாட்டுச் செய்திகள் ஊடகங்கள் வாயிலாகச் சென்றடைந்தன. நேரடி ஒளிபரப் பின் மூலம் காணும் வாய்ப்பையும் நாடுகளும் ஊர்களும் பெற்றன. விளையாட்டு என்று குறைத்து மதிப்பிடமுடியாத நிலையில் அவை நாடுகளின் முயற்சிகளாய், வளர்ச்சியின் அடையாளங்களாய் இன்று கருதப்படுகிற நிலை பெற்றுவிட்டன. தனியர் மார்பில் தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களாய்ச் சேர்வதோடன்றி, அவை பாராளு மன்றத்தில் பாராட்டப்படுகிற, விவாதிக்கப்படுகிற இடத்தைப் பெற்றுவிட்டன.

விளையாட்டு என்பது படிப்பின் ஒரு சிறப்புப் பகுதியாவே கருதி அதற்கு ஒரு மேம்பட்ட முதன்மை நிலையைப் பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் தர வேண்டிய இன்றியமையாமை பெற்றுவிட்டது. ஒரு நாட்டுக்கு வேண்டிய கல்வி யாளர்களை, அறிவியலாளர்களை, தொழில்முனைவோர்களை, தொழிலாளர்களை உருவாக்கித் தருகிற கல்விக்கூடங்கள்தாம் விளையாட்டு வல்லாளர்களையும் உரு வாக்கித் தரவேண்டும். கல்வி கற்கும் வாய்ப்புகள் இழந்த ,விளையாட்டு இயல்பூக்கம் மிக்கவர்களைக் கல்விநிறுவனங்கள் உணவு உறைவிட வசதியளித்து இளவயதி லிருந்தே பாதுகாத்து வளர்த்தெடுக்க முன்வரவேண்டும்.. தகுதியான விளையாட்டுத் திடல்கள் இல்லாமல், பள்ளிகள் கல்லூரிகள் நடத்தப்படுவதை அரசு கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். கல்விக்கூட வகுப்பறைகளுக்குத் தலைவர்கள், அறிஞர்கள் பெயர்களைச் சூட்டுவதுபோலவே உலகப்புகழ் பெற்ற நம் நாட்டுப் பெருமை பிறங்கவைத்த விளையாட்டு வீரர்கள் பெயர்களைச் சூட்ட வேண்டும்.

வெளிநாட்டு, உள்நாட்டுத் தொழில் முனைவோர்கள் விளையாட்டு வீரர்களைத் தத்தெடுத்து வளர்க்க வேண்டும் என்பதை அவர்களுக்குக் கட்டாயத் தகுதியாக விதிமுறை வகுக்க வேண்டும். விளையாட்டு வீரர்கள் அரசு அலுவலில் அவர்கள் கல்வித்தகுதிக்கேற்பச் சேர் வதற்கு வயது வரம்பைத் தளர்த்தி விதிகள் உண்டாக்கலாம்; நாட்டளவிலோ உலக அளவிலோ புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களின் மகளுக்கோ மகனுக்கோ மருத்துவ, பொறியியற் படிப்புகளில் தக்கவாறு இடஒதுக்கீடு அளித்துப் பெருமைப்படுத்தலாம்; வாய்ப்புகளைத் திறந்து வைக்கலாம்; முன்பு பயிற்சியாளராக விளங்கிய முதிய விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு மதிப்பு ஓய்வூதியம் வழங்குவதின் மூலம் இன்னறய விளை யாட்டு உலகுக்கும் நம்பிக்கை ஊட்டுகிற முயற்சியை அரசு மேற்கொள்ளலாம்.

பள்ளிப் பாடநூல்களில் விஞ்ஞானிகள், தலைவர்கள், இலக்கியவாதிகள் வாழ்க்கை இடம் பெறுவதுபோல் விளையாட்டுத்துறை சார்ந்தவர்களும் இடம்பெற நேர்ந்தால் இளைய தலைமுறைக்கு மெத்தவும் பயன்படும். ◊

ISSN 2320-4842

முக்கிய அறிவிப்பு

அரிமா நோக்கு ஆய்விதழ் **http://www.arimaanokku.in** என்னும் இணைய வலைத்தளத்திலும் வெளியிடப்படுகிறது.
கட்டுரையாளர்களுக்கும் நூலகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் மட்டுமே அச்சிதழ் 2024 அக்டோபர் முதல் அனுப்பப்படும்.
எவரும் இணையப் பதிப்பை வாசிக்கவும் தரவிறக்கம் செய்யவும் அச்சிட்டுக்கொள்ளவும் பயன்படுத்தலாம்.

IMPORTANT ANNOUNCEMENT

The print version of the journal will be sent only to authors, libraries, and institutions from October 2024 onwards.

Anyone can access the PDF version of the journal in the website:
http://www.arimaanokku.in

கட்டண விவரம்

வாழ்நாள் உறுப்பினர்	ரூ. 4000/-	US $ 175
புரவலர்	ரூ. 6000/-	US $ 250
பெரும்புரவலர்	ரூ. 10,000/-	US $ 500
மீப்பெரும் புரவலர்	ரூ. 20,000	US $ 1000
நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership)	ரூ. 15,000/-	US $ 700

விளம்பரக் கட்டணம்

பின்னட்டை (பல வண்ணங்கள்)	ரூ. 15,000/-
உள்ளட்டை (பல வண்ணங்கள்)	ரூ. 10,000/-
முழுப்பக்கம் (கருமை & வெண்மை)	ரூ. 3, 000/-
அரைப்பக்கம் (கருமை & வெண்மை)	ரூ. 1, 500/-

கட்டணம் செலுத்த:

NEFT/ DD in favour of ARIMAA NOKKU payable at Chennai

HDFC Bank (IFSC Code: HDFC0000795}, Perungudi Branch, Chennai 600 096
Current Account No. 50200006240790

அரிமா நோக்கு, அன்பகம், # 1, 15ஆவது குறுக்குத்தெரு, குறிஞ்சி நகர், பெருங்குடி, சென்னை 600 096
ARIMAA NOKKU, Anbaham, # 1, 15th Cross Street, Kurinji Nagar, Perungudi, Chennai 600 096
மின்னஞ்சல்: nokku2007@gmail.com
வலைத்தளம்: http://www.arimaanokku.in
செல்: 91-9444932320

ISSN 2320-4842

பாராட்டு வேட்கை

தான் கண்டுகொள்ளப்பட வேண்டும், பொருட்படுத்தப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும், அங்கீகரிக்கப்பட வேண்டும், பாராட்டப்பட வேண்டும் எனும் வேட்கை ஒவ்வொரு மனிதனிடத்தும் இயல்பாக உள்ளது. அன்னையின் மணிவயிற்றுக் கருவிலேயே இப்பாராட்டு வேட்கை உள்ளார்ந்ததாக (innate) மனிதனுக்கு அமைந்துவிடுகிறது. அதாவது, பாராட்டு வேட்கை அல்லது தாகம் என்பது மனிதகுலத்தின் உலகப் பொதுமையான பண்பாகும்.

கணவன்—மனைவி, பெற்றோர்—பிள்ளைகள், ஆசிரியர்—மாணவர், உடன்பிறந்தோர், உடன் பணிபுரிவோர், நண்பர்கள் உள்ளிட்டோரிடையேயான எந்த நல்லுறவுக்கும் பாராட்டே மூல ஊற்றாகும் என உளவியலாளர் ஆய்ந்து கூறியுள்ளனர். வாழ்க்கையில் முன்னேறியவர்களிடமும், வெற்றி பெற்றவர்களிடமும், மனித உறவைப் பேணுபவர்களிடமும் பாராட்டும் பண்பு இருக்கும். பாராட்டப்படும்போது மனம் மகிழ்கிறது; செயலில் ஊக்கமும் முனைப்பும் மிகுகிறது; திறமை மேம்படுகிறது என்றும் உளவியல் ஆய்வுகள் உணர்த்துகின்றன. பாராட்டுவது (appreciating/complementing) அல்லது புகழ்வது (praising) இயல்பாக இருந்தால்மட்டுமே மேற்குறித்த நற்பயன்கள் விளையும் என்றும் பொய்யாய், போலியாய், மிகையாய்ப் புகழ்வது (flattering) மோசமான, எதிர்மறையான விளைவுகளையே உண்டாக்கும் என்றும் உளவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒருவருக்குப் பரிசு, பணம் முதலியவை கிடைக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியின்போது மூளையில் எத்தகைய மாற்றம் நிகழ்கிறதோ அத்தகைய மாற்றம் பாராட்டின்போதும் நிகழ்கிறது என மூளையியல் ஆய்வுகள் உணர்த்துகின்றன.

பள்ளிச் சிறார்களை ஆசிரியர்கள் பாராட்ட வேண்டுவது அவர்களது கற்றல் மேம்பாட்டுக்குப் பெருந்துணையாகும் என உளவியல் ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. மாணவர்களைப் பாராட்டுவது தொடர்ந்து பள்ளிகளில் கடைப்பிடிக்கப்பட்டும் வருகிறது. கி.பி. 12ஆம் நூற்றாண்டிலேயே தோரா (Torah)வின் போதனையின்போது மாணவர்களைப் பாராட்டி அத்திக் கனியும் தேனும் வழங்கப்பட்டமை வரலாற்றில் பதிவாகியுள்ளது. நியூசிலாந்து வகுப்பறைகளில் பாராட்டுவது ஒருங்கிணைந்த கல்விமுறையாக இருந்துவருகிறது.

டாக்டர் பால் கால்டரெல்லா (Paul Caldarella) தலைமையில் அமெரிக்காவில் எல்லா மாநிலங்களிலிருந்தும் 5முதல் 12 வயதுக்குட்பட்ட 2536 மாணவர்களை மூன்று ஆண்டுகள் கண்காணித்து ஆராய்ந்து கண்டறியப்பட்ட முடிவு இதுதான்:

”பாராட்டப்படுவதால் மாணவர்களின் செயல் திறன் 20% முதல் 30%வரை மிகுந்துள்ளது.”

பர்னெட் (Burnett) என்பார் 2001இல் ஆஸ்திரேலியாவில் 747 பள்ளி மாணவர்களை ஆராய்ந்து அறிவித்த முடிவு வருமாறு:

”தமது நடத்தைக்காகவும் சாதனைக்காகவும் தாம் பாராட்டப்பட வேண்டும் என மாணவர்களுள் 91% பேர் எதிர்பார்க்கின்றனர்.”

ஆசிரியர்—மாணவர் நல்லுறவு, மாணவர்களின் தன்னம்பிக்கை, கற்றலில் ஈடுபாடு, செயல் திறன், படைப்பாற்றல், தலைமைத்துவப் பண்பு, நடத்தை ஆகியவை பாராட்டு வாயிலாகப் பெரிதும் மேம்பட்டுள்ளதாக ஜப்பான் பள்ளிகளில் நடத்தப்பெற்ற ஆய்வு புலப்படுத்துகிறது.

அமந்தா மோரின் (Amanda Morin) என்பவர் The power of effective praise: A guide for teachers (https://www.understood.org/en/articles/effective—praise—guide—for—teachers) எனும் கட்டுரையில் ஆசிரியர்களுக்கான பாராட்டு வழிமுறைகளைப் பின்வருமாறு எழுவகைப் படுத்திக் கூறுகிறார்:

1. Be specific, 2. Praise the process and progress, not just the outcome, 3. Be clear about the expectations and standards, 4. Be sincere, 5. Avoid comparisons to other students, 6. Praise students for hard work, 7. Avoid overpraising.

வ. ஜெயதேவன் **பூந்துணர்**

ISSN 2320-4842

எந்தெந்தக் கூறுகளையெல்லாம் ஆராய முடியுமோ அந்தந்தக் கூறுகளையெல்லாம் ஆய்ந்து தெளிந்து அவற்றை நடைமுறைப் படுத்தி விரைவான, தரமான, செம்மையான கற்றல், கற்பித்தல் பணிகளைப் பள்ளிகளில் மேற்கொள்ள முன்னேறிய உலக நாடுகள் முனைப்பாக உள்ளன. இத்துறையில் இந்தியா செல்ல வேண்டிய தொலைவு நீண்டதாய், நெடியதாய் உள்ளது.

Everyone values being praised and recognized for their endeavors – it is a huge part of nurturing children's self-esteem and confidence.

- Paul Caldarella

Being richly recognized for what you do—or who you are—just feels good. It's wonderfully confirming, and it's as reassuring as it is validating. Most of us thrive on compliments and flattery precisely because they can buoy us up, warm our hearts, and allay old fears and self-doubts.

But praise has its dark side, too. Much more than we typically realize, it can constitute a kind of verbal bribery, offered primarily to serve the interest of the person offering it.

- Dr. Leon F. Seltzer

READING LIST

Burnett P. C., Mandel V. (2010). Praise and feedback in the primary classroom: teachers' and students' perspectives. *Australian Journal of Educational and Developmental Psychology*, 10, 145–154.

Dweck, C. S. (2002). Messages that motivate: How praise molds students' beliefs, motivation, and performance (in surprising ways). In Aronson, J. (Ed.) *Improving academic achievement: Impact of psychological factors on education*. New York: Academic Press.

Eddie Brummelman (Ed.), Psychological Perspectives on Praise, London: Routledge, 2020.

Henderlong, J. and Lepper, M. R. (2002). The effects of praise on children's intrinsic motivation: A review and synthesis. *Psychological Bulletin*, 128, 774–795.

Kamins, M. and Dweck, C. S. (1999). Person versus process praise: Implications for contingent worth and coping. *Developmental Psychology*, 35, 835–847.

Kanouse, D. E.; Gumpert, P.; Canavan-Gumpert, D. (1981). "The semantics of praise". *New Directions in Attribution Research*. 3: 97–115.

Koestner, R., Zuckerman, M., and Koestner, J. (1989). Attributional focus of praise and children's intrinsic motivation: The moderating role of gender. *Personality and Social Psychology Bulletin*, 15, 61–72.

Mangin, M. C. (1998). Praise: What does it accomplish? *Dimensions of Early Childhood*, Summer/Fall, 26, 12–18.

Mueller, C. M. and Dweck, C. S. (1998). Intelligence praise can undermine motivation and performance. *Journal of Personality and Social Psychology*, 75, 33–52.

Paul Caldarella, Ross A. A. Larsen, Leslie Williams, Kade R. Downs, Howard P. Wills, Joseph H. Wehby. Effects of teachers' praise-to-reprimand ratios on elementary students' on-task behaviour. *Educational Psychology*, 2020.

Robins, G. (2012). Praise, motivation and the child. New York, USA: Routledge.

Skipper, Y., and Douglas, K. (2012). Is no praise good praise? Effects of positive feedback on children's and university students' responses to subsequent failures. *Br. J. Educ. Psychol.* 82, 327–339.

பேராசிரியர் கா. செல்லப்பன் (11.04.1936 – 09.09.2024)

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும்
புலமை சான்ற சிறந்த அறிஞர், சிறந்த சொற்பொழிவாளர்,
சிறந்த மொழிபெயர்ப்பாளர்,
இவை எல்லாவற்றிற்கும் மேலாகச்
சிறந்த மனிதர்
பேராசிரியர் கா. செல்லப்பன்.

அஞ்சலி

ISSN 2320-4842

அல்லிநகர வீரப்ப அய்யனார் வழிபாட்டு முறைகள்

க. விஜி
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை 641 018

ஆய்வு நெறியாளர்: **முனைவர் சு. இராமதிலகம்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை 641 018

ஆய்வுச்சுருக்கம்

தம்மைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையோடு கிராமப்புற மக்கள் வழிபடும் தெய்வங்கள் சிறுதெய்வங்கள் எனப்படும். முன்னோர்களைக் குலதெய்வமாக வழிபடுவது. இறந்தவர்களைப் போற்றும் வகையில் வழிபடு வது எனச் சிறுதெய்வ வழிபாடு பல வகைப்படும். இவ்வாறு வழிபடப்படும் தெய்வங்கள் பெரும்பாலும் மக்களின் வாழ்வின் வளத்துடன் இணைந்தவர்கள் ஆவர். இவ்வகையில் தேனி மாவட்டம் அல்லிநகரத்தில் உள்ள ஸ்ரீ வீரப்ப அய்யனார் கோவிலின் வழிபாட்டு முறைகளை இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகின்றது.

குறிச்சொற்கள்: வழிபாடு, தெய்வம், அய்யனார், நேர்த்திக்கடன், நம்பிக்கை.

முன்னுரை

மனிதன் தோன்றிய காலம்தொட்டு வழிபாடுகளும் சடங்குகளும் இருந்துவருகின்றன. இவற்றுள் வழிபாடு பல் வேறு வடிவங்களில் பரிணாமம் அடைந்துள்ளது. அது பெருந்தெய்வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என இரு வகைப்படும். சிறுதெய்வ வழிபாடு கிராமப்புறங்களின் உயிர்நாடியாகும். சிறுதெய்வங்களை நாட்டுப்புறத் தெய் வங்கள் என்றும் கிராம தேவதைகள் என்றும் கூறுவர். இவை, குலதெய்வங்களாகவும், ஊர்த் தெய்வங்களாக வும், காவல் தெய்வங்களாகவும் வணங்கப்படுகின்றன. இவ்வகையில் தேனி மாவட்டம் அல்லிநகரத்திலுள்ள ஸ்ரீ வீரப்ப அய்யனார் கோவிலின் வழிபாட்டு முறைகளை இவ்வாய்வுக் கட்டுரை எடுத்துரைக்கிறது.

ஆய்வு அணுகுமுறை

பகுப்புமுறை, தொகுப்புமுறை, விளக்கமுறை ஆகிய அணுகுமுறைகளைக் கொண்டுள்ளது இக்கட்டுரை.

வரலாறு

வீரப்ப அய்யனார் தோன்றிய வரலாறு பற்றிய சான்றுகள், குறிப்புகள், கல்வெட்டு எதுவும் கிடைக்கவில்லை. எனினும், சிலப்பதிகாரத்தில் ஐய்யனார் குறித்த குறிப்புகள் உள்ளன. ***ஊரின் எல்லையில் ஊர்க்காப்புத் தெய்வமாகக் காவுகளில் (பலியிடுதல்) வைத்து இன்றும் ஐயனார் தெய்வம் வணங்கப்படுகின்றது. இந்த ஐயனாருக்குப் பெரும்பாலும் மண்குதிரைகளையும், சில சமயங்களில் மண் யானைகளையும் நேர்த்திக் கடனாகச் செலுத்துவர். ஏரி, குளம், வாய்க் கால் ஆகியவற்றிற்குக் காக்கும் தெய்வமாகவும், மற்றும் நீர்நிலைகள் நிறைந்த கரைகளில் அருகில் ஐயனார் தெய்வங் களை வைத்திருந்ததைக் காணலாம்*** என்கிறார் பி.எல்.சாமி (பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்தெய்வ வழிபாடு பக்.16-18)

அல்லிநகரத்திலுள்ள வீரப்ப அய்யனார் கோயில் சுமார் 400 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது எனவும், இது மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்திலுள்ள அடர்ந்த காடுகளும் புதர்களும் நிறைந்த இடம் என்பதால் இப்பகுதி மக்கள் ஆடு, மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தனர் எனவும், அச்சமயத்தில் மாடு தொடர்ந்து ஒரே இடத்தில் நின்றதாகவும் அதன் மடியிலிருந்து பால் தானாகக் கல்மீது விழுந்ததாகவும், அதைக் கண்ட மேய்ச்சல் பெண் ஒருத்தி இச்செய்தியை ஊர் மக்களிடம் கூறினாள் எனவும், இந்த அதிசயத்தைக் காண மக்கள் அனைவரும் விரைந்து வந்ததாகவும், அவ்வாறு வந்த மக்களுள் ஒருவருக்கு அருள் வந்து நான்தான் வீரப்ப அய்யனார் இங்கு வந்து குடிகொண்டிருக்கிறேன், என்னை நீங்கள் வழிபட்டால் இங்குள்ள மக்களையும், பயிர் களையும் காப்பேன் என்று அத்தெய்வம் கூறியதாகவும் கூறப்படுகின்றன. அன்றிலிருந்து இன்றுவரையிலும் இப்பகுதி மக்கள் அல்லாமல் தேனி வட்டாரத்தைச் சுற்றியுள்ள ஊர்களான வடபுதுப்பட்டி, லட்சுமிபுரம், அன்னஞ்சி, பூதிப்புரம், அரண்மனைப்புதூர் போன்ற கிராமங்களிலிருந்து மக்கள் வந்து வீரப்பய்யனாரை நம்பிக்கையுடன் வழிபட்டுவருகின்றனர்.

ISSN 2320-4842

கோவில் அமைவிடம்

அல்லிநகரத்திலிருந்து சுமார் ஐந்து கிலோமீட்டர் தொலைவில், மேற்குத் தொடர்ச்சிமலை அடிவாரத்தின்கீழ் பனசலாறு நீரோடை செல்லும் பகுதியின் அருகில் இக்கோயில் அமைந்துள்ளது. இதன் நான்கு புறங் களிலும் சுவர்கள் எழுப்பப்பட்டு மேற்கூரைகளின்றி வெட்டவெளியாக ஆகாயத்தைப் பார்த்தபடி அமைக் கப்பட்டுள்ளது. வீரப்ப அய்யனார் தனக்குக் கோபு ரங்கள் எழுப்ப வேண்டாம் என்று பக்தர் ஒருவரின் கனவில் வந்து கூறினார். ஆகவேதான் இக்கோவி லுக்குக் கோபுரங்களும் மேற்கூரைகளும் எழுப்ப வில்லை எனவும், இச்செய்தியைத் தானும் செவிவழி அறிந்துகொண்டேன் என்றும் தகவலாளி முருகன் (வயது 52) கூறினார்.

இக்கோவிலில் மூலவர், ஏழு கன்னிமார், கருப்பண்ண சாமி, பிள்ளையார், முருகன், பெருமாள், இஸ்லா மிய தர்க்கா ஆகிய தெய்வங்கள் உள்ளன. கோவில் லின் கருவறையில் மூலவர் சிலை உருவமின்றிக் கிழக்குதிசை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கோவிலின் முன்பு பெருமாள் கோவிலும், அதன் அருகில் கம்பீரமான உருவத்தில் கையில் சாட்டை யுடன் குதிரை வாகனத்தில் வீரப்பய்யனார் வீற்றிருக் கிறார்.

கோவில் பூசாரி

வீரப்பய்யனாருக்கு பூசை செய்ய பூசாரியைத் தேர்ந் தெடுப்பதில் ஊர் மக்களிடையே போட்டிகள் ஏற்பட் டன. இச்சிக்கலைச் சரிசெய்ய யானை ஒன்றை வர வழைத்து அதனிடம் மாலையைக் கொடுத்ததாகவும் பின்னர் அந்த யானை அக்கோவிலின் கூட்டத்தில் நின்றிருந்த ஒரு சிறுவனின் கழுத்தில் மாலை போட் டதாகவும் கூறப்படுகிறது. அன்றிலிருந்து அச்சிறுவனின் குடும்பத்தாரே இக்கோவில் பூசாரியாக இருந்துவரு கின்றார்கள் என்று தகவலாளி முத்துகிருஷ்ணன் (வயது 64) கூறினார். இக்கோவில் பூசாரிகளாகப் பிள்ளை மார் இனத்தைச் சார்ந்தவர்களே தலைமுறை தலை முறையாகப் பூசை செய்துவருகின்றனர். இப்பகுதி யிலுள்ள மக்களுக்கு இவர்கள் கூறுவதுதான் தெய்வ வாக்காக இருந்துவருகிறது.

வழிபாடு

பெருநெறி வழிபாடு, சிறுநெறி வழிபாடு என இரு நிலையில் தெய்வ வழிபாடு மேற்கொள்ளப்பட்டுவரு கிறது. பெரும்பாலும் கிராமப்புறங்களில் சிறுநெறி வழிபாட்டு முறையே அதிகளவு மக்களால் பின்பற் றப்படுகிறது. கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் ஓர் அங்கமாக இவ்வழிபாடு அமைந்துள்ளது. கிராம மக்கள் பெரும்பாலும் வழிபடக்கூடிய சிறுதெய்வங் களாக சுடலைசாமி, சுருளியப்பன், மாடசாமி, காத்தவராயன், கருப்பண்ணசாமி, அய்யனார், காளி யம்மன், மாரியம்மன் போன்றவையே உள்ளன. சிறுதெய்வங்களுக்குப் பெரும்பாலும் ஆகம விதிப் படி, மந்திரங்கள் ஓதுவதில்லை. ஆறுகால பூஜைகள் செய்வதில்லை. அல்லிநகரத்திலுள்ள வீரப்ப அய்ய னாருக்கும் மந்திரங்களும், ஆறுகாலப் பூசைகளும் நடைபெறுவதில்லை. சனிக்கிழமை வீரப்பய்யனாருக்கு உகந்த நாளாகும். அக்கிழமையில் சிறப்புப் பூசை கள் நடைபெறும். மக்கள் சிலர் தமது வேண்டுதல் களை சனிக்கிழமையில் வந்து பொங்கலிட்டுப் பால் அபிஷேகம் செய்து வழிபட்டுச் செல்வர்.

படையல்

அல்லிநகரத்தின் எல்லையில் குடிக்கொண்ட ஸ்ரீவீரப்ப அய்யனாருக்கு சைவ உணவு வகையே படையலாகப் படைக்கப்படுகிறது. வீரப்ப அய்யனாருக்குப் பிரதான படையலாகப் பொங்கல் செய்துவைப்பர். பெரும்பா லும் கிராமப்புறங்களில் உள்ள சிறுதெய்வங்களுக்கு அசைவ உணவு வகையில் படைக்கப்படும் அதில் ஒரு சில சிறுதெய்வங்களுக்கு மட்டும் சைவ உணவு வகை படைக்கப்படும். வீரப்பய்யனாருக்கு ஆடு, கோழி, போன்றவற்றைப் பலியிட மாட்டார்கள் இக் கோவில் திருவிழாவின்போதும், மக்கள் வேண்டுதல் நிறைவேறும்போதும் சைவ உணவு வகைகளை மட்டுமே படையலிடுவர். ஏனெனில் வீரப்ப அய்ய னார் எந்த உயிரையும் காவு வாங்கமாட்டார் என்று இங்குள்ள மக்கள் இன்றளவும் நம்பி வழிபட்டுவரு கின்றனர்.

வழிபடும் தினங்கள்

ஸ்ரீவீரப்ப அய்யனாருக்குச் சிறப்பு நாள்களில் சிறப்பு வழிபாடுகள், பூசைகள் நடைபெறும். அந்நாள்களில் ஏராளமான மக்கள் வந்து வழிபடுவர். அவ்வாறு வழிபடும்பொழுது 11முதல் 16வகை எண்ணிக்கை யில் அமைந்த பூசைப் பொருள்களால் அபிஷேகம் செய்வர். அவை திருமஞ்சனம், அரிசிமாவு, சந்தனம், பன்னீர், விபூதி, பழங்கள், வில்வம், எலுமிச்சை, பால் போன்றவையாகும். மேலும் பௌர்ணமி பிரதோசம், மாத சிவராத்திரி ஆகிய நாள்களில் பூசைகள் நடை பெறும். சிறப்பு நாள்களில் கோவிலுக்கு வரும் பக்தர் களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

கொடியேற்றம்

அல்லிநகரத்திலுள்ள வீரப்பஅய்யனாருக்குப் பங்குனி மாதம் 15ஆம் நாள் கொடியேற்றம் பெரும் விழா வாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் ஏராள மான மக்கள் கலந்துகொள்வர். மேளதாளத்துடன் நல்ல நேரத்தில் மூங்கில் மரத்தைக் கொடிமரமாக ஊன்றுவர். பிறகு மூலவருக்குச் சிறப்புப் பூசைகள் நடைபெறும். இக்கொடியேற்ற விழாவின்போது அன்ன தானமும் நிகழும். காவடி எடுக்கும் பக்தர்களும் பால்குடம் எடுப்பர். பக்தர்கள் அந்நாளிலேயே கங்க ணம் அணிந்துகொண்டு சித்திரைமாதம் முதல்நாள் வரை விரதம் மேற்கொள்வர்.

சித்திரை விழா

சித்திரைமுதல் நாள் வீரப்ப அய்யனாருக்குப் பெரும் திருவிழா எடுக்கப்படுகிறது. தேனி மாவட்டத்தைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களிலுள்ள அனைத்து இன மக்களும் சாதிப் பாகுபாடின்றி இவ்விழாவில் கலந்துகொள்வர். வீரப்பய்யனாரைக் குலதெய்வமாக ஒரு சில இன மக்கள் வணங்கிவருகின்றனர். திருவிழாவின்போது அல்லிநகரத்திலுள்ள உற்சவரை அலங்கரிப்பர். பின்பு குதிரை வாகனத்தின் மேலேற்றி பவனி வருவர். அவர் பின்னே நூற்றுக்கணக்கான பக்தர்கள் பால் குடம், பால்காவடி போன்றவற்றை எடுத்துக்கொண்டு வீதி வழியாக நடந்து செல்வர். அல்லிநகரத்தின் தொடக்கப் பகுதிமுதல் எல்லைப்பகுதி வரையில் வழிநெடுகப் பானைக்காச்சல், மோர்ப்பந்தல், அன்ன தானம் ஆகியவை பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. பல வண்ணக் காகிதங்களால் அலங்கரிக்கப்பட்ட காவடிகளை நூற்றுக்கணக்கான பக்தர்கள் எடுத்துச் செல்வர். காவடியைத் தூக்கி வரும் பக்தர்களுக்கு அருள் வரும்பொழுது பரவசம் ஏற்படுத்துவதற்கு உறவினர்களும் நண்பர்களும் கரவோசை எழுப்புவர். பக்தர்கள் மொட்டை அடித்தல், காதுகுத்தல், பொங்கலிடுதல் போன்றவை மூலம் தமது நேர்த்திக் கடன்களை செலுத்துவர்.

நேர்த்திக்கடன்கள்

தம் வாழ்க்கையில் நிகழும் இன்பதுன்பங்கள் அனைத்தும் தெய்வத்தால் நடைபெறுகிறது என்று மக்கள் அனைவரும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இதன் காரணமாகத்தான் பல்வேறு வேண்டுதல்களை இறைவன் முன்பு வைக்கின்றனர். அவை நிறைவேறியதும் நேர்த்திக் கடன்களைச் செலுத்துகின்றனர். அவை, 1.உடலை வருத்தும் நேர்த்திக் கடன்கள், 2. பொருள் தானமாக அளிக்கும் நேர்த்திக்கடன்கள் என இரு வகைப்படும்.

உடலை வருத்தும் நேர்த்திக் கடன்கள்

காவடியெடுப்போர் காலில் சலங்கை அணிந்துகொண்டு பெரிய சாட்டை அல்லது மலைப்பிரம்பால் உடலில் அடித்துக்கொண்டு வருவர். அருள் வரும்பொழுது வேகவேகமாகத் தமது உடலைச் சாட்டையால் அடித்துக்கொண்டே மலை அடிவாரம் செல்வர். அல்லிநகரத்திலுள்ள வீரப்பய்யனாருக்கு உயிர்ப்பலி கொடுப்பதில்லை இங்குள்ள வீரப்பய்யனார் இப்பகுதி வளங்களையும் மக்களையும் காக்கும் தெய்வமாக இருப்பதாக மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். இத்தகு தெய்வத்திற்குப் பால்குடம் எடுத்தல், பால்காவடி எடுத்தல், காலில் செருப்பாணி அணிதல், அலகு குத்துதல் போன்ற நேர்த்திக்கடன்களைச் செலுத்துகின்றனர்.

பொருள் தானமாக அளிக்கும் நேர்த்திக்கடன்கள்

சில பக்தர்கள் தமது வேண்டுதல்கள் நிறைவேறினால் பொருள்களை தானமாக வழங்குவர். அரிசி, பழங்கள், காய்கறிகள், ஆபரணங்கள், நெல் போன்றவற்றை நேர்த்திக்கடன்களாகச் செலுத்துவர்.

மக்களின் நம்பிக்கை

இயற்கையின் சீற்றத்தைக் கண்ட மனிதன் அவற்றிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள இயற்கையை வழிபடத் தொடங்கினான். வேட்டையாடுதல் சமூகத்தில் வாழ்ந்த மனிதன் கல் மற்றும் மரக்குச்சியைப் பயன்படுத்தியும் ஈட்டி, வேல், கத்தி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தியும் தன்னைப் பாதுகாத்தான். அந்த ஆயுதங்கள்தாம் இன்று நாம் வழிபடும் தெய்வங்களின் கையில் ஆயுதங்களாக இருப்பதை நாம் காண்கிறோம். மேலும் தான் தவறு செய்தால் தெய்வம் தன்னைத் தண்டித்துவிடும் என்ற அச்ச உணர்வினாலும் தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளலானான். கலித்தொகையில், வழிபடும் தெய்வம் தான் வலிமை என்று அடைக்கலம் புகுந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை,

வழிபட்ட தெய்வம்தான் வலி எனச் சார்ந்தார்கண்
கழியும் நோய் கைம்மிக அணங்கு ஆகியது போல
(நெய்தற்கலி பாடல்.132) என்ற அடிகள், தனக்கு ஆதரவு தரக்கூடியது இவ்வுலகத்துள் தான் வழிபடும் தெய்வம் தவிர வேறு எதுவுமில்லை என்ற இறை நம்பிக்கையை எடுத்துரைக்கின்றன. அவ்வகையில், அல்லிநகரத்தில் வீற்றிருக்கும் **ஸ்ரீ**வீரப்ப அய்யனாரின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்குக் காரணம் அவ்வூர் மக்களையும் வளங்களையும் அய்யனார் காத்து வருகின்றார் என்பதேயாகும்.

மறுபூசை

சித்திரைத் திருவிழா முடிந்த பிறகு மறுநாள் பூசை நடைபெறும். இவ்விழாவில் வீரப்பய்யனாருக்குப் பல்வேறு பொருள்களால் சிறப்பு வழிபாடுகள் நிகழும். இவ்விழாவிலும் ஏராளமான பக்தர்கள் கலந்துகொள்வர். அன்னதானம் நடைபெறும். சிலர் தமது நேர்த்திக்கடன்களைச் சித்திரை முதல் நாள் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அவர்கள் மறுபூசை அன்று தமது நேர்த்திக்கடன்களைச் செலுத்துவர்.

முடிவுரை

அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி மிக்க இந்நூற்றாண்டில்கூட பல கிராமங்களிலும் நகரங்களிலும் மக்கள் தெய்வத்தின்மீது கொண்டுள்ள நம்பிக்கை மாறாமல் இன்றளவும் வழிபாட்டு மரபைப் பின்பற்றி வருகின்றனர். அவ்வகையில் சிறு தெய்வ வழிபாடு என்பது கிராமங்களின் உயிர்நாடியாக விளங்குகிறது. இவ்வழிபாடு ஒவ்வொரு ஊரிலும், கிராமங்களிலும், அந்தந்தப் பகுதி மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டுவருகிறது. அல்லிநகரத்தில் குடிகொண்டிருக்கும் வீரப்ப அய்யனாரின்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை விரிவடைந்துவருவதை இந்த ஆய்வின் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது.

ISSN 2320-4842

துணைநூற்பட்டியல்

1. பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு, நியூ செஞ்சுரி, புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.

2. நச்சினார்க்கினியர்- கலித்தொகை (மூலமும், உரையும்) திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை, முதல் பதிப்பு:1943.

3. தகவலாளி, ராஜேந்திரன், ஆடீயுஇ ஆ.Phடை. , அல்லிநகரம்.

4. தகவலாளி, முருகன். ரா, அல்லிநகரம்.

5.

The decline of literature indicates the decline of a nation.

- Johann Wolfgang von Goethe

While thought exists, words are alive and literature becomes an escape, not from, but into living.

- Cyril Connolly

Literature is one of the most interesting and significant expressions of humanity.

- P. T. Barnum

ISSN 2320-4842

Women and Trauma: Exploring war to study psychological changes in the memoir of Lynda De Vanter

Padmavathi. R
Ph. D. Research Scholar, Dept. of English
Avinashilingam Institute for Home Science and Higher Education, Coimbatore 641 043

Abstract

Behaviour results from a continuous interaction between an individual and their environment. As a part of the environment, the individual constantly receives and perceives some input. With those inputs, the actual behaviour may be altered. In some contexts, behaviour is the result of perceived information. It is also generated in various forms. Some responses to behaviour are generated automatically by observing the stimuli, while on the other hand, experienced-based behavioural change takes place accordingly to the appropriate event. The scope of the behaviour involves alternatives. Albert Bandura, in his social cognitive theory, discusses triadic determinism. It explains how environmental factors affect an individual's character or behaviour.

Keywords: Behaviour, Trauma, Sleeplessness, War, Psychological changes.

Discussion

Behaviour is the result of a continuous interaction between an individual and their environment. As a part of the environment, the individual constantly receives and perceives some input. With those inputs, the original behaviour may be altered. In some contexts, behaviour is the result of perceived information. It is also generated in various forms. Some responses to behaviour are generated automatically by observing the stimuli, while on the other hand, experienced-based behavioural change takes place accordingly to the appropriate event. The scope of the behaviour involves alternatives.

In the last half-century, about many countries have suffered some type of foreign or internal armed conflict. War is sometimes referred to as "development in reverse" (Collier et al. 2003) by international development academics and policymakers. Understanding the consequences of war in all of its complexities, including post-war patterns of individual social behaviour, is crucial. Individuals and society have suffered various harmful consequences as a result of the conflict. Scholars and philosophers have debated the origins of human conflict since the birth of civilization "Why does human behaviour change during large-scale conflicts? Do we find ourselves stuck in genetically (biologically) present responses?" (Ashley Montagu). Human aggression would thus become a learned sort of behaviour, rather than being intrinsic. Everything has one big emphasis, which leads to one significant issue: the inability to manage one's own behaviour due to a lack of understanding of the situation and its alternatives.

Changing human behaviour

When examining the human behaviour, a question rise about human behavioural change. Human behaviour is a response to certain events and actions which are related to psychological, sociological, and political aspects. This research aims to produce the psychological perspective of changing human behaviour. There are a lot of interventions are been formulated when it comes to the point of behavioural change. Some can seem necessary to stop the unacceptable behaviour. When considering the behavioural change of the central characters of the selected memoirs, there are mainly affected by some traumatic events. Thus, providing a wide range of insight into the underlying paradigm for the view of behavioural change. During the stages of human life, human behaviour refers to the potential and demonstrated ability for physical, mental, and social activities. Like other animal species, humans have a predictable life cycle that includes several stages of development, each with its own morphological, physiological, and behavioural characteristics.

Behavioural change has numerous concepts which seek to explain why and how people or groups alter their behaviour. "These concepts are process-oriented and emphasize the importance of environmental context, social, cultural, and psychological (individual) qualities in influencing the inclination to modify behaviou"r. Behavioural change theories and their scientific foundations have been applied to health care to improve service effectiveness, and behavioural change theory specialists have been included in the treatment team.

When studying behavioural change, there should be a clear vision of the individual's psychology. Analyzing the psyche of Lynda was very good at her profession. She has behaved ethically during her duty time. Once, she claimed herself as a born caretaker. This sense of care made her empathize with the soldiers whose names she did not know. Sometimes during her sleep, she recalls the incidents from the combat zone and loses her sleep. She reminded awake for many nights thinking of the wounded and dying soldiers. "I sat alone in my room, getting drunk

and thinking about Vietnam. Whenever I tried to sleep, I would see Gene and Steve and all the faces of the nameless kids who had died, especially one- a bloody mess of macerated flesh and bone." (225) Lynda experiences some different feel whenever she tries to sleep. Before her bed, she possessed the habit of drinking, which eased her inner pain and helped her to sleep, but still, during her sleep, she encountered the faces of the diseased. This made her stay awake, resulting in sleeplessness. The act of empathy made Lynda behave insanely. Her thoughts are filled with flesh and blood. Slowly it became a daily act and resulted in a behavioural change.

The representation of Lynda's character is very concrete as she possesses duality in her behaviour. During the initial stage of nursing school, she was proud to someday serve as an army nurse. But on the other hand, this mindset was different when she was in the Vietnam War; as the day passed, she started to hate her life during the War and in wartime. Through her letters, one can understand that Lynda's family is pleased about her duty towards the nation, but in the case of Lynda, she wants to quit everything and should lead a peaceful life.

She makes love with Jack but stays away from him when her inner emotions stop her as she is too tired of the external element. When one approaches learning an individual's behaviour, it is essential to note the superficial aspects of that particular individual. In the memoir *Home Before Morning*, it is apparent that the external element is War. Still, in some cases, it is vital to consider the relationship as it is from within. "Jack was also being branded as a troublemaker, largely because of his association with me, and he had become the object of subtle harassment." (214). In the nursing causality, Jack, Lynda's boyfriend, behaves not as a doctor but instead makes love and enjoys being with Lynda. Everyone did not like this action, and Lynda soon felt bitterness due to Jack's behaviour, as he was only for his physical want. In the initial stage, Lynda enjoyed his company, but due to the war pressure duties, she wanted a break from all the activities. When examining the act with Bandura's theoretical approach, the aspect can be connected as the external elements make an individual react to that outward act and change their behaviour. If the external force is robust, the above-stated context will be implemented. While on the other hand, if it is minimal, the behavioural change will not be considered a substantial element.

Lynda loved her job and constantly believed she was a born caretaker. The nursing job is different from the nursing job in wartime. Even the treatment varies as in a war zone, the doctors and nurses must care for the soldiers who struggle for survival. While undertaking the cases, the sense of easiness will be avoided. "I was put on the worst cases, and it seemed like someone was constantly looking over my shoulder. No matter what I did, there was always a lifer around to tell me I was wrong" (218). As Lynda loves her job, even though she feels proud to be an army nurse, due to some unavoidable circumstances, she fails to do her duty. This act is not like she is not loyal to her job, but this is an act of fear which covers her whenever she encounters some horrible scenes. The worst case goes in vain as she struggles to treat them. She sees the blown faces of many soldiers, sometimes making her think she should quit the job. Behavioural change occurs when she is not stable at work, perhaps due to encountering disgusting incidents. Living in a combat zone is not like living in a residential apartment. One may see many horrible sights of death, pain, crying, and much more which are not easy to pen down. Living and serving in a combat zone makes that person feel indifferent. The sense of lifeless feel occurs when they see death in front of their eyes, but in some cases, they think of the numbness towards life. This does not mean that they do not have that human feel. Lynda stands in between the feeling of self-actualization.

The young man came back into the dream as he had so many nights before. He was wearing fatigues and a boonie hat, but the clothes were all bloody. There was a large hole where his belly and chest used to be. He had no arms and legs and his face was blown away. He whispered something that I couldn't hear. He wanted me to come closer. Struggling against my inclination to run, I put my head so near to the spot that had once been his lips that I got blood on my cheeks. The soldier kept whispering one word: why?

Sleeplessness has been marked as a significant element in Lynda's life. Whenever she tries to sleep, she wakes up with the face of diseased soldiers talking to her. This made her react insanely. In one case, she attended to a soldier whose face was blown off when he was in the combat zone. She repeatedly dreams of that boy who whispers in her ears. One can also closely observe Lynda's character; she was severely affected by some psychological aspects. Sometimes it is claimed to come under hallucination. While on the other hand, this particular incident repeats within herself. She even hears that soldier's voice whispering, "Why". The indication of this question is the indication of the reason behind the whole War. The question lingers within herself, resulting in a confused behavioural change whenever she hears this word. She wanted to run away from all the activities related to war.

The physical and psychological state should be balanced when it comes to the concept of examining an individual's character. Due to Lynda's psychological change, she encounters some physical changes. Jack and Lynda are making love, and it is clear that Lynda is physically and mentally tired. She wanted a break from all aspects, but on the other hand, she allowed Jack to make love. After a while, her tiredness hiked into an act of anger. She exploded and attacked Jack. In turn, he also attacked Lynda for her act of arrogance. Later at one point, it went into a bitter fight between both of them. Thus, this act of violence was due to Lynda's frustration with warfare. "When he was gone, I ordered a couple more martinis and sat in a chair by the window, drinking and crying. I'd had it with Jack and with Pleiku, and with the

War, and with the harassment, and trying to turn bloody pieces of meat back into people." (225) Later on, Lynda makes herself comfortable with a drink. At this point, she started to connect the pain of War with the pain of harassment. Both the element gave her intense pain. The gradual behaviour change was synthesized by herself. Theoretically, all the environmental factors influence the internal factors, which are sometimes unexplained.

While examining a character, it is noted that that particular character should be made a study by comparing. Here in the memoir *Home Before Morning,* Lynda compares herself with Lady Macbeth, one of the leading tragic characters of William Shakespeare. She represents the theme of gender power. Even her husband implies that she is a masculine soul inhabiting a female body as it is a link of masculinity to ambition and violence. One can also connect Lynda with Lady Macbeth as she encounters the exact psyche change. Once Lynda returns from Pleiku after treating the soldiers, she feels like Macbeth. "Later, I tried to scrub away all the traces of Pleiku, feeling like Lady Macbeth, except that there was no visible spot on my hand; it had already penetrated my skin and was on my soul of that, I was certain. As hard as I tried, I knew I could not get rid of Vietnam." (224) In the above context, Lady Macbeth imagines blood stains on her hand, whereas on the other hand, Lynda tries to erase the traces of blood, pain, anger, and crying from her soul. These traces are due to the War that Lynda goes through within herself. Lynda makes a point about Vietnam as she was fed up with this word; she did not consider Vietnam as a country; instead, she named it an absolute living hell. She even justifies Vietnam as hell, as people dying for their country without any misery, and witnessing this pain is considered the greatest sin. Thus, Vietnam is considered to be hell for Lynda.

"I tried to be nice and tell him that I had no desire to make love with him that night, that I desperately needed to be alone, and that maybe I would feel differently if he just gave me some time." (224). A relationship is the most fantastic outlook when it comes to the point of behavioural change. Making love is not the concept of being in a relationship. It is also equally important to understand each other and respect their feelings. Lynda was tired after her extended duty in the operation theatre; she wanted to be free from all the activities and made a point to Jack to leave her alone. Sleep was her only pill to ease herself. One should note that Lynda once was very eager to spend time with Jack, but due to the War and its effects, she wants her space to form other activities. This micro-behavioural change leads to macro impacts. Due to this behavioural change, Lynda leaves Jack (they end their relationship). When substantiating things with the theoretical notion, it is noted that anything of any kind can make a massive change in an individual's behaviour.

He put his arms around me and kisses me. At first I was so tried and frustrated and depressed that I was going to let him stay for a while. Then the anger overtook me and I exploded. I punched jack and scratched at his eyes. He slapped my face. I spit at him. He pulled my hair and spit back. Then I kicked him with all my might, in the stomach. (224,225)

Scrutinizing an individual character is studying their inner psyche. Here one should understand nature with their mindset. Substantiating the core concept with the psychological element makes the study stand at its point. Decoding the characters helps the researcher discover the psychological study's core element. "Then I lowered myself into the boiling water. I felt my tensions draining away." (223); after arguing with Jack for not being his intimate lover, Lynda leaves the room without further arguments with Jack. She wanted to ease her emotions but was very clueless. Her mind was stuck with so many thoughts scrolling one by one, indicating much pain within herself. She then lowered herself into the hot bathtub, relieving all her miseries. Thus, this action made her relax, staying a bit away from the inner and outer chaos.

Behavioural change is a primary reason for changing one's whole life. The changes may be of any kind. Sometimes it may lead to a critical situation; conversely, it may not go to that extent. In Lynda's life, she faced many personal issues regarding her behaviour due to her work pressure. The War caused much pain for those who undertook it and those who were also part of it. Lynda sometimes gets severe indigestion due to a poor diet. In a combat zone, one cannot eat a proper three meals daily. The quality may vary; they eat for their survival. In that case, after treating the patients, doctors and nurses feel the disgust within themselves. Their gut will not be able to eat or digest the food. A sense of puking occurs inwardly. "And they were making me a nervous wreck. I was having frequent bouts of indigestion now, and was forever pouring antacids down my throat." (218); after treating a gunshot soldier, she feels a sense of uneasiness in her gut. With that feeling, she works continuously without any breaks. In that case, she was forced to attend to an emergency, which made her even more restless, and she started to feel acidic. One should note that when the outer part is distracted automatically, the internal part reacts.

Frustration occurs when a mental blockage results from internal and external forces. The external force is unavoidable here as one may be stuck between the two points. In the case of Lynda, due to frustration, the sense of giving up comes into her mind. Even sometimes, she tries to leave her job. Her psychological pressure makes her go in vain. Day by day, she loses her interest in the duty that she once loved it. A loss of self carries when the element of frustration surrounds them. "I desperately needed a break." (218). Lynda throws away her interest in her service as an army nurse. Her physical and emotional support drifts away when she loses herself. The primary reason behind this element is the degree of trauma. She needed a break from all the mental and physical pain. In the emergency ward, she

grieves for the wounded soldiers and says, "It is terrible; war is hell". From this, one can understand that War is crucial to be a part of it and is painful when one hears of it. War is beyond one's understanding, and people experience most of it. The frustration due to War makes Lynda take a break. From a theoretical point of view, the external element's sub-categories bring out the actual change. When one takes the past life of Lynda, it is noted that she was very passionate about her passion, which is to become a nurse. She even liked to go around the world. But after her indulgence in Vietnam War, her mind is full of questions. Those questions are unanswered questions.

Individuals react to certain things when they are not in good condition. External element matters a lot regarding the point of internal reaction. Each aspect is connected. "I was growing number and colder by the second and kept losing parts of what this stranger was saying." (219). If the external force grows, it will undoubtedly result in unexpected things. When Lynda was associated with Jack, her name was spoiled, and she was forced to do certain things. This made her stay away from Jack and lose her interest in doing her service. People started discussing Lynda's issues and her personal life with Jack in the causality. This made her react arrogantly with her co-workers. This change was not cent percentage involvement as it is a strange behaviour.

A sense of detachment occurs when an individual loses interest, hope, belief, etc. War is the best example of order to experience all the above-stated elements. People started to lose interest in War due to death in front of their eyes. They began to feel the sense of self-pity, guilt, anxiety and other aspects which defines the aftermath of War. "Vietnam sucked so bad it could suck you back down out of the sky. It could suck you all the way back from the world. It was hopeless. You could DEROS, but you could never leave. It was in our very blood, eating away at us, and it would always be there." (219). When Lynda was operating, a lady carried a soldier's baby. She was in critical condition and taken to the operating theatre. Lynda was very curious about that delivery; however, she was tired of her restless duty. Then she started to think about her days as a training nurse. Lynda does not want to move from Vietnam; gradually, she hates where she works. Her inner element pushes her to move away from the war zone, but in reality, she cannot move from that place. She even compared life in the combat zone a life living in hell. Her high level of frustration leads her to a hopeless life.

Suppressing one's feelings or eliminating the feeling can lead to mental pressure; in psychological terms, it is indicated as mental trauma. The study of trauma can be marked in various aspects. It is controlling one's emotions that results in a negative part. Here the individual may fail to identify their feelings. When it comes to the point of emotion, it helps in daily life. Feeling out of control can affect your emotional and interpersonal health. "I wanted to scream, to kill someone. Instead, I closed the wall tighter around me. I wouldn't feel anything."(219). Lynda's relationship with Jack somewhat ruined her name, and Jack's abusive nature made Lynda end this relationship. Perhaps she even cared for his love. Here one can witness the level of confusion and duality in decision-making. All these elements made her suppress her feelings. The high level of hiding her emotion led her to kill herself or someone beside her. In the theoretical frontline, burying one's feelings (which may be of any kind) acts as an external force leading to internal pressure, which is a silent one. The interior elements do not know how to react to external forces.

In war settings, violence against women takes various forms; rape is often merely one of how women are attacked. While other forms of torture, such as murder, have long been condemned as war crimes, rape has been dismissed as an unfortunate but unavoidable consequence of sending men to war. As a result, it goes unnoticed as a violation of human rights. "When rape is publicized and denounced, as it has been in Bosnia and Herzegovina, the abuses are described as "unusual" and "singular"". During the wartime, rape has never been limited to a single century or region globally. Here the central Lynda faces much sexual harassment. Sometimes she willingly accepts the pain as she also wants to eliminate those war pains. Here one can witness a behavioural change in acknowledging the sexual offers. But later, she realizes the negative impact of this change. "Maybe they could ignore the petty harassment." (209); some doctors use their position to harass the nurses who work for them. In the case of Lynda, she is a person of an all-rounder and quickly learns things. This tendency makes others get along with her, and some doctors use her. "Or from the Vietnamese women who were forced to prostitute themselves to stay alive." (210); here, the author notes prostitution. During wartime, many women were forced into prostitution. One cannot blame those women as they were silent inwardly and outwardly. They were termed to be addressed as victims. Silently they took over all the pain. Here in *Home Before Morning*, many Vietnamese women were into prostitution; one can witness the major cause for these elements are War. Therefore it is also a significant factor for the change in all aspects. "And their senseless brutalities against their citizens. And their soldiers' lack of commitment to the South Vietnamese government. And the total disregard for the value of human life in war." (209); War is the central traumatic element that breaks the inner peace. Once lost cannot be regained.

Trauma is a concept that cannot be confined to a single context. When one undergoes a certain level of trauma, there will undoubtedly be a change in behaviour, thoughts, and feeling. The actions of an affected individual change when they are traumatized by an event. Thus, depending upon the event, the individual changes their behaviour. Even the thinking process differs when they think about the past traumatic event. Indeed, this may result in harmful kind of feelings toward every action. In simple terms, the above elements are connected.

(Continued in page 38)

ISSN 2320-4842

எஸ். ராமகிருஷ்ணன் நாவல்களில் சமுதாய அவலங்கள்

ச. பிந்து
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
நிர்மலா மகளிர் கல்லூரி கோவை 641 018
ஆய்வு நெறியாளர்: **முனைவர் சகோ. பி. ரெஜினா**
துணைமுதல்வர், இணைப்பேராசிரியர் & தலைவர்
தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை 641 018

ஆய்வுச்சுருக்கம்

மானிட சமுதாயம் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் உருண்டோடிவிட்ட நிலையிலும், புரையோடிப் போயிருக்கும் அவலங்கள் சமுதாயத்தில் ஒரு பகுதியினரை அச்சுறுத்திக்கொண்டுதான் இருக்கின்றன. அவ்வகையில் எஸ். ராம கிருஷ்ணன் நாவல்களில் இடம்பெற்றுள்ள அவலங்கள் குறித்து இக்கட்டுரை ஆய்கிறது.

கலைச்சொற்கள்: சாதி, மதுவிற்கு அடிமையாதல், அன்பின்மை, வறுமை, தற்கொலைகள்.

முன்னுரை

உலகில் ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு வகையான சமுதாய அவலங்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. புதின இலக்கியங்களில் அந்தந்தக் காலகட்டங்களில் தோன்றும் அவலங்களே பெரும்பாலும் கருப் பொருள்களாக அமைகின்றன. மக்களிடம் விழிப்புணர்வூட்டுதும் நோக்குடன் படைக்கப்படும் அவை நேரடி யாகவும் மறைமுகமாகவும் சமுதாயத்தில் மாறுதல்களைக் கொண்டுவந்துள்ளன. சமுதாய அவலங்களான சாதீய முரண்கள், மதுவிற்கு அடிமையாதல், வறுமை, அன்பின்மை, தற்கொலைகள், திருட்டு முதலியன இந்நாவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சாதீய முரண்கள்

சாதி என்பது இந்தியாவைப் பொறுத்தவரை தொன்மையானதும் சிக்கலானதும் ஆகும். இது ஏற்றத்தாழ்வு களுக்கு வழிவகுப்பதுடன் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளைப் பெருமளவில் மீறு வதாக உள்ளது. பெரும்பான்மையான மக்களின் பரம்பரை அடையாளமாகவே சாதி திகழ்கிறது. சாதி அடிப் படையிலான பாகுபாடுகளைக் களைவது இன்றைய காலகட்டத்தின் கட்டாயமாகும். தனிமனித மனமாற்றத்தால் மட்டுமே சாதியை ஒழிக்க இயலும். பாரதியார் உயர்ந்தவன் தாழ்ந்தவன், ஏழை பணக்காரன் என்று பாகுபாட்டில் மிதந்துகொண்டிருக்கும் சமூகத்தைக் கண்டு,

ஏழையென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை ஜாதியில் (பாரதியார் கவிதைகள் விடுதலை பா.2) என்று சாடுகிறார். வறியவர்க்கு ஈந்தவரே உயர் குலத்தினர், ஈயாதவரே இழிகுலத்தினர் என்று நல்வழி கூறுகிறது. இதனை ஔவையார், ***சாதி யிரண் டொழிய வேறில்லை (நல்வழி பா.2)*** என்னும் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவனாகக் குறிப்பிடப்பட்டுள்ள தூமகேது, அவ்வூர் திருவிழாவில் பலியிடு வதற்காகக் கொண்டு வரப்பட்ட எருமைக்கு, அணிவிக்கப்பட்ட சாமந்தி மாலை தரையில் கிடப்பதைக் கண்டு, எடுத்துத் தன் கழுத்தில் அணிந்துகொள்கின்றான். அதனைக் கண்ட ஒருவன், ***கீழ்சாதிப் பயல். காளிக்குப் படைத்த சாமந்தி மாலையை எடுத்துப் போட்டு ஆடுகிறான். இவனை இப்படியே விட்டுவைத்தால் நாளை நம் வீட்டில் வந்து பெண் கேட்க ஆரம்பித்துவிடுவான். இவனுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும் (இடக்கை பக்.116,117)*** என்ற கூற்று சாதிவேறுபாட்டினால் ஏற்படும் அவலத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

தூமகேதுவின் மனைவி நளாவின் மூன்றாவது பிரசவ நேரத்தில் அழைத்து வரப்பட்ட மருத்துவச்சி, அங்கு வந்த பிறகே நளா ஒரு கீழ்சாதிப்பெண் என்பதனை அறிந்தாள். அவளைக் கையால் தொட மறுக்கிறாள். கொண்டை ஊசியால் பனிக்குடத்தைக் குத்திச் சேதப்படுத்திவிட்டு, ***உங்களைப் போன்ற கீழ்சாதி நாய்களுக்கு எதற்கு பிள்ளைகள்? ரத்தப்பெருக்கு நிற்கவில்லை, இனிப்பிழைக்க மாட்டாள். என ஏசியபடியே நளாவை ரத்த வெள்ளத்தில் மிதக்க விட்டு வெளியேறிப் போனாள் (இடக்கை ப.118)*** என்று கூறுவது சாதியின் பெயரால் மருத்துவ உதவிகூடச் செய்ய மறுக்கும் மனிதநேயமற்ற மனிதர்களின் கோர முகத்தைப் படம்பிடித்துக் காட் டுகிறது.

பஞ்சம் பிழைக்க வந்த கர்ப்பிணி மருமகள் பசி தாங்காமல் பன்றி மேய்ப்பவனின் வீட்டிலிருந்து கஞ்சி

ISSN 2320-4842

வாங்கிக் குடிப்பதைக் கண்டு கிழவி, ***கேடு கெட்ட முண்ட..... இங்கே வந்து எதுக்குடி கஞ்சி வாங்கிக் குடிக் குறே. நாம யாரு. இவங்க யாரு. சாதி கெட்ட வீட்ல போயி கஞ்சி வாங்கிக் குடிக்கிறதுக்கு பன்னிப்பீயைத் திங்க வேண்டியதுதானே (துயில் ப.152)*** என்பது பசிக் கொடுமையிலும் சாதிக் கௌரவம் பார்க்கும் அவ லத்தை உணர்த்துகிறது.

நாதஸ்வரம் வாசிக்கச் சென்ற இடத்தில் சாதியின் பெய ரால் அவமானப்படுத்தப்பட்ட பக்கிரி, ***சாதித் திமிர் என்பது இதுதானா. இப்படி அடியும் அவமான மும் பட்டு நாய்பிழைப்பு எத்தனை நாளைக்குப் பிழைப்பது. எந்த ஊருக்கு வாசிக்கப் போனாலும் தங்களை சாதியைச் சொல்லி கேவலமாகத்தான் நடத்துகிறார்கள்(சஞ்சாரம் ப. 21).*** இங்குச் சாதியைக் காரணம் கூறி ஒதுக்கிவைக் கும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் மனக்குமுறல் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

மதுவிற்கு அடிமையாதல்

சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் தீய பழக்கங்களில் புகைபிடித்தலும் மது அருந்தலும் குறிப்பிடத்தக்கன. மதுவிற்கு அடிமையாவதால் உடல் ரீதியான, சமூக ரீதியான பாதிப்புகள் ஏற்படுகின்றன. வாழ்க்கையில் நிகழும் துன்பங்களிலிருந்து விடுபடவும் இன்பங்களைக் கொண்டாடவும் மது அருந்துகின்றனர். இதனால் சண்டைசச்சரவுகள், கொலைகள், பொருளாதாரப் பாதிப்புகள், நெறி தவறிய வாழ்க்கை எனச் சமூக அவலங்களே அரங்கேறுகின்றன. இன்று மது அருந் துவது புதிய கலாச்சாரமாகவே மாறிவிட்டது. பெண் கள், மாணவர்கள் என வேறுபாடின்றி எல்லா நிலை யினரும்மதுவிற்கு அடிமையாகும்நிலை உள்ளது.

கள்ளுண்ணல் சங்ககாலத்திலேயே நடைமுறையில் இருந்துள்ளது. சங்கப் பாடல்களில் கள்ளுண்ணல் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. மதுவின் ஊறலை நிலத்தில் புதைத்துவைத்துப் பலநாட்கள் கழித்து எடுத்துப் பயன்படுத்தும் வழக்கம் பண்டு இருந்துள் ளது. இதனை,

நிலம்புதைப் பழுனிய மட்டின் தேறல்
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து(புறம்.பா.120) என்கிறது புறநானூறு. பெண்களும் ஆண்களைப் போலவே மது அருந்தியுள்ளனர். புணர்ச்சியின் போது மகளிர் மது அருந்தியது குறித்து,

பட்டு நீக்கித் துகிலுடுத்து
மட்டு நீக்கி மதும கிழ்ந்து (பட்டி. 107-108) என்று பட்டினப்பாலை கூறுகிறது.

நட்பைக் காரணமாகக் கூறிப் பலர் மதுவுண்டு மகிழ் கின்றனர். செல்லையா, நாகுவையும் அய்யாவையும் வீட்டிற்குள் அழைத்துச் சென்று, ***சீமைச்சாராயம் ஒரு திக்கிலே கிடச்சது என சந்தோஷமாக வெண்கல டம்ளர் இரண்டில் ஊற்றினார் (நெடுங்குருதி ப.280). கிடாக் கறியும் சாராயமும் வேண்டிய மட்டும் இப்போ ஊர்ல சீரழியுது. நீயும் வா.... மாப்பிள்ளை (நெடுங்குருதி ப. 280)*** என்று கூறுவதன் மூலம் அறியமுடிகிறது.

பெண்கள் மது அருந்துவதை ஜெயராணி, ரத்னாவதி என்னும் கதாபாத்திரங்கள் உணர்த்துகின்றன. ***ஜெய ராணிக்கு வயதேறியிருந்த போதும் உடல் தளர்ச்சி யடையவில்லை. அவள் குடிப்பதற்குப் பழகியிருந்தாள் (நெடுங்குருதி ப.367)*** என்பதாலும், ***ஜெயராணி ரத்னா வின் கையைப் பிடித்து இழுத்தபோது அவள் குடித் திருப்பது தெரிந்தது (நெடுங்குருதி ப.405)*** என்பதாலும் அறியமுடிகிறது.

இன்றைய மாணவச் சமுதாயம் மதுவிற்கு அடிமை யாகிவரும் நிலையைத் தேர்தல் நேரத்தில் கட்சியின ருக்காக நாதஸ்வரம் வாசிக்கச் சென்ற ரத்தினம், பக்கிரி இவர்களின் உரையாடல் எடுத்துரைப்பதாக உள்ளது: ***தங்கவேலு கூட யாரப் போடுறது. தவிலு மட் டும் செந்திலைப் போட்டருவோம். அவன் நல்லா வாசிப் பான். குடி ஓவர்ண்ணே. குடிச்சிட்டு போறான் விடு. இப்போதான் பள்ளிக்கூட பையன்கூட குடிக்கிறானே (சஞ்சாரம் ப. 98).***

வறுமையின் கொடுமைகள்

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள்கூடப் பெற இயலாத நிலையே வறுமை எனப்படுகிறது. ஏழைகள் என்றும் போதிய பண வசதியின்றி உளவியல் ரீதியாகப் பாதிக்கப் பட்டு மன அழுத்தத்துடன் வாழ்கின்றனர். வறுமை யில் வாடும் அவர்களின் துன்பங்களும் துயரங்க ளும் ஏராளம். இன்று இது ஒரு சமூகப் பிரச்சினை யாகவே உருவெடுத்துள்ளது. உறவுகளையும் வெறுத்து ஒதுக்கும் வறுமையின் கொடுமை ஆராய்ந்து தீர்வு காணப்பட வேண்டிய ஒன்றாகும். இதனை,

கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிதே இளமையில் வறுமை (தனிப். 55) என ஔவையார் வறுமையின் கொடுமையைத் தமது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

அஜ்யா தனது இளமைக்கால ஏக்கங்களை எண்ணிப் பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ள வரிகள் வறுமையின் கொடுமையை உணர்த்துகிறது. ***வீட்டின் வறுமை பெற் றோர்களைச் சொந்த குழந்தைகளைக் கூட வெறுக்க வைத்தது (இடக்கை ப.52).*** சம்பு என்னும் ஏழு வயது சிறுவன் திருவிழாவில் பெற்றோரைத் தவறவிடுகிறான். அவனைத் தேடி உறவினர் யாரும் வரவில்லை. படகுத் துறையிலே தங்கிவிடுகிறான். அவனைக் குறித்துக் கூறும்போது, ***வறுமையில் வாடும் குடும் பத்தில் ஒருவன் காணாமல் போய்விட்டால் சுமை குறைந்தது என்றுதானே நினைப்பார்கள். யார் அவனைத் தேடி வரப்போகிறார்கள் (இடக்கை ப.76)*** என்பதால் வறுமை உறவையும் மறக்கச் செய்யும் என்பதனை வெளிப்படுகிறது. வறுமையின் காரணமாக முதலில் வாடி நிற்பது வயிறு. அந்த வயிற்றை ஔவையார்,
என்னோ வறியாய் இடும்பைக்கூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது (நல்வழி பா.11) என்று

குறிப்பிடுகிறார். மஞ்சா இறந்து கிடக்க அவனது தாய் கிம்பத்திடம் ***நீ அவனைப் பார்த்தாயா? என்ன சொன்னான்? கடைசியாக என்ன சொன்னான்? பசிக்கிறது என்றுதான் சொன்னான் அய்யோ என் பிள்ளைகள் பசியாற்ற என்னால் முடியவில்லையே. இது என்ன பிழைப்பு. நான் எதற்கு உயிர் வாழுகிறேன். நானும் கோமுட்டிக் காயைத் தின்று செத்துப்போய் விடுகிறேன் (இடக்கை ப.206)*** என்று சொல்வது கல் நெஞ்சையும் கரைக்கும் வறுமையின் கொடுமையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

குடும்பங்களில் அன்பின்மை

குடும்பம் சமுதாயத்தின் ஓர் அங்கம். சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் அடிப்படை அது. நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்பர். குடும்பம் கட்டுக்கோப்பாக இருக்க வேண்டுமானால், அக்குடும்பத்திலுள்ள அங்கத்தினர் ஒவ்வொருவரும் அன்பும், விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவமும் உடையவர்களாக இருக்க வேண்டும். அன்பே இல்வாழ்க்கையின் பண்பு என்கிறார் வள்ளுவர். அத்தகைய அன்பு இன்று எல்லாக் குடும்பங்களிலும் உள்ளதா என்பது கேள்விக் குறியாக உள்ளது.

சிறுவயதில் ஏற்பட்ட காய்ச்சலால் காது கேட்காமல் போன தேவராஜ் தன் அப்பாவைக் குறித்து தன் நண்பன் ராமசுப்புவிடம் கூறும்போது, ***ஏன்டா என்னை குழப்புறே, எங்கப்பாவுக்கு, என்னைக் கண்டாலே பிடிக்காதுடா. ரொம்ப கேவலமா பாப்பாருடா (நிமித்தம் ப. 42)*** என்கிறார். படம் பார்த்துவிட்டு வீட்டிற்கு வந்த தேவராஜைப் பார்த்து அப்பா, ***செவிட்டு நாயி காது தான் கேட்கலையே, வீட்ல கிடந்தா என்ன. உனக்கு எதுக்குடா சினிமா. அவங்க பேசுறது உனக்கு ஏதாவது புரியப் போகுதா (நிமித்தம் ப.141). காய்ச்சல்லயே செத்து தொலைஞ்சிருந்தேனா நாங்களாவது நிம்மதியா இருந்துருப்போம். ஏன்டா உசிரோட இருந்து எங்களைக் கொல்றே? (நிமித்தம் ப.141)*** என்று கூறுவது பரிவுடன் பார்க்க வேண்டிய மகனைப் பொறுப்பற்ற முறையில் புண்படுத்தும் அன்பற்ற வார்த்தைகளைப் பேசித் துன்புறுத்தும்தந்தையின் மனநிலையைப் பிரதிபலிக்கிறது.

குடும்பம் சீர்குலையவும் போர்க்களமாக மாறவும் காரணமாக அமைவது அன்பின்மை. சம்பத்திற்கும் அவன் அப்பாவுக்குமிடையே வாக்குவாதம் முற்றிக் கைகலப்பாகிறது. அப்பா சம்பத்தை அடிக்க அவன் மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுகிறது. சம்பத்தும் அப்பாவை அடிக்கிறான். ***ஓட முடியாமல் சிக்கி கொண்ட எலியை அடிப்பதுபோலச் சம்பத் அவரை தனது கையில் இருந்த மஞ்சனத்தி விறகால் மாறிமாறி அடித்துக் கொண்டிருந்தான் (உறுபசி ப.80)*** என ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

வாழ்வையழிக்கும் தற்கொலைகள்

தொற்றுநோய்களைப்போலத் தற்கொலையும் கவனிக்காமல் விட்டால் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இது தனிமனித உளவியல் பிரச்சினை மட்டுமன்று. ஒரு சமூகப் பிரச்சினையும்கூட. தற்கொலைகளால் நெருக்கடிக்கு ஆளாகும் நெருங்கிய பந்தங்களும் ஏராளம். தேவையான ஆலோசனைகளை வழங்குவதன்மூலம் அவர்களது மனநலம் பேணலாம். நம் நாட்டில் பண்டுதொட்டுத் தற்கொலை சார்ந்த நிகழ்வுகளான வடக்கிருத்தல், உடன்கட்டை ஏறுதல் போன்றன இருந்துள்ளன. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு தன் கணவன் இறந்தபின் கைம்மை நோன்பை மேற்கொண்டு வாழ்வதைவிட இறப்பதையே விரும்புவதாகக் கூறும் பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

***பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்புஅற
வள்இதழ் அவிழ்ந்த தாமரை
நள் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே (புறம் 246).***

செருப்புத் தைக்கும் கருப்பையாவிற்கு நாதஸ்வரம் கற்றுக் கொடுத்த காரணத்தால் கண்ணுசாமி என்ற கலைஞர் பிற கலைஞர்களால் ஒதுக்கப்பட்டு நோய் வாய்ப்படுகிறார்.இதற்குக்காரணம் தான் எனக் கருதிக் கருப்பையா தற்கொலை செய்துகொள்கிறான். ***இந்தச் சூழலில் தன்னால் தான் கண்ணுசாமிக்கு இத்தனைப் பிரச்சினைகளும் என நினைத்த கருப்பையா வேதனை தாங்காமல் புளியமரத்தில் தூக்கிலிட்டுக்கொண்டு செத்துப் போனான் (சஞ்சாரம் ப.69)*** எனக் கூறப்பட்டுள்ளது.

சின்னராணியின் அண்ணன் முத்து தன் தாய் இறப்பைப் பற்றிக் கூறும்போது, ***இவரு படுத்துன பாடு தாங்க முடியாம மனசு உடைஞ்சி போய் கிணத்துல விழுந்து செத்துப் போனா (துயில் ப.117)*** என்று கூறுவது கணவனின் கொடுமை தாங்காது மனம் நொந்து தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் பெண்களின் அவலநிலையை உணர்த்துகிறது. சூதாட்டத்தால் பணத்தை இழந்து தற்கொலை செய்துகொள்ளும் நிகழ்வுகள்இன்றுஏராளம். நிமித்தம் நாவலில் ***சிவகாமி நாயுடு என்பவர் இருபத்தைந்தாயிரம் ரூபாயைச் சூதில் தோற்றுப்போய்த் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டுவிடவே பருத்தி சூதைத் தடை செய்வதற்கான காவல்துறை முடுக்கிவிடப்பட்டது(நிமித்தம் ப.186)*** என்ற செய்தி இடம் பெற்றுள்ளது.

திருட்டுத்தொழில்

உலகம் முழுவதும் தொன்றுதொட்டு நடைபெற்றுவரும் ஒரு குற்றமே திருட்டு. சொந்த முயற்சி, உழைப்பு இவற்றை நம்பி வாழாது பிறர் உடைமைகளைக் கவர்ந்து வாழ்வதே திருட்டு எனப்படுகிறது. வலிமையாலும் வன்முறையாலும் நடைபெறும் திருட்டில் சிறியவர் பெரியவர் என்ற பாடுபாடு இன்றி ஈடுபடுகின்றனர். பசிக்காகவும், பிற தேவைகளுக்காகவும் ஈடுபடும் திருட்டு தண்டனைக்குரிய குற்றமேயாகும். ஐவகை நிலங்களில் பாலை நிலத்து மக்களின் தொழிலாகவே களவு இருந்துள்ளது. ஆறலைக் கள்வர்களிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்வதற்காக யாழில் பாலைப்பண் இசைத்துப் பாடிக்கொண்டு பொருநர் கூட்டம் செல்லும் என்கிறது பொருநராற்றுப்படை.

ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருஇன் பாலை (பொருந. 21-22)

வழிப்பறிசெய்வது பரம்பரைத் தொழிலாகக்கூட இருந்துள்ளது. பருத்தி விளையும் காலங்களில் வழிப்பறிக்கு அஞ்சிப் பருத்தி ஏற்றிச் செல்லும் வண்டிகள் தனியாகச் செல்வதில்லை. பல வண்டிகள் சேர்ந்தே செல்லும். ***பருத்திவிளையும் காலங்களில் வழிப்பறி அதிகமாக இருக்கும். பருத்தி ஏற்றிப்போன மாட்டு வண்டிகளை ஆலமரத்து விலக்கு ரோட்டில் வைத்து வழிப்பறிக் கொள்ளையர்கள் திருடிப்போவதை வழக்கமாக வைத்திருந்தார்கள் (நிமித்தம் ப.181)*** என்பதன் மூலம் வழிப்பறிக் கொள்ளை குறித்து அறிய முடிகிறது.

திருவிழாக்கள் நிகழும் இடங்களில் திருட்டும் அதிகமான அளவில் நடைபெறுகிறது. ஈரத்துணிக் கள்ளன் என்று அழைக்கப்படும் சீனி திருட்டில் ஈடுபடும் தந்திரம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ***சீனி ஒரேயொரு துண்டை மட்டுமே தலையில் கட்டியிருப்பான். எங்கே திருடப்போவதாகயிருந்தாலும் அந்தத் துண்டை நனைத்து ஈரமாக்கிக் கொண்டு போவான் திருவிழாக் கூட்டங்களில் ஈரத்துணியைத் காயப்போடுவது போல திருட வேண்டிய பொருள் மீது போட்டுவிட்டுத் திருடிக் கொண்டு போய்விடுவான் (நெடுங்குருதி ப.64).***

பசிப்பிணி என்னும் பாவி செய்யத்தகாதன செய்வதற்கு வெட்கப்படாது என்கிறது மணிமேகலை. பசிக் கொடுமையால் தன்பிள்ளைகளில் ஒருவன் இறந்து போக, நளா பிள்ளைகள் பசியால் துடித்துச் செத்துப் போவதை விடவும் திருடுவது குற்றமேயில்லை என எண்ணி மாவு வண்டியைக் கொள்ளையடிக்கிறாள்.

இதனைக் ***'கிழவர் படுக்கையில் கிடந்தபடியே' மாவு மூட்டையைத் திருடிக்கொண்டு வந்தீர்களா? எனக் கேட்டுக்கொண்டேயிருந்தார். யாரும் அவருக்கு பதில் சொல்லவில்லை. அன்றிரவு அவர்கள் பசியடங்கி நிம்மதியாக உறங்கினார்கள் (இடக்கை ப.207)*** என்ற வரிகளின்மூலம் அறிய முடிகிறது.

போதைக்கு அடிமையாவதால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புகள், அவர்களைத் திருட்டுத் தொழிலில் ஈடுபடச்செய்கிறது. குடியின் காரணமாகக் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட சம்பத் குடிப்பதற்குப் பணம் இன்மையால் திருட்டுத் தொழிலிலும் ஈடுபடுகின்றான் என்பது, ***அதன் பிறகு குடிப்பதற்காக எவரிடமும் அவன் காசு வாங்கவும் சில்லறை திருட்டுகளில் ஈடுபடவும் தயங்கவேயில்லை (உறுபசி ப.140)*** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முடிவுரை

விரும்பத்தகாத நிகழ்வுகள் அவலங்கள் எனப்படுகின்றன. நாம் அவற்றைக் குறைப்பதற்கான தீர்வு கண்டறிய வேண்டும். மேலோட்டமான தீர்வுகளால் அவலங்கள் குறைவதில்லை. அடிப்படைக் காரணம் அறிந்து சீர் செய்து அவலங்களற்ற சமுதாயம் படைக்க ஒவ்வொரு தனிமனிதனும் முயற்சி செய்ய வேண்டும்.

பயன்படுத்திய நூல்கள்

1. துயில் - எஸ். ராமகிருஷ்ணன், தேசாந்திரி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு ஏப்ரல் 2018
2. நிமித்தம் - எஸ். ராமகிருஷ்ணன், தேசாந்திரி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு நவம்பர் 2018
3. இடக்கை - எஸ். ராமகிருஷ்ணன், தேசாந்திரி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு பிப்ரவரி 2019
4. உறுபசி - எஸ். ராமகிருஷ்ணன், தேசாந்திரி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு மே 2019
5. சஞ்சாரம் - எஸ். ராமகிருஷ்ணன், தேசாந்திரி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு ஜனவரி 2019
6. நெடுங்குருதி - எஸ். ராமகிருஷ்ணன், தேசாந்திரி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு ஏப்ரல் 2018
7. நல்வழி, ஔவையார், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
8. பாரதியார் கவிதைகள் - ஸ்ரீ செண்பகா பதிப்பகம், தேனாம் பேட்டை, சென்னை. ஐந்தாம் பதிப்பு பிப்ரவரி 2001
9. புறநானூறு -வெ. பாலசுப்பிரமணியன் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். சென்னை, அக்டோபர் 2017
10. பட்டினப்பாலை - உரையாசிரியர் வி. நாகராசன். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். சென்னை, அக்டோபர் 2017
11. ஔவையார் தனிப்பாடல்கள், புலியூர்க்கேசிகன் உரை. மங்கை வெளியீடு, சென்னை. முதற்பதிப்பு டிசம்பர் 2010
12. பொருநராற்றுப்படை உரையாசிரியர் கி.வா. ஜகந்நாதன் அமுதநிலையம் லிமிட்டெட், சென்னை, முதற்பதிப்பு ஜூலை 1985

Develop interest in life as you see it; in people, things, literature, music - the world is so rich, simply throbbing with rich treasures, beautiful souls and interesting people. Forget yourself.

- Henry Miller

You must be the change you wish to see in the world.

- Mahatma Gandhi

ISSN 2320-4842

Indian Popular Folktales: A Cultural Exploration of Animals - Tiger and Leopard in Ruskin Bond's Stories

R. Jayasri
PhD Research Scholar, Department of English, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore 641 043

Dr. M. Anjum Khan
Assistant Professor, Department of English, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore 641 043

Abstract

This research essay delves into the captivating realm of Indian popular folktales as depicted in the works of renowned author Ruskin Bond. Specifically focusing on narratives revolve around iconic animals such as the tiger and the leopard, the study examines how Bond's stories preserve India's nature-oriented culture and its deep-rooted connection with the animal kingdom. Through a comprehensive analysis of selected tales like "A Tiger in the House" and "The Tunnel," this research highlights the moral lessons and insights embedded in these timeless narratives, showcasing the wisdom and cunning attributed to animals in Indian folklore. By exploring the enduring cultural significance of these folktales within Bond's literary repertoire, this essay emphasizes the vital role they play in preserving the country's heritage and promoting a sense of respect and coexistence with wildlife.

Keywords: Indian folklore, popular folktales, tiger, leopard, Ruskin Bond, nature-oriented culture, coexistence.

Introduction

Indian literature has played a pivotal role in preserving and perpetuating folk tales, thus safeguarding the rich cultural heritage of the nation. Throughout history, Indian literary works have incorporated these age-old narratives, ensuring that they are passed down from one generation to another. These folk tales are not merely stories; they encapsulate the values, beliefs, and wisdom of the diverse communities that make up India. Preserving these tales is crucial because they serve as a powerful link to the country's roots, fostering a sense of identity and shared heritage among its people. Moreover, they offer insights into the historical, social, and cultural contexts of different regions, providing valuable glimpses into the customs, rituals, and traditions that shape Indian society. By safeguarding these folk tales within literature, India maintains a living repository of its cultural essence, reinforcing the importance of preserving and cherishing its unique tapestry of traditions for generations to come.

Indian popular folktales abound with captivating stories featuring animals like the tiger and the leopard. One such popular folktale is the story of *Panchatantra*, which includes the timeless tale of "The Tiger and the Traveller." In this narrative, a wise Brahmin, seeking a gift for a king, comes across a tiger trapped in a pit. Through cunning wit and eloquent speech, the Brahmin convinces the tiger to spare his life and wait for a more substantial meal, ultimately escaping unharmed. This tale exemplifies the ingenuity and cleverness attributed to animals in Indian folklore.

Another cherished folktale is the story of "The Cunning Fox and the Clever Leopard." In this narrative, the fox and the leopard engage in a battle of wits, attempting to outsmart each other to claim a prized piece of meat. The tale showcases the wisdom and cunning of the animals, reflecting the traditional Indian belief in the intelligence and adaptability of wildlife.

Objectives

The objectives of the present essay are to examine and prove how Indian literature, particularly through the selected short stories of Ruskin Bond, has been instrumental in preserving folk tales and their significance in preserving culture. By analysing Bond's works, the essay aims to showcase how his writings have effectively incorporated and retold traditional folk narratives, thus keeping them alive and relevant in contemporary times. Additionally, the essay intends to demonstrate how Bond's stories act as a bridge between the past and the present, illustrating the enduring cultural values and beliefs embedded in these tales. Through a thorough exploration of Bond's selected works, this essay seeks to highlight the crucial role of Indian literature as a custodian of cultural heritage and its ability to instil a sense of pride and awareness among readers regarding their roots and traditions.

Enchanting Animal Tales: A Cultural Safari

Folktales, being an integral part of Indian literature, have not only entertained and preserved cultural values but have also played a significant role in instilling a deep sense of curiosity and reverence for nature, especially among children. In Ruskin Bond's short story "The Tunnel" from the collection *Time Stops at Shamli*, the protagonist, Ranji, exemplifies this connection between folktales and the natural world. Through Bond's storytelling, Ranji

emerges as a young boy whose fascination with the passing train through the dark tunnel symbolizes his eagerness to explore the mysteries of nature. As he rides his cycle through the jungle paths to reach the tunnel, he is exposed to the diverse sounds of animals and the gentle breeze of the forest. This encounter with nature awakens his senses, enhancing his appreciation for the environment and its wonders. The vivid descriptions of the forest and the tunnel not only ignite Ranji's imagination but also encourage young readers to embark on their own journeys of discovery in the natural world.

Upon entering the tunnel, Ranji encounters a plethora of small creatures that thrive in the darkness, such as bats and lizards. Bond's portrayal of this hidden ecosystem fosters an awareness of the intricate and interconnected life forms coexisting in nature's dark recesses. Ranji's interaction with the watchman, a character deeply connected to the natural surroundings, further emphasizes the nurturing bond between humans and their environment.

After the train departs from the tunnel, the residual heat and the sound of the engine reverberate through the surrounding forests. Driven by curiosity, Ranji ventures into the tunnel, only to find it clammy and humid, with small creatures, "A bat flew past. A lizard scuttled between the lines" (TSS 87). As he reaches the end of the tunnel, he encounters its watchman, whose rustic presence infuses vitality into the narrative, a characteristic that Bond often employs in his stories. Bond's characters, encompassing the elderly, young boys and girls, and watchmen like the one portrayed here, are instrumental in imbuing his narratives with life.

The watchman warmly welcomes Ranji, remarking that visitors are a rare occurrence in his solitary domain. Ranji inquiries about a mysterious image he had seen amidst the branches, and the watchman identifies it as a leopard. The boy inquiries about the leopard's danger, and the watchman shares that if the creature is left undisturbed, it poses no threat and frequents the area due to the presence of deer in the nearby jungle. Through their conversation, a unique bond between the watchman and the leopard begins to unfold. The watchman perceives the leopard as his visitor and harbours no fear of it. He reveals that he has encountered the leopard on numerous occasions and believes it won't harm him, saying, "It knows me well. We have seen each other many times. I don't think it will attack" (TSS 90).

One evening, while Ranji and the watchman enjoy tea in front of the hut, twilight descends, and the birds grow silent. As the watchman lights his oil lamp in preparation to inspect the tunnel, he hears the sound of the leopard within. Despite their attempts to drive the leopard away with shouting, it remains unmoved. Eventually, the creature retreats into the darkness, uncertain of the number of terrifying humans before it. This encounter reveals the unique and tender relationship between the watchman and the leopard. The watchman's lack of fear and the leopard's unwillingness to attack affirm the unspoken understanding and connection they share.

In "The Tunnel," Bond's passion for trains becomes evident, as trains and the tunnels they traverse are central to the story. Furthermore, Bond masterfully weaves strong characters into his narratives, capturing readers' imaginations with their simple yet profound approach to life. Kishen Singh, a character belonging to the rural class, exemplifies this characteristic. With an intimate knowledge of the forest and a preference for rural life over city living, he exudes confidence in driving away the dreaded panther from the tunnel (Pawar 71). Mohanraj's analysis of Bond's eco-conscious inclination in "The Tunnel" highlights the endearing portrayal of the guard. The guard's straightforward wisdom and his candid views on city and village life lend a sense of authenticity and humour to the story, captivating readers with its truthfulness (Mohanraj).

Folktales like "The Tunnel" serve as powerful tools in nurturing children's innate curiosity about nature. By presenting these stories in an accessible and relatable manner, young readers are drawn into the narrative and encouraged to embrace their own sense of wonder and adventure. Through the lens of folktales, children learn to view nature as not only a source of fascination but also as an essential part of their cultural heritage. This connection fosters a sense of responsibility and care for the environment, as children develop a profound appreciation for the ecosystems that inspired the folktales they love.

In the present short story collection, the short story "A Tiger in the House" portrays the relationship between the grandfather and the tiger named Timothy, addressing the subject of love and compassion. On a hunting journey in the Terai wilderness near Dehra, the grandfather discovers a tiger cub. Grandmother names the tiger cub Timothy. The tiger cub has two companions, the monkey and a puppy. At first, Timothy is scared of the puppy and later it allows the puppy to cuddle with him, "He would make absurd dashes at it with his large forepaws, and then retreat to a ridiculously safe distance. Finally, he allowed the puppy to crawl on his back and rest there!" (TSS 155).

Timothy loves to play and he has very clean habits. His favourite place in the house is the drawing room and he spends his time there. At night time, he sleeps in the cook's quarters. Day by day his activities and behaviours get changed and now he is a fully grown retriever. Timothy is six months old, and he has become less friendly:

When out for a walk with me, he would try to steal away to stalk a cat or someone's pet Pekinese. Sometimes at night we would hear frenzied cackling from the poultry house, and in the morning, there would be feathers lying all over the verandah. (TSS 155)

By seeing these behaviours of Timothy, Grandfather decides to transfer him to the zoo. Though Timothy has been raised as a pet in a house, the natural behaviour of the wild animal emerges at a certain point in time. The

nearby zoo is at Lucknow and is two hundred miles away from their place. The zoo authorities are happy to receive them and they assume Timothy as their gift.

After a gap of six months, the grandparents visit Lucknow to their relative's home. Grandfather decides to go to the zoo and see Timothy. As soon as the grandfather enters the zoo, he straight away goes near to the cage of Timothy and begins to play with him. Everyone in the zoo was amazed to see the connection between the tiger and the grandfather, "It licked Grandfather's hands and only sprang away when a leopard in the next cage snarled at him" (TSS 156). The tiger gets scared of the leopard and hides himself in the corner of the cage. Even though the tiger is brave enough, it gets afraid of the leopard.

A zookeeper arrives and asks the grandfather what he is doing. He says that he is talking to Timothy. The Grandfather suggests the keeper to change the cage of the tiger but he asks him to meet the Superintendent of the zoo. But he has left already. He meets a zookeeper who was there at the time of transferring Timothy to the zoo. Grandfather comes to know about the death of Timothy, and the zookeeper says that he died of pneumonia, "I remember your tiger very well," said the keeper. "He died two months ago" (TSS 157). Here it is understood that Grandfather has a secret love for Timothy, and it makes him feel sad for him. But the relationship between the new tiger and Grandfather is unbelievable. Grandfather thinks the tiger as Timothy, and it also plays with him. Though the tiger is a wild animal, it has a kind of love towards the grandfather.

The story, "Tiger in the House," is yet another Bond story in which an animal features in general, particularly a tiger. Bond is keen on insisting that the best form of human life experience cannot be attained without a symbiotic relationship with nature, including other living organisms. Time and again, he projects this opinion in his short stories. Hitherto, he presents even the ferocious wild animal, the tiger, to be a reasonable and intelligent creature in its way, and all that is required is the understanding. "The authentic picture of the Indian jungles comes alive through his skilful portrayal of nature and observant descriptions. He does write about tigers, panthers, and leopards in stories like 'A Tiger in the House', 'Tiger, Tiger, Burning Bright', 'Panther's Moon All Creatures Great and Small', and 'The Leopard'" (Pawar 90). Human beings, according to Bond, should support the animals that populate their environment. There should be adequate understanding, and such understanding can bring about a certain love and care for those creatures. This understanding can be seen in various characters like the guard in the story "The Tunnel" and the grandfather in the story "A Tiger in the House."

Conclusion

In conclusion, the combination of two short stories, "A Tiger in the House" and "The Tunnel," by Ruskin Bond, exemplifies the enduring power of folktales in preserving cultural values and reinforcing the inseparable bond between Indian culture and nature. Both narratives delve into the profound connections that can be forged between humans and the animal kingdom, epitomizing the essence of folktales in cultivating empathy and understanding towards nature's inhabitants.

In "A Tiger in the House," Bond weaves a heartwarming tale of the grandfather's affection for the tiger cub, Timothy, illuminating the intricate relationship between domestication and wild instincts. The story poignantly highlights the challenges of coexisting with the natural world and how the wild nature of animals inevitably asserts itself. The narrative encapsulates the underlying theme of fostering empathy and respect for wildlife, emphasizing the role of folktales in instilling a deep appreciation for the harmony between humans and nature.

Similarly, "The Tunnel" delves into the curiosity and connection between a small-town boy, Ranji, and the wild environment surrounding him. Through the encounter with a leopard, the narrative embodies the rich tradition of folktales in depicting the interdependence of humans and the natural world. Ranji's fascination with the train and the darkness of the tunnel reflects the innate connection between Indian culture and the environment. The watchman's fearless relationship with the leopard underscores the profound respect and understanding of the rural community towards wildlife, reinforcing the nature-oriented ethos of Indian culture preserved through oral storytelling traditions.

Together, these stories exemplify how folktales serve as vital conduits for preserving cultural heritage and fostering a harmonious relationship with nature. Bond's skillful portrayal of human interactions with the animal kingdom not only entertains but also imparts valuable lessons about compassion, coexistence, and reverence for the natural world. By keeping the cultural values and Indian heritage alive through these narratives, Bond contributes to the perpetuation of a nature-oriented ethos, bridging the gap between past and present generations and nurturing a collective consciousness for the preservation of the environment. Ultimately, "A Tiger in the House and "The Tunnel" stand as remarkable testaments to the enduring significance of folktales in shaping and preserving Indian culture's profound connection with nature.

Works Cited

Bond, Ruskin. *Time Stops at Shamli.* Penguin, 1989.

Mohanraj, S. "Eco-Phile: Ruskin Bond." *The Creative Contours of Ruskin Bond*, edited by

P.K. Singh, Pencraft, 1995.

Pawar, Pramod Ambadasrao. *The Portrayal of Indian Reality in Ruskin Bond's Work:*

Analysis and Interpretation. 2005, DR. BABASAHEB AMBEDKAR MARATHWADA UNIVERSITY AURANGABAD, PhD Dissertation.

365 PANCHATANTRA STORIES. Om Books International, 2019.

ISSN 2320-4842

ஜோ. டி. குருஸின் புதினங்களில் பரதவர் நம்பிக்கைகள்

செ. விமலாபாய்
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை 641 018
ஆய்வு நெறியாளர்: **முனைவர் சகோ. பி. ரெஜினா**
துணைமுதல்வர், இணைப்பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை,
நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை 641 018

ஆய்வுச்சுருக்கம்

இயற்கையின் தோற்றத்தையும் செயற்பாடுகளையும் மனிதர்கள் தமது வாழ்வியலுடன் இணைத்தபோது நம்பிக்கைகள் உருவாகின. கடலை வாழ்வாதாரமாகக் கொண்ட பரதவர் இறைவன் மீதும், தம் தொழிலின் மீதும் மிகுதியான நம் பிக்கை கொண்டுள்ளனர். கடலில் வீசும் காற்று, கடல் நீரோட்டம் முதலியன குறித்து, விஞ்ஞான உலகமே வியப்ப டைய வல்ல அறிவு பெற்றுள்ளனர். தம் வாழ்வின் இன்ப, துன்ப நிகழ்வுகளுக்கு மந்திரம் செய்வதிலும் நம்பிக்கை கொண்டுள்ளனர். பரதவர் வாழ்வியலோடு இரண்டறக் கலந்து காணப்படுகின்ற நம்பிக்கைகளை இக்கட்டுரை எடுத் துரைக்கின்றது.

கலைச்சொற்கள்: பரதவர், நம்பிக்கை, மந்திரம், கடல்நீரோட்டம், காற்று.

முன்னுரை

பண்டுதொட்டே எல்லா மனிதர்களிடத்திலும் பல நம்பிக்கைகள் நிலவிவருகின்றன. அவற்றில் பலவும் இன்று வரை ஆற்றலுடன் வாழ்ந்துவருகின்றன. நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டன. தீமையின் மீதுள்ள அச்ச மும் நன்மை ஏற்பட வேண்டும் என்ற ஆர்வமும் பெரும்பான்மையான நம்பிக்கைகளுக்கு அடிப்படையாகும். பழந்தமிழரிடத்து நிலவிய நம்பிக்கைகளும் அவற்றினடியாகப் பிறந்த பழக்க வழக்கங்களையும் சங்க இலக் கியத்திலும் காண முடிகிறது. சில பறவைகளின் காட்சியும் அவற்றின் குரல் ஓசையும் நன்மை, தீமைகளை அறிவிக்கும் என்பதனை,

புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளி வருநர் பழியலர் (புறம்204: 1-2) எனக் குறிக்கிறது புறநானூறு. மக்களின் அறிவு, கலை, ஒழுக்கம், சட்டம், நம்பிக்கைதாம் பண்பாடாக மலர்கின்றன. மனிதனின் வாழ்க்கை முறையில் நம்பிக்கைகள் இரண்டறக் கலந் துள்ளன. சமுதாயத்தின் தேவைகள் அடிப்படையில் நம்பிக்கைகள் தோன்றியுள்ளன. பரதவர்களிடம் காணப் படுகின்ற நம்பிக்கைகள் குறித்து இக்கட்டுரை அமைகின்றது.

நம்பிக்கை-வரையறை

சமயம் என்னும் அமைப்பின் அடித்தளமாகத் திகழ்வன நம்பிக்கைகள். மக்களின் பழக்க வழக்கங்களால் நம்பிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தனிமனித உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகள் மேலும் மேலும் வளரக் காரணமாகின்றன. ***நாட்டார் பாடல்கள் வாழ்வின் வழியாகப் பரவுவன போலவே நம்பிக்கைகளும் பரவுகின்றன. நம் வாழ்வில் பெரும்பங்கு வகிக்கும் நம்பிக்கைகள் எப்போது தோன்றின என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. பழக்க வழக்கங்கள் காலப்போக்கில் சடங்காக மாறும். இந்தச்சடங்குகள் நம்பிக்கைகளை வெளிப் படுத்துகின்றன (மக்கள் வாழ்வியல் மந்திரமும் சடங்கும், ப.49)*** என்கிறார் சிவசுப்ரமணியன். நம்பிக்கைகள் மக்கள் மத்தியில் எவ்வாறு தோன்றியிருக்கும் என்பதனை ச. வளவன், ***பெரும்பாலும் அச்ச உணர்வி னாலே நம்பிக்கைகள் தோன்றுகின்றன. வாழ்வில் ஏற்படும் சில செயல்களுக்குக் காரணம் கற்பிக்க முடியாதபோது நம்பிக்கை கள் அசைக்க முடியாக உரம் பெறுகின்றன (நாட்டுப்புறவியல் கட்டுரைகள் ப.122)*** என்கிறார். நாட்டார் நம்பிக்கை கள் வாய்மொழியாகவோ, உற்றுநோக்கல் மூலமாகவோ, போலச்செய்தல் மூலமாகவோ பரப்பப்படுகின்றன. இதன் விளைவாக நம்பிக்கைகள் பல மாற்றங்களை அடைகின்றன. ***நம்பிக்கை என்பது எண்ணத்தின் இயக்கத் தோடு கலந்து வரப்பெற்று நிலைத்தபோது அது ஒரு மனநிலை என்று சொல்லப்படுகிறது. அந்த மனநிலை உள் மனதின் உதவியைப் பெறுகிறது. அந்த நிலையில் அதற்கு மகத்தான சக்தி உண்டாகிறது (வெற்றியின் ரகசியம் ப. 86)*** என்று தா.தண்டபாணி குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கை பகுப்பு நிலை

மக்கள் தம் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நம்பிக்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றனர். *நாள் செய்வது நல்லவர் செய்யார்* என்பது பழமொழி. தான் செய்யும் செயல் வெற்றியோடு முடிய வேண்டும் எனில் நல்ல நாளிலும், நல்ல வேளையிலும் செய்யவேண்டும் என்றெண்ணுகின்றனர்.

ISSN 2320-4842

நம்பிக்கைகள் நியாயமானவை, மூடத்தனமானவை என இருவகைப்படுத்தலாம். *பத்தாவது பெண் நல்ல தல்ல* என்ற நம்பிக்கை திட்டமிடாத குடும்பம் அழிந்து விடும் என்றஎண்ணத்தால் எழுந்தது. ஆனால் *காக்கை கரைந்தால், விருந்து வரும்* என்பது அறிவியல் பூர்வமான உண்மையாக அமையாததால் அது மூட நம்பிக்கையாக அமைகிறது. பரதவர் சமூகத்தில் பொது வாக, 1. இறைவன் சார்ந்த நம்பிக்கை, 2. சமயம் சார்ந்த நம்பிக்கை, 3. மந்திரம் சார்ந்த நம்பிக்கை, 4. காற்று சார்ந்த நம்பிக்கை, 5. கடல் நீரோட்டம் சார்ந்த நம்பிக்கை, 6. தொழில் நம்பிக்கை எனப் பல வகையான நம்பிக்கைகள் காணப்படுகின்றன.

இறைவன் சார்ந்த நம்பிக்கைகள்

இறைவன் பற்றிய நம்பிக்கை எல்லா மக்களிடையே யும் காலங்காலமாக நிலைத்து நிற்கும் ஒன்றாகும். இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மக்கள் இயற்கை யைத் தெய்வமாக வழிபட்டனர். தமிழர்கள் மழை, ஞாயிறு, திங்கள் ஆகியவற்றுக்குத் தெய்வ உருவம் தந்து கோயில்கள் அமைத்து வழிபட்டனர். காலப் போக்கில் தெய்வ வழிபாட்டில் சடங்கு முறைகளை யும் புகுத்தினர். நன்மையும் தீமையும் தெய்வத்தால் ஏற்படுவதாக நம்பினார். ***மனித வாழ்வில் தெய்வ நம்பிக்கை அடிப்படையாக அமைவதால் வழிபடுவதுடன் அத்தெய்வங்களுக்குவிழா எடுத்து உள்ளத்திற்கும் உறவுக் கும் தொடர்பை ஏற்படுத்திக்கொள்கின்றனர் (குலக்குறி யியலும் மீனவர் வழக்காறுகளும் ப.107)*** என்று தனஞ்செயன் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

பரதவர்கள் இரவிலும் அதிகாலையிலும் கடலுக்குச் சென்று மீன்பிடித்தலைச் செய்யுமுன் இறைவனிடம் வேண்கின்றனர். இவ்வாறு செய்வதால் தொழிலில் எவ்விதத் துன்பமும் ஏற்படாது அதிகமான மீன்கள் விரைவில் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை அவர்களிடம் நிலவுகிறது. இறைவன் என்ற சக்தி மீதான பரதவர்களின் நம்பிக்கை மிகவும் மகத்தா னது. உயிரைக் குடிக்கும் அபாயமானதாக இருந்தா லும் பரதவர்களின் வாழ்வில் உந்துசக்தியாக காணப் படுவது தெய்வ நம்பிக்கை என்பதனை ஜோ.டி. குருஸின் கொற்கையில் காணமுடிகிறது.

அதிக எடையுள்ள நீராவிப் பொறியைத் தோணி மிதப்பான் மூலம் அதிக சிரமத்துடன் கப்பலிலிருந்து கரைக்குக் கொணரும்போது, ***அந்த சந்தான மாரி யம்மந் தயவுல நல்லபடியா எறங்கிற்று கயித்த எனக்கு தட்டி விடுங்கல (கொற்கை ப.54)*** என்று சொல்வதன் மூலம் இறைவனின் துணையால்தான் பளுவான செயல்களைச் செய்ய முடியும் என்கிற பரதவரது இறை நம்பிக்கை புலப்படுகிறது. ஆங்கிலேயர்கள்கூட இந்த நம்பிக்கை சார்ந்த செயல்களைப் பிரமிப்புடன் பார்ப்பதை கொற்கை புதினத்தில் ***ஆழ்கடலிலும் சரி, கரையிலும் சரி அதிக விசை தேவைப்படும் போதெல் லாம் ஏதோ ஒரு மந்திரச்சொல்லைப் பயன்படுத்துகிறார் கள். அது என்ன வார்த்தை என்று சீற்றலிடம் கப்பல் கேப்டன் கேட்டுக்கொண்டிருக்கும்போதே 'மரியே மாதாவே' என்று குரலோடு ஸ்டீம் எஞ்சின் மேலே முன்னேறிச் சாடியது (கொற்கை ப.63)*** என்று பதிவு செய்துள்ளது.

கொற்கை நகரிலிருந்து கடல்வழியே தோணிகள் செல்லும்போது குமரிமுனையில் திசை மாறுகையில் எதிர்த்திசையிலிருந்து காற்று வேகமாக வந்து மோதும். முக்கடலும் சங்கமிக்கும் அந்த இடத்தில் காற்றை யும், சுழிப்பெடுத்து வரும் கடலையும் தாண்ட வேண் டும். அப்படிப்பட்ட இக்கட்டான சூழலைச் சமாளிக்க தெய்வத்தை மட்டுமே முழுமையாகப் பரதவர்கள் நம்பினார்கள் என்பதனை, ***கொமரி மொனயில ஆத்தா ளுக்கு ஒரு தேங்கா ஒடைக்க மறந்துறாதீங்க (கொற்கை ப.303)*** கொற்கையின் கதைமாந்தர்களின் உரை யாடல் வழியாக அறிய முடிகிறது.

சமயம் சார்ந்த நம்பிக்கைகள்

பரதவர்கள் ஏறத்தாழப் பத்து நூற்றாண்டுகளுக்கு முன் பலவகையான சூறையாடல்களுக்குள்ளாகினர். அவற் றிலிருந்து அவர்களைக் காப்பதற்குக் கிறித்தவ சமயம் வந்தது. புனித சவேரியார் மூலம் அவர்களுக்குக் கிறிஸ்தவ ஞானமும் கருணையும் கிடைத்தன. பரதவ மக்களின் சமயமாக கிறித்தவம் இருந்தாலும், மனதில் குமரியம்மனும் இருக்கிறாள். மீனவசமூகம் நம்பிக்கை களை ஆதாரமாகக் கொண்டு வாழ்கிறது. ஜோ.டி. குருஸின் *ஆழிசூழ் உலகுக்* கதைமாந்தர் தொம்மந்திரை கிறித்தவ சமயத்தைச் சார்ந்து பக்தியாகச் சாமி கும் பிடுவதை மற்றவர்கள் வேடிக்கை பார்த்தார்கள். இந்து சமயப் பரதவர்களிடம் அம்மன் பற்றிய நம்பிக்கை காணப்பட்டதனை, ***தொம்மந்திரை, முத்தாரம்மங்கோயி லுக்கு போவக்கூடாதுன்னுதான் ஊர்க்கட்டு இருக்கு. ஆமுல புள்ளயளுக்கு அம்ம போட்டா மட்டும் யாருக் கும் தெரியாம வாழக்கொலயும். அரிசிமாவும் இடிச்சி இங்க முத்தாரம்மன் கோயில்ல கொண்டு வந்து வக்கிறி யளா (ஆழி சூழ் உலகு ப-75)*** என்று தொம்மந் திரை கேட்கும் கேள்வியில் சமயம் சார் நம்பிக்கை புலனாகிறது.

மந்திரம் சார்ந்த நம்பிக்கை

சமயங்கள் சார்ந்த நம்பிக்கைகள் தோன்றும் முன்னர் மக்கள் மந்திர ஆற்றலின்மீது மிகுதியான நம்பிக்கை கொண்டிருந்தனர். ***மந்திரம் என்பது போலச்செய்தல் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. மாய மந்திரங்களினால் ஆவியைக் கட்டுப்படுத்தவும், திருப்திப் படுத்தவும் முனைந்தனர். காலப்போக்கில் மாயமந்திரங் களை இயற்கையைக் கட்டுப்படுத்தவும், பகைவர்களை அழிக்கவும், நோயைக் குணப்படுத்தவும் பயன்படுத்தினர் (மக்கள் வாழ்வில் மந்திரமும் சடங்கும் ப.49)*** என்று ஆ. சிவசுப்ரமணியன் கூறியுள்ளார்.

ஜோ.டி. குருஸின் ஆழி சூழ் நாவலில் மந்திரம், செய்வினை சார்ந்த நம்பிக்கை இருந்ததனை, ***எதுக் கும் ஒரு தொள்ளாளிய வரச்சொல்லி ஏதாவது செய்வின, கிய்வின இருக்கான்னு பார்க்கச் சொல்லுங்க (ஆ.சூ.***

ISSN 2320-4842

உலகு, ப.31).கருத்தா என்னமோ சரியில்ல... சொன்னாக் கேளு நோய்க்கும் பாரு... பேய்க்கும் பாருன்னு சொல்லு வாக (ஆ.சூ.உலகு. ப.32) என்று பதிவுசெய்துள்ளது. உடலசைவுகளாலான பாவனைகள் இல்லாமல் வாய் மொழியாகவும் மந்திரச் சடங்கு நடைபெற்றது. பரத வர்களின் சாதித்தலைவரிடமும் பட்டங்கட்டிகளிடமும் மந்திரமும், சித்து விளையாட்டுகளும் அதிகமாக காணப்பட்டன. பரதவர் குலப் பெண்களைச் சந்தை யில் மீன் வியாபாரம் செய்யவிடாமல் விரட்டிய குரங்கினை, கருவாட்டில் மந்திரம் செய்து கட்டுப் படுத்தினர் என்பதனை,

ஒரு கல்லெறியவே ஒரு கல்லுஞ் சோறவே
ஒரு நூறாயிரம் கிளி பாடவே கிளி ஆடவே
ஆடவே கிளி பாடவே அம்பலத்தில் ஏறவே
அம்பலத்தில் ஏறும் கிளி ஆகாசம் பறக்கவே (கொற்கை ப.224) என்னும் மந்திரப்பாடல் வழியாக அறிய முடிகின்றது. மேலும் பாண்டியபதியின் அரண்மனை யில் வாழும் குட்டிப்பிசாசு 'பேயலசு', ***பாண்டிய பதியின் வீட்டில் ஆப்பம் சுட்டுக்கொடுத்தால் கொழும் பில் பாண்டியபதி பிள்ளைகளுக்கு அதை சுடச்சுடக் கொண்டு கொடுத்துவிட்டு நொடிப்பொழுதில் திரும்பவும் பாண்டியபதிக்கே வந்துவிடுமாம் (கொற்கை ப.26)*** என்பன போன்ற மந்திரம், பேய் சார்ந்த நம்பிக்கை கள்ஜோ.டி.குருஸின் புதினங்களில் பதிவாகியுள்ளன.

காற்று சார்ந்த நம்பிக்கை

மனித வாழ்வின் உயிர்மூச்சாக விளங்கும் காற்று ஐம்பூதங்களுள் ஒன்றாகும். இக்காற்று இயற்கைச் சீற் றங்களுள் ஒன்றாகவும் உள்ளது. காற்று வீசும் திசை, தன்மை ஆகியவற்றிற்கேற்ப வாடைக்காற்று, தெற் காத்து ஈசானி மூலக்காற்று, புயல்காற்று எனப் பல பெயரிட்டுள்ளனர். கடலில் காற்று அதிகமாக அடிக் கும் காலங்களில் பரதவர் கடலுக்குச் செல்வதில்லை. கச்சான்காற்று தெற்கிலிருந்து வடக்குத்திசை நோக்கி வீசும் என்பதைப் பரதவர் அறிந்துள்ளனர். கிழக்குத் திசையிலிருந்து மேற்குத் திசையை நோக்கி வீசும் கொண்டல்காற்று மாசி மாதம் மட்டுமே அடிக்கும் என்றும் காற்றுக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. ***பொழுது நன்றாக அடைந்து விட்டிருந்தது வானத்தில் நட்சத்திரக்கூட்டங்கள் தெரிய ஆரம்பித்தன. காற்று மாறி கச்சான் வீசியது. நல்ல குளிர். கடல் மீது இருந்ததால் கூதக்காற்றில் விறைத்துப் போனார்கள் (ஆழி சூழ் உலகு ப.28)*** என்று எடுத்துரைத்துள்ளது.

காற்று அதிகமாக வீசும் நாட்களில் பரதவர் கடலுக் குச் செல்லாமல் மீன்பிடி வலையைக் கடல் மணற் பரப்பில் காய வைத்துள்ளனர். உலர்த்திய பின்பு அதில் சாம்பிராணி புகை காட்டினர். புதுமைத் தண்ணீர் தெளித்தனர் என்பதை, ***வலை வெலங்கும் போது துளசி இலையை அரைத்து தெளிப்பார் அந்தோணி அய்யாவின் கோவிலில் இருந்து வந்த புதுமைத் தண்ணீரைத் தெளிப்பாரு (ஆழி சூழ் உலகு ப.381)*** என்று சொல்லப்பட்டுள்ளது.

கடல் நீரோட்டம் சார்ந்த நம்பிக்கை

பரதவர்கள் கடலில் ஓடும் நீரோட்டத்தைக் கரையில் இருந்துகொண்டே கணித்துக் கூறுகின்றனர். வெண் மேகத்திற்கு மேல் ஓடும் மேகத்தைக் கொண்டு கட லில் ஓடும் நீரோட்டத்தை அறிந்துகொள்கின்றனர். இந்த நீரோட்டம் மணிக்கு ஐம்பது கிலோமீட்டர் வேகத்தில் ஓடும் என நம்புகின்றனர். இந்த நீரோட் டத்தில் மீன்பிடிக்கச் சென்றால் அதிக மீன்கள் கிடைக்கும் என்பது பரதவர் நம்பிக்கை. இந்த நீரோட்டத்தினைக் குறித்து, ***குனிந்து, நீரோட்டத்தைப் பார்த்த தொம்மந்திரை திருப்தியோடு நேர் சோழ வெலங்கு வாக்கில் வைத்துப் பிடித்தார்... நீரோட்டமும் காற்றும் நேர் எதிர் திசைகளில் இருக்கும்போது எதிர் பார்த்த கரையை அடைவதற்கு கட்டுமரத்தை செலுத்து வதோடு அணியத்திலும் நீரோட்டத்தை சமாளித்து மரத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர சரியான ஒரு வடிவமைப்பு தேவை (ஆழி சூழ் உலகு ப.22)*** என்று புதினத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜோ.டி. குருஸ் குறிப்பிடும் நீரோட்டம் குறித்த பதிவுகள் தூத்துக்குடி வட்டப் பரதவர்களது நம்பிக்கை சார்ந்த அனுபவப் பதிவுகளாகும்.

தொழில் நம்பிக்கைகள்

நெய்தல் நிலம் சார்ந்த பரதவர்களின் வாழ்க்கை கடல்காற்றினைச் சார்ந்தே இயங்குவது. பரதவர் அல் லாதவர்கள் தென்றல், புயல், வெப்பக்காற்று குறித்து மட்டுமே அறிந்திருப்பர். பரதவர்களுடைய கடல் வாழ்க்கை, காற்றின் அறிவைச் சார்ந்தே இயங்கு கிறது. பரதவர்களின் தொழில் அறிவை, நம்பிக்கை யைக் கொற்கையில் அதிகமாகக் காணமுடிகிறது. ***தட்டு மிதப்பானில் வலைக்குடிகாரர்கள் கைகோர்த்து நின்றிருந்தார்கள்... மலைபோல கப்பல் ஆட தட்டு மிதப்பானும் தன் பங்குக்கு கடலின் விரளத்துக்கு ஏறி இறங்கிய சதியா நில்லு... பயல்வளயும் சதியா நிக்கச் சொல்லு... ஆட்டம் அதியமத்தாம் இருக்கு கிலுக்கு (கொற்கை ப.51)*** என்று பெரும் கொந்தளிப்புக்கு மத்தியில் தோணியைச் செலுத்தும் கிலுக்கு தண்டல் உரையாடல்களின்வழிப் பரதவர்களின் திறமையை, காற்றை எதிர்கொள்ளும் நம்பிக்கையை எடுத்துக் காட்டியுள்ளார்.

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஏனைய மக்களைவிடமீன்பிடிதொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் காற்றின் நிலைகளை அறிந்திருந்தனர். மீன்களை உண் ணக்கூடியவை, உண்ணக்கூடாதவை என்று பாகு படுத்தியுள்ளனர். ஓங்கல் முதலிய மீன்களை சில நம்பிக்கைகள் காரணமாக உண்ணுதல் கூடாது என் பதனை, கடலில் யாராவது தவறி விழுந்தால் அவர் களைக் காப்பாற்ற ஓங்கல்கள் பாய்ந்து வருமாம். இந்த ஓங்கல் மீன்கள் எல்லாம் முற்பிறவியில் மனி தர்களாக இருந்தவை என்று கதைகதையாகச் சொல் வார்கள். இதனால்தானோ என்னவோ ***பரதவர்கள்***

தொடர்ச்சி: பக். 24

ISSN 2320-4842

Alice Walker’s main focus on Black Women Characters in her Novels

R. SURESH
Ph.D Research Scholar, PG and Research Department of English
Marudupandiyar College of Arts and Science, Thanjavur (Affiliation: Bharathidasan University)
Dr. K. KARTHIKEYAN
Assistant Professor & Research Advisor, PG and Research Department of English
Marudupandiyar College of Arts and Science, Thanjavur (Affiliation: Bharathidasan University)

Abstract

The aim through this article is to propagate that Alice Walker shows in her novel that racism informs all aspects of black life of the women in the South. As Walker shows, many females did not finish school, and were instead married away at early ages. Walker also showed the troublesome life of many black southern women in the novel. This paper is an endeavour to put Walker in appropriate viewpoint as a feminist and review her novel in the light of essential feminism. As a communal movement, feminism thinks on doing away with gender variation and supporting women’s rights, happiness and subject in the society. Alice Walker has written by and large about female characters and no question of most of her novels move around women characters. This paper works on with Walker’s three prominent works - The Color Purple, The Temple of My Familiar, and Possessing the Secret of Joy. Alice Walker’s writings present a wide range of her craft and concern. It paves an obvious way and assesses the degree of her root educes in the issues such as social activism, cultural depiction, of the self.

Keywords: *Alice Walker’s, Black Women Characters, Feminism*

Alice Walker shows in her novel that racism informs all aspects of black life in the South. As Walker shows, many females did not finish school, and were instead married away at early ages. Walker also showed the troublesome life of many black southern women in the novel. This paper is an endeavour to put Walker in appropriate viewpoint as a feminist and review her novel in the light of essential feminism. As a communal movement, feminism thinks on doing away with gender variation and supporting women’s rights, happiness and subject in the society. Subjects explored in feminism comprised patriarchy, typecasting, objectification, sexual objectification and oppression. Feminism, as a philosophy of life seeks to find out and modify the delicate and profound seated causes of women’s domination. Feminist Literary Theory sees a fundamental continuity between text and world interpreted within social and cultural creation.

Women are the integral part of Society. The contribution of women to economy and human welfare is well known. Feminism is a serious endeavour to make the question concerning subordinate situation of women in endocentric world or discrimination which the women suffer on account of sex and gender. In her very first novel, The Color Purple she has tried to show the inner psyche of Celie. The Color Purple is a story that is told openly and sincerely by a black woman named Celie. Celie was being raped by her stepfather at the age of fourteen. She was then given away to a man whom she did not love or care for to be married. While living with him, she had to take care of his children from another wife while enduring his beatings who needs a good worker on his farm. After experiencing the trauma Celie seems to become at once excessively would concerned about the ethical side of what she has done so far and what she would have done but did not Fraud observes:

. . Ill-luck-that is, external frustration- so greatly enhances the power of the conscience in the superego. As long as things go well with a man, his conscience is lenient and lets the ego do all sorts of things; but when misfortune befalls him, he searches his soul, acknowledges his sinfulness heightens the demands of his conscience, imposes abstinences on himself and punishes himself with penances.

Alice Walker has presented the picture of marginalization of black women at the hands of their husband. Alice Walker is the first African American writer who writes an epistolary novel. She inserts the tone of a poor African American woman in a reputable literary form and allows an uneducated black Southern woman to speak for herself. It is the process of Celie writing herself into being and consciousness. Walker is a very committed writer who refuses the notion of ―Art for Art‘s sake. Finally, Walker shows the struggle of black women living in the South facing racism and sexism, among many other things such as raising children and keeping the house clean. Walker's life philosophy is essentially condensed in her novel's title; The Color Purple. Celie's life is completely devoid of colors. It is so tough, and her spirit is so suppressed that she hardly sees the world's beauty.

In the beginning of the novel Celie lacks power and will to resist brutality imposed on her since her childhood. All she can do is to survive and persevere. The moment she becomes pregnant, she writes to God:

I’m big. I can’t move fast enough. By time I get back from the well, the water is warm. By time I get the tray ready the food be cold. By time I get the children ready for school it be dinner time.

A contemporary Black feminist statement defines clearly the relationship between racial struggles and feminist issues, concomitantly marking the differences between white and black feminism:

Our situation as black people necessitates that we have solidarity around the fact of race, which white women, of course, do not need to have with white men, unless it is their negative solidarity as racial oppressors. We struggle together with black men against racism, while we also struggle with Black men about sexism”

Alice Walker’s view about women and their characteristics are reverberated in her works. The question of gender and its construction and sustenance become Walker’s main focus. In her projection of characters, women’s and men’s genders are psychologically and culturally determined rather than physically. It is something that varies from one ethnic and race to another. Consequently, with no stable implication, women’s identities can be reconstructed in their own favors. Static gender roles are strengthened by tradition and racial oppression. By practicing mutilation, the Olinkans seek to enforce gender differentiation through drawing distinctive lines which divides them into two distinct genders and deines them in their own terms and does not approve their genuine nature. In Olinka the tradition of female genital mutilation which is preserved by the tribe’s elders, and considered as sacred that nobody can speak explicitly about it in public. However, this tradition starts shaking after Tashi killed her inibulator.

Walker insists on the intertwined nature of racism and sexism. The racial oppression which is imposed on blacks and dictated by whites is the other factor illustrated distinctively in Walker’s three novels and is not reliable since it is relational and contributes in engendering females. Gender to a great extent generated to keep males in the upper hand and grant them enough authority to do whatever they wish without being compelled to give any explanations about them. Interpreting female traits negatively and male ones positively provides them with a good opportunity to rule over females.

References:

Collins, Patricia Hill. “What’s in a name? Womanism, black feminism, and beyond.” Black scholar. Vol.26, No.1, 1996, pp.9-17.

Daniel, Ross W. - The Desire for Selfhood in The Color Purple. Modern Fiction Studies 34.1 (1988): 69-83.

Dieke, Ikenna., “Toward a Monistic Idealism: The Thematics of Alice Walker’s The Temple of My Familiar.” African American Review, Vol.26, No.3, 1992, pp.507-514.

Einstein, Zillah R. ed. A Black Feminist Statement in Capitalist Patriarchy and the Case for Socialist Feminism. New-York: Monthly Review Press, 1979.

Hooks, Bell., Feminist Theory: From Margin to Centre. Cambridge: South End P, 2000.

22ஆம் பக்கத் தொடர்ச்சி

ஓங்கல்களைச் சாப்பிடுவதில்லை. கடலில் சுறாக்களை எதிர்க்கும் வலுவுள்ளவை இந்த ஓங்கல்கள் மட்டும் தான் (ஆழிசூழ் உலகு ப.106) என்கிறார் ஆசிரியர்.

நிறைவுரை

நம்பிக்கை என்பது எல்லாச் சமூகத்திற்கும் உள்ள பொதுவான பண்பாகும். அனுபவத்தின் வெளிப்பாடுகள் வழியாக நம்பிக்கைகள் உருவாகி உள்ளன. பரதவர்கள் இறைவன்மீதும். தம் சமயத்தின் மீதும், வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களிலிருந்து விடுபட மந்திரங்களின்மீதும் நம்பிக்கை கொண்டுள்ளனர். பரதவரின் கடல் சார்ந்த வாழ்வானது மற்ற மனிதர் வாழ்வைவிடக் காற்றினைச் சார்ந்தே இயங்குகிறது. பரதவர் காற்றின் தேவையை, அது பற்றிய அறிவு சார்ந்த நம்பிக்கையுடனும் காலம்காலமாக வாழ்வியலுடன் தொடர்புடைய நம்பிக்கைகளைக் கொண்டு வாழ்ந்தனர் என்பதனை ஜோ.டி. குருஸ் தமது ‘ஆழி சூழ் உலகு’, ‘கொற்கை’ ஆகிய புதினங்களின் வழியாக எடுத்துரைத்துள்ளார்.

துணை நின்ற நூற்கள்

1. கொற்கை, ஜோ.டி. குருஸ், காலச்சுவடு பதிப்பகம். நாகர்கோயில்.

2. ஆழி சூழ் உலகு, ஜோ.டி. குருஸ், தமிழினி பதிப்பகம், சென்னை.

3. புறநானூறு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

4. மக்கள் வாழ்வில் மந்திரமும் சடங்கும், ஆ. சிவசுப்பிரமணியன், ஸ்ரீசன்னி அச்சகம், சென்னை.

5. வெற்றியின் ரகசியம், தண்டபாணி, தி இன்ஸ்டிடியூட் ஆப் பர்சனல் சர்ஜன், பட்டுக்கோட்டை.

6. நாட்டுப்புறவியல் கட்டுரைகள், வளவன் சா, மைதிலி பதிப்பகம, சென்னை.

I am not afraid of storms, for I am learning how to sail my ship.

- Louisa May Alcott

Time moves slowly, but passes quickly.

- Alice Walker

ISSN 2320-4842

நற்றிணை காட்டும் குறுநில மன்னர்கள்

பி. ராமர்
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை
தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சி
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

முனைவர் மு. அருணாசலம்
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த), திருச்சி (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

நற்றிணையில் மூவேந்தர்கள் அல்லாத குறுநில மன்னர்கள் பற்றிய வரலாற்றுப் பதிவுகளைச் சான்றுகள் மூலம் இக் கட்டுரை ஆராய்கின்றது.

கலைச்சொற்கள்: சிற்றரசர்கள் பற்றிய குறிப்புகள்-சங்க காலப் போர் மரபுகள்-பகைவர் நாட்டை அழித்தல்-பகைவரைத் தோற்றோடச் செய்தல்-வேளிர்குல ஆய்குடி-ஆய் அண்டிரன்-பாழிமலை நன்னன்-நவிரமலைத் தலைவன்-கடையெழு வள்ளல்கள் தேர்ச் சிறப்பு-வீரமும் கொடையும்-ஊர்களின் சிறப்பு.

முன்னுரை

பன்மொழி அறிஞர் தெ.பொ.மீ. நற்றிணையின் பெயர் விளக்கம் குறித்துக் கூறும் கூற்று மனங் கொள்ளத் தக்கதாகும்: ***இடை நிகரனவான பாடல்களே இந்நற்றிணையில் உள்ளன. இரண்டின், அழகும் இதனிடை உண்டு. அகத்திணைப்பாடல்களுக்கு 'திணை' என்னும் பெயர் வழங்கும் மரபு உண்டு. அத்தகைய 'திணை' என்ற பெயரோடு 'நல்' என்ற அடையும் சேர வழங்குகிறது இந்நூல். நல்ல குறுந்தொகை என்று பிற்காலத்தார் பாடினார்கள். ஆனால், தொகுத்த காலத்தே 'நல்' என்ற அடை இந்நூலுக்கு இடப்பட்டது*** (தெ.பொ.மீ., நற்றிணைச் சொற்பொழிகள், 1957, பக். 4-5).

மூவேந்தர் அல்லாத குறுநில மன்னர்கள் சிற்றரசர்கள் ஆவர். இவர்களும் பேரரசர்களைப் போன்று படையும் நாடும் உடையவர்கள். தமக்கெனவுள்ள சிற்றூர்களைச் சிறு நிலப்பரப்புகளை ஆட்சி புரிந்தனர். இவர்களிலும் பலர் தம்மிடம் இருந்த பொருட்களை இரவலர்களுக்குக் கொடுக்கும் வள்ளன்மை மிக்கவர்களாவர். இத்தகு குறுநில வேந்தர்களைப் பற்றியும், படைத்தலைவர்கள் குறித்தும், அவர்களின் ஊர்ச்சிறப்புகள் பற்றியும் இக் கட்டுரை ஆராய்கின்றது.

சிற்றரசர்கள் பற்றிய குறிப்புகள்

மூவேந்தர் அல்லாத சங்ககால அரசர்களைக் குறிப்பாக வேளிர்களைக் குறுநில மன்னர்களாக, சிற்றரசர்களாகச் சங்ககால வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர். சிற்றரசர்களாகிய குறுநில மன்னர்கள் வட்ட வடிவக் குறுமுடியாகிய கரண்ட மகுடத்தை அணிந்திருந்தனர். குறுநில மன்னர்கள் என்பதற்கு, ***வேந்தர்களுக்கு அடுத்த நிலையில் நாடாளும் தலைவர்களாக விளங்கியவர்களைச் சிற்றரசர், குறுநில மன்னர், கோ, கோமான், குறும்பு, வேளிர் என்னும் பெயர்களால் சுட்டுவது வழக்கமாகும். சிற்றரசன் என்னும் சொல் அரசர் என்னும் சொல்லிற்கு நேர்மாறான குறுகிய நிலபரப்பை ஆண்ட மன்னரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது*** (தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, 2022, ப.432) என்று விளக்கம் தரப்படுகின்றது.

இளவரசர்கள், அரசியல், கிழான் போன்ற ஊர்த்தலைவர்கள், படைவீரர்கள், வள்ளல்கள், சிறப்புக்குரியோர், இராமன், சீதை, வீமன், அருச்சுனன் போன்ற புராணப் பெருமக்கள் முதலானோர் பெயர்களும் இவர்களோடு கலந்துள்ளன. இவை சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களைத் தவிரப் பிறரை இவ்வகைப் பிரிவில் அடக்குகின்றோம்.

அகப்பாடல்களில் புறச்செய்திகள்

அகப்பாடல்களில் புறச்செய்திகளும், வரலாற்றுக் குறிப்புகளும் உவமைகளாகவும், கருப்பொருள்களின் வாயிலாகவும் சித்திரிக்கப்படுகின்றன. பெ. மாதையன் அகத்திணைப்பாடல்களில் புறச்செய்திகள் ஓர் உத்தியாகப் பயன்படுத்தப்பட்டதைப் பின்வருமாறு விளக்குகின்றார்: ***புறச்செய்திகள் குறிப்பாக அரசர்கள் பற்றிய செய்திகள் அகப்பாடல்களில் இணைத்துப் பாடப்படும் மரபு தூய, அகத்திணை மரபு சேர்ந்த ஒரு உத்தியாகவே வரும். புறத்திணை மருங்கில் இயற்பெயர் சுட்டிக் கூறப்படலாம் என்ற வரையறையாகவே இது உள்ளது*** (பெ. மாதையன், சங்கக் கவிதையியல், 2013, ப.155).

சங்ககாலப் போர் மரபுகள்

சங்ககாலப் போர்கள் அறப்போர் முறையைச் சார்ந்தவை. அகம், புறம் என வாழ்வை இரண்டாகப் பகுத்துப் புறம் என்று போர் முறைகளுக்கு இலக்கணம் வகுத்து வாழ்ந்தனர். அவர்களது போர்முறை அற நேர்மையாக இருந்தது. காலை சூரிய உதயத்தின்போது முரசறைந்து போர் தொடங்குவர். சூரியன் மறையும்போது முரசறைந்து போரை நிறுத்துவர். அந்தணர், ஆநிரைகள், முதியோர், பெண்கள், குழந்தைகள், பிணியுடையோரைக் கொல்லக்கூடாது என்பது சங்ககாலப் போர் அறமாகும்.

பகைவர் நாட்டை அழித்தல்

மலையன், முள்ளூரின் குறுநில மன்னன். இவன் முள் போன்ற பல்லினை உடைய பாம்பினை எறியும் இடியேறுபோல முரசுகள் முழங்கிடப் பகைவர்களை அழித்த செயலை புறநானூறு இவ்வாறு பதிவுசெய்கின்றது.

உருமின் முரசு எழுந்து - இயம்ப
அண்ணல் யானையோடு வேந்து கழித்து ஒழிய
(மாறோக்கத்து நப்பசலையார், புறம்.126)

மலையன் மா ஊர்ந்து போகி புலையன்
பெருந்துடி கறங்கப் பிற புலம் புக்கு அவர்
அருங் குறும்பு எருக்கிஅயா உயிர்த்தாஅங்கு
உய்த்தன்று மன்னே நெஞ்சே! (நற். 77) என்ற நற்றிணை அடிகள் தலைவியின் மைதீட்டிய மருண்ட கண்களின் வீச்சினால் பாதிக்கப்பட்ட தலைவன் பெருமூச்சு விடுகின்றான். இது மலையன் பகைவரின் அரணை அழித்துப் பெருமூச்சு விட்டதைப் போன்று இருப்பதாக வரலாற்றுக் குறிப்புப் பதிவு பெறுகிறது.

போர்க்களம்

முள்ளூர் மன்னன் மலையமான் திருமுடிக்காரி. திருக்கோவிலூரை ஆட்சி புரிந்தவன். ஆரியப்படையை முள்ளூர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடுமாறு போர் புரிந்து வெற்றி வாகை சூடியவன்.

முரண்கொள் துப்பிற் செவ்வேன் மலையன் (குறுந். 312) என்ற குறுந்தொகை அடிகள்வழி மலையமானின் வேற்படை வலிமைமிக்கது என அறியலாம்.

ஆரியர் துவன்றிய பேர் இசை முள்ளூர்
பலர் உடன் கழித்த ஒள் வாள் மலையனது
ஒரு வேற்கு ஓடியாங்கு (நற்றிணை 170, பெயர் தெரியாப்புலவர், உ.வே.சா. நூல் நிலையம்) என்ற நற்றிணை அடிகள் மலையனது வேற்படைக்கு அஞ்சி, ஆரியப்படை ஓடியது போன்று தலைவனை விறலி பரத்தையிடம் செல்லாதவாறு பாதுகாத்திடல் வேண்டும் என்று வாயில் மறுத்துத் தோழியால் கூறப்படுவதைத் தெரிவிக்கின்றது.

பகைவரைத் தோற்றோடச் செய்தல்

வேற்படைகளையுடைய பாழி மலைத்தலைவன் நன்னன். நல்ல குதிரை படைகளையுடைய பகை மன்னர்களைத் தோற்றோடச் செய்யும் வல்லமை உடையவன். பகை மகளிர் கூந்தலைக் கொய்துக் கயிறாகத் திரித்திடும் ஆற்றல் மிக்கவன். பகை மன்னர்களின் மகளிர் கூந்தலைக் கயிறாக திரிப்பது சங்க போர் மரபாக அமைந்திடுகின்றது.

வாலிழை கழிந்த

நறும்பல் பெண்டிர்

பல்லிருங் கூந்தல் முரற்சியால்

குஞ்சர ஒழுகை பூட்டி முன் (பரணர், பதிற்றுப்பத்து, ஐந்தாம் பத்து, பதிகம்) என்று பதிற்றுப்பத்தில் கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் பெண்களின் கூந்தலைக் கயிறாகத் திரித்த செயலைக் கூறுகின்றது.

ஏந்து வேல் நன்னன்
கூந்தல் முரற்சியிற் கொடிதே
மறப்பன் மாதோ, நின் விறற் தகைமையே
(பரணர், நற்றிணை, பாடல் 270, உ.வே.சா. நூல் நிலையம்) என்று நற்றிணையில் 'பிண்டன்' என்னும் பகைவனை வென்று பகை மகளிரின் கூந்தலைக் கயிறாகத் திரித்து யானைகளைப் பிணித்த பேராற்றல் மிக்கவனாகச் சுட்டப்படுகின்றான். நன்னனின் இத்தகு செயலைக் காட்டிலும் தலைவன் நெய்தல் தலைவியை மறந்த செயல் கொடியதாக அமைவதாக உவமிக்கப்படுகின்றது.

போர்ப் படை

ஆய் அண்டிரன் சிறந்த கொடையாளி. பாடாண் திணைக்குச் சான்றாக அமைபவன்.

வேள்ஆய் பொதியின் மலை அடியிலுள்ள ஆய்குடியை தலைநகராகக் கொண்டு அரசு புரிந்தவன். அய் அண்டிரன் என்றும் அண்டிரன் என்றும் அழைக்கப் பெறுகிறான் என்கிறார் மருதநாயகம் (ப. மருதநாயகம், தமிழின் செவ்வியல் தகுதி, 2021, ப.63).

கடையெழு வள்ளல்களில் ஒருவன் ஆய் அண்டிரன்; இரவலர்களுக்கு வேண்டிய பொருள்களை வழங்கக் கூடியவன். இனிமையாக உரையாடல் செய்பவன். பற்பல யானைக் கூட்டங்களை உரிமையாகப் பெற்றவன்.

வாய்வாள் அண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ,
களிறு மிக உடைய இக்கவின் பெறுகாடே? (உறையூர் ஏணிச்சேரிமுடமோசியர், புறம். 13, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்) என்று புறநானூற்று அடிகள் ஆய் அண்டிரனின் யானைப் படை போன்று மேகங்கள் உள்ளன என்று கூறுகின்றது. காரிக்கண்ணனார் நற்றிணையில் ஆய் அண்டிரனின் கொடைத்தன்மையைத் தலைவியோடு இணைத்துக் கூறுகின்றார்.
இரவலர் வரூஉம் அளவை அண்டிரன்
புரவு எதிர்ந்து தொகுத்த யானை போல
உலகம் உவப்ப, ஓது அரும்

வேறு பல் உருவின் ஏர் தரும் மழையே! (காரிக்கண்ணனார், நற்றிணை, 237, உ.வே.சா. நூல் நிலையம்) என்று நற்றிணை அடிகள் அண்டிரனின் யானைப் படைகளைப் பரிசிலாகப் பெற்று இரவலர்கள் மகிழ்வு எய்துகின்றனர். என்னைப் பிரிந்து நெடுந்தொலைவு சென்ற தலைவனோடு நெஞ்சம் ஊடாமற் புலத்தல் இன்றி இருப்பது வியப்பிற்குரியது என்கின்றாள். மேகக் கூட்டங்கள் போன்ற கடும் பகட்டு யானைப் படையினையும், குதிரைப் படையினையும் கொண்டு விளங்குபவன் தகடூர் தலைவன் அஞ்சி. இவன் இரக்கம் நிறைந்தடையவனுமாவான். தேர்களைப் பரிசிலாக இரவலர்களுக்கு வழங்குகின்றவன். இவன் கொடைத் தன்மையைப் போன்று கார்கால மேகம் மழையைப் பொழிகின்றது.

கடும் பகட்டு யானை நெடுமான் அஞ்சி
ஈரு நெஞ்சமோடு இசை சேண் விளங்க
தேர் வீசு இருக்கை போல
மாரி இரீஇ மான்றன்றால் மழையே (ஔவையார், நற். 237, உ.வே.சா. நூல் நிலையம்) என்ற நற்றிணை அடிகள் தகடூர் கோமான் அஞ்சியின் படைச் சிறப்பை பதிவுச் செய்கின்றது. அஞ்சியின் கொடை வன்மை போன்று கார்காலம் தொடங்கியும் வேந்து வினைத் தலைவன் வரவில்லையென முல்லை நிலத் தலைவி இடும்பையுடன் இரங்குகின்றாள்.

தேர்ச் சிறப்பு

கடையெழு வள்ளல்களில் ஒருவனான ஆய் அண்டிரன் இரவலர்களுக்குப் பரிசிலாக அணி செய்யப் பெற்றதேர் வழங்கும் கொடை மடம் உடையவன்.

ஆஅய்
வண் மகிழ் நாளவைப் பரிசில் பெற்ற
பண் அமை நெடுந்தேர்ப் பாணியின் (நற்றிணை 167, பெயர் தெரியாப்புலவர், உ.வே.சா. நூல் நிலையம்) என்று நற்றிணையில் அண்டிரனின் தேர்ச் சிறப்பும் கொடை மடமும் பதிவு செய்யப்படுகின்றது. ஆய் அண்டிரனின் நாளவையில் தேரினைப் பரிசிலாக பெற்றிடும் இரவலர்களின் ஒலியானது கடற்துறைப் புன்னை மரத்தில் தங்கியுள்ள நாரையின் ஒலிக்கும் ஊரில் எழுந்திடும் அம்பலுக்கும் உவமையாகின்றது.

வீரமும் கொடையும்

வில்லாற்றல் மிக்க வீரர்களின் தலைவனும் கைவன்மையில் சிறந்தவனும் ஆகிய கொல்லிமலை ஓரி படைமடமும், கொடைத் திறமும் நிரம்பியவன். இதனாலே வல்வில் ஓரி எனப்படுகிறான்.

கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும் (பெருஞ்சித்திரனார், புறம். 158, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்) என்று புறநானூறு அடிகள் குறிப்பிடுகின்றன.

மழவர் பெரு மகன் மா வள் ஓரி
கை வளம் இயைவது ஆயினும்
ஐதே கம்ம, இயைந்து செய் பொருளே (பாலத்தனார், நற்றிணை 52, உ.வே.சா. நூல் நிலையம்) என்ற நற்றிணை அடிகள்வழி மாவண் ஓரியின் கொடையையும், செல்வத்தையும் ஒரு சேர அடையப் பெற்றாலும் அது தலைவி தந்திடும் இன்பத்திற்கு ஈடு ஆகாது. எனவே, தலைவன் அவளைப் பிரியேன் என்கிறான். இதில் மழவர் தலைவன் ஓரி வீரமும் கொடையும் கைவரப்பெற்று சிறந்து விளங்கியமை சுட்டப்படுகின்றது. இதைக் காட்டிலும் தலைவியோடு இன்பம் துய்த்து வாழ்தலே பெரிது என்பதும் தலைவனாற் உணர்த்தப்படுகின்றது.

ஊர்ச் சிறப்பு

பெரியன் நல்ல தேர்களையுடையவன் கள்ளுணவை உண்டதால் மகிழ்ச்சி பெருகி வாழ்பவன். பெரியன் நற்றேர் கொண்டிருந்தமையை அகநானூற்றில்,

பரியுடை நற்றோர்ப் பெரியன் விரியிணர்ப்
புன்னையங்கானல் புறந்தை (உலோச்சனார், அகம். 100, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்) என்று சுட்டுகின்றது. உலோச்சனார் நற்றிணையில்,
நறவு மகிழ் இருக்கை, நல் தேர்ப் பெரியன்,
கள் கமழ் பொறையாறு அன்ன என்
நல் தோள் நெகிழ மறத்தல் நுமக்கே?
(உலோச்சனார், அகம். 131, உ.வே.சா. நூல் நிலையம்) என்று தலைவியின் தோள்நலன் பெரியனின் பொறையாறு போன்று வளத்துடனும் சிறப்புடனும் திகழ்வதாக ஒப்புமை செய்யப்படுகின்றது.

தழும்பன் ஊணூர் மன்னன். போரில் பெரும்புண் உற்ற அழகுடன் திகழ்பவன். இவன் உடம்பில் விழுப்புண் தழும்புகள் மிகுதி. யாழிசைப் பாணர்களின் தலைவனாக விளங்கியவன். சொன்ன சொல் தவறாமையால் 'வாய்மொழித் தழும்பன்' என்று போற்றப்படுகிறான்.

பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கடிமதில் வரைப்பின் ஊணூர் (மதுரை மருதன் இளநாகனார், அகம். 104, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்) என்று 'ஊணூர்' சிறப்பை அகநானூறு குறிப்பிடுகின்றது. பரணர் நற்றிணையில் ஊணூரின் சிறப்பை எடுத்துரைக்கின்றார்.

நெய் வார்ந்தன்ன துய் அடங்கு நரம்பின்
இரும் பாண் ஒக்கல் தலைவன் பெரும் புண்
ஏஎர் தழும்பன் ஊணூர் ஆங்கண் (பரணர், நற்றிணை 300, உ.வே.சா. நூல் நிலையம்) என்று நற்றிணை அடிகள் பனையோலைக் கூரையினைப் பிடித்துக் கொண்டு தலைவியின் ஊடலைத் தணிக்கப் பரத்தையிடம் சென்று திரும்பிய தலைவனின் பரிதாப நிலை தழும்பனின் ஊணூரில் பிச்சைக்கு வந்து நிற்கும் யானை போலத் தோற்றம் அளிப்பதாகத் தலைவியாற் இழித்துரைக்கப்படுகின்றது.

கொல்லிமலைத் தலைவனும் சிறந்த வில்லாளியுமான வல்வில் ஓரியைப் போரில் கொன்றவன் மலையமான் திருமுடிக்காரி. இவன் ஓரியின் தெருவில்

புக்க காரியின் பகைவராகிய ஓரியைச் சேர்ந்தோர் பேரிரைச்சல் இடுகின்றனர்.

செவ்வேல் முள்ளூர் மன்னன் கழல் தொடிக்காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில் ஓரிக் கொன்று
(கல்லாடனார், அகநானூறு 209) என்று அகநா னூற்று அடிகள் குறிப்பிடுகின்றன.

ஓரிக் கொன்ற ஒரு பெருந் தெருவில்
காரி புக்க நேரார் புலம்போல்
கல்லென் றன்றால், ஊரே (கபிலர், நற்றிணை, 320, உ.வே.சா. நூல் நிலையம்) என்கிறது நற்றிணை. தெருவில் தாழையாடை அடைய நடந்து சென்ற இளம் பரத்தையரைக் கண்ட ஊரார் கல்லென்று நகைத்தது போல ஓரியைச் சேர்ந்த ஊரார் பேரிரைச்சல் இட்டனர் என்று உவமிக்கப்படுகின்றது.

காடு பற்றிய பதிவு

வல்வில் ஓரியின் காடு இளமான்கள் குதித்து விளை யாடும் சிறப்பை உடையது. இக்காடு போன்று தலைவியின் விரிந்த கூந்தல் காணப்படுகின்றது என்று நற்றிணையில் உவமிக்கப்படுகின்றது.

வல் வில் ஓரி கானம் நாறி
இரும் பல் ஒலிவரும் கூந்தல்
பெரும் பேதுறுவள் (பரணர், நற்றிணை பாடல் 6, உ.வே.சா. நூல் நிலையம், 2019) என்ற அடிகளில் நல்ல வாசனை உடைய தலைவியின் தாழிருங் கூந்தல் ஓரியின் கானகத்தில் மலரும் மலர்களின் வாசனை போன்று இருப்பதாகக் கூறப்படுகின்றது. குறுந்தொகை இதனை ***கைவள்ளோரி கானம் தீண்டி*** (குறுந்.199) என்று கூறுவதும் ஒப்பிடத்தக்கது.

தொன்ம வரலாற்றுச் செய்திகள்

மாயோன் பெரிய மலைப் பக்கத்தினைக் கொண்ட வனாவான். இவன் தமிழர்களின் ஐந்திணை நிலங் களில் முல்லை நிலத் தெய்வமாவான். இவனுக்கு முன் பிறந்த வெள்ளை நிறத்தவன் பலதேவன். வெண்மையாய் அருவிகள் விளங்கும் மலைநாட்டை உடையவன்.

மாயோன் அன்ன மால் வரைக் கவாஅன்
வாலியோன் அன்ன வயங்கு வெள் அருவி
(கபிலர், நற்றிணை பாடல் 32, உ.வே.சா. நூல் நிலையம்) என்று மலையின் அருவி வெண்மை நிறத்தவனாகிய பலராமனுடன் ஒப்பிடப்படுகின்றது.
பலா மரங்கள் நிறைந்ததும் மலைச் சிகரங்களை உடையதும், வெண்மையான அருவி வீழ்வதுமான கொல்லிமலையிடத்தே இடி முழக்கத்துடன் இடித்தா லும் காற்று வேகமாக மோதினாலும் அழகு நலம் குறையாத கொல்லிப்பாவை உள்ளது.

பயம் கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
(நற்றிணை 192, பெயர் தெரியாப்புலவர், உ.வே.சா. நூல் நிலையம்) என்ற அடிகள்வழிக் கொல்லி மலை யில் தெய்வத்தாற் உருவாக்கப்பட்ட புதுமையான நடை கொண்ட இயங்கும் பாவை உண்டென அறிய லாம்.

கொண்கானத்தில் உள்ள நன்னனது நாட்டு ஏழில்
மலையில் எருமை மாடுகள் சென்று மேயும்.
கொண்பெருங்கானம் பாடலெனக் கெளிதே
(மோசிகீரனார், புறம்.154, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்) என்று புறநானூறு கொண்கானம் பற்றிக் கூறுகின்றது.

பொன் படு, கொண்கான நன்னன் நல் நாட்டு
ஏழிற் குன்றம் பெறினும் (பாலை பாடிய பெருங் கடுங்கோ,நற்றிணை 391, உ.வே.சா. நூல் நிலையம்)

நன்னனின் ஏழிற் மலை பற்றிய பதிவு நற்றிணை யில் உள்ளது. ஏழில் மலைபோன்று நிதியம் பெற் றாலும் தலைவியினைப் பிரியேன் என்கின்றான்.

வயல் கரையில் அமைந்துள்ளதும் நெருப்புப்போன்ற பூவைக் கொண்டதுமான வேங்கை மரம். அங்கே அயலான் ஒருவன் செய்த ஆராயாது செய்த தீங்கு செயலால் உண்டான தன் ஒரு முலை ஒன்றை அறுத்ததிருமாவுண்ணி நின்றிருந்தாள். இத்தகு திருமா வுண்ணியின் நிலைக்கு இரங்குதல் போல் தலைவி தன் நிலை குறித்துத் தனக்குத் தானே வருந்துவாள்.

குருகு ஆர் கழனியின் இதணத்து ஆங்கண்
ஏதிலாளன் கவலை கவற்ற
ஒரு முலை அறுத்த திருமாவுண்ணி (மதுரை மருதன் இளநாகனார், நற். 216, உ.வே.சா. நூல் நிலையம்) தலைவனின் பிரிவால் தலைவி அடையும் துன்பத் தைப் பிறர் அறியமாட்டார். திருமாவுண்ணி நிலை போன்றது சிலப்பதிகார கண்ணகியின் நிலை என் பதும் ஒப்பிடத்தக்கது.

முடிவுரை

சிற்றரசர்கள் என்ற பெயர்கள் சங்க காலத்தில் சேர, சோழ, பாண்டியர் அல்லாத குறுநில மன்னர்களைக் குறிப்பாக வேளிர்ப் படையினரைக் குறிக்கின்றது. சங்ககாலப் போர் மரபுகளாகக் காலை சூரிய உதயத் தின்போது முரசறைந்து போர் தொடங்குவர். சூரியன் மறையும்போது முரசறைந்து போரை நிறுத்துவர் போன்ற குறிப்புகள் சுட்டப்பட்டுள்ளன. முள்ளூர் மலையனின் வேற்படைக்கு அஞ்சி, ஆரியர் படை, ஓடிய வரலாற்று குறிப்புகளில் மலையனின் போர்த் திறம் காட்டப்பட்டுள்ளது. ஓரியின் கொல்லிமலை மக்களின் பேரிரைச்சல் ஒலி அலருக்கு உவமை செய்யப்படுகின்றது. வல்வில் ஓரியின் கானம் போன்று தலைவியின் கூந்தல் மணம் அமைகின் றது. நற்றிணையில் நன்னன் பகை மகளிரின் கூந்த லில் கயிறு திரித்த வரலாற்றுச் செய்தி தலைவியை மறந்த தலைவனின் கொடிய செயலோடு உவமிக் கப்படுகின்றது. ஆய் அண்டிரன் இரவலர்களுக்குத் தேரினைப் பரிசு வழங்கியது. வல்வில் ஓரியின் கொடைச் சிறப்பு, ஊர்ச்சிறப்பும் பேசப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி: பக்கம் 34)

ISSN 2320-4842

சொற்பிரிப்பு நெறிமுறையில் வினை வடிவங்களின் பயன்பாடு

முனைவர் போ. ஜான்சன்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி 620 002 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

முன்னுரை

இக்காலத் தமிழில் சொற்பிரிப்புப் பற்றிப் பெரிதும் உணர்ந்துகொள்ளப்படாத சூழல் உள்ளது. அதனை வெளிப் படுத்தி அதனுள் ஒரு பகுதியாக வினைவடிவங்களை இக்கட்டுரை ஆராய்கிறது. வினைவடிவங்கள் வாக்கியங் களில் அமையும்போது அவை சொற்களோடு சேர்ந்து எழுதப்பட வேண்டும் என்ற கருத்தை இந்த ஆய்வு முன்னெடுக்கிறது. சீர்மையான நடைமுறையை மொழியில் புகுத்த வேண்டும் என்ற வகையிலும், வினை வடிவங்களின் பொருள் சிதையாமல் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கிலும் சில வினைவடிவங்கள் இந்த ஆய்வுரையில் வழங்கப்பெற்றுள்ளன. இவை சிதைக்கப்படுவது குறிப்பாக, அச்சு வடிவத்தில்தான் என்பது நோக்கத்தக்கது. இடைவெளியைக் குறைக்கும் நோக்கில் சொற்களைப் பிரித்து அச்சிடும் முறை வழக்கத்தில் உள்ளது. இதனைக் களைய வேண்டி, கோட்பாட்டளவில் சில முடிவுகளை எடுக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு இந்த ஆய்வு அமைகிறது.

கூட்டுவினைகள்

ஒரு மொழியில் எல்லா வாக்கியங்களும் ஒரு வினைச்சொல்லை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்படு கின்றன. கூட்டுவினைகளின் பொதுவான இயல்பு ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட பெயர்ச்சொற்களைத் தம்முடன் சேர்த்து வாக்கியத்தில் அமைப்பதாகும். ***வினைச்சொல்லைத் தனிவினை, கூட்டுவினை என இரண் டாகப் பிரிக்கலாம். வினை என்பது தொழிலைக் குறிக்கும். தொழிலைச் செய்பவன், கருவி, பயன் முதலானவற்றைக் குறித்து வரும் என்பது இலக்கணிகள் கூறுவது. தனிவினையாகவும் கூட்டுவினையாகவும் இடம்பெறும் தனிவினை யாக நடந்தான், வந்தாள், சென்றாள் என்பனவாக பகுக்கலாம். கூட்டுவினை என்பது ஒன்றுக்கும் மேற்பட்ட வேர்ச்சொற்களைக் கொண்டு ஒரு வினைப் பொருளைத் தருவது. இது ஒருசொல் நீர்மைத்தாய் நின்று பல்வேறு இலக்கணக் கூறுகளை ஏற்கும் (கூட்டுவினைகள் ஓர் ஆய்வு, மொழியியல் இதழ், ப. 6).***

வினைகளை அவற்றின் பண்புகளுக்கேற்பப் பிரிக்கலாம். அவற்றைப் பொருள், அமைப்பு அடிப்படைகளில் பகுத்துக் காண்பார் ச. அகத்தியலிங்கம். அவற்றில் பொருள் அடிப்படையில் செயல்வினை, நிலைவினை, இயங்குவினை எனக் கூறுவார். வா, போ, நட போன்றன செயல்வினையாகவும்; குளிர், பசி, வலி போன்றன நிலைவினையாகவும்; இயங்குவினையானது, செயல்வினை போன்று செயல்படவல்லது என்றும் கூறுவார். வினையை அதன் அமைப்பு அடிப்படையில் நோக்கும்போது தன்வினை, பிறவினை, செய்வினை, செயப் பாட்டுவினை, காரணவினை, குறைவினை, செய்யப்படுபொருள் குன்றியவினை, செய்யப்படுபொருள் குன்றா வினை, முற்றுவினை, எச்சவினை எனப் பகுத்துக் கூறலாம். கூட்டுவினையின் அமைப்பு என்பது வினை யின் ஒட்டுருபு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது.

கூட்டுவினையின் அமைப்பு

கூட்டுவினை அமைப்பைக் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கலாம் என்பார் அ. கார்த்திகேயன்.

கூட்டுவினை - அடிப்பகுதி + வினையாக்கி: அதாவது அடிப்பகுதியுடைய அமைப்பும் வினையாக்கி அமைப்பும் விளக்கினால் கூட்டுவினை அமைப் பைப் புரிந்துகொள்ள முடியும். அடிப்பகுதியாவது கூட்டுவினையின் முதல் பகுதியாக வழங்குவதாகும். இத்தகைய அடிப்பகுதி பெயர்ச்சொல்லாகவோ இடைச்சொல்லாகவோ அமையலாம். கூட்டுவினைகள் அடிப் பகுதியாக வரும் பெயர்ச் சொற்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். தனிப்பெயர்கள், கூட்டுப்பெயர்கள், ஆக்கப்பெயர்கள் என்பனவாகும். அவற்றுள் தனிப்பெயர்கள் தன்னளவில் பெயர்ச்சொற்களாக விளங்குகின்றன. அவற்றை மேலும் பிரித்தால் பொருள் தராது. **அரட்டை, ஆர்வம், வீண், பாழ்.**

கூட்டுப்பெயர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களைக் கொண்டு விளங்கும். **திறனாய்வு, வாக்குறுதி, இறக்குமதி, பரிந்துரை.**

வினையிலிருந்து வருவிக்கப்பட்ட ஆக்கப்பெயர் கூட்டுவினையின் அடிப்பகுதியாகச் செயல்படுகின்றது.

ஆதரவு (ஆதரி-வு), விசாரணை (விசாரி- அணை). சரியான ஆக்க ஒட்டுகளை வினைச் சொற்களுடன் சேர்ப்பதன் மூலம் இத்தகைய ஆக்கப் பெயர்கள் ஏற்படுகின்றன.

முன், பின், வெளி, நேர் என்பவும் இவைகளைத் தவிர சில இடைச்சொற்களும் கூட்டுவினையின் அடிப் பகுதியாக விளங்கும். கூட்டுவினைகளை அதன் அமைப்பு அடிப்படையிலும் பொருண்மை அடிப்படை யிலும் இரண்டாகப் பகுத்து ஆய்ந்துள்ளார் பொற்கோ. அமைப்பு அடிப்படையில் நோக்கும்போது பெயரும் வினையும், வினையும் வினையும், இடைச்சொல்லும் வினையும் என்ற வகையில் நோக்குவார். அதனை மேலும் பகுத்து, இயற்பெயர் கூட்டுவினை (அடி, புறப்படு, சண்டைபோடு); ஆக்கிய பெயர் கூட்டுவினை (மணம்செய், ஆட்சிபுரி, முயற்சிசெய்); வினையடிச் சொல் கூட்டுவினை (எதிர்பார், அருள்செய், ஒட்டிக் கொள்); முற்றாவினைக் கூட்டுவினை (சாகடி, நோகடி, தோற்கடி); வினையெச்சச்சொல் கூட்டுவினை (சொல் லிக்கொடு, தள்ளிப்போடு, கொண்டுவா, கண்டுபிடி); இடைச்சொல் கூட்டுவினை (சரிபார், உட்கொள், முன் னேறு, பின்னேறு, கீழ்ப்படி) என வகைப்படுத்துவார் (இலக்கண உலகில் புதிய பார்வை, முன்னுரை).

கூட்டுவினைகள் பின்வருமாறு அமையும்:

கூட்டுவினைச்சொற்களின் நடுவே எந்தச் சொல்லை யும் புகுத்த முடியாது. இதுபோலவே கூட்டுவினை யில் ‘ஐ’ வேற்றுமையைப் புகுத்த முடியாது. காட்டாக, **போராடு, சண்டையிடு, குணப்படுத்து** என்ற கூட்டுவினைச்சொற்களினிடையே வேற்றுமை உருபு இணைந்து வராது.

கூட்டுவினைக்கு முன் பெயரடையோ, எண்ணுப்பெய ரடையோ, பெயரெச்சமோ, உன், என் போன்ற ஆறாம் வேற்றுமைத்தொடரோ வரமுடியாது. காட்டாக, பழிவாங்கினேன் என்ற கூட்டுவினையின் முன்னர் நல்ல, இரண்டு, கொடுத்த, உன், என் போன்றன அமையாது.

இதன் மூலம் கூட்டுவினைகள் அனைத்தும் ஒரே சொல் நடையாகவும், பிரிக்க இயலாததாகவும் அமைகின்றன எனக் கொள்ளப்படுகிறது.

கூட்டுவினையின் செயல்பாடு

கூட்டுவினைகள் மேற்கூறப்பட்டதைப்போல ஒருசொல் நீர்மைத்தாய் நின்று ஒரு வினைப் பொருளைத் தந்து பல்வேறு இலக்கணக் கூறுகளை அடுத்துவரும். அச்சடித்தான், வெட்கப்பட்டான், முன்னேறினான் எனவாறு அமையும். ஆனால் இவை அகராதியில் ஒரே வினை போன்றே அமைகின்றன. கூட்டுவினை கள் பல்வேறு சொற்களுடன் ஒரு வினையாக்க வினை சேர்ந்து உருவாகும் நிலையிலும் ஒலிக் குறிப்புச் சொற்களுடன் இணைந்துவரும் நிலையிலு மாக அமைகின்றன.

பகீரென்றது, திடீரென்றது, படக்கென்றது என அமை யும் ***ஒலிக்குறிப்புச் சொற்கள் சேர்ந்த வினையடைகள் சில இடங்களில் இரட்டித்தும் வருகின்றன. அவற்றை ஒலிக்குறிப்பு இரட்டைக்கிளவி வினைகள் என்று கூற லாம். அவை கடகட, கணகண, குறுகுறு என்பனவாகும் (கூட்டுவினைகள் ஓர் ஆய்வு, மொழியியல் இதழ், ப. 9).*** இதுபோன்று தமிழில் 40க்கும் மேற்பட்ட வினை கள் உள்ளன. கடகடவென ஓடியது, குறுகுறுவென நடந்தது இவை இரட்டைச்சொற்களைக் கொண்டிருக் கின்றனவே அன்றி வினையாக்கவினையைக் கொண் டவை அல்ல. எனினும் இதுபோன்ற வினைகளும் கூட்டுவினைகளைப் போன்று அகராதியில் இடம் பெற்றுள்ளன.

கூட்டுவினைகளானது பல பெயர்களுடன் ஒரு வினை யாக்கவினை சேர்ந்தும், பல வினைச்சொற்களுடன் வினையாக்கவினை இணைந்தும் உருவாக்கம் பெறு கின்றன. அவ்வாறு பெறப்படும் சொற்கள் சேர்ந்தே அமைகின்றன.அவ்வாறு கூட்டுவினைகளாகச் சேர்ந்து அமையும்சொற்கள்**(அணை-கட்டியணை, அரவணை; அமர்-குடியமர்த்து, அரசமர்த்து; ஆக்கு-இரையாக்கு, உரித்தாக்கு)** ஒருசொல் நீர்மைத்தாய் அமைந்துவிடு கின்றன. இதுபோன்ற கூட்டுவினைகளைப் பிரித்து எழுதும்போது அவை கூட்டுவினை என்ற அமைப் பிலிருந்து சிதைந்து வினை தனித்து விடப்படுகிறது. எனவே கூட்டுவினைகளை அவற்றின் தன்மைக்கு ஏற்றவாறு சேர்த்தே எழுத வேண்டும்.

வினையெச்சங்கள்

தமிழில்எச்சவினை பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும்.வினையெச்சம் என்பது வினையைக் கொண்டு முடியும் சொல். வினையெச்சங்கள் அமைப்பு முறையிலும் கால வளர்ச்சி நிலையிலும் பல மாற் றங்களுக்கும் உள்ளாகின்றன.

இலக்கணிகள் கருத்து

தொல்காப்பியர் வினையெச்சங்களை விரவுவினையில் அடக்குவார். வினையெச்சங்களின் அமைப்புப் பற்றி யும் அவற்றின் செயல்பாடு பற்றியும் பல நூற் பாக்களில் குறிப்பிட்டுள்ளார். வினையெச்சங்களில் முடிவு பற்றி,

வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
நினையத் தோன்றும் முடிபா கும்மே (தொல். சொல். எச்சவியல், 433) என்னும் நூற்பாவில் வினையெஞ்சுகிளவிக்கு வினையும் குறிப்பும் முடி பாகத் தோன்றும் என்று தெளிவாகக் குறிப்பிடு கிறார். நன்னூலார் வினையெச்சத்திற்குச் சிறந்த விளக்கம் தந்துள்ளார்.

தொழிலும் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச்சம்மே (நன். சொல். நூ. 342)
நன்னூலார் கருத்துப்படி வினையெச்சங்களில் தொழி லும் காலமும் உண்டு. பால் இல்லை. தொல்காப் பியர் குறிப்பிடும் ஒன்பது வகை வாய்பாட்டு வினை

யெச்சங்களில் செயற்கு என்ற வாய்பாட்டை மட்டும் நீக்கி மேலும் 4 சேர்த்து 12 என விரிவாகத் தரு கிறார். அவை முக்காலத்திற்கும் வருவன பற்றித் தெளிவாக விளக்கிச் செல்கிறார்.

வினையெச்சங்கள் தனியாக நடைபெற்று வர இய லாது. அதன் பிறகான சொற்களோடு சேர்ந்து மட் டுமே உரைநடையில் வரும். அவை பெயர்களா கவோ வினைகளாகவோ இருக்கும். ஓடிய பையன், பாடிய சிறுமி, வந்த குதிரை போன்ற பெயரெச் சங்களும்; நடந்து வந்தான், படித்து வந்தாள், வரைந்து முடித்தாள் போன்ற வினையெச்சங்களும் அமைந்து வருகின்றன. இவற்றை இலக்கணிகள் பெயரெச்சம், வினையெச்சம் என்ற பாகுபாட்டில் அடக்குவர். வினையெச்சம் அடைபெற்று வரும்போது அதனைக் கூட்டுவினையெச்சங்களாகக் கொள்வர்.

கூட்டுவினையெச்சங்கள் அமையும் முறை

செய்துவிட்டு, செய்துகொண்டு, செய்யாவிட்டால், செய்யாமலிருக்க, செய்திருந்தால், செய்யாமலிருந் தால், செய்யாமலிருக்கையில், செய்யாமற்போனதும், செய்யாமலிருந்துகொண்டு, செய்யாமலிருந்துவிட்டு, செய்யாமலிருந்திருந்தால் என்பன போன்றவை ஒருவகை. பிறிதொரு வகை, கூட்டுவினையெச்சங் கள், பெயரெச்ச வாய்பாட்டுச் சொற்களுடன் பின், பின்னர், முன், முன்னர், முன்பு, பொழுது, போது, போதில், படி, உடன், ஆறு, வரை, வரையில், வரைக்கும், மட்டும், மட்டிலும், தோறும், வண்ணம் என்பன போன்ற வினையெச்சப் பின்னொட்டுக்கள் சேர்ந்து உருவாகும் இயல்பின. வந்தபின், வரும்முன், சொன்னபடி, சொன்னவாறு, பேசியவண்ணம், போகும்வரை, வருந்தோறும் என்பன போன்றவை இவ்வகையில் அடங்குகின்றன. மேற்சுட்டிய இருவகை யிலும் சொற்கள் அமைவதைக் காணலாம்.

கூட்டுவினையடிக் கூட்டுவினையெச்சங்கள்

கூட்டுவினையடியாகப் பிறக்கும் கூட்டுவினையெச்சங் களை, செய்யா விட்டால், செய்யாமல் இருக்க, செய்யா மல் இருந்து விட்டு எனப் பிரித்து எழுதுவது முறை யல்ல. இதனால்தான் இவைபற்றிப் பேசும் பொற்கோ இவற்றை மேற்படி வாய்பாடுகளாகவே தந்து இவற்றின் ஒருசொல் நீர்மையை வெளிப்படுத்தியுள்ளார் (இக்காலத் தமிழ் இலக்கணம், பக். 84-93).

படித்துக்கொண்டிருந்தேன் என்பதைப் படித்துக் கொண்டு இருந்தேன் என எழுதாததைப் போலவே கூட்டுவினையெச்சங்களான படித்துக்கொண்டிருந் தால், படித்துக்கொண்டே, படித்துக்கொண்டிருக்க, படித்துக்கொண்டிருக்கையில் எனச் சேர்த்து எழுது வதே முறை. கூட்டுவினைகளை எழுதும் இந்நெறி முறையிலேயே மேற்படி கூட்டுவினையெச்சங்களை யும் சேர்த்து எழுதுவது அவசியம்.

பொதுவாக வினையடிகளைத் தனிவினையடி, கூட்டு வினையடி எனப் பிரிக்கையில் கூட்டு வினையடிகளைச்சேர்த்து எழுத வேண்டும். இந் நிலையில் இவற்றின் அடியாகப் பிறக்கும் பாடிக் கொண்டிருந்தான், கேட்டுக்கொண்டிருந்திருக்கிறேன், தள்ளிவிட்டுக்கொண்டிருந்தார்கள், செய்யாமல்போ யிருப்போம், பாதுகாக்கப்படாதிருந்திருக்கும் என வருவனவற்றைச் சேர்த்து எழுதுவது முறை. இவற் றின் அடியாக வரும் பாதுகாக்கப்படாதிருந்திருக் குமேயானால், தள்ளிவிட்டுக்கொண்டிருக்கையில் என வரும் நீண்ட கூட்டுவினையெச்சங்களையும் சேர்த்து எழுதவேண்டும். அச்சில் வரி இறுதியில் பிரிப்பது என்பது பற்றியும் முடிவெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இணையத் தரவுகளில் எடுத்துச்சொல்லிக் கொண்டிருந்தார் என்னும் சொல் சேர்த்து எழுதப் பட்டுள்ளது. எனவே இந்தச் சொல்லின் அடியாக வரும் எடுத்துச்சொல்லிக்கொண்டிருக்கையில் என்ப தைச் சேர்த்தே எழுதவேண்டும். அவரைப் பார்த் துக்கொண்டே இருக்கையில் அமர்ந்தார் என்பதைப் பிரித்து எழுதுவதைப்போல, நான் அவரைப் பார்த் துக்கொண்டிருக்கையில் நீ வந்தாய் எனும் தொடரில் உள்ள செய்கையில் வாய்பாட்டுக் கூட்டுவினையெச் சத்தைத் தனித்து எழுதமுடியாது. அவ்வாறு எழுதி னால் அதன் பொருள் மாறுபடும். எனவே வினை யடிகளைச் சேர்த்து எழுதவேண்டும் என்பது தெளி வாகிறது.

பெயரெச்ச வாய்ப்பாட்டுக் கூட்டுவினையெச்சங்கள்

தொல்காப்பியர் செய்து, செய்பு முதலான தனிவினை வாய்பாட்டு எச்சங்களைக் குறிப்பிட்டது போலவே பின், முன், கால், கடை, வழி, இடத்து எனும் காலம் உணர்த்தும் கூட்டுவினையெச்சங்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இவை பெயரெச்ச வாய்ப்பாட்டுச் சொற்களுடன் சேர்ந்து வரும் இயல்புடையன என் பதை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

தொல்காப்பியப் பதிப்புகளிலும் இக்கூட்டுவினையெச் சங்கள் சேர்த்து எழுதியே காட்டப்பட்டுள்ளன. 20ஆம் நூற்றாண்டில் தமிழ்நூல் என்னும் இலக்கண நூலை எழுதிய சரவணத்தமிழனும்,

இறந்தகாலப் பெயரெச் சத்தின்பின் கால்கடை வந்து திரிபெயராகி வலிமெய்மிகலும் ஒருசொலாகி வினையெச் சம்போல் தோன்றலும் ஆமே

எனக் கூறிப் பெயரெச்ச வாய்பாட்டுச் சொற்களுடன் இவற்றின் சொற்சேர்க்கை முறையைக் கூறியுள்ளார். இவற்றின் சேர்க்கை இயல்பைச் சரவணத்தமிழன் இந்நூற்பாவில் **ஒருசொல்லாகி** எனக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். இதே கருத்தைத் தம் தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகை உரையில் சா. பாலசுந் தரமும் (தொல்காப்பியம், ஆராய்ச்சிக் காண்டிகை உரை, ப. 254) வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தக் கூட்டுவினைச்சங்களைப் பற்றிய புரிதலின் மையே இவை பிரித்தும் சேர்த்தும் சீர்மையின்றி எழுதப்படுவதன் காரணமாகும். முறையாக இதைப்

புரிந்துகொண்ட தமிழ் ஆய்வாளர்கள் தமது எழுத்து களில் இத்தகு சொற்களைச் (**உண்ணும்படிச்** சொல் கிறார்கள், படையெடுத்து **வந்தபோது**, கொல்ல **முயன்றபோது**, அருகில் சென்று **பார்த்தபோது**, தலைவர்கள் **இறந்தபோது** புலவர்கள்) சேர்த்தே எழுதியுள்ளனர்.

கூட்டுவினையெச்சங்கள் பற்றிய இலக்கண வரை யறை தரும் பொற்கோ இவற்றைச் செய்தபோது, செய்தபின்,படிக்கும்முன், செய்யாமுன், பார்த்தவுடன், சொன்னபடி, நடந்தவரை, வருந்தோறும் எனச் சேர்த்தே தந்துள்ளார். எனவே இவ்வாறு வரும் கூட்டுவினையெச்சங்களைச் சேர்த்து எழுதுவதே சரி. இணையத் தரவுகளில் கூட்டுவினையெச்சங்கள் பார்த்துக்கொண்டிருந்தபோது, பார்த்துக்கொண்டிருந் தபின் என ஒரு சொல்லாகவே எழுதப்பட்டுள்ளமை யும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மொழி அறக்கட்டளையின் தமிழ்நடைக் கையேட்டில் உடன் (பார்த்தவுடனே), பிறகு (போனபிறகு) பின், பின்பு, பின்னே, பின்னால் (தூங்கியபின்பு), மட்டும் (தெரிந்தமட்டும்), முன், முன்பு, முன்பே, முன்னே, முன்னால் (உதிக்கும்முன்), வண்ணம் (தெரியா தவண்ணம்), வரை, வரைக்கும், வரையில் (முடிக் காதவரை) என்பனவற்றைப் பெயரெச்சத்தின் பின் சேர்த்தே எழுதவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

தமிழகப் பாடநூல்களில் இத்தகைய கூட்டுவினை யெச்சங்கள் பற்றிய வரையறைகள் தரப்படுவதில்லை. தமிழ்வழியில் படித்தோரிலும் இத்தகைய கூட்டு வினையெச்சங்கள் பற்றிய விழிப்புணர்வும் இல்லை. எனவே இத்தகைய எச்சங்கள் பற்றிய புரிதலை ஏற்படுத்த வேண்டியது மிகத் தேவையாக உள்ளது. நான் அவருடன் பேசிக்கொண்டிருந்தேன், அப்போது அம்மா வந்தார்கள் என்னும் இரு தொடர்களும் இணையும்போது, தொடர்களில் உள்ள **பேசிக்கொண் டிருந்தேன், அப்போது** என்னும் இரண்டு சொற் களும், **பேசிக்கொண்டிருந்தபோது** என்ற கூட்டு வினையெச்சமாக உருவாகின்றது. முற்றுத்தொடர் களின் இணைவில் உருவாகும் இத்தகு கூட்டுவினை யெச்சங்களைச் சேர்த்து எழுதுவதே முறை.

துணைவினைகள்

வினைகள் செயலைக் காட்டப் பயன்படுத்தப்படுவ தோடு மட்டுமன்றிப் பிறிதோர் வினையுடன் இரண் டாவதாக வந்து முதல்வினை காட்டும் பொருளுக்கு அடையாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இப்படிப் பட்ட வினைகளில் ஒருசில காலம், செயல்நிலை, பேசுவோர் மனநிலை, வினைத்தன்மை ஆகியவற் றைக் காட்டக்கூடியவையாக இருக்கின்றன. அப்படிப் பட்ட வினைகள் துணைவினைகள் எனப் பெயர் பெறுகின்றன. இந்த வினைகள் பொருண்மையியல், தொடரியல் அடிப்படைகளில் முழுவினைகளிலிருந்து மாறுபடுகின்றன. துணைவினைகள், தனிவினைகளாக வும் வரும். ஆனால் தனிவினைகளாக வரும்போது அவை தரும் பொருள் வேறு. துணைவினைகளாக வரும்போது அவை தரும் பொருள் வேறு. தனிவினை களாக இலக்கம், நிலை, செயல் முதலான பொரு ளில் வரும். இப்பொருள் அவை துணைவினை களாகச் செயல்படும்பொழுது வருவதில்லை. அப்போது முதல்வினையின் பொருளில் சில மாற்றங்களைத் தருகின்றன.இதனால் கூட்டுவினையில் துணைவினை யின் முன்பு அல்லது துணைவினைகளின் இடையே வாக்கியக் கூறு எதுவும் புகமுடியாது. சில இடைச் சொற்கள் மட்டுமே வரமுடியும். துணைவினைகள் அடைகள் பெற்று வரமுடியாது. வினையெச்சத்தை அடுத்து வரும் மற்றொரு வினையெச்சம் துணைவினை யாக அல்லாமல் தனிவினையாக வரும்போது இடை யில் அடைகள் பெற்று வரமுடியும். அப்போது அவை துணைவினைகள் ஆகா.

துணைவினைகள் தம் அகராதிப் பொருளை இழந்து இலக்கணப் பொருளை உணர்த்தும் வினைவடிவங்க ளாகும். தமிழில் துணைவினைகள் எப்போதும் முதல் வினையைப் பொருள் நிலையிலும், வடிவநிலையி லும் சார்ந்து முதல் வினைக்குப் பின்னிடத்தனவாக அமைகின்றன. கீதா **சிரித்துவிட்டாள் (வினை - துணைவினை);** அவன் **வந்துவிட்டான்**; அவர் **பேசிவிட்டார்**; அது **சென்றுவிட்டது**.

இலக்கண ஆசிரியர்கள் துணைவினைகளைத் தத்தம் மொழியில் கையாண்டிருந்தபோதிலும் துணைவினை என்னும் பாகுபாடு காட்டவில்லை. ஆயினும்,

இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி
இருவயி னிலையும் பொருட் டாகும்மே
தன்பா லானும் பிறர்பா லானும் ***(தொல்.சொல். 245)***

எனும் தொல்காப்பிய நூற்பாவில் 'வேண்டும்' எனும் வடிவம் இருவயின் நிலையும் பொருட்டாகும் பான்மை யினைத் துணைவினையைப் பற்றிய செய்திகளாகக் கருதும் நிலையும் உண்டு என்பர் அகத்தியலிங்கம் (துணைவினைகள், பக். 331-356). இதன்மூலம் 'வேண்டும்' என்னும் வினைவகையால் வேறுபாட் டினை உணர்த்தும் துணைவினையைச் சுட்டிக்கூறி யுள்ளார். இது விரும்புதல் பொருளில் வழங்கி வருகிறது. சாத்தன் ஓதல் வேண்டும்; செய்தல் வேண்டும்; சூழ்தல் வேண்டும்; இதில், 'வேண்டும்' என்னும் துணைவினை இணைந்துவரும் 'செயல்' என்னும் தொழிற்பெயருடன் செய்ய, செய என்னும் வாய்ப்பாடுகளையும் பொருத்திக் காணமுடியும் (வரவேண்டும், செய்யவேண்டும், கூறவேண்டும்). தொல்காப்பியர் தம் மொழியில் ஆகும், இரு, கூட, கொள், தகும், படு, பெறு, வேண்டும் போன்ற துணைவினைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

தொல்காப்பிய நூற்பாக்களில் சுட்டப்பெறும் சில அசை நிலை வடிவங்களைப் பொருள் நிலையிலும், வடிவ நிலையிலும் துணைவினைகளின் திரிந்த வடிவங்களாக அறிஞர்கள் சிலர் கருதுகிறார்கள் (தமிழ் இலக்கண

மரபில் துணைவினைகள், மொழியியல் இதழ், பக். 91 -92). ஜி.யு. போப், கால்டுவெல், ஆர்டன் போன்ற மேலைநாட்டு அறிஞர்களும் தமிழ்மொழியில் காணப் படும் துணைவினை வடிவங்கள் சிலவற்றையும் அவை தரும் பொருள் வழக்காறுகளையும் சுட்டியுள்ளனர். இக்கால மொழியில் அறிஞர்களான தெ.பொ.மீ., ச. அகத்தியலிங்கம்,பொற்கோ, இரா. கோதண்டராமன், இருளப்பன், க. ராமசாமி, இரா. சீனிவாசன், சுப. திண்ணப்பன், பி. புஷ்பவல்லி, கோ. விசய வேணு கோபால், இ. அண்ணாமலை ஆகியோர் தமிழில் உள்ள துணைவினைகளையும் துணைவினைகளின் வரலாற்றையும் தனிநிலைகளாக ஆராய்ந்துள்ளனர்.

துணைவினை - இயல்பு

தமிழில் அடி, அருள், ஆம், ஆச்சு, இயலும், இரு, இல், உள், எடு, ஒழி, காட்டு, கூடும், கொண்டிரு, கொள், செய், தகும், தள்ளு, தெரி, தொலை, நேர், படு, பண்ணு, பார், பொறு, போ, போடு, மாட்டு, முடியும், வரு, விடு, வை, வேண்டும் என்பன துணை வினைகளாகச் செயல்படுகின்றன. துணைவினைகள் அனைத்தும் முதல்வினையைப் பொருள் நிலையி லும், வடிவநிலையிலும் சார்ந்து முதல்வினையின் பின்னிடத்தவனாக அமைகின்றன (இறைவன் செய்ய வைத்தான், நான் பயந்துபோனேன்). பெரும்பாலான துணைவினைகள் பால், எண், இடம், காலம், எதிர் மறை உருபுகள் ஏற்றுவருதல் உண்டு {செய்து காட் டினான்} (காட்டு + இன் + ஆ + ன்).

வினையாக்கிகள்

ஒரு கூட்டுவினையில் இரண்டாவது பகுதியாக விளங் குவது வினையாக்கிகள். இவை பெயர்ச்சொற்களைக் கூட்டுவினைகளாக மாற்றுகின்றன. மேலும் காலம், பால், இடம் என்ற இலக்கணக் கூறுகளையும் குறித்து நிற்கின்றன {அடி, அடை, அளி, செய், படுத்து, விடு}. வினையாக்கிகள் அனைத்தும் முழுவினையின் பொருளை இழந்து அல்லது பொருளில் குறைந்து செயல்படுகின்றன. பெயர்ச்சொற்களை வினைச்சொற் களாக மாற்றும் சொற்கள் அல்லது உருவங்களை வினையாக்கிகள் என்று அறிஞர்கள் குறிப்பிடுவர். தமிழில் சில வினைச்சொற்களும் 'இ' என்ற உருப னும் இத்தகைய வினையாக்கிகளாகச் செயல்பட்டுப் பெயர்களை வினைகளாக மாற்றும் பணியில் பங்காற் றுகின்றன. காட்டாக 'இ' என்ற வினையாக்கவிகுதி சோதனை, நியமம், விசாரணை போன்ற பெயர்ச் சொற்களுடன் இணைந்து முறையே சோதி, நியமி, விசாரி போன்ற வினைச்சொற்களைப் பிறப்பிக்கின் றன. மேலும் கொலை, எடை, சோதனை போன்ற சொற்கள் முறையே படு, செய் போன்ற வினைச் சொற்களுடன் இணைந்து கொலைப்படு, எடைபோடு, சோதனைசெய் போன்ற கூட்டு வினைகளைப் பிறப் பிக்கின்றன.

பழங்காலத்திலிருந்தே 'இ' என்ற சொல்லும் வினை யாக்கியாகச் செயல்பட்டு வந்துள்ளது. இகரம் ஒரு பெயரை வினையாக்கும் தன்மை உடையது. காட்டா கக் காதல் + இ = காதலி என்ற இகரம் ஏற்ற வினை நோக்கத்தக்கது. இகரம் ஏற்று வரும் சொற் கள் பலவும் வடமொழியில் இருந்தே தமிழுக்கு வந் தவை என்பர் சிலர். ஆனால் பொற்கோ, ***பழந் தமிழில் வினையாக்க விகுதியாகச் செயல்படும் இகரமே இங்கும் வினையாக்க விகுதியாகச் செயல்பட்டுள்ளது என் பதும் இந்த இகர உருபன் வண்ணனை மொழியியலாரில் ஒருசாரார் கொள்கைப்படி, இடமாற்றுருபனாகக் கொள்ள இடம் உண்டு என்பதும் கருத்தாகக் கொள்ளப்படுகிறது*** (இலக்கண உலகில் புதிய பார்வை, பக். 21-22) என்பார்

தமிழில் 40க்கும் மேற்பட்ட வினையடிச் சொற்கள் வினையாக்கிகளாகச் செயல்படுகின்றன. அவை, அடி, அடை, அளி, ஆகு, ஆக்கு, ஆடு, ஆற்கு, இடு, உறு, உறுத்து, ஊட்டு, செய், சொல், படு, படுத்து, பண்ணு, பார், புரி, போடு, போ, விடு போன்றன பல உள {செய்துபார், விடுதலைசெய்}.

தமிழில் எல்லா வினைகளும் வினையாக்கிகளாகச் செயல்படவில்லை. குறிப்பிட்ட வினைச்சொற்களே பெயர்களை வினைகளாக்கும் தன்மையின. அதாவது ஒரு மொழியில் பிரதிப்பெயர்கள், துணைவினைகள் உள்ளனபோலவே வினையாக்கிகளும் உள்ளன. இவை நிலைத்த தொகுதியை உடையவனாக உள்ளன. ஆனால் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் பரந்துபட்ட தொகுதியைச் சேர்ந்தவனாக உள்ளன. பெயர்களும் வினைகளும் கணக்கிட முடியாதவை. இவை தாம் சேரும் வினைச்சொற்கள் அல்லது பெயர்களுடன் சேர்ந்துநின்றே பொருள் உணர்த்துகின்றன. இவற்றைப் பிரித்து எழுதல் இயலாது.

முடிவுரை

வினைவடிவங்களில் கூட்டுவினைகள், வினையெச் சங்கள், கூட்டுவினையடிக் கூட்டுவினையெச்சங்கள், பெயரெச்ச வாய்ப்பாட்டுக் கூட்டுவினையெச்சங்கள், துணைவினைகள், வினையாக்கிகள் போன்றன ஆய் வுக்குட்படுத்தப்பட்டு அவை வாக்கியங்களில் அமை யும்போது எழுதப்பட வேண்டிய விதிமுறைகள் குறிக் கப்பட்டுள்ளன. தனிவினை தவிர மற்ற அதனுடன் இணைந்துவரும் எந்த வினைச்சொல்லாக இருப்பினும் அவற்றை வாக்கிய அமைப்பில் சேர்த்தே எழுத வேண்டும். பிரித்து எழுதும்போது ஏற்படும் பொருள் தடுமாற்றத்தைத் தடுக்க இந்த முன்னெடுப்பு தேவை யாகிறது. மொழியின் வளத்தை மேம்படுத்தும் நோக் கோடு இம்மொழிச் சீர்மை பின்பற்றப்பட வேண்டும் என்பது இந்த ஆய்வின் முடிந்த முடிபாகக் கொள் ளப்படுகிறது.

ஆய்விற்குத் துணைநின்றவை

அகத்தியலிங்கம், ச., துணைவினைகள், மெய்யப்பன் பதிப்ப கம், முதற்பதிப்பு, டிசம்பர் 2006

இசரேல், மோ., தமிழ் இலக்கண மரபில் துணைவினைகள், மொழியியல் இதழ் (ச. அகத்தியலிங்கனார் மணிவிழா மலர்), தொகுதி 13 & 14: எண் 1-4, அனைத்திந்திய மொழியியல்

ISSN 2320-4842

கழகம், அண்ணாமலை நகர்

கார்த்திகேயன், ஆ., கூட்டுவினைகளும் அவற்றைக் கண்டறியும் முறைகளும், மொழியியல் இதழ், தொகுதி 5: எண் 1, அனைத்திந்திய மொழியியல் கழகம், அண்ணாமலை நகர்

சுப்பையா, கோ., கூட்டுவினைகள் ஓர் ஆய்வு, மொழியியல் இதழ், தொகுதி 6: எண் 1, அனைத்திந்திய மொழியியல் கழகம், அண்ணாமலை நகர்

பாலசுந்தரம், ச., தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகை உரை, தாமரை வெளியீட்டகம், முதற்பதிப்பு, அக்டோபர் 1988.

பொற்கோ, இலக்கண உலகில் புதிய பார்வை, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், மூன்றாம் பதிப்பு, மார்ச் 2005

(28ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலராமன் போன்ற வெண்மை அருவி, ஏழில்மலை, கொல்லி குடை வரை பாவை, திருமாவுண்ணி போன்ற தொன்ம வரலாற்றுச் செய்திகள் இடம்பெற் றுள்ளன.

சிற்றரசர்களாகத் திகழக்கூடிய குறுநில மன்னர்கள் சிறந்த முறையில் ஆட்சி செய்திட்டனர். இவர்கள் பேரரசர்களைப் போன்று படையிலும், கொடை யிலும், வீரத்திலும் உயர்ந்து விளங்கினர். பலர் இரவலர்களுக்குத் தேவையான பொருள்களை வாரி வழங்குகின்ற வள்ளல்களாக இருந்த வரலாற்றினை இவ்வாய்வுவழி நன்கு அறியமுடிகிறது. அகப்பாடல் களில் புறச் செய்திகளை வெளிப்படுத்த வரலாற்றுக் குறிப்புகள்உவமைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வுக்கட்டுரை மேற்கோள்கள் (அகர வரிசை)

அருணாசலம், மு., நற்றிணையும் சத்ஸயி அகப் பாடல் களும், இராஜா பப்ளிகேசன்ஸ், திருச்சி, முதற்பதிப்பு 2022.

சாமிநாதையர், உ.வே., நற்றிணை மூலமும் உரையும், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, நான்காம் பதிப்பு 2019.

தமிழ்நட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டு வரலாறு, (சங்ககாலம் -அரசியல்), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, மூன்றாம் பதிப்பு 2022.

பரிமணம், அ.மா., பாலசுப்ரமணியன், கு.வெ., (தலைமைப் பதிப்பாசிரியர்கள்), புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, முதல் பதிப்பு, 2004.

பரிமணம், அ.மா, பாலசுப்ரமணியன், கு.வெ., (தலைமைப் பதிப்பாசிரியர்கள்), அகநானூறு (தொகுதி 1, 2), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை-600 098, முதல் பதிப்பு, 2004.

பரிமணம், அ.மா, பாலசுப்ரமணியன், கு.வெ., (தலைமைப் பதிப்பாசிரியர்கள்), பதிற்றுப்பத்து (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை-600 098, முதல் பதிப்பு, 2004.

பரிமணம், அ.மா., பாலசுப்ரமணியன், கு.வெ., (தலைமைப் பதிப்பாசிரியர்கள்), குறுந்தொகை (தொகுதி 1), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, முதல் பதிப்பு, 2004.

மருதநாயகம், ப., தமிழின் செவ்வியல் தகுதி, இராசகுணா பதிப்பகம், திருச்சி, இரண்டாம் பதிப்பு 2021.

மருதநாயகம், ப., இன்றைய மேலை நோக்கில் புறநானூற்றுப் பாடல்கள், இராசகுணா பதிப்பகம், திருச்சி, முதல் பதிப்பு 2020.

மாதையன், பெ., சங்கக் கவிதையியல், இராசகுணா பதிப் பகம், திருச்சி, முதல் பதிப்பு 2013.

மீனாட்சி சுந்தரம், தொ.பொ., நற்றிணைச் சொற்பொழிவுகள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, முதல் பதிப்பு 1942.

வாழ்நாள் உறுப்பினர்கள்

533 க. நா. உமையாள்
534 N. R. Swapna (Kerala)
535 தே. கண்ணம்மாள்
536 வீ. மஞ்சு
537 த. கல்பனா
538 எஸ். அனிதா
539 J.E. மோகனா
540 அ. சுகன்யா
541 டி. சங்கீதா
542 ந. சின்னையா
543 இந்திர ஜோதி ஏகாம்பரம்
544 ஆர். தீபலட்சுமி
545 கே. உஷா நந்தினி
546 உ. ஜோதிமலர்
547 ஜெ. மணிகண்டன்
548 ரா. அபிநயா
549 ப. முத்துலெட்சுமி
550 சே. செந்தமிழ்ப்பாவை
551 கு. தனலெட்சுமி
552 பி. ரேவதி
553 ஷேளினா சிவநேசன்
554 ஜெ. செல்வமுத்துமாரி
555 கி. முருகலட்சுமி
556 மு. விசாலாட்சி
557 ப. பிரியா
558 செ. ரேணுகா
559 ஆர். பூஜா
560 ச. உமா
561 ம. விசய்ஆனந்து
562 பி. பிரேமா
563 Shruti (Noida, U.P.)
564 சு. ஹேமலதா

ISSN 2320-4842

சங்ககால வள்ளல்கள் கடையேழு வள்ளல்களாஅஅ..?

முனைவர் இரா. பசுபதி
தமிழ் இணைப்பேராசிரியர், மாநிலக்கல்லூரி (தன்னாட்சி), சென்னை 600 005

தமிழர் வரலாற்றுணர்வு இல்லாதவர், வரலாறு பற்றிய விழிப்புணர்வு இல்லாதவர் என்பன போன்ற கருத்துகள் இட்டுக்கட்டித் தமிழர்மீது சுமத்தப்பட்டவை. இயற்கையாலும் காலத்தாலும் அயலவர்களின் சூழ்ச்சியாலும் அழிந்து போன நூல்கள் ஏராளம் என்பது வரலாற்று உண்மை. எள்ளினின்று எண்ணெய் எடுபடுமாப்போல இலக்கியத்தி னின்றும் இலக்கணம் தோன்றும் என்பது முன்னோர் மொழி. தமிழில் கிடைத்துள்ள நூல்களுள் தொன்மை யானது தொல்காப்பிய இலக்கண நூல். இதன் காலம் கி.மு.8ஆம் நூற்றாண்டு என்பது பரவலாக எல்லோரும் ஏற்கும் கருத்து. தொல்காப்பியத்தில் எழுத்துருக்களின் வடிவமாற்றம் குறித்த நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன.

உழைக்கும் மக்கள்- சிறுகுடி- கிழார்- பெருங்குடி கிழார்- அரசன்- மன்னன்- வேந்தர் என்ற படிநிலை வளர்ச்சி யில் எழுத்துப் பயன்பாடு பெற்றிருந்த இடம் குறிப்பிடத்தக்கது. இயல்பாகக் குடிமக்கள் முதல் கோவேந்தன் வரை ஓலை முதலானவற்றில் எழுதும் ஆற்றலுடையவராகவும், எழுத்தறிவுடையவராகவும் வாழ்ந்தனர் என்பது அண்மைய கீழடி அகழ்வாராய்ச்சி சான்றுகளாலும் வெளிப்படும். சான்றாக 'கோதை' என்ற தமிழி எழுத்துக் களால் பொறிக்கப்பட்ட ஏழு தங்கக்கட்டிகள் கிடைத்துள்ளமை. அவை அடிப்படையில் அப்பெண்ணுக்கு உரிமை யானதாக வாழ்வாதாரமாக வழங்கப்பட்டமை என்பதை விளக்கத் தேவையில்லை. அவை கி.மு. 6-ம் நூற் றாண்டின என்பது அறிவியல் முறைப்படி மெய்ப்பிக்கப்பட்டன.

உலக எழுத்துக்களின் வரலாற்றை நடுநிலைமையோடு ஆராய்ந்தோர், தமிழியின் தொன்மையை ஆராய்ந் தோர் தமிழியே தொன்மையான வரிவடிவ எழுத்தெனப் பறைசாற்றுவர். ஆயிரக்கணக்கான பானையோட்டுக் கீறல்களும் பெயர்களாகப் பொறிக்கப்பட்ட எழுத்துக்களும் (ஆதன், குவிரன், ஆதிரன்) பல்வேறு அகழ்வா ராய்ச்சியில் கிடைத்துள்ளன. இவற்றின் தொல் வளர்ச்சியாக பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தும் பாறை ஓவியங்களும், குகை ஓவியங்களும் கிடைத்துள்ளன.

தொல் தமிழில் எழுத்து என்றாலே ஓவியத்தைக் குறிக்கும். பரிபாடலில் வரும் திருப்பரங்குன்ற முருகன் கோவிலில் இடம்பெற்றுள்ள ஓவியக்காட்சிகள், எழுத்துநிலை மண்டபம் இங்குச் சுட்டப்படுவதைக் கருதலாம். மேலும் ஓவியத்தில் எழுதவொண்ணா அழகு என்று வருணிக்கும் மரபு சங்க இலக்கியத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன. இங்கு எழுதுதல் என்பது ஓவியம் வரைதலை குறிக்கும். இன்றும் முதல் வரைவு (first draft), இரண்டாம் வரைவு (second draft), இறுதி வரைவு (final draft) என ஆராய்ச்சி நெறிமுறையிய லில் குறிப்பிடப்படுகின்றன.

படவெழுத்து, கருத்தெழுத்து, ஒலியெழுத்து என்ற வளர்ச்சிநிலை தமிழி எழுத்து முறையிலேயே காணப்படு கிறது. இவ்வாறிருக்க தமிழி எழுத்துமுறைக்குரிய வரலாற்று முதன்மை அளிக்காமல் பிராமி, வடபிராமியி லிருந்து வந்த தென் பிராமி என்ற பொய்யான வரலாற்றுக் கற்பிதங்களைத் தகர்த்தெறிய வேண்டும்.

உலகிற்கு எழுத்தறிவித்து, பானைகளிலும் தத்தம் புலங்கு பொருட்களிலும், ஓலைச்சுவடிகளிலும், செப்பேடு களிலும், கல்வெட்டுகளிலும் எழுத்துக்களைப் பயன்படுத்தி மன்னர்களும் மக்களும் வரலாற்றைப் பதிந்துள்ள னர். சிற்றரசர்கள்முதல் பெருவேந்தர்கள்வரை ஓலையிலும் செப்பேடுகளிலும் எழுதுவதற்கு ஓலை நாயகம் முதலிய பணியாளர்கள் அமர்த்தப்பட்ட வரலாற்றையும் அறிகிறோம். அவர்கள் எழுதிவைத்த ஓலைகள் அவ்வள வும் பாதுகாக்கப்படாமல் அழிந்துபோயின. அதிகளவாக 300 ஆண்டுகள் மட்டுமே ஓலைச்சுவடிகளின் ஆயுட் காலம் என்பதால் அவை மீளப் படியெடுத்துப் பாதுகாக்கப்படாமல் அழிந்துபோன வரலாறு தமிழக வரலாற்றில் நெடிதாய்க் காணப்படுகிறது. ஆங்கிலேயரின் அடுப்பங்கரையில் பழம் ஓலைச் சுவடிகள் விறகாகிக் கருகிச் சாம்பலாயின.அனல்வாதத்திலும் புனல்வாதத்திலும் மாய்ந்த ஓலைச்சுவடிகளும், செல்லரித்தும். ஆடிப்பெருக் கில் ஆற்றில் எறிந்தும், போகிக்குத் தீயில் பொசுங்கியும், போன ஓலைச்சுவடிகள் ஏராளம். இதற்கெல்லாம் காரணம் வீட்டில் பழைய ஓலைச்சுவடிகள் இருப்பதைத் தரித்திரம் எனப் பல வஞ்சகச் சதிகளுக்கு தமிழர் களைத் திட்டமிட்டு ஆளாக்கியதேயாகும். இவ்வாறாக, தம் வரலாற்றுக் கருவூலங்களை இழந்தனர். வெகு நாட்களாக மறைத்து வைக்கப்பட்ட தேவார திருமுறைச் சுவடிகளை இராசராசன் மீட்டுத் திருமுறை கண்ட தேவனாகத் தமிழக வரலாற்றில் குறிக்கப்படுவது இத்தகைய சதிச்செயல்களை வெளிப்படுத்தும் சான்றுகளில் ஒன்று. முதன்மையான தமிழ் நூல்களை சமஸ்கிரு தத்தில் மொழிபெயர்த்துவிட்டு அழித்துவிடும் சதியும் நடைபெற்றுவருகிறது.25000க்கும் மேற்பட்ட ஓலைகள் கொண்ட 308 ஓலைச் சுவடிக் கட்டுகள் இராமேஸ்

ISSN 2320-4842

வரக் கோயிலிலுள்ளன. தமிழக அரசால் தமிழ்ப் பண் பாட்டுமீட்புக்காக நிறுவப்பட்டஉ.த.நி. பேரா. சு. தாமரை பாண்டியன் குழுவினர் அவற்றை மீட்டு இன்றைய தமிழ் எழுத்துருவில் அச்சு நூலாக்கி வருகின்றனர் (இந்து தமிழ்திசை, மார்ச் 22, 2023). மேலும் பல கோயில்களில் ஓலைச்சுவடிகள் கண்டுப்பிடிக்கப்பட்டு அச்சாக்கம் பெற்றுவருகின்றன. இவ்வாறான வரலாற்று இருட்டடிப்புகள் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டதன் புரி தல்களோடுதான் சங்ககால வள்ளல்கள் கடையேழு வள்ளல்களாஅஅ?என்ற வினாவிற்கு விடை காணும் வகையில் முறைசெய்ய வேண்டி உள்ளது.

சங்க காலத்திற்குப்பின் தமிழகத்தில் ஏற்பட்ட அயலவர் ஆட்சி, வடமொழிக்கலப்பு, சமஸ்கிருத மேலாதிக்கச் செல்வாக்கு, ஏராளமான புராண, இதிகாசக் கதையாடல் கள், புனைவுகள் தமிழ் மக்களிடையே பரவிச் செல் வாக்குற்றன. ஆட்சியாளர்களும் தங்கள் குலப்பெரு மையைக் கடவுளொடு இணைத்துக்கொள்ளும் பான்மை யுடையோராகவும், அவற்றை மக்கள் உண்மையென ஏற்றுக்கொள்ளும் மனநிலைக்கு ஆட்சியாளர்களும் உதவினர். சான்றாக, பல்லவர்கள் தம்மை அஸ்வத் தாமன் மற்றும் ஊர்வசிக்குப் பிறந்தவர்கள் என்றும் சொல்லிக்கொண்டனர். ஒரு காலக்கட்டத்திற்குப் பின் பாண்டியர்கள் சந்திர குலத்தவரென்றும் சோழர்கள் சூரிய குலத்தவரென்றும், சேரர்கள் அக்கினி குலத் தவரென்றும் தம்மைக் கூறிக்கொள்ளும் அளவிற்குப் புனைவுகள் இட்டுக்கட்டப்பட்டன.

பக்தி இயக்ககாலத்தில் நீக்கமற இணைந்த புராண, உப புராண, இதிகாசக் கிளைக்கதைகள் பல்கிப் பெருகித் தமிழக வரலாற்றின் அடிப்படையை, தொடர்ச்சியை முற்றாக அழித்தன. உண்மையில்லாத வரலாறுகள் பூதாகரமாகக் கட்டியமைக்கப்பட்டன. இவ்வகையில் இவை நிகண்டுகளிலும் பதிவேற்றப்பட்டுள்ளன. இடைக் கால சமய பூசலால் இயற்கை இலக்கியமாக இருந்த தமிழ் இலக்கியங்கள் சமண பௌத்த காலத்தில் அற இலக்கியங்களாகவும் சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் வந்த காலத்தில் பக்தி இலக்கியங்க ளும் பெருகலாயின. இவர்களில் வைணவமே இப் புராண இதிகாச ஊடுறுவலுக்கு அதிகளவில் வழி வகை செய்துள்ளது. புராணங்கள் மற்றும் உப புரா ணங்களில் பெரும்பாண்மை வைணவ அவதாரங்க ளாகவும் இதிகாசங்கள் ராமன் கிருஷ்ணன் எனும் அவதாரத்தைச் சார்ந்ததாகவும் உள்ளன. தத்தம் மதக் கொள்கை மேலோங்கும் காலங்களில் கைக்கொள்ளப் பட்டஇட்டுக்கட்டுதல் மற்றும் இடைச்செருகலாக வந்த இலக்கியங்களே தமிழின் அசலை மாற்றிவிட்டன என டாக்டர் ஆ.வேலுப்பிள்ளை (தமிழ் இலக்கியத் தில் காலமும் கருத்தும், பக்.145) கருதுகிறார்.

இவ்வாறான இடைச்செருகல்களின் தாக்கத்தால் தமிழ் மன்னர்களைப்பற்றிய உண்மைக் கதைகளும் திரிபுற்று வட மன்னர்களினும் கீழான வரலாற்றுத் திரிபுகளுக் காளாகின்றனர். கடையேழு எனும் சொல்லை அழுத் தமாகக் கூறித் தமிழகச் சிற்றரசர்களின் கொடைப் பண்பைப் பின்னுக்குத் தள்ளி, தலை மற்றும் இடை யேழு வள்ளல்களில் ஓரிருவரின் பெயரை வைத்துக் கொண்டு ஏனையோரைப் புராண இதிகாச மன்னர் களின் பெயர்களை இடைசெருகி ஒரு வரலாற்று இருட்டடிப்புக்கு ஆளாக்கிவிட்டனர். அவ்வேழு வள்ளல்களை பற்றிப் புறநானூற்றில் 158ஆம் பாட லில் குமண வள்ளலை,

முரசுகடிப்பு இகுப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்
கறங்குவெள் அருவி கல் அலைத்து ஒழுகும்
பறம்பின் கோமான் பாரியும்; பிறங்கு மிசைக்
கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்;
காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த
மாரி ஈகை மறப்போர் மலையனும்;
ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல்
கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினியும்;
ஈர்ந்தண் சிலம்பின் இருள் தூங்கும் நளிமுழை
அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகனும்; திருந்து மொழி
மோசி பாடிய ஆயும்; ஆர்வமுற்று
உள்ளி வருநர் உலைவுநனி தீரத்
தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக்
கொள்ளார் ஓட்டிய நள்ளியும் எனஆங்கு
எழுவர் மாய்ந்த பின்றை அழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்கென விரைந்துஇவண்
உள்ளி வந்தனென் யானே; விசும்புஉறக்
கழைவளர் சிலம்பின் வழையடு நீடி
ஆசினிக் கவினிய பலவின் ஆர்வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்
அதிரா யாணர் முதிரத்துக் கிழவ
இவண்விளங்கு சிறப்பின் இயல்தேர்க் குமண
இசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுக நீ ஏந்திய வேலே! எனப் பாடும்

பெருஞ்சித்திரனார் முதல் வள்ளலாகப் பறம்பிற் கோமான்பாரியையும் அதற்குப் பின்னே ஓரி, மலை யன், எழினி, பேகன், ஆய், நள்ளி என எழுவரை யும் வரிசைப்படுத்துகிறார். இப்பாடலின்வழிச் சங்க காலத்தில் ஏழு குறுநிலமன்னர்கள் தம் வள்ளல் பண் பால் பெரும் பேர் பெற்றிருந்தனர் என்றும் அதற்குப் பின் முதிர மலையை ஆட்சி செய்த குமணனும் அவர்களோடு ஒப்பவைத்துப் பேசப்படும் வள்ளலாக போற்றப்பட்டானேஅன்றி முதல், இடை, கடை எனும் எவ்விதப் பாகுபாடும், சொல்லாட்சியும் அக்காலத் தில் காணப்படவில்லை. அதே காலத்தில் பாடப்பட்ட பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள சிறுபாணாற்றுப்படை யில் நல்லியக்கோடன் எனும் குறுநில மன்னனின் வள்ளல் பண்பைப் பாடும் நத்தத்தனார் நல்லியக் கோடனுக்கு முன்பு வாழ்ந்த வள்ளல்கள் பற்றி

எழுசமம் கடந்த எழுஉறழ் திணிதோள்

எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம் (சிறுபாண்: 112-113) என முன்பு வாழ்ந்த வள்ளல்கள் எழுவரின் புகழ் அனைத்தையும் ஈடுகொண்ட வள்ளல் தன்மையைக் கொண்டவன் நல்லியக்கோடன் என்றும் பாடுகிறார். நத்தத்தனார் மூவேந்தர்களின் நிலையைப் பாடி, ஏழு வள்ளல்கள் எனப் பேகன், பாரி, காரி, ஆய், அதி கன், நள்ளி, ஓரி ஆகியோரைப் பாடுகிறார். மேற் கண்ட புறநானூறு மற்றும் சிறுபாணாற்றுப்படையில் வரிசைப்படுத்தப்பட்ட வள்ளல்களில் எழுவர் எனச் சுட்டப்பட்டவர்களில் ஏற்படும் வேறுபாடுகள் வெவ் வேறு காலத்தில் பல வள்ளல்கள் வாழ்ந்திருக்கிறார் கள் என்றும் சிலப்பதிகார வழக்குரைகாதையில் கண் ணகி கூறும் செம்பியன் எனும் சிபிச் சோழன் வர லாறும் தமிழ் மன்னர்களின் வள்ளல் பண்பை விளக் குகிறது. ஆயினும் பெருவேந்தரின் வள்ளல்தன்மை யைவிடக் குறுநிலமன்னர்களின் வள்ளன்மையையே புறநானூறும், சிறுபாணாற்றுப்படையும் பாடுகிறது.
வள்ளல்களில் முதலில் வைத்துப் பேசப்படுபவன் யார்? பாரியா? பேகனா? எனும் ஐயம் பலருக்கும் வருவதுண்டு. வள்ளல் பண்பை கேளாமல் ஈவது, வேண்டுவோருக்கு ஈவது, புகழ் துதிக்க ஈவது என மூன்றாகப் பகுப்பர். அவற்றில் பேகன் மயிலுக்குப் போர்வை ஈந்த பண்பையும் பாரியின் முல்லைக்குத் தேரீந்த பண்பையும் நோக்க இயங்கு திணையின் துன்பமறிதலைவிட நிலைத்திணையின் துயர் போக்கத் தன் தேரினைக் கொடுத்த பாரியின் புகழே முதலில் பாட ஏற்புடைத்தாகிறது. ஆகவே ஏழாம் திருமுறை யில் திருப்புகழூர் பதிகத்தில் சுந்தரரும், ***கொடுக் கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலே*** என்று பாரியை முதன்மையான வள்ளல் எனும் அடையாளத்தோடு பாடுகிறார்.

இவ்வாறாக வள்ளல்களை முன்பின் வைத்துப் பாடி னும் தமிழ் மன்னர்களின் பெயர்களே தொடர்ந்து வந்த அமைப்பில் புராண இதிகாசக் கதைசொல்லி களின் இருட்டடிப்பு செய்தல், முறைமாற்றி போற்று தல், புராணக் கதைகளில் இடம்பெறும் மன்னர்களை வள்ளல்கள் என முன்னிலைப்படுத்துதல், முதல், இடை, கடை என்ற பகுப்பில் தமிழ் மன்னர்களின் பெயர்களைக் கடையேழுவள்ளல்கள் எனப் பின்னுக் குத் தள்ளுதல். போனால் போகட்டும் என்று இத் தகைய வரலாற்று இருட்டடிப்பில் குற்றச்சாட்டு வரா மல் இருக்கத் தலையேழு வள்ளல்களில் குமணன், காரி, செம்பியன் எனும் பெயர்களை இட்டு வாய் அடைக்கச் செய்துவிடுகின்றனர்.

காலத்தால் முந்திய நிகண்டுகளான பிங்கலம் (நூற்: 8/1o), சூடாமணி (நூற்:15) போன்றவற்றில் வள் ளல்கள் பற்றிய பதிவில் முதல், இடை, கடை எனும் பாகுபாடு காணப்படுகிறது. தமிழ் இலக்கியத்துள் நுழைந்த புராண இதிகாசக் கதைசொல்லிகளின் இருட் டடிப்பின் காரணமாக வள்ளல்களின் பெயர்களை முறைமாற்றி வரிசைப்படுத்துதலும் நடந்து வந்துள் ளதை நம்மால் காணமுடிகிறது.

பிங்கலநிகண்டு வரைவின்றி யாவர்க்கும் கொடுக்கும் தலைவள்ளல் எழுவராக,

சகரன் காரி நளன் துந்துமாரி
நிருதி செம்பியன் விராடன் தலை வள்ளல் என்றும்,
இரப்போர்க்கு கொடுக்கும் இடைவள்ளல் எழுவர்
அந்திமான் சிசுபாலன் அக்குரன் வக்கிரன்
சந்திமான் கன்னன் சந்தன் இடைவள்ளல் என்றும்
புகழ்வோர்க்குக் கொடுக்கும் கடை வள்ளல் எழுவர்
பாரி எழிலி நள்ளி ஆய் மலையன்
ஓரி பேகன் (இவர்) கடை வள்ளல் என்றும் தலை, இடை, கடை எனும் பாகுபாடு காணப்படுகிறது. அதற் குப் பின் தோன்றிய சூடாமணி நிகண்டில் முதல் ஏழு மற்றும் இடை ஏழு வள்ளல்களை,

மிக்க செம்பியனே காரி
விராடனே, நிருதி தானும்
தக்க துந்துமாரி தானும்
சாகரனும் நளனும் தாம் முன்
அக்குரன் சந்திமானோடு
அந்திமான் சிசுபாலன்னே
வக்கிரன் கன்னன் சந்தன்
இடைவள்ளல் வகுத்தவாறே என்றும்,
கடை ஏழு வள்ளல்களை,
பாரி ஆய் எழிலி நள்ளி
பசுந்தொடை மலையன் பேகன்
ஓரியே கடையில் உற்றோர்
உறுபொருள் தண்டாது ஈந்தும்
வாரியில் இரந்தோர்க்கு இட்டும்
வளர்புகழ் துதிக்க ஈந்தும்
பேரியல் வையம் எண்ணப்
பெற்றனர் முப்பால் ஆகும் என்றும் மூவேழு வள்ளல்கள் பற்றிக் கூறுகிறது.

ஆ.சிங்காரவேலு முதலியார் இயற்றிய அபிதான சிந்தாமணியிலும் இத்தகைய தலை, இடை, கடை வகைப்பாடுகள் காணப்படுகின்றன. மேற்கண்ட முப் பிரிவில் காணப்படும் பெயர்கள் புராண இதிகாசக் கதை மன்னர்களின் பெயர்களை உட்புகுத்திச் செய் யப்பட்ட இருட்டடிப்பு என்பது தெளிவு.

இன்றளவும் தமிழகத்தில் காணப்படுகின்ற வள்ளல் களின் நினைவுச்சின்னங்களுள்ள இடங்களில் எல்லாம் கடையேழு என்ற சொல் பயன்படுத்தப்பட்டுவருகின் றன. விழுப்பரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கபிலர் குன்றில் பொறிக்கப்பட்டுள்ள தகவல் பலகையில் கடை யேழு வள்ளல்களில் ஒருவன் என்று பாரியைச் சுட்டு தல், கபிலர் பாரிமகளிரை மலையமானிடம் ஒப்பு வித்து வடக்கிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் கள் வரலாற்றுத் திரிபுக்கு வழிவகை செய்கிறது.

மேற்கண்ட இரு தகவல் பலகைகளிலும் குறிப்பிடப் பட்டுள்ள செய்திகள் இன்றைய காலக்கட்டதின் வர லாற்றுத் திரிபுகளுக்கான சான்றாக விளங்குவதைக் காண முடிகிறது.

ISSN 2320-4842



உண்மை வரலாற்றைப் புறந்தள்ளிப் புராண இதிகாசக் கதைமாந்தர்களுக்குத் தலைமையிடம் அல்லது முக்கிய இடம் அளிக்க முற்பட்ட கதையாடல்கள் சமய, பக்தி இயக்கக் காலத்தில் பெரிதும் செல்வாக் குற்றன. அவற்றால் உண்மை வரலாற்றுப் புகழ் மங்கியோ அல்லது மறைந்தோ போயின. அவ்வகையில் பின்னுக்குத் தள்ளப்பட்ட சங்ககால வள்ளல் கதையாடல்கள் வரலாற்று மீட்டுருவாக்கம் பெற வேண்டும் சங்க கால வள்ளல்கள் என்றே அழைக்கப்பட வேண்டும். அவர்களைக் கடையேழு வள்ளல்கள் என்பது ஒரு சிறிதும் பொருந்தாத கூற்று.

துணை நூற்பட்டியல்

கீழடி என்ன செய்யப்போகிறோம்?, சு. வெங்கடேசன். பாரதி புத்தகாலயம் சென்னை, 2020.

செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள், ம. வே. பசுபதி (ப.ஆ), தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2010.

சேந்தன் திவாகரம். பிங்கலம், சூடாமணி- சாந்தி சாதனா, சென்னை. 2004.

அபிதான சிந்தாமணி, ஆ.சிங்காரவேலு முதலியார், Asian Educational Services, New Delhi, 2001

தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் ஆ.வேலுப்பிள்ளை, -பாரி புத்தகப் பண்ணை, சென்னை, மூன்றாம் பதிப்பு 1985.

(Continued from page 12)

There is a difference between traumatized self and a healthy self. The traumatized individual is stuck between the lines where they cannot comprehend their identity. Here one can understand the duality of every traumatized individual. This element occurs when they go from present to past and sometimes from future to past. Some events can click them up from the past, which, in turn, results from trauma.

Conclusion

The impact of war trauma on behavioural change is a complex and profound phenomenon that underscores the lasting scars left by armed conflict on individuals and societies. The experience of war, characterized by violence, loss, and exposure to extreme stressors, can indelibly reshape one's psyche and behavioural patterns. This article has explored several key aspects of how war trauma leads to behavioural changes, emphasizing the psychological, social, and physiological dimensions. The psychological aftermath of war trauma often manifest in the form of post-traumatic memories, heightened arousal and avoidance behaviours. Thus, the article presents an integrated theoretical framework to explain and predict the psychological changes attained by an individual. Due to war, Lynda witnesses many deaths in front of her eyes, which triggers her inner feelings and, thus, results in some behavioural change. Army veterans are the best source to study the psyche changes. The original form of inner feelings is projected as well as never dying from one's memory.

References

Bandura, A. (1986, January 1). *Social Foundations of Thought and Action*. Prentice Hall.

Bandura, A (2005). *The Evolution of Social Cognitive Theory*. Oxford University Press.

Edwin A. Locke. The Myths of Behavior Mod in Organizations. Academy of Management Review, 1977,2, 543-553. (1978, March). *Group & Organization Studies*, *3*(1), 116–117.

Nguyen, V. T. (2016, April 11). *Nothing Ever Dies*. Harvard University Press.

O'Brien, T. (2009, October 13). *The Things They Carried*. HarperCollins.

The Vietnam War Essay. (n.d.). bartleybyessay. Retrieved July 3, 2023, from https://www.bartleby.com/essay/The-Vietnam-War-P3Q2WWYVC

Van Devanter, L., & Morgan, C. (1983, January 1). *Home Before Morning*.

ISSN 2320-4842

இந்தியச் சமூகத்தில் 'திருமண முறை' தோன்றிய பின்னணி

Genesis of Marriage Institution in Indian Society

முனைவர் ச. ஜீவானந்தம்
உதவிப் பேராசிரியர், பெண்ணிய ஆய்வு மையம், சமூக அறிவியல் புலம்
ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புது டில்லி 110 067

மனிதர்களைத் தவிர்த்து ஏனைய உயிரினங்கள் பெரும்பாலும் கூட்டு வாழ்க்கை முறையின்படி சந்தர்ப்பம் வாய்க்கும்போதும் அவசியம் ஏற்படும்போதும் ஒன்றுகூடித் தம் இனத்தைப் பெருக்குகின்றன. மனிதர்களும் பெரும்பாலும் கூட்டு வாழ்க்கை முறையின் மூலமே தன் இனத்தைப் பெருக்க வேண்டுபவர்களாக இருந்த பொழுதும், மற்ற உயிரினங்களுக்கு இல்லாத ஒன்றான பகுத்தறிவு என்பது மனிதர்களுக்கு இருக்கின்றது. எனவே, அவ்வறிவின் மூலம் மனிதர்கள் தமக்கென்று சில கருத்துக்களையும், சில கொள்கைகளையும், சில திட்டங்களையும், சில வரைமுறைகளையும் வகுத்துக்கொண்டு அவற்றின்படியே சமூகத்தில் வாழப் பழக்கப் படுகின்றனர் (ஆனைமுத்து, 2009, பக்கம். 346). அவ்வகையில், மனிதர்கள் தமக்கென்று சில பிரத்தியேக மான வசதி வாய்ப்புகளைச் செய்துகொள்கின்றனர். உதாரணமாக, மனிதர்கள் உணவைச் சமைத்து உண்கின்ற னர், மற்ற உயிரினங்கள் எல்லாம் இயற்கையாகக் கிடைப்பனவற்றையே உண்டு வாழ்கின்றன. மனிதர்கள்தாம் நகைகள், ஆடைகள் அணிகின்றனர், மற்ற உயிரினங்கள் அணிகலன்களோ, ஆடைகளோ அணிந்துகொள் வதன் மூலம் அழகு, பெருமை போன்றவற்றை ஒருபோதும் ஏற்படுத்திக்கொள்வது இல்லை; அவற்றை உண்டாக்கிக்கொள்ளவும் அவற்றால் முடியாது.

அத்தகைய பகுத்தறிவு உள்ள காரணத்தினால்தான், மனிதர்கள் தமக்கென வீடு கட்டிக்கொண்டு வாழ்கின் றனர். அவ்வறிவுள்ள காரணத்தினால்தான் கூட்டு வாழ்க்கை முறையையும் ஏற்படுத்திக்கொண்டு, சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்கு என்று பல திட்டங்களை வகுத்துக்கொண்டு வாழ்கின்றனர். அத்திட்டங்களை நிறைவேற் றத் தனி மனிதர்களால் ஒருபோதும் முடியாது; அதற்கு மற்றவர் உதவி இருந்தே தீரவேண்டியிருக்கிறது. இத்தகைய காரணங்களினால் கூட்டுவாழ்க்கையோடு கூடிய சமுதாய வாழ்க்கைமுறை என்பது இன்றியமை யாததாகின்றது. இனப் பெருக்கத்தை உத்தேசித்தும், சமுதாய வாழ்க்கை நலத்தை உத்தேசித்தும், கூட்டு வாழ்க்கைமுறை என்பது அவர்களுக்கு அவசியமாகிறது என்று பெரியார் ஈ.வெ. இராமசாமி குறிப்பிடு கின்றார் (ஆனைமுத்து, 2009, பக்கம். 347).

தனிச் சொத்துடைமையும், திருமணமும்

அதன்படி, ***இந்த உலகினில் தனிச் சொத்துடைமையும், 'மேலுலகம்', 'மோட்சம்' போன்ற கருத்துக்களின் அடிப்படை யிலேயே 'திருமணம்' என்பதும், 'வாழ்க்கை ஒப்பந்தம்' என்பதும் ஏற்படுத்தப்படுகின்றன*** (*விடுதலை* 1944, டிசம்பர் 16). ***வரலாற்றில் முதலில் மற்ற உயிரினங்களைப் போல் எதையோ உண்டு வாழ்ந்த மனிதர்கள், அதன் போக்கினில் திரிந்து கொண்டிருந்தனர். அத்தகைய சமூகத்தில் சொத்து என்ற கருத்திற்கே இடமில்லாமல் இருந்தது*** (*விடுதலை* 1959, ஏப்ரல் 20). பெண்களும் அடிமைகளாக ஆக்கப் படுவதற்கு உண்டான எந்த தேவையும் ஏற்பட்டிருக்கவில்லை.

பயிர்செய்யக் கற்றுக்கொண்டு, இது இன்னாருக்குச் சொந்தமான நிலம், இது இன்னாருடைய சொத்து என்ற தனியுடைமைச் சமூகத்திலேயே பெண்ணென்பவர் ஒரு குறிப்பிட்ட ஆணின் சொத்தாகக் கருதப்படலான துடன் (ஆனைமுத்து, 2009, பக்கம். 283-292), கணவன்-மனைவி என்பதற்கும் இடம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்ற பெரியார் (*விடுதலை* 1959, ஏப்ரல் 20), என்றைக்குத் தனக்கென்று பொருள் சேமித்து வைத்துக் கொள்ள ஆணிற்கு உரிமை ஏற்பட்டதோ (ஆனைமுத்து, 2009, பக்கம். 283-292), உடைமைகள் எல்லாம் ஆணிற்கு மட்டும்தான் என்கிற நிலைமை ஏற்பட்டதோ, அதற்கு பிறகுதான் 'திருமண முறை' என்பதும் ஏற்பட்டிருக்க வேண்டும் என்றார் (மேற்குறிப்பிட்ட நூல்).

ஆண்களுக்கு மட்டும்தான் சுதந்திரம், சொத்து; ஆண்களுக்கு மட்டும்தான் வீடும், வாழ்க்கையும் என்ற தனியுடைமை ஏற்பட்ட பிறகு, மனிதர்கள் தனக்கான தனிச்சொத்தினை சேர்க்கின்றார்கள். தான் உயிருடன் இருக்கின்றவரை தான் சேர்த்த சொத்தானது அவருடையதாகவும், அவர் இறந்தபிறகு யாருக்கு பயன்படப் போகிறது என்ற எண்ணம் ஏற்பட்டு, யாருக்கோ அந்தச் சொத்தானது பயன்படுவதைவிட, தனக்குப் பிறந்த குழந்தைக்கே பயன்படவேண்டும் என மனிதர்கள் சிந்தித்து, அவ்வாறு வாரிசு தேட ஆரம்பித்த காலங்களில், அதற்கேற்றவாறு சமுதாயத்தினையும் அமைக்க வேண்டியதாயிற்று (ஆனைமுத்து, 2009, பக். 283-292). அதனையொட்டி, சந்தேகத்திற்கு இடமில்லாமல் தனக்கே பிறந்த குழந்தை என நிச்சயம் செய்யக்கூடிய ஒரு

ஏற்பாடாகத்தான், கணவன்-மனைவி என்ற ஏற்பாடு செய்திருக்க வேண்டும் என்ற மார்க்ஸியப் பார்வையினையே பெரியார் உறுதியாக நம்பியதுடன் பொது மக்களிடம் அதனைக் கொண்டு சேர்க்கவும் செய்தார் (Engles, 1909 மற்றும் *விடுதலை* 1959, ஏப்ரல் 20). அதாவது, தன்வழிப் பிறந்த குழந்தை வாரிசாக இருக்க வேண்டும் என்பதே திருமணத்தின் முக்கிய நோக்கமாக அமைகின்றது என்ற பெரியார், ஒவ்வொரு சமூகத்தின் பழக்க வழக்கங்களின்படி அத்தகைய பூர்வீகச் சொத்துக்களை அனுபவிக்கச்சிலருக்கு ஆண் குழந்தையும் சிலருக்குப் பெண்குழந்தையும் தேவைப்படுகிறது என்றார் (*விடுதலை* 1944, டிசம்பர் 16). உதாரணமாக, ***பொதுவாக ஆணாதிக்கச் சமூகத்தினில் ஆண்வாரிசுகளுக்கே சொத்தும், உரிமைகளும் உரித்தாக இருந்தபொழுது, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை தேவதாசி சமூகத்தினில் சொத்து மற்றும் பிற சமுதாய உரிமைகள் அனைத்தும் தேவதாசிகளுக்குப் பிறந்த ஆண் குழந்தையினைத் தவிர்த்து, பெண் குழந்தைகளையே சாரும் என்பது சமூகப் பழக்கமாக இருந்துவந்தது*** என்பது இங்கே குறிப்பிடத்தக்கது (Jeevanandam & Rekha, 2017).

தன் சொத்துக்கு வரும் வாரிசு என்பவர் தனக்கே பிறந்ததாக இருக்க வேண்டும் என்கிற காரணத்தினால், பெண்ணைத்தனக்கே உரிமையாக்கிக்கொண்டு, அவர்களைத் தன்னையன்றி வேறு ஆணினை நாடாமல் இருக்கச் செய்யக்கூடிய நிர்பந்தமானது சமூகத்தில் ஏற்பட்டது என்ற பெரியார் (ஆனைமுத்து, 2009, பக். 283-292), ***தான் தேடிய செல்வங்கள் அனைத்தும் தனது இறப்புக்குப் பிறகு அனுபவிக்கப் போகும் வாரிசு என்பவர் தனக்கே பிறந்தாக, தன் இரத்தத்திலிருந்து தோன்றியதாக இருக்கவேண்டும் என்ற கருத்துக்களே, பெண் மக்களை அடிமையாக்கப்படவும், பெண்களின் இயற்கையான உரிமைகள் பறிமுதல் செய்யப்படவும், ஆணுக்கு மட்டுமே சொத்துரிமை எனக் கொடுக்கப்பட்டதன் காரணமாகும் என்றதுடன், ஆணிற்கு மட்டும் சமூகத்தினில் நிபந்தனைகள் பல தளர்த்தப்பட்டு இருப்பது என்பதற்கும் இதுவே காரணங்களாகும்*** என்கிறார் (ஆனைமுத்து, 2009, பக். 283-292). அதன்பொருட்டே, ***ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண்மகன்தான் கணவனாக இருக்க வேண்டும், அதனுடன் அப்பெண்ணானவர் மற்ற யாருடனும் கலவி செய்யக்கூடாது என்று கருதிவருவதன் அடிப்படை நோக்கமானது*** (மேற்குறிப்பிட்ட நூல்), தனிச் சொத்துடைமையே ஆகும் (*விடுதலை* 1944, டிசம்பர் 16). தனியுடைமைச் சுதந்திரம் இல்லாதிருந்த பொழுது ஆணிற்குத் தனக்கே குழந்தை பிறக்கவேண்டும் என்கின்ற நிர்பந்தம் என்பது ஒன்று உதித்திருக்க இடமே இல்லை என்ற பெரியார் (ஆனைமுத்து, 2009, பக். 283-292), சொத்திலிருந்துதான் இந்தத் திருமண முறை பிறந்திருக்க வேண்டும் என்றார் (*விடுதலை* 1959, ஏப்ரல் 20).

பணக்காரர்களாகவும், உயர்சாதிக்காரர்களாகவும் தன்னைக் கருதிக்கொண்டுள்ளவர்களிடம்தான் பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் மிகவும் இறுக்கமாகவும், சாதாரண பாட்டாளி மக்கள், ஏழைகள், அன்றாடக் கூலி மக்களாக வாழ்பவர்களிடத்தில் இத்தகைய கடுமையான கட்டுப்பாடுகளைக் காணமுடியாததையும் இதற்கு உதரணமாகப் பெரியார் சுட்டுகின்றார் (*விடுதலை* 1959, ஏப்ரல் 20). இவ்வாறாக, தனிஉடமை சமூகத்தின்பால் ஏற்படுத்தும் இத்தகைய அடக்குமுறைகளை ஒழிப்பது எளிதில் ஏற்படக்கூடிய காரியமாக இல்லை என்று பெரியார் உணர்ந்திருந்தார் (ஆனைமுத்து, 2009, பக். 223-224). எனவே, ***பெண்களுக்குள்ளான அனைத்துவித தீங்குகளுக்கும் ஆதாரணமான தனியுடைமை ஒழியும்வரை பெண்ணடிமைத்தனமும் நீங்காது*** என ஆணித்தரமாகப் பெரியார் கூறினார் (ஆனைமுத்து, 2009, பக். 283-292).

பார்ப்பனிய ஆணாதிக்கம்

இந்தியாவைப் பொறுத்தமட்டில், சேமித்து வைத்துள்ள பொருளினைப் பாதுகாப்பதற்கு மட்டுமல்லாமல், திருமணம் என்ற நிறுவனமானது சாதியக் கட்டமைப்பின் ஆணிவேரினைப் பாதுகாக்கச் செய்யப்படும் ஒரு பண்பாட்டு-கலாச்சார ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பார்ப்பனியக் கருத்தியலானது இந்தியாவைப் பொறுத்தவரை, பல்வேறு இனக் குழுக்களின் பண்பாட்டு, கலாச்சாரத் தளங்களில் ஆழமாக வேரூன்றி, அவற்றின்மீது ஒரு அளப்பரிய தாக்கத்தினைச் செலுத்தி வந்துள்ளது/வருகின்றது. அத்தகைய பார்ப்பனியக் கருத்தியலானது இந்தியச் சமூகத்தினைச் சாதியச் சமூகமாக கட்டமைக்கச் செய்ததுடன், பார்ப்பனிய மேலாதிக்கத்தினை நிலைநிறுத்தச்செய்துவருகின்றது. அத்தகையசாதிய கட்டமைப்பானது பெண்ணுடலினைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவே நிலைநிறுத்தப்பட்டு வருகின்றது என்பது வரலாற்றுக் கண்கூடாகும்.

ஆரிய வர்ணம் என்று தங்களை என்றுமே தனித்து பிரதானப்படுத்திக்கொண்டு வாழ்ந்துவரும் பிராமணர்கள் தங்களது தனித்த அடையாளத்தைக் காத்துக்கொள்ள யக்ஞத்தையும் அது சார்ந்த வேதம், சடங்குகள் முதலிய வற்றைப் பயன்படுத்திக் காத்ததுபோன்று அகமண முறையின்மூலம் சாதித் தூய்மைக்கு வழிவகுத்தனர் (முத்து மோகன்,2016, பக். 87-112). அதன் வழியாகவே சாதியமானது இன்றுவரையும் காப்பாற்றப்பட்டுவருகின்றது. பொதுவாகவே அந்தச் சாதியத்தின் தூய்மை என்பது பெண்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமே இங்கே பாதுகாக்கப்படுகின்றது. இதனைப் பார்ப்பனியக் கருத்தியலின் ஆதார நூல்களில் ஒன்றான மனுதர்ம சாஸ்திரத்தின் ஒன்பதாவது அத்தியாயமானது நன்கு உணர்த்துகின்றது (Buhler, 1886, பக். 196-198, 315-320. மற்றும் அசல் மனுதரும சாஸ்திரம், 2011, பக். 236-283). மேலும், ***தனது மரணத்திற்குப் பின்னான சிரமபரிகாரம்/கருமகாரியங்கள் முதலியவற்றைச் செய்ய ஒரு ஆண்மகன் தேவை என்று சனாதன/'இந்து' மதமானது வலியுறுத்திவந்துள்ளது*** (மேற்குறிப்பிட்ட நூல்). ***சொத்துக்காகக் குழந்தைகள் இல்லா விட்டாலும் திதி, திவசம் போன்றவற்றைச் செய்வதற்காகவே ஆண்குழந்தைகள் தேவைப்படுகின்றன*** (ஆனைமுத்து,

2009, பக். 224-225). வசதிபடைத்தவர்களின் பொருளினில் ஒரு பங்கினைப் பெற வேண்டிய பார்ப்பனர்கள், கடவுள் மற்றும் நரகம் போன்றவற்றைக் கட்டமைத் தனர். ஒருவர், தான் இறந்தபின் தன் பேரைச் சொல் லித் தனக்காகக் கருமம் செய்யக் குழந்தைகளைப் பெற்றுவிட்டுச் செல்வது அவசியமென்றும், குழந்தைப் பேறில்லாதவர்களால் சொர்கத்திற்குச் செல்ல இய லாது என்று கூறிச் சனாதன/'இந்து' மதமானது குழந் தைப் பேற்றினைக் கட்டாயமாக்கியது (ஆனைமுத்து, 2009, பக். 283-292).

இதன் மூலம் அறிவது என்னவெனில், ***இந்த உலக வாழ்விற்காக, சொத்துரிமைக்காக ஒரு குழந்தை பெறு வது அவசியாமாக்கப்பட்டதைவிட, வைதீகத்திற்காக ஒரு குழந்தையைப்பெறவேண்டிய அவசியம் என்பது இந்தியச் சமூகத்தில் அதிகமாக வற்புறுத்தப்பட்டுவந்துள்ளது. அந்த வகையில் ஒருவருக்குக் குழந்தை இல்லாமல் இருக்கும் பட்சத்தில், அந்த ஆணின் ஒப்புதலின் அடிப்படையில், அவரது மனைவியினை வேறுயாருடன் கூடியாவதுஒரு குழந்தையைப் பெறவேண்டும் என்று பார்ப்பனியக் கருத் தியல்கள் நிர்பந்திக்கின்றன*** (மேற்குறிப்பிட்ட நூல்). இம்முறை பற்றி அண்ணல் அம்பேத்கார், பின்னர்ச் சமூக ஆய்வாளர்களான ஷர்மிளா ரெகே (Sharmila, 2013), உமா சக்கரவர்த்தி ஆகியோர் 'பார்ப்பனிய ஆணாதிக்கம்' (Brahmanical Patriarchy) என்ற கருத்தியலாகச் சான்றோர் அவையில் முன்மொழிந் தார்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது (Uma, 1993, பக். 579-585).

திருமணச் சடங்குகள்

உலகில் மனிதர்களும் ஓர் உயிரின வகையினைச் சார்ந்தவர்கள்தாம். அப்படியிருக்க, மற்ற எந்த உயி ரினங்களிலும் காணப்படாத திருமணம் எனும் முறை யானது மனித இனத்திற்கு மட்டுமே உடையதாகக் காணப்படுகின்றது (ஆனைமுத்து, 2009, பக். 283-292). அப்படியிருப்பினும், ***கலவிக்கும், துக்கத்துக்கும், விபச்சாரத்திற்கும், சொத்துக்கும், திருமணத்துக்கும் என முழுமைக்கும் பொருந்தும்படியான நடைமுறைகளோ வரை யறைகளோ, காரணகாரியங்களோ இந்த உலகம் முழுமைக் குமுள்ள மனித சமூகத்திற்கு எனப் பொதுவானதாக எதுவும் இருக்கவில்லை*** என்று பெரியார் குறிப்பிடு கின்றார்(*குடி அரசு*1945, ஜூன் 02). மேலும் அவர், ***'கலவி முறை' என்பதும் 'சொத்து முறை' என்பதும் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட தேசம், மதம், சாதி மற்றும் பழக்க வழக்கங்கள் சார்ந்ததாக இருந்துவருகின் றனவே தவிர, அவற்றிற்கான வேறு நியாயமான, நிர்பந் தமான, உலகம் எங்குமிற்கான ஒரே வழிமுறைகள் என்பது கிடையாது. அதேபோல், இந்த விடயங்களில் இதுதான் சரி, இதுதான் தப்பு என்று குறிப்பிடுதற்கு வரைமுறை ஏதுமில்லாமல் இருந்துவருகிறது*** என்றும் குறிப்பிடுகின்றார் (மேற்குறிப்பிட்ட நூல்).

சனாதன/'இந்து'மத வைதிக முறைப்படிச் செய்யும் திருமண முறைகள் எல்லாம் இந்திய மக்களுடைய நாகரிகத்துக் கும் பண்புக்கும் பொருத்தமற்றவைகளாகவே உள்ளன (ஆனைமுத்து, 2009, ப. 350). ***திருமணச் சடங்குகள் என்பவைள் எதற்காகச் செய்யப்படுகின்றன, அவற்றின் அர்த் தங்கள் என்ன, அவற்றின் அவசியங்களோ, ஆதாரங்களோ, தொடக்கங்களோ, பொருத்தப்பாடுகளோ என்னவென மண மக்களுக்கோ, பெற்றோர்களுக்கோ, உறவினர்களுக்கோ அல்லது வேறு யாருக்குமே தெரிய வாய்ப்பில்லை*** என்று பெரியார் சுட்டுகின்றார் (*புரட்சி* 1934, ஜூன் 17). அதேவேளையில், ***பெண்பிள்ளைகளுக்கு மட்டும் ருது/ பூப்புனித நீராட்டு விழா என்ற சடங்கு செய்வது எதற்கு என்ற கேள்வி எழுப்பிய சுயமரியாதைக்காரர்கள், தங்கள் வீட்டில் பெண் பக்குவமடைந்திருக்கிறார், 'வேண்டுவோர் கேட்கலாம்' என்று எவ்வாறு பொருளினை வியாபாரத் திற்காக விளம்பரம் செய்கிறார்களோ அதுபோலவே, பருவ மடைந்த பெண்குழந்தைகளைப் பொருளெனக் கருதியே இந்தியநாட்டில் இத்தகைய சடங்குகள் மேற்கொள்ளப் படுகின்றன*** என்று சிவகாமி அம்மையார் குறிப்பிடு கின்றார் (*குடி அரசு* 1932, ஜூன் 05).

முடிவுரை

மனிதர்களுக்கும், பிற விலங்கினங்களுக்கும் உள்ள வேறுபாடு பகுத்தறிவே என்ற சுயமரியாதைக்காரர் கள், பெண்ணடிமைத்தனமானது எவ்வாறு தனியுடை மைத் தத்துவத்துடனும், திருமணம் என்ற நிறுவனத் துடனும் பின்னிப் பிணைந்துள்ளது என்பதனைத் தக்க தர்க்கவியல் புரிதலுடன் 'திருமணம்' எனும் முறையின் தோற்றத்தினைக் குறித்து விளக்கினர்.

குறிப்புதவி நூல்கள்

இதழ்கள்

அசல் மனுதரும சாஸ்திரம். சென்னை: திராவிடர் கழகம், 2011.

ஆனைமுத்து, வே. *பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்.* தொகுதி. 1-6. சென்னை: பெரியார் ஈ.வெ. இராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை, 2009.

பெரியார், தந்தை. *பெண் ஏன் அடிமையானாள்?.* சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, 2004.

முத்துமோகன், ந. இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங் களும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2016.

விடுதலை

Buhler, G. *The Laws of Manu.* Oxford: The Clarendon Press, 1886.

Chakravarti, Uma. "Conceptualising Brahmanical Patriarchy in Early India: Gender, Caste and State." Economic and Political Weekly 28, 14. (April 3, 1993): 579-585.

Engles, Frederick. The Origin of the Family Private Property and the State. Chicago: Charles H. Kerr and Company, 1909.

Jeevanandam, S and Rekha Pande. Devadasis in South India: A Journey from Sacred to Profane Spaces. Delhi: Kalpaz Publications, 2017.

Ramasami, Periyar E.V. Women Enslaved. New Delhi: Critical Quest, 2009.

Rege, Sharmila. Against the Madness of Manu: B.R. Ambedkar's Writings on Brahmanical Patriarchy. New Delhi: Navayana, 2013.

ISSN 2320-4842

ராஜம் கிருஷ்ணனின் உத்தரகாண்டம் புதினத்தில் முதல்நிலை மாந்தர் படைப்பு

ரா. மீனா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம் 637 205

நெறியாளர்: **முனைவர் ந. கமலஹாசன்**
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம் 637 205 (இணைவு: பெரியார் பல்கலைக்கழகம்)

முன்னுரை

இக்காலத் தமிழ் இலக்கிய வகைகளுள் தலைமை நிலையிலும் இலக்கிய வரலாற்று வளர்ச்சியில் முன்னிலையிலும் இருப்பது புதினமாகும். எல்லா வகை இலக்கியமும் கருத்து, உணர்ச்சி, கற்பனை என்ற நிலையில் ஒன்றுபடினும் புதின இலக்கியம் மட்டும் கருத்து என்ற இடத்தில் சராசரி மக்களின் வாழ்வையும், சமூக நடைமுறையையும் தன்னகத்தே கொண்டு பிற இலக்கியங்களிடமிருந்து வேறுபட்டும், மேம்பட்டும் புதினம் மக்களின் அன்றாட வாழ்வு பயனுற விளங்கிவருகின்றன.

கதை மாந்தர் உருவாக்கம்

உண்மை உலக மனிதரைக் காண்பது போலவே புதினத்தில் வரும் கதைமாந்தரையும் புதின வாசகர்கள் காண்கின்றனர். புதினத்துள் கதைமாந்தராக வருவோர் உயர்ந்த ஒரு பண்புக்கு இடமாக அமையலாம் அல்லது குறையும் நிறையுமாக அமைந்த மனித இயல்புகளோடு விளங்கலாம். புதின ஆசிரியர், தாம் விரும்பிய அளவுக்குக் கதை மாந்தரைப் படைத்துக் காட்டுகின்றார். ஆயின் கதை மாந்தர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தனித் தன்மையோடும் செயல் முறையோடும் இயங்குவது இன்றியமையாதது. புதின ஆசிரியர் கதை மாந்தரின் புறத்தோற்றங்களை மட்டுமன்றி அவர்களின் அக இயல்புகளையும் வெளிப்படுத்த முயல்வது சிறப்புடையது. குறிப்பிட்ட கதைமாந்தர் தொடக்கம்முதல் முடிவுவரை கதைக் கோப்பை வளர்த்துலுக்குரிய குறிப்பிட்ட சில பண்புகளோடு, இயல்புகளோடு இயங்குவது அவசியம் ஆகும். புதின மாந்தரின் செயல்கள் அவர்களின் பண்புகளுக்கேற்ற செயல்களே என்றும் நாம் நம்புமாறு செய்வது புதின ஆசிரியரின் முக்கிய பணியாகும். சாமர் செட்மாம் என்பவர், புதின ஆசிரியர் கதை மாந்தரைப் படைத்துக் காட்டும் முறையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். இதனை, ***எழுத்தாளர்கள் எப்பொழுதுமே மூலத்தைப் பிரதி செய்வதில்லை. தான் ஒன்றைக் காண்கிறபோது, தன்னுடைய கவனத்தைக் கவர்ந்த சிலவற்றையும், கற்பனையில் மின்னலிட்ட சிலவற்றையும் ஒன்றாக அதிகமாகக் கவலைப்படுவதில்லை*** என்று குறிப்பிடுகிறார்.

தாம் பார்த்த மனிதர் பலரின் பண்புகள் பலவும் கூட்டிக் கதைமாந்தர் ஒருவரை உருவாக்கலாம். வேறு வகையில் கூறின், குறிப்பிட்ட கதைமாந்தரின் முன்மாதிரியாக ஒருவர் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. பலராகக்கூட இருக்கலாம். புதின ஆசிரியர் தாம் சொந்த வாழ்க்கையின் அனுபவங்களைக் கொண்டு அவற்றின் பிரதிபலிப்பாகக் கதைமாந்தரைப் படைத்துக் காட்டுவதும் உண்டு. இம்முறையில் அமையும் கதைமாந்தர் புதினம் படிப்போரின் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றுத் திகழ்வர்.

புதின ஆசிரியர் எப்படிப்பட்ட கதைப்பாத்திரத்தைப் படைத்துக் காட்டினும் அப்பாத்திரத்தின் நிலையோடு இரண்டறக் கலந்து தானே அதுவாய், அதுவே தானாய் அமைந்து முழு ஈடுபாட்டுடன் படைக்கிறார்கள். புதினத்தில் வரும் கதைமாந்தர்கள் குறித்து, ***எனது நாவல்களின் வரும் பாத்திரங்கள் எல்லாம் அவை ஓரிடத்திலே தலைகாட்டிவிட்டு மறைவதாயினும் சரி அல்லது கதையின் அடிமுடி வரையிலும் நடமாடுபவையாயினும் சரி அவையெல்லாம் பரிவாரம் போல் என்னுடனேயேயிருக்கும். நான் எங்குச் சென்றாலும் என் கூடவே அவைகளும் வரும் என்று ஒருவர் கூறுவது ஈண்டு நம் சிந்தனைக்குரியது*** என்கிறார் மா. இராமலிங்கம்.

புதினத்தில் வரும் பல்வேறு பாத்திரங்களும் சில பொதுவான இயல்பினைக் கொண்டிருப்பினும் மொத்தத்தில் ஒவ்வொன்றும் ஏனைய. பாத்திரங்களினின்றும் நன்கு வேறுபட்டுத் தனித்து நின்று விளங்க வேண்டும். ஒருவரைப் பற்றிய பண்பு ஏனைய கதைமாந்தரின் பண்பு ஓவியங்களிலிருந்து ஏதேனும் ஒரு வகையில் நன்கு வேறுபட்டிருத்தல் வேண்டும். இல்லையேல் கதைமாந்தர் படைப்பால் வரும் சுவை கெட்டுவிடும். கதைமாந்தரை இப்படித்தான் படைத்துக் காட்ட வேண்டும் என்று முடிந்த முடிவாக எதுவும் சொல்ல இயலாது.

நாவல் என்பது அதிலுள்ள அனைத்துச் சொற்களாலும் உருவாக்கப்பெற்ற ஒரு முழுமை. அத்தகைய முழுமையாகவே அதனை நாம் திறனாய வேண்டும். அத்தகைய முழுமையில் பாத்திரப்படைப்பு என்பது ஒரு

பகுதியே, என்றாலும் அது ஓர் இன்றியமையாத பகுதி என்பதும் சிறப்பு வரிசையில் முதலிடத்தைப் பெறும் பகுதி என்பதும் தெளிவு என்கிறார் அவர். இவற்றால் புதினத்தின் பகுதிகள் பலவற்றுள்ளும் மிகச் சிறந்ததும் இன்றியமையாததுமான பகுதி கதை மாந்தர் உருவாக்கம் என்பதை உணரலாம்.

கதை மாந்தர் வகைகள்

புதினம் சிறப்புற உயிரோட்டமான கதைமாந்தர் தேவை. அவர்கள் மூலம் வாசகனுக்கு இன்னொரு உலகைப் படைப்பாசிரியர் காட்டுகிறார். ஒரு குறித்த காலத் திற்குப் பிறகு தான் அறிமுகம் செய்த கதை மாந் தரே தன் கதையின் முடிவை மாற்ற வேண்டிய கட்டத்திற்கு உள்ளாகும் வகையில் பாத்திரங்களின் பெருமை பெற்று அமைத்துள்ளது. இதனை, ***அகில னின்ஆனந்தி, சுந்தர ராமசாமியின் தாமோதரன் ஆசாரி, கல்கியின் சிவகாமி, அறிஞர் அண்ணாவின் பார்வதி ஆகியோர் நினைவில் நிற்கக்கூடிய பாத்திரங்கள் ஆவர்*** என்று சுதந்திரமுத்து குறிப்பிடுகிறார்.

முழுநிலை மாந்தர்

முழுநிலை மாந்தர் என்போர், புதினத்தின் தொடக் கம்முதல் முடிவுவரை வருபவராகவும் பண்பு வகையில் முழுப்பரிணாமமாக அமைவர். ஆழமான குறிக்கோள் வளர்ச்சியுடையவராகவும் கொண்டவராகவும் புதினத்தைப் படித்து முடிக்கும்போது. அக்கதைமாந்தரைப் பற்றிய முழுமையான ஒரு பண்பு ஓவியம் நமக்குக் கிடைக்கின் றது. எந்தச் சில பண்புகள் ஒரு குறிப்பிட்ட கதைமாந் தரிடத்து ஆசிரியரால் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தச் சில பண்புகளுக்கேற்பச் செயற்பட்டு நல்ல குணச்சித்தரங்களாக விளங்குவர் என முழுநிலை மாந்தர் குறித்து மா. இராமலிங்கம் கூறும்போது. ***முப் பரிமாணக் காட்சி தருவார்கள். இவர்கள் உருவத்தாலும், கருத்தாலும் மெல்ல மெல்ல மாறி வளர்ந்து முழுநிலை மாற்றம் கொள்வர். இவர்களது தோற்றம் மட்டும் அல்லா மல் உள்ளம், உணர்ச்சி, தாபம், கொள்கை, கோட்பாடு எல்லாமே முறையான வளர்ச்சியைப் பெற்று மிளிரும். 'இதய நாதம்' கிருஷ்ண பாகவதர், 'அகல் விளக்கு' சந்திரன், 'சித்திரப் பாவை' ஆனந்தி, 'பொன் விலங்கு; பாரதி, 'செம்பருத்தி' சட்டநாதன், பாத்திரங்களை 'ஜீவகீதம்' நாச்சி, உதாரணமாகக் 'வளைக்கரம்' சுஜாதை முதலான முழுநிலை மாந்தர் எனக் காட்டலாம்*** என்கி றார்.

உத்தரகாண்டம் புதினத்தின் தாயம்மா

தாயம்மா அஹிம்சை வழியைப் பின்பற்றி வாழும் தாயுள்ளம் கொண்டவள். இரண்டு பெண்களையும் ஒரு பையனையும்தாயம்மா பெற்றிருந்தாள். கணவன் குடிப் பழக்கத்திற்கு அடிமையானவன். தாயம்மா எஸ்.கே. ஆர் வீட்டில் வேலை செய்து வாழ்ந்துவந்தாள். அவள் மகன் பெரிய அரசியல்வாதி. பெரிய வீடு. வசதி யான வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும் அவ்வாழ்க்கை தாயம்மாவிற்குப் பிடிக்கவில்லை. மருமகள் ரஞ்சிதத் துக்கு ஆப்ரேசன் செய்வதால் தங்களைப் பார்க்கச் செல்வதற்கு விரும்பவில்லை. தாயம்மாவிற்கு ஆண் குழந்தை பிறந்தவுடன், அவன் காந்திபோல் அற வாழ்க்கை வாழ வேண்டும் என்று எண்ணுகிறாள். இதனாலே ஐயா அவனுக்கு மோகன்தாஸ் என்று பெயர் சூட்டியதை நினைத்துப் பார்க்கிறாள். அவன் அரசியல்வாதியான பிறகு முற்றிலும் மாறுப்பட்டிருந் தான் இதனை, ***ஆனால் அன்று பார்த்த அந்த உருவமா? அவனா இவன்? ஐம்பதைத்தானே கடந்திருக் கிறான்? எழுபது எழுபத்தைந்து என்று மதிப்பிடும் அளவுக்கு எப்படிச் சோர்ந்து போனான்? மழையும் காற்றும் வெயிலும் புரட்டிப் போட்டதாகச் சொல்ல முடி யாது. சொகுசு கார்; ஏ.ஸி என்று ஏதேதோ சொல் கிறார்கள். உழவோட்டி, சேற்றிலும் சகதியிலும் ஊறி, கால் வயிற்றுக் கஞ்சியும் கள் மொந்தையும், பண்ணை யடிமையின் உலகில் வாழும் முழு வாழ்வையும் கழித்த பாட்டன் அவளுக்கு நினைவு தெரிந்து தொண்ணூறு வயதிலும் இப்படித் துவளவில்லையே***

தாயம்மா தன் மகனின் நிலை குறித்து எண்ணு கிறாள். இந்தித் தீ மாநிலம் முழுவதும் பற்றி எரி கிறது 'இந்திக்குப் பாடை. தமிழுக்கு மேடை', 'தமி ழுக்கு உயிர்' என்று சுவர்களில் வாசகங்கள் எழுதப் பட்டிருந்தன. புரட்சி வெடித்தது. இதனால் பள்ளிகள் மூடப்பட்டன. தாயம்மாவின் மகன் தலைமையில் பள்ளியில் புரட்சி செய்கின்றனர். தாயம்மாவிற்கு மிகுந்த கவலை ஏற்படுகிறது. தன் கணவன் இறந்த பிறகு தன் மூன்று பிள்ளைகளையும் இந்தக் குடிலில் தான் வளர்த்தாள். ஆனால் மகன் மட்டும் உண்ட வீட்டிற்கு துரோகம் செய்கிறான் எனும் வருத்தம் தாயம்மாவை மிகவும் வருத்துகிறது.

ஐயா. அம்மா இறந்த பிறகும் தாயம்மா அவ்வீட் டிலே இருக்கிறாள். எண்பது வயது நிறைந்த மூதாட் டியாக இருந்தாலும் நம்பிக்கையுடன் வாழ்ந்துவருகி றாள். தாயம்மாவின் மகனுக்குப் பதினான்கு, பதி னைந்து வயது. இது கட்டுப்படுத்த வேண்டிய வயசு. அப்பன் எடுத்துக்காட்டாக இருக்கவில்லை. அவன் குடித்துவிட்டு வந்ததும் இவள் திட்டியதையும் அவனே அறிந்திருக்கிறான். அம்மாவின் மீதும் சகோதரிகள் மீதும் மதிப்பு இல்லை. மகனின் செய்கை தாயம் மாவை வருத்துகிறது. ஐயாவிடம் அனுப்பிக் கண் டித்து வைக்க நினைத்து, அவரிடம் அனுப்புகிறாள். அவர் சிரிக்கிறார். இதனை, ***இதே போன்ற தப்புகளை மகாத்மா காந்திகூட அந்தக் காலத்தில் செய்திருக்கிறார். இந்த வயசு அப்படியானது. அவன் வயசில் 'கோட்டை'த் தாண்டனும்னு ஒரு வேகம் வரும். துடிக்கும் வயசு. தாண்டட்டும். ஆனால் தாண்டுற போதும், ஓடுற போதும் ஒழுக்கம்ங்குற தறி கெட்டுப் போயிடக்கூடாது. அதுதான் தாயம்மா, முக்கியம்....." பையன் தறிகெட்ட தடத்தில் போகிறான் என்று எப்படிச் சொல்வான்? தறிகெட்ட தடம், பொய், களவு, சூது, கள், புகை....*** என்று மகனின் நடத்தை குறித்து தாயாகிய தாயம் மா கவலைப்படுகிறாள். இருப்பினும் வயதான காலத் திலும் ஐயாவின் வீட்டிலே வாழ்ந்துவருகிறாள்.

பெண்கொடுமை. ஏழைப்பெண் இறந்தது. சமூக அவலங்கள் இவையெல்லாம் இரவு முழுவதும் தாயம்மாவை உறங்க விடவில்லை. காலையில் பின்புறக் கதவைத் திறந்து வெளியே செல்லும்போது மயங்கி விழுந்துவிடுகிறாள். ரங்கனும் அவனது மனைவியும் தாயம்மாவின் மகன் வீட்டிற்கு அழைத்துச் செல்கின்றனர். அங்குத் தனி அறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவ்விடத்தில் வேலை செய்யும் கன்னியம்மா தாயம்மாவிற்கு உதவி செய்கிறாள். தாயம்மாவிற்கு வசதியாகயிருந்தும் இவ்விடத்தில் இருப்பதற்குப்பிடிக்கவில்லை. இதை. ***வாணாம்மா. எங்கியோ பாடி பரதேசி மாதிரி இருக்கிற சுகம் இதுல இல்ல. நீ யாரோட மகன்னு, எனக்குத் தெரியல. மகன், மகள், உறவு சொத்து சுகம் எல்லாம் பாவமலை. மேலே நிக்கிறதுன்னு மனச்சாட்சி குத்துது. அதுனாலே தான் எல்லாம் துறந்தேன். நான் அண்டிய இடம் சத்தியம் குடியிருந்த கோயில். இப்ப அங்க, ஆசுபத்திரி கட்டுறாங்களாம்; 'லாட்ஜ்' கட்டுறாங்களாம். என்னப் போ போன்னு வெரட்டினாங்க. ரா முச்சூடும் தூக்கமில்ல. எப்படிவுழுந்தேன்னு தெரியல. முருகன்.... என்ன நினச்சிருக்கிறான், எந்த கதிக்கு ஆளாக்கப் போறான்னு தெரியல...***என்று கூறுகிறாள். மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து கூடுகின்றனர். எம்.பி. இளவழகன் மாரடைப்பால் இறந்துவிட்டார் எனும் செய்தி காட்டுத்தீப்போல் பரவுகிறது. சிலர் தாயம்மாவை வசைபாட, பொறுமையாகக் கன்னியம்மாவுடன் அவ்விடத்தைவிட்டு நீங்குகிறாள்.

எஸ். கே. ஆர்

ஐயா, எஸ்.கே.ஆர் உயர்ந்த உள்ளம் கொண்டவர். சாதி.மதம், இனம் வேறுபாடு இல்லாமல் அவ்வீட்டை அறச்சாலையாக மாற்றினார். ஏழை, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மக்கள் கல்வியறிவு பெற வேண்டும் எனவும், அவர்களுக்காகப் பள்ளி நிறுவ வேண்டும் என்றும் எண்ணியவர். எஸ்.கே.ஆர் வீட்டிற்குப் பெரிய தலைவர்கள் வந்திருக்கிறார்கள். நாடு அடிமைப் பட்டுக்கிடந்தபோது. சிறைவாசம் அனுபவித்தவர்கள். பெண்டு பிள்ளைகளை மறந்தவர்கள் சாதி மதம் என்ற பாகுபாடில்லாமல் அந்த வீட்டை அறச்சாலையாகக் கருதியவர்கள் எல்லோருமே வந்தார்கள். தேசப் பிரிவினை, மகாத்மாவின் மரணம் இதெல்லாமே சுதந்தர சந்தோஷத்தில் பீடித்த கருநிழல்களாகிவிட்டன. தாயம்மாவுக்கு அப்போதெல்லாம் இதைப் பற்றிய விவரங்களோ, உணர்வுகளோ இல்லை. அவர் தேர்தலுக்கு நிற்கவுமில்லை. எந்தப் பதவியையும் ஏற்கவுமில்லை. பதவி ஏற்கவில்லையே தவிர, ஏழை எளியவர்கள். தாழ்த்தப்பட்டவர்கள் படிக்க வேண்டும். அவர்களுக்காகப் பள்ளிகள் நிறுவ வேண்டும் என்பதற்கெல்லாம் முன் நின்றார். தான் இறந்தாலும் இவ்விடத்தைக் கல்விக்கூடமாக மாற்ற வேண்டும் என்று தாயம்மாவிடம் கூறுகிறார். இதை.

தாயம்மா, நீ தகுந்த பேர வச்சிட்டு, இங்கே ஏழைப் பெண்கள் தொழிற்கூடம் எதானும் வைக்கணும். கடைசி வரையிலும் நீ தான் இருந்து கவனிக்கணும்... ராதாம்மா பேரை வைத்து நடத்தணும். எங்கெங்கோ பெண் குழந்தைகளைக் கொல்லுறாங்களாம். அந்த அவநம்பிக் கையைக் கிள்ளி எறியணும்...

இவ்வாறு சமூக நலனில் அக்கறை கொண்டவராக வாழ்ந்தவர். எஸ்.கே.ஆர் அவர்களுக்கு பதினாறு வயதில சரோஜாவைத் திருமணம் செய்து வைத்தனர். அப்போழுது அவளுக்குப் பன்னிரெண்டு வயது. சொந்த பந்தமுள்ள குடும்பம் தான். சொத்து பத்து, வியாபாரம் என்று சம்பந்தம் செய்து விட்டார்கள். ஐயா அவர்கள் உயர்ந்த படிப்பு படிக்கச் சேர்த்தார்கள். அவர்கள் ஐயாவை மேல்நாட்டுக்குக் கல்வி பயில வைத்து வெள்ளைக்காரன் மெச்சும்படியாக பதவி அடைய வேண்டுமென்று நினைத்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை. காந்தியோடு சேர்ந்து படிப்பை விட்டுப் போராட்டம். பிறகு தொடர்ந்து வக்கீல் படிப்பு சட்ட மறுப்பு. சத்யாகிரகம் என்று முழுவதுமாக மாறிவிட்டார். சரோஜாவுடன் பேசியது கூட இல்லை. அவளும். அவர் வழியைத் தேர்ந்து. கள்ளுக்கடை மறியல். கதர்ப்பிரசாரம் என்று போட்டி போட்டுக்கொண்டு ஜெயிலுக்குப் போனவள்தான். சமூக அக்கறையும், ஏழை மக்களின் மீது அன்பும் கொண்டு இருவரும் சமூகத் தொண்டாற்றி வாழ்ந்தவர்கள். மேலும் தாயம்மாவிடம், ***இல்லே தாயம்மா. எனக்கு இப்ப ஒண்ணு புரியிது. விடுதலைப் போராட்டத்தில் யாரும் எங்களைக் கட்டாயப்படுத்தி இழுத்துவிடல. ஆனால், காந்தி மகானின் வாழ்க்கை, சத்திய சோதனை. அந்த காந்தி, அவர் பேச்சு, நடப்பு எங்களையறியாமல், ஒரு தியாக வாழ்க்கையை மேற்கொள்ளச் செய்தது. ஒட்டு மொத்தமாக இந்த தேசத்தின் குரல், சாதி, மத, பாז~, எல்லாத்தையும் மீறி சுயராச்சியம்னு முழங்கியது. இப்ப.... அந்த இலக்கு வரு முன்னரே, குரல்களில் பிசிறடிக்கிறது எனக்குத் தெரியிது. பையனைத் திருடினியான்னு கேட்டா எகிறிப்பான். சிகரெட் ஊதுறியான்னு நான் கேட்டாலும் அவன் என்னைத்தான் வெறுப்பான். இந்த பள்ளிக்கூடத்திலேயே உணவு ஒழுக்கம், உடற்பயிற்சி, பிரார்த்தனை எல்லாம் எதற்கு?...ஒழுக்கம்ங்கறது வெளில இருந்து வலியுறுத்துவதாக இருந்தால் வராது. அகக்கட்டுப்பாடு வேணும்....***நிலை குறித்து அறிவுரை வழங்குகிறார்.

இம்சையை விட அஹிம்சைக்கு வலிமை அதிகம். ஐயாவுக்கும் அம்மாவுக்கும் காந்திஜி ஆசி வழங்க, பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்கு ராதாம்மா என்று காந்தியே பெயர் சூட்டினார். இவர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையை அறவாழ்க்கையாக அமைத்துக்கொண்டனர்.

முடிவுரை

சமூகத்தில் பலதரப்பட்ட இனத்தைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றனர். சமூகத்தோடு அவர்கள் இயைந்து வாழும் வாழ்க்கையையும், சமூகச் சிக்கல்களையும்

(தொடர்ச்சி: பக். 48)

ISSN 2320-4842

கவிஞர் மு. மேத்தாவின் பார்வையில் பெண் அவலங்கள்

க. நித்யா
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம் 637 205

நெறியாளர்: முனைவர் ந. கமலஹாசன்
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம் 637205 (இணைவு: பெரியார் பல்கலைக்கழகம்)

முன்னுரை

பூமி பல விந்தைகளின் கருவறை ஏனெனில் பல்லாயிரக்கணக்கான உயிர்களைத் தாங்கிக்கொண்டு சூழலும் சக்தியும் ஆற்றலும் பெற்றிருக்கிறது. அவற்றில் அற்புதங்கள் நிறைந்த படைப்பாக மனித பிறவி உள்ளது. தேடிக் கிடைக்காத ஈடில்லா இப்பிறவிக்கு உறுதுணை சேர்ப்பவர்கள் ஆண், பெண் இனங்கள் தான் அதிலும் குறிப்பாக பெண் பிறவி என்பது பேறுவுகை வகையை அடையச் செய்யும் புனிதப் படைப்பென்றால் அது மிகையில்லை.

இயற்கையின் அதிசயத்தில் பெண் படைப்பு புதுமை வாய்ந்தது என்று கூறிக் கொண்டாலும் சமுதாய கட்டுப்பாடுகளால் ஆறறிவு கொண்ட பாவை இனம் பல இன்னல்களைச் சந்தித்த வண்ணமே வாழ்ந்து மடிவது மறுப்பதற்கு இயலாததாகும். கவிஞர் மு.மேத்தாவின் கவிதைகளின் வாயிலாக பெண்கள் பற்றி அறியும் வண்ணமே இக்கட்டுரையாகும்.

பெண்ணடிமை

நாட்டில் அன்றாடம் பல பிரச்சனைகள் தோன்றி வளர்ந்த வண்ணம் உள்ளன. களவு, கொலை, பொருளாதாரமின்மை, சாதிய மோதல்கள் என எண்ணிக்கொண்டே செல்லலாம். ஆனால் இவற்றை விட சிந்திக்கத் தூண்டுபவை ஆண், பெண் நிறைந்த சமதர்ம சமுதாயத்தில் நிகழும் பெண்ணடிமைப் போக்குகள் எனலாம்.

பெண் என்பவள் பிறக்கப்படுவதில்லை
உருவாக்கப்படுகிறாள் என்று பெண்ணிய அறிஞர் சைமன் டி - பௌவாயர் மண்ணில் பெண்ணினம் பிறப்பதில்லை மகத்துவம் நிறைந்ததாக உருவாக்கப்படுகிறது என்னும் சிந்தனை இங்கு நினைவு கூறத்தக்கது. ஆனால் காலங்கள் ஆணினம் ஆளப்பிறந்தவர்கள் பெண்ணினம் அவர்களைச் சார்ந்து வாழப் பிறந்தவர்கள் எனும் நடைமுறை இன்றளவும் உள்ளதையும் இரு வேறு நீதிகள் சமுதாயத்தில் நிலவும் தன்மையையும் அறிய முடிகிறது. இது போன்ற அவலங்கள் மண்ணிலிருந்து மறைய வேண்டும் என்பது கவிஞர் மு மேத்தாவின் சீரிய சிந்தனையாகும்.
பெண்கள் தாலி என்ற சம்பிரதாயத்தின் நியதியில் தங்களது நீதிகளை மறந்து ஆண் வர்க்கத்தின் பிடியில் சிக்குண்டு வாழ்கின்றனர். ஆண்களும் அவர்களை அடிமையாகவே பார்க்கின்றனர்.

அவர்களை
போதைப் பொருள்களாகவும்
போகப் பொருள்களாகவும்
புரிந்து கொண்டதல்லாமல்
வேதப் பொருளாகி
மேன்மை தர யாருமில்லை
அடிமை ஒப்பந்தத்தில் அடையாளமாகத்தான்
கழுத்தில் தாலியைக் கட்டி வைத்தனர்
அது
கனத்தது வலித்தது கண்களை நனைத்தது!
என்ற வரிகளில் தமது சிந்தனையை விதைக்கிறார். மு.மேத்தா பெண்களின் கழுத்தில் உள்ளது மாங்கல்யம் அல்ல அது பெண் இனத்தின் அடிமை சாசனம் என எடுத்துரைக்கிறார்.

பெண் என்பவள் குழந்தை பெற்றுக் கொடுக்கும் இயந்திரம் வீட்டில் இருப்பவர்களுக்குச் சோறு சமைத்துக் கொடுக்கும் ஒரு சமையல்காரி அவளது பணி அதுதான் என முத்திரைக் குத்தும் சமுதாயத்தினை இடித்துரைக்கிறார். இதனை,

அந்தப்புரத்தில் தான்
அரசிகள்
மற்றபடி
அடுப்படியில் வேரும்
அரிசிகள் என தொடர்கள் விவரிக்கின்றன. காட்டில் சுகத்திற்கும் அடுப்பங்கரையில் உழறும் அவலமும் அடியோடு மாற வேண்டும் என்னும் கவிஞனின் எதிர்காலச் சிந்தனையை உணரலாம்.

இரக்கத்திற்கு நிலைக்களனாக உள்ளது பெண்மை. ஆண் என்னும் அரக்கனாக வாழ்வதிலும் பெண்ணென்னும் தெய்வமாக எனக்கு விருப்புண்டு என்னும் திரு.வி.கவின் கூற்று பெண்களின் சிறப்பிற்குச் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.
மங்கை என்பது பெண் பருவங்களில் ஒன்று, தாய்மையின் அடையாளமாக கருதப்படக் கூடியது அந்நிலை அடைந்து விட்டால் சமுதாயம் அவர்களை வேறு நிலையில் அணுகக்கூடிய சூழலும் இன்றளவும் காணப்படுகிறது என்று மு.மேத்தா குறிப்பிடுகிறார்.

பூத்து விட்டது
செடி என்று சொல்லி
புன்னகைத்தார்கள்..
அம்மா
இலைகளைக் கோதி கொடுத்தாள்
அப்பா
வேலியை விரிவாக்கினார்
பயல்கள்
பார்வைகளைக் கூர்த்தீட்டினார்கள்....
கண்கள் கனவுகளைப் பத்திரப்படுத்தின!
வந்த பெரியவர்கள் மட்டும்
விலை தரச் சொல்லி
விசாரித்துக் கொண்டிருந்தார்கள்
வேருடன் பிடுங்கிப் போக!
என்னும் கவிதை வரிகள் தெளிவுப் படுத்துகின்றன. பெண் பெரியவளாக வளர்ந்து விட்டாலே அவள் மீது மோகப் பார்வையை வீசும் ஆண்வர்க்கத்தின் மூர்க்கத்தனம் முற்றிலும் அகற்றப்பட வேண்டும் என்ற உணர்வினைத் தெளியலாம்.

பெண்ணைச்
சிற்றின்பத்தோடு மட்டும்
சிநேகப்படுத்தாதீர்!
ஒவ்வொரு பெண்ணும்
ஞானத்துணை!
உடல்சார்ந்த இன்பங்கள் மட்டுமல்லாது இல்லறம் எனும் நல்லறம் சிறக்க இன்றியமையாதவர்களாக விளங்குபவர்கள் பெண்கள் அவர்களை மதித்துப் போற்ற வேண்டும் என்ற வைரமுத்துவின் கருத்து அரணாக அமைகிறது. பெண்மைக்கும் உணர்வுகள் உண்டு என்பதை உணர்த்துகிறார்.

வரதட்சணைக் கொடுமை

பெண்கள் தமது வாழ்நாளில் சந்திக்கும் பிரச்சனைகளில் வரதட்சணையும் ஒன்றாகும். திருமணம் என்னும் பெயரில் பணம், அணிகலன்கள், பொருட்கள் என பலவற்றையும் இலவசமாக கொடுப்பதும் போதவில்லை இன்னும் வாங்கிக் கொண்டு வா! என்று பிறந்த வீட்டிற்கு அனுப்பும் கொடுமையும் நம் நாட்டில் நிகழ்ந்த வண்ணம் உள்ளது. இது சமுதாயத்தில் களையப்பட வேண்டிய ஒன்றாகும்.

மயிலின் நடுக்கத்துக்குப்
போர்வை கொடுத்த பேகனே
எங்கே போய் தொலைந்தாய்?
வா!
லட்சோபலட்சம் பச்சை மயில்கள்
வறுமை அடிமை வரதட்சணைக் கொடுமை
இவற்றில்
நடுங்குகின்றன என்றமையும் கவிவரிகள் அஃறினணப் பொருளாகிய மயிலுக்குப் போர்வை அளித்துக் காத்த பரம்பரையில் வந்தவர்கள் திருமணம் எனும் பெயரில் பெணனைக் காக்க வரதட்சனை என்னும் விலை கொடுக்க வேண்டும் என்பது வெட்கக்கேடானது என மு.மேத்தா தமது எண்ணத்தைக் கவிதையின் மூலம் நமக்கு உணர்த்துகிறார்.
வைர அட்டிகையும்
வரதட்சணை பாக்கிகளும்
உன்னுடைய
தந்தை வந்து
உடனே தராவிட்டால்..
தோகையே
உன்னைத்
தொட மாட்டேன் - என்று
இளைஞர்கள் சொல்வது
இன்றைய இல்லறம்! என்ற தொடர்கள் இந்தியாவைக் காக்கப் பிறந்த இளைஞர்கள் மதிப்புமிக்க வாழ்வை மதிப்பற்றப் பொருளுக்காக இழக்கும் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

வரதட்சணை என்னும் பெயரில் மணமகள் வீட்டார் மணமகன் வீட்டாருக்குப் பொருள் தரும் வழக்கம் இந்திய தமிழ்ச் சமூகங்களில் காணப்படாத ஒன்றாயினும் இது காலப்போக்கில் பணம், பொன், பொருள் என்னும் பட்டியலை நீட்டித்து மணமகன் வீட்டாரே பெண் வீட்டாரிடம் கட்டாயமாகக் கேட்டுப் பெறும் பழக்கமாக மாறியது எனலாம் என்ற ராஜம் கிருஷ்ணானின் சிந்தனை இங்கே சிந்திக்கதக்கது. மேலும்,

வரதட்சணை பாக்கிகள்
வந்து சேரவில்லையென்று
கணவன்மார்கள்
கடுங்கோபத்தோடு
வீதியில் தூக்கி
வீசி எறிகிறார்கள்
நகைகளைல்ல
மனைவியை

ISSN 2320-4842

என்றமையும் கவிஞரின் வைரவரிகள் வரதட்சணைப் பாக்கியம் கொடுக்காத மனைவியைத் தகாதவளாக எண்ணி வீதியில் தூக்கி எறியும் ஆண்களின் அர்த்தமற்றப் போக்கினைக் கடித்துரைக்கின்றன. வாழ்வின் இறுதிவரை வரும் பெண்களை இழிவு செய்யும் நிலை தொடர்ந்து நிலையில் உள்ளது வெட்கக்கேடானது என்கிறார். மேலும்,

திருமணத்தில் பொன், பொருள் அவசியம் அதன்பிறகுதான் பெண் என்று எண்ணுகிறவர்கள் உலகில் அதிகம் உள்ளனர். கௌரவத்திற்காக எதுவும் வேண்டாம் என்பதெல்லாம் வெறும் வார்த்தையில் மட்டும் உள்ளது. இதனை,

வாங்கமாட்டோம்
வரதட்சணை
என்கிற
வாலிப வாக்குறுதிகள்
குமுத இதழில்
தங்கள் படத்தையும் பெயரையும்
பார்த்துரசிக்கிற
பரவசத்தோடு முடிந்து போகின்றன.

இன்று ஆண் வர்க்கத்தினைச் சாடுகிறார். மற்றவர்கள் பெருமைப்படப் பேச வேண்டும் என்பதற்காகவும் வெற்று விளம்பரத்திற்காகவும் வரதட்சணை எதுவும் வேண்டாம் என்கின்றார்களே தவிர நடைமுறைப்படுத்துவதில்லை என மனம் வருந்துகிறார்.

வரதட்சணைக் கொடுமையால் பாதிக்கப்படும் பெண்கள் கால்நடையைக் காட்டிலும் கீழாக நடத்தப்படுகின்றாள் என்ற கருத்து வரதட்சணைக்கு எதிராக அமைந்திருப்பதையும் இளைய சமுதாயம் புதுமையை விதைக்க வேண்டிய அவசியத்தையும் உணர்த்துகின்றன.

விதவை நிலை

ஆண் பெண் இணைந்து வாழும் மங்கலமான இல்லற வாழ்வில் கணவனை இழந்து தனிமையில் வாடும் நிலையே விதவையாகும். இது பெண்ணினம் மட்டும் அனுபவிக்கும் கொடுமையாகும். **கழிகலமகளிர், உயவற்பெண்டிர், பருத்திப்பெண்டிர் நொடிகழி மகளிர் கழிகலமகடூஉ** என்றெல்லாம் அழைக்கப்படுகின்றனர். மனைவி இறந்தால் கணவன் புது மாப்பிள்ளை என்றும் கணவனை இழந்தவள் விதவை என்றும் கூறும் சமூக மரபு இன்றளவும் காணப்படும் அவலமாகும் நிலையை மு.மேத்தா தனது கவிதையின் வாயிலாக எடுத்தியம்புகிறார்.

அவர்கள்
கணவன்களை இழந்து விட்டால்
விதவைகள்
கருகமணிகளைக் கழற்றி வைத்துவிட்ட
கண்ணீர்ச் செடிகள்
புலம்பத் தெரிந்த புஷ்பங்கள்!
இந்த
அக்கினிப் பிரவேசங்களை
அகற்றுவது எப்பொழுது? என்னும் கவி வரிகள் கணவனை இழந்து தவிக்கும் பெண்கள் அன்றாடம் அழுது புலம்பும் பூக்கள் என்கிறார். இது போன்ற இழிநிலையைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என கவிஞர் குரல் கொடுக்கிறார்.

பூக்களை இயற்கை அன்னை படைத்தளிப்பது இறைவனுக்கும் மகளிர் கூந்தலுக்குந்தான். அப்பூவினைக் கூட கணவன் இறந்துவிட்டால் தலையில் வைத்து அலங்காரம் செய்யக் கூடாது என்னும் மனிதநேயமற்ற வழக்கம் சமுதாயத்தில் இலையோடிக் காணப்படுகின்றன. இதனை,

போன பாதையில் பூங்கொடி வளைந்ததேன்
தூக்கிச் சுமக்க முடியலையோ
கூந்தலில் பூந்தோட்டம்!

என்றமையும் வரிகள் படம் பிடிக்கின்றன. பெண்கள் சூடுவதினால்தான் பூக்களுக்கு அழகு என்னும் சிந்தனை வெளிப்படுவதை அறியலாம்.

திரிஞ்ச பலா நான் ஏன் தெருவுக்குத் நீட்டினேன்
பிரிஞ்சு போன பர்த்தவே பேதைகுரல் கேட்கலையா?

என்னும் தொடர்கள் மனம் வருத்திப் புலம்பும் கைம் பெண் நிலையை எடுத்துக்காட்டுவது சிந்திக்கத்தக்கதாகும்.

கணவன் - மனைவி - குழந்தைச் செல்வங்கள் என்று வாழும் இல்லற வாழ்வில் கணவன் என்னும் தலைமை விழ்ந்தபின் மனைவியானவள் கேட்பாரற்று வாழும் அவலம் பெருங் கொடுமை நிறைந்ததாகும். குடும்ப உறவுகளும் சிதைதலுக்கு ஆளாக நேரிடும் என மு.மேத்தா தெளிவுப்படுத்துகிறார்.

எந்தக் கொடுங்காற்றின்
இடது கால் இடறியதோ
செடியின் சிரிப்பு இங்கே
சிந்திக் கிடக்கிறது
கழுத்தைத் திருகிவிட்ட
கையெதுவோ? தேவமொழி
எழுத்து- தனித்திங்கே
ஏங்கிக் கிடக்கிறது.

என்றமையும் வரிகள் கணவனை இழந்த பேதைப் பெண்ணானவள் சமுதாயத்தினால் புறக்கணிக்கப்பட்டு வாழும் நிலைமையை வெளிப்படுத்துகின்றன. ***உடன்கட்டை ஏறுவது ஒரு நாள் துன்பம், விதவையாய் வாழ்வதே வாழ்நாள் முழுவதும் தாங்க முடியாச் சித்திரவதைக்கொப்பான துன்பமாக இருந்து விளங்குகிறது*** என்னும் பெரியாரின் கூற்றம் இங்கு சிந்திக்கத்தக்கதாகும்.

முடிவுரை

பெண்கள் நாட்டின் கண்கள், ஆணும் பெண்ணும் சமம், என்று ஒரு புறம் கூறிக்கொண்டாலும்

ISSN 2320-4842

சமுதாயம் அவர்களை அடிமைப் பொருளாகவே நடத்தும் நிலை மாறாமல் இருப்பது கண்டிக்கத்தக்கதாகும். மதிப்பளித்து வாழ வேண்டியவர்கள் மதிப்பற்ற வரதட்சணையால் பலர் வாழ் விழந்து மனக்குமுறலுடன் வாழ்ந்து வரும் நாட்டில் நிலவும் பேரவலமாகும்.

கணவனை இழந்து தனிமையில் வாடும் நிலையைத் துறந்து ஆண்களைப் போலவே பெண்களும் மறுமண செய்துவைக்கும் வழக்கம் சமுதாயத்தில் உருவாக வேண்டும். அறிவியல் முன்னேற்றத்தில் தன்னிறைவுப் பெற்று வரும் நாட்டில் பெண்களும் சம உரிமைகளுடன் வாழ்ந்து சிறக்க வழிவகைகள் செய்ய வேண்டுவது மண்ணில் பிறந்த ஒவ்வொரு கடைமையாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பார்வை நூல்கள்

Beovarior, Simondo. The Second Sex. Britan,1963.

மு.மேத்தா, ஊர்வலம்,2012.

திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்,1999.

மு.மேத்தா, ஒரு வானம் சிறகு,2016.

மு.மேத்தா, கண்ணீர்ப்பூக்கள்,2021.

ராஜம் கிருஷ்ணன், காலந்தோறும் பெண்,1994.

மு.மேத்தா, காத்திருந்தக்காற்று,2004.

வைரமுத்து, பெய்யெனப் பெய்யும் மழை,2000.

மு.மேத்தா, திருவிழாவில் தெருப்பாடகன்,2014.

சுதா முருகேசன், வானத்தில் கீழே ஒரு வெள்ளை நிலா,1981.

தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்?, 2004.

44ஆம் பக்கத் தொடர்ச்சி

கதைமாந்தர் உருவாக்கத்தின்மூலம் ஆசிரியர் தெளி வாக விளக்குகின்றார்.

சமூகம் மற்றும் குடும்பத்தில் உண்டாகும் சிக்கல்கள் தீரக் கல்வி, முற்போக்குச் சிந்தனை, பெண்ணை மதித் தல். பெண்ணிற்கான பொருளாதார மேம்பாட்டை உருவாக்கல் போன்ற கருத்துக்களுக்கு முக்கியத்து வம் தரும் வகையில் ராஜம் கிருஷ்ணன் தமது உத்தரகாண்டம் புதினத்தின்வழிக் கதைமாந்தர்களின் பண்புகளைப் புலப்படுத்திச் சமூக அக்கறை கொண் டவராகத் திகழ்கிறார்.

பார்வை நூல்கள்

1. Virginia Woolf "Mr. Bennett and mr. Brown" (1924) quoted by Miriam Allott in Novelists on the Novel (1973)
2. இராமலிங்கம்.மா, நாவல் இலக்கியம்
3. Walter Allen, The English Novel (9th Edn. 1970)
4. சுதந்திரமுத்து. படைப்புக்கலை, ப.125
5. இராமலிங்கம். மா. நாவல் இலக்கியம், ப. 78
6. ராஜம் கிருஷ்ணன், உத்தரகாண்டம்,ப.14

(54ஆம் பக்கத் தொடர்ச்சி)

றாண்டிற்கு மேல்தான் இருக்கும். மச்சமுனி நாய னார் தான் சித்திபெற்றதைக் கூறும்பொழுது 'சித்திர கிரி' என்ற ஊர்ப்பெயரும் 'அகத்தீசன்' என்ற தன் குரு பெயரையும் கூறுகிறார். இதுபோன்ற குறிப்புகள் பல இந்நூலில் உள்ளன. இந்த அகச்சான்றுகளையும் புறச்சான்றுகளையும் திரட்டி, நூலின் காலத்தைக் கணிக்க வேண்டும்.

முடிவுரை

முதலில் கூறியதுபோல, தமிழ்மொழியில் பல்வேறு நூல்கள் உருவாகியுள்ளன; உருவாக்கப்பட்டுவருகின் றன. வரலாற்றுப் போக்கில் பல நூல்கள் பல கார ணங்களால் அழிந்தாலும் மச்சமுனி நாயனார் திரு மந்திரம்போலச் சில குறிப்பிடத்தக்க நூல்கள் இன்னும் வெளிவராமல் உள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றில் திருமூலரின் திருமந்திரத்திற்குப் பிற் காலத்தில் இன்னொரு திருமந்திரத்தைப் பற்றியும் சேர்ப்பதற்கு இக்கட்டுரை துணைபுரிகின்றது.

இதுபோன்ற சில நூல்களை வெளிக்கொணருவதால் உண்டாகும் நடைமுறைப்பயன் (practical usage) என்னவென்று சிலர் கேட்பதுண்டு. மச்சமுனி நாய னார் திருமந்திரத்தில் அதற்குத் தக்க விடை உண்டு. சித்த வைத்தியம் சார்ந்த ஆய்வுகளும் மருந்துகளும் உருவாகிவரும் இக்காலத்தில், இந்த திருமந்திரத் திலுள்ள மருத்துவ குறிப்புகளைத் தொகுத்தால், அந்தச் சித்த வைத்திய ஆய்வுகளுக்கு இன்னும் பல தகவல்கள் கிடைக்கலாம்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

ம - மச்சமுனி நாயனார் திருமந்திரம்

ப - பக்கம்

க.ப - கட்டுரையின் பக்கம்

துணைநூற்பட்டியல்

1. மச்சமுனி நாயனார் திருமந்திரம் 800 - தாமரை நூலகம், சென்னை.

2. உங்கள் நூலகம் - நியூசெஞ்சுரி பதிப்பகத்தின் மாத இதழ், ஆகஸ்ட்-2011.

3. திருமூலரின் திருமந்திரம் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

A happy life consists in the tranquility of mind. - Marcus Tullius Cicero

ISSN 2320-4842

இஸ்லாமும் பெண்ணுரிமையும்

டி.மை. சாகிதா பானு
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை
கந்தசாமி கண்டர் கல்லூரி, பரமத்தி வேலூர்

நெறியாளர்: **முனைவர் த. க. புஷ்பராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, கந்தசாமி கண்டர் கல்லூரி
பரமத்தி வேலூர் 638 182 (இணைவு: பெரியார் பல்கலைக்கழகம்)

முன்னுரை

கண்ணே, மணியே, கற்கண்டே, கனிச்சாறே எனப் பெற்ற செல்வங்களைக் கொஞ்சுவதாலும் எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என அறிவியல் ரீதியில் கண்ணை ஒப்புமை கூறுவதாலும் கண்ணின் பெருமை கணிக்கப்படுகிறது.

உன் மீது உன் அம்மாவுக்கு உரிமையுண்டு,
உன் மீது உன் உடம்பிற்கும் உரிமையுண்டு,
உன் மீது உன் கண்களுக்;கு உரிமையுண்டு எனப் பெருமானார்(ஸல்) அவர்கள் கண்ணைத் தனித்துக் காட்டியுள்ளதாலும் கண்ணின் பெருமை புலப்படும்.

கண்ணிற்கும் பெண்ணிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதாலேயே ஆங்கிலப் பெருங்கவிஞன் சேக்ஸ்பியர் பெண்களின் கண்களின் அழகைப்போன்று உலகிலுள்ள எந்த ஆசிரியனும் நமக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவில்லை என்றான். மேலும் கண்ணும் ஒளியும் ஒன்றுபட்டுச் செயலாற்றும்போதுதான் பொருட்களின் தன்மையை நாம் உணர முடிகிறது. ஆதனால்தான் இறைவன் திருமறையில் *அந்நூர்* (ஒளி) என்ற அத்தியாயத்தில் பெண்ணைப் பற்றி மிகுதியாகப் பேசப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஒளி பொருந்திய பெண்ணினத்தின் உரிமை பற்றித் தெரிந்துகொள்வோம்.

பெண்ணியப் போராளிகள்

இன்றையசூழலில் பெண்ணுரிமை என்பது பல்வேறு கண்ணோட்டங்களில் பார்க்கப்படுகிறது. பெண்ணடிமைத்தனம் உலகம் தழுவிய ஒன்றாகக் காணப்பட்டதாலும் மையலுக்கு மட்டும் தையல் என்ற அவலநிலையில் பெண் என்பவள் உடல்சார்ந்த பொருளாகவும், நுகர்பொருளாகவும், கவர்ச்சிப் புதையலாகவும் பெண் ஒரு சாபக்கேடு, பாவத்தின் பிறப்பு எனக் கருதப்பட்டதாலும் இதை வேரறுக்க முற்போக்காளர்கள் முனைந்ததில் வியப்பில்லை.

பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாடு
மண்ணடிமை தீர்ந்துவிடல் முயற்கொம்பே என்றுபாரதிதாசனும், ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே, ***எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை*** என்று பாரதியாரும் கவிதை முழக்கம் செய்தனர். மேலைநாடுகளில் இச்சிந்தனை மேலோங்க அமெரிக்கப் பெண்மணி மேடே பிரைட்மேன் நவீன பெண்ணிய சிந்தனைகளுக்கு உரமிட்டார். அவரை அடியொற்றிய பெண்மணிகள் திருமணமில்லாமல் பாலுறவு கொள்வதில் குழந்தைகளைப் பெறுவதில் தவறில்லை எனவும், திருமணம் நிகழ்ந்துவிட்டால் வீட்டு பொறுப்புகளில் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டுமென்றும் வாதாடினர். ஒரு சில பெண்ணியவாதிகள் திருமணம் செய்துகொள்வதினும் விபச்சாரமே மேல். பணமும் கிடைக்கும், இன்பமும் கிட்டும், சுதந்திரமாகவும் வாழலாம். ஆனால் மனைவி என்றால் அடிமைப்பட்டு கிடக்கும் அவலநிலைதான் எனத் தவறாக எண்ணத் துணிந்தனர். இப்பெண்ணியம் பேசும் புரட்சியாளர்கள் இஸ்லாத்தில் பெண்ணுக்கு எந்தளவு உயர்வும், மதிப்பும், உரிமையும் வழங்கப்பட்டுள்ளது என முழுமையாக உணர்ந்திருந்தால் அல்லது உணர்த்தப்பட்டிருந்தால் அவர்களின் சிந்தனைச் சிக்கல்கள் சிதறுண்டு தூள்தூளாகி இருக்கும்.

பெண்கள் பொறுப்புள்ளவர்கள் என்பதால்தான் இறைவன் தன் படைப்புத் தொழிலின் இரகசியத்தை ஒரு பகுதியாகப் பெண்ணின் கருவிலே மறைத்து வைத்தான். தனது பிரதிநிதிகளாக, தன்னை வணங்குபவராக, தன்னை உணரும் சக்தி கொண்டவராக வாழ்வாங்கு வாழ வேண்டிய மகத்தான மனித இனத்தை ஈன்று புறந்தரவும் எழிலாக வளர்க்கவும் பெண்களால்தான் முடியும் என்பதால்தான் இப்பெரும் பொறுப்பு பெண்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆண்களுக்கு உலகமெல்லாம் வீடு; பெண்ணுக்கு வீடுதான் உலகம் என்பது நாவலாசிரியர் காண்டேகர் கருத்து. ஒரு பெண்ணின் தொடர்பு கணவன், குழந்தைகளிடம்தான் மிகவும் நெருங்கியதாக விளங்குகிறது. எந்த ஒரு பெண் குடும்பப்பாரத்தை உறுதியுடன் ஏற்று அதில் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கு ஈடு கொடுத்து வாழ்கிறாளோ அவள் தன் அனுபவத்தின் முத்திரையைத் தன் வாரிசுகளிடம் ஆழமாகப் பதித்து விடுகிறாள். வீட்டையே ஒரு பல்கலைக்கழகமாக உயர்த்திவிடுகிறாள். வறுமையில் செம்மையுடன், துன்பத்தில் இன்பத்துடன் தன் நெறி தவறாது, நிதான மிழக்காது, கற்பில் களங்கம் ஏற்படாது பொறுப்புடன் பாதுகாத்து வாழும் பெண்ணைப் பற்றி இறுதி நபி (ஸல்) அவர்கள் ***தன்குடும்பத்தைப் பராமரிக்கும்போது ஏற்படும் துன்பத்தால் வதனம் கறுத்தவிட்ட ஒரு பெண்ணும், நானும் மறுமையில் அடுத்தடுத்து இருப்போம்*** எனக் கூறி அப்பெண் சுவனவாசி என நன்மாராயம் கூறினார்கள்.

இஸ்லாமிய மார்க்கத்தில் ஆணாதிக்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆணும் பெண்ணும் இணை துணையாக இருந்து அழகிய முறையில் இல்லறம் பேண வேண்டுமென்பதாலேதான் ***ஹுன்னலிபாஸுல்லகும் அன்தும் லிபாஸுல்லஹுன்ன*** (2:7) எனத் திருமறை ஆண்கள் பெண்களுக்கு ஆடையாகவும், பெண்கள் ஆண்களுக்குஆடையாகவுமிருந்து மானம், மரியாதையைப் பாதுகாக்க வேண்டுமென அழகிய எளிய உவமை கொண்டு விளக்குகிறது.

இறைவன் தன் திருமறையில் கூறுகிறான்: ***உங்களில் ஆண் பெண் எவர்கள் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக நான் அதை வீணாக்கிவிட மாட்டேன்*** (ஆலு இம்ரான்-195). அதாவது நன்மையின் கூலி இருபாலருக்கும் உண்டு. இதைப்போலவே இஸ்லாமிய மகளிர்க்கு எல்லா உரிமைகளையும் இறைவன் வழங்கியுள்ளான். ஆண்களுக்கு முறைப்படி பெண்களின் மீதுள்ள உரிமைகள் போன்றதே ஆண்கள் மீது பெண்களுக்குமுண்டு என்று உரிமைப் பிரகடனம் செய்துள்ளது அருள்மறை. சொத்துரிமை, கல்வி, திருமணம், மறுமணம், கைம்பெண் திருமணம், மணவிலக்கு பொன்ற அத்தியாவசியமான காரியங்களில் முஸ்லிம் பெண்கள் உரிய உரிமை பெற்றுள்ளனர்.

சொத்துரிமை

பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என அறிந்திருந்த இஸ்லாமிய மார்க்கம் உலகின் எந்தச் சமுதாயமும் தராத சொத்துரிமையைத் தந்து மகளிர்க்கு பெருமை சேர்த்தது. கணவன், பெற்றோர், சகோதரர் சொத்துகளில் எத்தனை பங்குண்டு என்பதைச் சட்டமாக்கித் தந்துள்ளது. அது இன்றளவும் நடைமுறைப் படுத்தப்பட்டுவருகிறது. மேலும் குர்ஆனில் அந்நிஸா என்றஅத்தியாயத்தில் ***லிர்ரிஜாலி நஸ{பும் மிம்மக்தஸபூ வலின்னிஸாபி நஸீபும் மிம்மக்தஸ்பன (4:32)*** அதாவது ஆண்கள் சம்பாதிப்பது ஆண்களுக்குரியது, பெண்கள் சம்பாதிப்பது பெண்களுக்குரியது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் சுய தொழில் செய்து முன்னேறலாம் என்பதற்கு இணங்க நபிகள்நாயகம் (ஸல்) கூறியதாவது: ***ஒரு பெண் நூல் நூற்பதால் ஏற்படும் இராட்டையின் ஒலி இறைவழியில் போர் வீரர்கள் எழுப்பும் தக்பீர் முழக்கத்திற்கு சமமானது.*** பெண் என்பவள் பொருளாதரத்தில் நிறைவுபெற்றவளாக இருக்க வழி காட்டியுள்ளார்கள்.

கல்வி கற்கும் உரிமை

கல்வியைக் கற்றுக்கொள்ள ஆண், பெண் என்ற பாகுபாடு தேவையில்லை. ***தலபுல் இல்மிபரீலத்துன் அலாகுல்லி முஸ்லிமின் வமுஸ்லிமா*** என்று இருபாலருக்கும் இறைவன் கல்வியைக் கட்டாயமாக மாற்றினான். ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை எனக் கூறிவந்த காலத்தில் பெண்கள் ஒவ்வொருவரும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கௌரவித்தார்கள். மேலும் இமாம் அபூஹனிபா ரஹ்மத்துல்லாஹி அவர்கள் அறிவிக்கி றார்கள்***: ஒவ்வொரு மஹ்வில்லாவிலும் பெண்கள் பிரச்சனைகளை தீர்க்க ஒரு பெண் நீதிபதி நியமனம் செய்ய வேண்டும்.*** இது பெண்ணுக்குச் செய்த பெருமையல்லவா? ***கல்வியில்லாப் பெண்கள் களர் நிலத்திற்கு ஒப்பாவார்.*** அந்நிலத்தில் புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைவதில்லை. கல்வி கற்ற பெண்கள் திருத்திய கழனி போன்றவர்கள். அங்கே நல்லறிவுடைய மக்கள் விளைவர் என்று பாரதிதாசன் பறைசாற்றுகிறார். மேலும், எந்தப் பெண்ணிடம் அடக்கம், எளிமை, ஒழுங்கு, கடமையுணர்ச்சி இவைகளைக் காண முடீயுமோ அந்தப் பெண் ஒரு நாளும் தப்பான வழிக்குப் போகமாட்டாள்.

பெண் பிறப்புரிமை

பெண் கருக்கொலை, பெண் சிசுக்கொலை பரவலாகப் பேசப்படும் ஒன்று. அதாவது 1000 ஆண்களுக்கு 923 பெண்கள் மட்டுமே உள்ளனர். மேலும் இது நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்துவிடும். மேலும்இதனால் தேசிய அளவில் பெரும் நெருக்கடி விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்பது நிபுணர்களின் கருத்து. பெண் சிசுக்கொலை நடந்து கொண்டிருந்த காலக்கட்டத்தில் அதற்கு முற்றுப் புள்ளி வைத்த ஒரே மார்க்கம் இஸ்லாம்தான். ***ஒருவன் தன் பெண் குழந்தைகளை உயிருடன் புதைக் காமலும், கொடுமைப்படுத்தாமலும் ஆண் குழந்தையுடன் ஒப்பிட்டு வேறுபாடு காட்டாமலும் இருப்பவர் சுவனவாசி*** என்றும் ***நான்கு பெண் குழந்தைகளைப் பெற்றவர் சுவர்க்கம் புகுவர்*** என்றும் நபி(ஸல்) அவர்கள் பெண் பிறப்பை உயர்த்திப் போற்றினார்கள். பெண் மக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்ந்தார்கள்.

திருமண உரிமை

இஸ்லாமிய மார்க்கத்தில் மணப்பெண்ணின் சம்மத

மின்றித் திருமணம் நடைபெறாது. திருமணத்திற்கு முன் பெண் மணமகனையும், மணாளன் மனைவியையும் ஒருமுறை பார்த்துக்கொள்ள உரிமையுள்ளது. அண்ணல் நபி(ஸல்) அவர்களின் கனிந்த வாழ்வும் கன்னல் மொழியும் விதவைகளின் மறுவாழ்விற்கு வழிகாட்டியுள்ளது. அபுஹுரைரா (ரலி) அவர்கள் பெருமனார் (ஸல்) அவர்கள் கூறியதாக ஒரு செய்தியை நமக்குக் கூறுகிறார்கள்: ***விதவைகளுக் காகவும் வறியவர்களுக்காகவும் பாடுபடும் ஒவ்வொருவரும் இறைவழியில் போர் புரிந்தவர் போன்றும், பகலில் நோன்பு நோற்றுவர் போன்றும் சிறப்பினைப் பெற்றவர்கள் ஆவார்கள்.***

இன்றைய சூழலில் பெரும் பிரச்சனையாக முத்தலாக்கும் முக்காடும் பேசப்படுகிறது. பெரும்பாலான ஆண்களும் பெண்களும் விபச்சாரத்தில் நாசமாகிவருவது அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. மேலும் திருமணமின்றிக் குழந்தைகளை பெற்றெடுக்கும் அவலமும் அதிகரித்துவருகிறது. இப்படிப்பட்ட பெண்களுக்கு சமுதாயத்தில் அந்தஸ்துமில்லை. ஆணின் சொத்தில் அவளுக்கோ வாரிசுக்கோ உரிமையுமில்லை. முத்தலாக் சொல்லி மனைவியரை நட்டாற்றில் விட்டுவிடுகின்றனரே என்பது ஒரு குற்றச்சாட்டு. அல்லாஹ்வால் மிகவும் வெறுக்கப்படும் செயல் தலாக் என நபி(ஸல்) அவர்கள் அறிவித்தும் ஆண்மகனால் சிலசமயம்இத்தலாக் மேற்கொள்ளப்படுகிறது. அருமை நபி(ஸல்) அவர்கள் தன் மனைவியரில் ஒருவரைக் கூட தலாக் சொல்லியது இல்லை. அன்னை ஆயிஷ் (ரலி) அவர்கள்மீது அவதூறு கூறப்பட்ட போதுகூடத் தலாக் சொன்னதில்லை. மேலும் விருப்பமின்றி வெறுப்போடு ஓர் ஆணுடன் வாழ்நாள் முழுவதும் வாழ்வதைவிட விட்டுவிலகுவது நல்லதல்லவா?

பெண்களைக் கேலி செய்யும் ஈவ்டிஸீங் நாளுக்கு நாள் முன்னேறிவருகிறது. பெண் ஆடை அலங்கார அணிமணிகளோடு கவர்ச்சிக் காரிகையாக வெளிப்படும்போதுதான் இந்த அவல நிலை உருவாகின்றது. இவற்றைத் தடுக்கவே உடலை மறைக்கும் பர்தா முறை பேணப்படுகிறது. இது பெண்களின் பாது காப்புக் கேடயம் எனலாம். இதனால் கல்வி கற்பதற்கோ,சமூக சேவைகளில் ஈடுபடுவதற்கோ, அழைப்புப் பணிகளுக்கோ பாதிப்பு இல்லை மதிப்பும் மரியாதையும் கூடும். தரங்கெட்டு, வாழ்விழந்து வசைபட்டு, அடைபட்டு, அடிமையாய் அல்லற்பட்டு உரிமையற்ற ஊமையாய் வாழ்ந்த பெண்களுக்கு உரிமைகளை வாரிவழங்கிய மார்ககம் இஸ்லாம். அதனால்தான்,

- நான்கு பெண்களைப் பெற்றவன் சுவனவாசி
- பெண்களை அடிமையாக நடத்த வேண்டாம். அடிக்க வேண்டாம்.
- பெண்களின் உரிமையைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
- மஹர் கொடுத்து மணமுடியுங்கள்
- சொத்தில் அவர்களுக்குப் பங்கைக் கொடுங்கள்.
- வாழாமல் வந்த பெண்ணை விரட்டாதீர்கள், வெறுக்காதீகள்.
- பெண்கள் உழைத்துச் சம்பாதிப்பது அவர்களுக் குரியது.
- விதவைகளுக்கு வாழ்வளியுங்கள்.
- தலாக் கூறினாலும் தவிக்க விடாதீர்கள்.

இத்தகைய கண்ணியமான வாழ்வைக் கொடுத்த இஸ்லாத்தின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு வாழும் ஒவ்வொரு முஸ்லீம் பெண்ணும் இஸ்லாத்தின் கண்ணே யாவாள்.

துணைநூற்கள்

குர்ஆன் மூலமும் உரையும்

இஸ்லாமிய எழில் மஞ்சரி-கமருன்னிஸா அப்துல்லா

இஸ்லாம் வழங்கும் பெண்ணுரிமை - முஹம்மத் பஷீர்

பெண்களும் இஸ்லாமும் - மௌலான சையத் ஜமாலுத்தீன் உமரி

The World is my country, all mankind are my brethren, and to do good is my religion.

- Thomas Paine

Human beings must be known to be loved; but Divine beings must be loved to be known.

- Blaise Pascal

Science without religion is lame, religion without science is blind.

- Albert Einstein

You are the sum total of everything you've ever seen, heard, eaten, smelled, been told, forgot —it's all there. Everything influences each of us, and because of that I try to make sure that my experiences are positive. **— Maya Angelou**

ISSN 2320-4842

மச்சமுனி நாயனாரின் திருமந்திரம் – 800

முதுமுனைவர் வினோத் வாசுதேவன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தாகூர் அரசுக் கலை அறிவியல் கல்லூரி, புதுவை 605 008

தமிழ்நூல் பதிப்புக்களைப்பற்றி ஆராய்வதும் விவாதிப்பதுமான ஒரு நல்ல சூழல் இக்காலத்தில் உருவாகி உள்ளது. இது வரவேற்கத்தக்கது. ஆனால், ஆய்வாளர்கள் சங்க இலக்கியத்தையும் தொல்காப்பியத்தையும் பற்றித்தான் கவனம் செலுத்துகிறார்கள். பிற தமிழ்நூல்களைப்பற்றி எழுதுவது மிகவும் குறைவாகவே உள்ளது. ஆனால், நாம் கவனம் செலுத்த வேண்டிய தமிழ்நூல்கள் ஏராளமாக உள்ளன. அத்தகைய இலக்கிய, இலக்கண நூல்கள்தான் தமிழ் மொழிக்கு ஒரு நீண்ட வரலாற்றை உருவாக்கித் தந்து, மற்ற இந்திய மொழிகளிலிருந்து தமிழின் தனித்தன்மையை நிறுவிக் காட்டுபவையாக அமைந்துள்ளன (ப.16 உங்கள் நூலகம் மாத இதழ், பொ. வேல்சாமி, ஆகஸ்ட்-2011).

இக்கட்டுரைக்குப் பொ. வேல்சாமியின் கூற்று மிகவும் பொருத்தமுடையதாக அமைகிறது. திருமந்திரம் என்றால் அனைவரின் நினைவுக்கு வருவது திருமூலரின் திருமந்திரம்தான். அந்தத் திருமந்திரத்திற்கே பல பதிப்புகள் உள்ளன. அவை தனித்த முனைவர் பட்ட ஆய்விற்கு உரியவை. இக்கட்டுரையில் கூறப்படும் திருமந்திரம் என்ற நூல் 'மச்சமுனி நாயனார்' எழுதியதாகும். 'தாமரை நூலகம்' என்ற பதிப்பகம் இதைப் பதிப்பித்துள்ளது. இந்த நூலைப்பற்றி அறிமுகப்படுத்துவதும் இந்நூலிலுள்ள சிறப்பான செய்திகள், இந்த நூலின் பதிப்பு சார்ந்த செய்திகள் போன்றவற்றை எடுத்தியம்புவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்நூலிலுள்ள சிறப்பான செய்திகள்

சைவ சித்தாந்தக் கருத்துகள், சித்த வைத்திய குறிப்புகள், யோகநெறி, தியானம் ஆகியவற்றைப்பற்றிய விளக்கமான செய்திகள் மச்சமுனி நாயனாரின் திருமந்திரத்தில் உள்ளன.

1.1 சைவச் சித்தாந்தச் சாரம்

இந்நூலில் சைவ சித்தாந்தக் கருத்துகளின் சாரம்சம் உள்ளது. பதி, பசு, பாசம் என்பது சைவத்தின் அடிப்படைத் தத்துவம். சைவ சித்தாந்தத்தில் பொதுவாகக் கூறப்படுபவை என்னவென்றால், 'பசு' என்ற நம் எயிர் 'பதி' என்ற இறைவனுடன் ஒன்றியிருப்பதே 'பாசம்' என்ற கட்டுப்பாடு ஆகும்.

இந்த நூலில் அந்த மூன்றும் அறிவோடு சேரும்போது ஏற்படும் வெளிப்பாடுகள்பற்றி, மச்சமுனி நாயனார் கூறியுள்ளார். அறிவு பசுவோடு சேரும்போது கோபமும் கெட்ட புத்தியும் உண்டாகுமாம். அறிவு பாசத்தோடு சேரும்போது அறியாமையும் மாயையும் உண்டாகுமாம். அதுவே பதி என்ற இறைத்தன்மையோடு சேரும்போது சிவயோகம் பெற்று முக்தியடைவோம்.

வார்பொரு ளறிவு வளர்பதிச் சோதியில்
சீர் சிவயோக சிவபதி சேர்வான்
நேர் பதியான நிர்ணயங் காண
கூர்பதி வான குணமது வாமே! (ம-40)

இவை பதி, பசு, பாசத்தினுடைய தொழிற்குணங்கள் என ஆசிரியர் கூறுகிறார்.

1.2 மூலிகை வைத்தியம்

எந்தவொரு சித்தருடைய நூலிலும் மூலிகைகள், சித்த வைத்திய குறிப்புகள் போன்றவை அடங்கிய இயற்கை மருத்துவச் செய்திகள் கண்டிப்பாக இருக்கும். மச்சமுனி நாயனாரின் திருமந்திரத்தில் பல்வேறு மூலிகைகளையும் நாட்டு வைத்தியச் சரக்குகளையும் அவற்றைத் தயாரிக்கும் முறைகளையும் ஆசிரியர் கூறியுள்ளார். கல்லுப்பு, முப்புக்குரு, சீன வைப்பு, சார வைப்பு, இங்கு காயம் போன்ற பாடல்களுக்கு இடப்பட்ட தலைப்புகளே நூலிலுள்ள இயற்கை மருத்துவம் சார்ந்த செய்திகளுக்குப் போதுமான சான்றுகள் ஆகும்.

நாம் யோசிக்காத அளவிற்குச் சித்த வைத்தியத்திலேயே புதிய மருந்துகள் செய்யும் முறையைக் கூறியுள்ளார். சான்றுக்கு, 'சார வைப்பு' என்ற மூலிகை மருந்தைச் செய்யும் முறையை வாசிக்கையில், சித்த வைத்தியம் தெரியாதவர்களுக்கு வியப்பாக இருக்கும்.

பசுவின் நீர் (கோமூத்திரம்), ஒட்டகத்தின் நீர், ஆனையின் நீர், ஆட்டின் நீர், மனிதன் சிறுநீர் ஆகிய

ISSN 2320-4842

வற்றை ஒரு சட்டியில் ஊற்றி, வெடி உப்பு போன்ற வற்றைக் கலந்து எரித்து, அதை ஒரு மண்டலம்வரை பூமிக்கு அடியில் புதைத்துவைத்தால் நவச்சாரம் என்ற மருந்து கிடைக்குமாம். (ம.ப. 156)

கருநெல்லி, சோதி விருட்க்ஷம், கருங்கொடி வேலி, கல் தாமரை, கற்பூரத் தாழை போன்ற பல மூலிகை களின்பெயர்களும் அவற்றின் குணங்களும் இந்நூலில் உள்ளன. 'முக்கூடற்பள்ளு' என்ற நூல் நெல் வகை களைக் கூறுவதைப்போல இந்நூல் மூலிகை வகை களைக் கூறுகிறது.

1.3 யோகமுறையும் தியானமும்

பல யோகமுறைகளையும் பலவகையான தியானங்க ளையும் பயின்றபின் உடலிலுள்ளகுண்டலினி ஒளியை உணர்வதே சித்தர்களின் அடிப்படைச் செயல்பாடு. இதைப்பற்றி இந்நூல் விரிவாக விளக்குகிறது. குய்யம் என்ற குறிப்பகுதிக்கும் குதம் என்ற மலவாய்ப் பகுதிக் கும் இடையில் உள்ள மூலாதாரம் என்ற பகுதிக்குள் வட்ட வடிவிலுள்ள குண்டலினி ஒளியில் நந்திபிரா னைக் கண்டதாக மச்சமுனி நாயனார் கூறுகிறார்.

காப்பான நந்தி கருணை பராபரங்
கூப்பான குண்டலி குகையி லடங்கிடுந்
தாப்பான பிரமன் தன்னொடு தன்பதம்
வாய்ப்பாய்என்நெஞ்சில் மகிழ்ந்து கொண்டேனே(ம.பா-2)

இந்நூலிலுள்ள இறுதிப்பாடல்கள் 'றீம்', 'ஓம்' போன்ற ஒலிகளை மனதிற்குள் ஒலித்து, தியானம் செய்து, கபால தீட்சையைப் பெறும் முறைகளை விரிவாக எடுத்தியம்புகின்றன.

நூலின் மூலப்பாடல்கள்

திருமூலரின் திருமந்திரத்திற்கும் மச்சமுனி நாயனார் திருமந்திரத்திற்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடு என்ன வென்றால் மச்சமுனி நாயனார் திருமந்திரப் பாடல் கள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன.

சாரச்சுன்னம்
ஒடுங்கிய தேக முறுதி திறம்பட
அடங்கிய பற்ப மறிந்து வுணர்ந்திடு
துடங்கிய சாரச் சுன்ன மருந்தினாய்
அத்தி வலுக்குந் திண்ணமே (பா-504 ப.எண்-93)
திண்ணமாய் மண்டலந் செலுத்திடு சாரத்தை
உண்ணப் பயந்து ஒடுங்கி யிராதே
வின்னங் களில்லை விரசுக் கொடுத்திடு
அண்ண யெனக்கு அருளின வாறே. (பா-505 ப.எண்-93)

மேலேயுள்ள இரண்டு பாடல்களில், முதல் பாடலின் இறுதிச்சீரான (திண்ணமே) என்பது அடுத்த பாட லின் முதற்சீராக (திண்ணமாய்) அமைகிறது. இவ் வாறு நூல் முழுவதும் அந்தாதித் தொடையில் அமை யும் சித்தர் நூல் இதுமட்டுந்தானா என்பதை ஆராய வேண்டும்.

ஒருசில பாடல்களைப் படித்தவுடனே இந்த நூலை அச்சுக் குக் கொடுத்துவிட வேண்டும் என்ற தூண்டுதலை உண்டாக் கிய முதல் நூல் இதுதான் என்று சொன்னால் மிகையா காது. அவ்வளவுஅற்புதமான பாடல்கள்! சந்தம்! ஓசை நயம்! வர்ணிக்க முடியாத அழகு படைத்தவை இந்தப் பாடல்கள் (எஸ்.பி.இராமச்சந்திரன், பதிப்பாசிரியர்). இவரின் கூற்றுக்கு ஒரு நல்ல சான்று:

நீறான அப்பு நிலையான வுப்பூ
சீறாகக் கூடி சிவமாக நின்று
கூறாக ரெண்டு மொன்றாகக் கூடிக்
காறான காரங் கல்லுப்பு மாச்சே! (பா-81)

இப்பாட்டைப் படிக்கும்போதே அதிலுள்ள எதுகை மோனைகள் சேர்ந்து கூட்டும் தாள லயம் இனிமை யாக இருப்பதை உணர முடிகிறது. 'தானன்ன தத்த தானன்ன தத்த' என்ற தாள மெட்டு இப்பாட்டில் இருப்பதைக் கண்டு சுவைக்கலாம். மச்ச முனியாரின் கவித்துவம் இதில் விளங்குகின்றது.

2.2 தொகைநிலை உரை

இந்நூலுக்கு ஆர். கோவிந்தராஜன் என்பவர் உரை செய்துள்ளார். ஒவ்வொரு தனிப்பாடலுக்கும் தனித் தனியாக உரை செய்யாமல், ஆங்காங்கே ஒன்றுக் கும் மேற்பட்ட பாடல்களுக்கு சேர்த்தாற்போல உரை எழுதியுள்ளார். சான்றாக, மேற்கூறிய சாரச்சுன்னம் என்று தலைப்பிட்ட இருபாடலுக்கும் பின்வருமாறு ஒரே பத்தியில் உரை செய்துள்ளார்.

சாரச்சுன்னத்தை அறிந்து அதைப் பக்குவமாய் ஒரு மண்டலம் உண்ண வேண்டும். இந்தச் சுன்னத்தை உண் டால் தேகம் உறுதியாகி வலிக்கும். சுன்னத்தை உண் பதற்கு பயந்துகொண்டு நிறுத்திவிடாதே ஒன்றும் ஆகாது. பயம் இல்லாமல் கொள் என்னுடைய குருநாதன் எனக்கு சொன்னது இது. (ப.190)

இவ்வாறு, பத்துக்கும் மேற்பட்ட பாடல்களுக்கும் அப் பாடல்கள் எல்லாவற்றிற்கும் சேர்த்தாற்போல் ஓரிரு பத்திகளில், ஆர். கோவிந்தராஜன் உரை எழுதியுள் ளார். ஒன்றுக்கும் மேற்பட்ட பாடல்களின் சாராம்சத்தை உள்வாங்கி, அவற்றிற்கு ஓரிரு பத்திகளில் உரை செய்வது உரையாசிரியரின் 'சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும்' திறனைக் காட்டுகிறது.

2.3 பிழைத்திருத்தம்

இந்நூலின் பதிப்பில் குறிப்பிடத்தக்க பகுதி இதுவே. நூலின் தொடக்கப்பக்கங்களில் இடம்பெறும் இப்பகுதி யில் மூலப்பாடல்களிலுள்ள சில பிழையான வார்த் தைகளைக் குறிப்பிட்டு, அதற்குத் திருத்தமான வார்த் தைகளைப் பதிப்பாசிரியர் காட்டியுள்ளார். சான்று பின்வருமாறு:

பக்கம்	பாடல்	அடி	இப்படி இருக்க வேண்டும்
1	44	4	அருமை வளம்பதியாம் பசு பாசமே
1	45	1	பாசம் நிறைந்த பதி பசு மூன்றையும்

2.4 உரையாசிரியர்களின் கூடுதல் தகவல்கள்

பொதுவாக, நம் மரபு உரையாசிரியர்கள் மூலப் பாடல்

களுக்கு விளக்கங்களைத் தருவதோடு அவை சார்ந்த கூடுதல் செய்திகளையும் தருவார்கள். அவ்வாறே இந்நூலுக்கும் ஆர். கோவிந்தராஜன் உரையோடு தன் கூடுதல் அறிவையும் சேர்த்துள்ளார்.

இக்கட்டுரையில் மூலிகைகள் பற்றிய பகுதிகள் சார வைப்பு என்ற மருந்தின் தயாரிப்பு இடம்பெற்றிருக்கும் (க.ப. எண் 2). அதை எழுதிய ஆர். கோவிந்த ராஜன் அந்தச் செய்தியோடு தன் காலத்தில் கிடைக் கும் அதே மாதிரியான போலி மருந்தைப் பற்றியும் கூடுதலாகத் தெரிவிக்கிறார். அது வருமாறு:

இது பழுப்பு நிறமாகவும் வாயில் இட்டால் புளிப்பாகவும் இருக்கும். இந்தச் சரக்கு சிறந்த சரக்காகும். ஆனால் கடையில் கிடைக்கும் நவச்சாரம் என்பது அரேபியா, துருக்கி போன்ற நாடுகளில் ஒட்டகம், மாடு, குதிரை, ஆடு போன்ற மிருகங்களின் சாணத்தை உலர்த்தி எரித்து அதை ஏதேனும் ஒரு மிருகத்தின் நீரைவிட்டுக் கரைத்து தெளியவைத்து மண்பாண்டத்தில் விட்டு சுண்டக்காய்ச்சி உலர்த்தித் துண்டுத்துண்டாக நறுக்கி அனுப்புகிறார்கள். இந்த முறையில் தயாரித்த சாரம் மட்டமான சரக்காகும் (ப-156).

இதுபோலப் பல இடங்களில் சமகாலச் செய்திகளை உரையோடு எழுதியது பாராட்டுக்குரியது. உரையாசி ரியரின் அறிவுத்திறனைக் காட்டுகிறது.

நூலின் பதிப்பு சார்ந்த சிக்கல்கள்

3.1 ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்களுக்கு எல்லாம் ஒன்று சேர்த்தாற்போல் உரை செய்திருப்பதற்குக் காரணம் அந்தாதித் தொடையிலான பாடல்கள்தானா என்பதை ஆராய வேண்டும். இவ்வாறு அமையும் உரையை வாசிக்கும்பொழுது ஒரு சிக்கல் எழுகிறது. தனித்தனிப் பாடல்களுக்குப் பொருத்தமான உரையைக் காண முடியவில்லை.

சான்றாக: 'வாலை பூசை' என்ற தலைப்பின்கீழ் மூலப்பாடல்கள் 69இலிருந்து 78வரைக்கும் உள்ளன. ஆனால், உரை 69முதல் 80 பாடல்கள் வரைக்கும் உள்ளன. 79ஆவது பாடலிலிருந்து 'கல்லுப்பு' என்ற தலைப்பு தொடங்குகிறது. இந்நிலையில், 79ஆவது பாடலுக்கு மட்டும் உரை காண்பது கடினமாகிறது.

மேலும், கல்லுப்பு என்ற தலைப்பில் மூலப்பாடல்கள் 79இலிருந்து ஆரம்பிக்கிறது. ஆனால், 81ஆம் பாட லிலிருந்துதான் கல்லுப்பு என்ற தலைப்புக்குரிய விளக் கமும் கிடைக்கிறது. உரையும் அவ்வாறே அமைகிறது.

3.2 இந்நூலின் பதிப்பாசிரியர், மச்சமுனி நாயனார் வரலாற்றைப் பற்றியோ அவர் எழுதிய திருமந்திரத் தின் காலம் பற்றியோ எந்தக் குறிப்பையும் பதிப்புரை யில் தரவில்லை. இப்பொழுது கிடைத்திருக்கும் நூலின் முதற்பதிப்பு ஆண்டு 1991. ஆனால், ரோஜா முத் தையா ஆராய்ச்சி நூலகத்திலிருந்து பெறப்பட்ட தக வல்படி 1885இலேயே மச்சமுனி நாயனாரின் திரு மந்திரம் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பதிப்பைப் பற்றியோ அது சார்ந்த நூலோ கிடைக்க வில்லை.

4. **நூல் சார்ந்த மேலாய்வுக் களங்கள்**

4.1 மேற்கூறிய சிக்கல்களே மேலாய்வுக் களங்களுக்கு அடித்தளமாக அமைகின்றன. தாமரை நூலகம் வெளி யிட்ட மச்சமுனி நாயனார் திருமந்திரத்தைத் தவிர வேறு பதிப்பு ஏதும் கிடைக்கிறதா என்பதை ஆராய வேண்டும். அவ்வாறு கிடைக்கவில்லையென்றால், புதிய பதிப்பும் புதிய உரையும் வெளியிடப்பட வேண்டும்.

4.2 மச்சமுனி நாயனார் திருமந்திரத்திற்கும் இதற்கு முதல்நூலான திருமூலர் அருளிய திருமந்திரத்திற்கும் ஓர் ஒப்பாய்வு செய்ய வேண்டும். மச்சமுனி நாயனார் திருமந்திரத்திலுள்ள சில தொடர்களின் நடை திரு மூலர் திருமந்திரத்திலும் காணப்படுகிறது. சான்றாக,

கண்டபொருளைக் காரண மாக
இன்று நான் சொன்ன எண்ணூறு மந்திரம்
விண்ட பொழுதினில் விபர மறிந்தபேர்
அண்டமும் பிண்டமு மறிபவர் தானே (பா-65, ம.நா திருமந்திரம்)

இப்பாட்டின் ஈற்றடியில் அறிபவர்தானே என்ற தொடர் இருக்கின்றது. இதேபோல் திருமூலர் திருமந்திரத்திலும்

என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படுவார் இல்லை தானே (பா-8 திரு மூலர் திருமந்திரம்)

இதுபோலப் பாடல் எண் 8,9,16,19 ஆகியவையும் தானே என முடியும் தொடர்களைக் கொண்டுள்ளன. மச்சமுனி நாயனார் திருமந்திரத்திலும் திருமூலர் திருமந்திரத்திலும் நந்திக் கடவுள்கள் பற்றிய செய்தி கள் உள்ளன. இப்படிப் பல ஒப்புமைகள் இருக்கலாம்.

4.3 மந்திரம் என்ற ஒருவகை நூலை எழுதுபவர்கள் நிறைந்த மொழியை அதாவது மொழி வளமும் அறிவு வளமும் நிறைந்தவர் ஆவார்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப (தொல். 1434)

மந்திரம் என்ற நூல் மறைவான மொழிகளை அதா வது உடனடியாக விளங்க முடியாத படைப்புகளைக் கொண்டதாக இருக்கும் என்ற தொல்காப்பியத்தின் கூற்றுக்கேற்பத் திருமூலர் திருமந்திரம் அமைந்திருக் கிறது. மச்சமுனிநாயனாரின் திருமந்திரமும் அப்படிப் பட்ட படைப்பாக்கத்தைக் கொண்டிருக்கிறதா என் பதைப் பார்க்க வேண்டும்.

4.4 மச்சமுனி நாயனார் திருமந்திரத்தில் நிகண்டு பற்றி சொல்லாட்சி காணப்படுகிறது.

அறிவாகச் சொன்ன ஆதிநிகண்டு (பா-66)

முதல் நிகண்டான திவாகர நிகண்டின் காலம் கி.பி 9ஆம் நூற்றாண்டு (மு. அருணாசலம்). எனவே இந்நூலின் காலம் கண்டிப்பாகக் கி.பி. 10ஆம் நூற்

(தொடர்ச்சி: பக். 48)

ISSN 2320-4842

A STUDY TO ANALYSE THE ORGANIZATIONAL CULTURE AMONG SILK WEAVERS USING OCTAPACE MODEL, WITH SPECIAL REFERENCE TO THANJAVUR DISTRICT

Dr. Chitra Isac
Assistant Professor, Department of Business Administration
Nirmala College for Women (A), Coimbatore 641 018

Abstract

This study is aimed in addressing Sustainable Development Goal 8 & 12 pertaining to promoting sustained, inclusive, and sustainable economic growth, full and productive employment, and decent work for all and to ensure sustainable consumption and production patterns. An analysis is undertaken among 630 silk weavers living in and around the historic town of Thanjavur. OCTAPACE tool was used to rank the organisational culture of the silk weavers using Garret Ranking analysis, with an effort to identify the dimension which needs to be developed to sustain the dwindling handloom industry. Finding revealed that the silk weavers lacked in confronting their existing scenario as the prime cause for a disruptive organisational culture.

Keywords: inclusive and decent work for all, sustainable consumption and production process, organisational culture, OCTAPACE, quality of work life

1.1 Introduction

Like other handloom industries of India, silk weaving too, is fast dwindling. Once considered auspicious, pure silk has lost its glitter and pride to the fast-growing art silk. In this scenario the silk weavers are the most affected. Their quality of work life has largely declined forcing these skillful artisans to take up other occupation to sustain themselves and their family members, thus erasing one of the rich heritages of India.

The sustainable development goals framed by United Nation address the need for sustainable growth for a better life for the present and future generation. The focus on sustainability has created a great awareness among the buyers to be conscious about buying eco-friendly products. This has made the producers to revert to producing eco-friendly products to cater to the increasing environmental conscious consumers. Mushrooming of handloom industry is focused on attainment of Goal 12 of the SDG – Responsible Consumption and Production.

This scenario is the right time to enable declining handloom industries to revive the traditional art of silk weaving, thus contributing towards sustainability and improving the quality of work life among the dwindling silk weaving community. This study analysed the organization culture of the silk weavers using OCTAPACE (openness, confrontation, trust, authenticity, proactive, autonomy, collaboration & experimental) model, to enable in human resource development of the silk weavers.

1.2 Review of Literature

Rekha Koshla (2016)[1] in her study titled OCTAPACE Culture: A Study of Hospitality Sector in Lucknow Region signified that the management must work for developing a performance driven environment that sketches strong associations between culture, management practices and organizational effectiveness, which is interconnected and essential for every organization for its development and enhancing employee performance. The results of the present study increase extant knowledge and understanding on the knowledge of the relationships between various organizational culture parameters.

Adithya Pradyumna (2018)[2] in his article Planetary Health and Food System: Insights from Global SDGs highlights the importance of social contribution for attaining the SDGs. He expresses that the universal adoption of the UN's 2030 Agenda for Sustainable Development and the 17 Sustainable Development Goals (SDGs) is a strong sign of global interest in integrating economic, social, and environmental considerations in the development aspirations of UN member states. An ambitious outcome of such an integrated perspective is a substantial improvement in public health and social wellbeing while safeguarding the natural and economic systems on which these rely.

Lucid and Teams' (2023)[3] blog post titled Organisation and OCTAPACE Culture summarises the OCTAPACE

[1]Rekha Koshla, OCTAPACE Culture: A Study of Hospitality Sector in Lucknow Region, Journal of General Management Research, Vol. 3, Issue 2, July 2016, pp. 50–60, ISSN 2348-2869 Print
[2]Pradyumna A, Planetary health, and food systems: insights from global SDGs., Lancet Planet Health. Vol. 2, Issue 10, 2018; 2: e417-e418, DOI: https://doi.org/10.1016/S2542-5196(18)30202-X
[3]https://lucidoutsourcing.com/blog/organisation-and-octapace-culture

CULTURE to include ethics, values, beliefs, attitudes, norms, ethos, climate, environment, and culture. The eight dimensions of OCTAPACE culture are openness, confrontation, Trust, Authenticity, pro-action, autonomy, collaboration, and experimentation which are essential for a strong and successful organization. A culture with OCTAPACE values has the greater chance of achieving high involvement and satisfaction, teamwork, growth, and free flow of communication within the organization The most important aspect of organizational culture are the values it practices.

1.3 Conceptual Framework

In this empirical research work, the researcher has applied OCTAPACE traits to identify and analyze the prevailing organization culture and its impact on quality of work life and the socio-economic well-being of silk weavers in Thanjavur district of Tamil Nadu. The focus of OCTAPACE is to analyze the existing Organizational Culture prevailing among the silk weavers. A profile of an organization on these aspects shall help to decide the appropriate elements of Human Resource System to modify to sustain business activities. Besides, the study shall assist the silk weavers to focus on the positive aspects of the culture and support the silk weaving community to recognize the merits that favor a conducive environment which shall facilitate a good Quality of Work Life and improved Socio-Economic Condition.

Analyzing the Organizational Culture could highlight the extent to which the various dimensions of OCTAPACE (as framed by Dr. T. V. Rao) can impact silk weavers' life. Given below are the impacts regarding each of the dimension:

- Openness among individuals and group behavior of the silk weavers, shall be beneficial and desirable for their improved work life.
- Confrontation-exploration shall empower the silk weavers to work jointly with others to find mutually beneficial solutions.
- Trust shall improve cooperation and cordiality among the silk weavers.
- Authenticity helps the silk weavers to acknowledge their inner most feelings and accept themselves, as well as others to arrive at mutually acceptable standards.
- Proactive assists the silk weavers to anticipate issues and take advantage of the challenges of the future, with a right attitude.
- Autonomy empowers silk weavers and lays a strong foundation to develop collaboration.
- Collaboration builds interpersonal and intrapersonal relationship among the silk weavers and the traders, to take ownership of their work life.
- Experimentation emphasizes innovative and creative outlook among the silk weavers.

The strategic plan is to organize the cultural values in the right perspective, to change the belief and attitude of the silk weavers and to provide a sense of continuity for them to link their present with a better future. This is the vision which is the guiding spirit to enable the silk weavers to re-establish faith in the silk industry and to transform the Weavers' living standards and quality of work life. The Exhibit 1.1 below, presents figurative explanations of the above enumerated conceptual framework.

EXHIBIT 1.1
CONCEPTUAL FRAMEWORK OF THE STUDY



1.4 Scope of the Study

The study focuses on the silk weavers living in and around Kumbakonam, Thirubhuvanam, and Thanjavur Town. In the research work the Researcher attempts to analyze the Organizational Culture prevailing among the silk weavers and its impact on their Quality of work life and Socio-Economic condition. The study tries to find out the cultural values which are contributing and those which are hindering the work life of the silk weavers.

Further, this study is undertaken to

1.5 Objectives of the Study

To determine the cultural value which significantly impacts the silk weavers, in Thanjavur District

To provide suggestion to revive the handloom silk weaving industry.

To provide suggestion to attain 8^{th} and 12^{th} Sustainable Development Goals

1.6 Research Methodology

The current study is both explorative and descriptive in nature.

1.7 Focus Area of the Study

The study focuses on the Silk weavers living in and around the taluks of Kumbakonam, Thirubuvanam and Thanjavur Town, of Thanjavur District in Tamil Nadu.

1.8 Sampling Framework

Silk weaving occupies an important place in the economy of Thanjavur District as it provides livelihood for

more than 60,000 people in this district. The number of looms in Thanjavur District stood at 13233. The population is distributed, as 5000 Master Weavers, 200 Independent Weavers and 8033 Co-operative Weavers.

Five percent was chosen from the actual population as the sample, which is geographically widely distributed around Kumbakonam, Thirubuvanam and Thanjavur Town. The respondents were approached by the Researcher. Table 1:2 gives the sampling design.

TABLE: 1.1
SAMPLE FRAMEWORK OF THE STUDY

Sl. No	Regions	Mater Weaver		Independent Weaver		Co-operative Weavers		Total
		No	%	No	%	No	%	
1.	Kumbakonam	49	7.34	2	0.29	78	11.79	129(19.00)
2.	Thirubuvanam	176	26.65	7	1.06	283	42.82	467(71.00)
3.	Thanjavur Town	25	3.78	1	0.15	40	6.06	66(10.00)
	Total	250	37.76	10	1.51	402	60.67	662(100)

Source: dcmsme.gov.in/dips/IPSThanjavur 2012.PDF

The total samples interviewed were 662, but at the end of the data collection 32 questionnaires were found to be incomplete, these 32 were removed from samples. Thus, the study considered only the opinion and perceptions expressed by 630 sample subjects.

1.9 Data Source

Primary data was collected with the help of well- structured questionnaire, copy of which is given as support to this report. Secondary data were sourced from the research work done by predecessors, handloom textile reports, magazines, journals, newspaper, and websites reports.

1.10 Cultural Values in Practice

The Silk weavers of Thanjavur are no exception to this Human Resource System. They flaunt an Organizational Culture with strong dose of societal culture. Now, facing a turbulent situation, poor socio-economic condition and diminishing Quality of Work Life, it has become essential to revive the socio-economic condition and Quality of Work Life of the Silk Weavers. For this to happen, understanding and streamlining the pulse of the Organizational Culture is necessary. Organizational Culture analysis helps, the group to focus on the helpful values of the culture, and help the group to recognize, what the consequences are necessary for sustaining a cultural value. These are contributing factors towards the betterment of the organization.

1.11 Research Design

The various dimensions of Organisational Culture based on the OCTAPACE were ranked by the respondents, their scores were put to test on Garret Ranking. Thus, the findings are elucidated below.

GARRET RANKING

This technique was used to rank the preference for most important topic among the respondents i.e. the organizational cultural values the Silk weavers adhere to. In this method, the respondents were asked to give ranks according to the magnitude of the importance. The order of merit given by the Silk weavers were converted into ranks by using the formula.

Percentage position = 100 (Rij- 0.5)/ Nj

Where, Rjj = Rank given for i th factor by j^{th} individual

Nj = Number of factors ranked by j^{th} individual

The percentage position of each rank thus obtained is converted into scores by referring to the table given by Henry Garrett. Then for each factor the scores of Individual respondents are added together divided by the total Number of respondents for whom scores were added. These mean scores for all the products are arranged in the descending order, ranks are given, and most important problems are identified.

TABLE 1.2

PERCEPTION TOWARDS ORGANISATIONAL CULTURAL VALUES

S. NO	CULTURAL VALUES	SCORE		RANK
		TOTAL	MEAN	
1	X1-Openness	26912.50	42.72	3
2	X2-Confrontation - Exploration	29700.00	**47.14**	1
3	X3-Trust	29650.00	47.06	2
4	X4-Authenticity	25762.50	40.89	6
5	X5-Pro-activness	25887.50	41.09	5
6	X6-Autonomy	24075.00	38.21	7
7	X7-Collabaration	12375.00	**19.64**	8
8	X8-Experiment	26512.50	42.08	4



Exhibit 1.2

It is seen from the above table that among the total respondents, the mean preference score for Organizational Cultural values ranges from 19.64 to 47.14 and the variable 'X2-Confrontation- Exploration has secured

higher mean score and stood at top, followed by 'X3-Trust has secured next higher mean score and stood at second, 'X1-Opennessstood at third, 'and finally 'X7-Collabarationsecured least mean score and stood at last.

1.12 Findings

Confrontative attitudes especially regarding the governments polices has significant influence on the Silk Weavers, thus the Organizational Cultural virtue of confrontation, was most challenging to the Silk Weavers.

The cultural value of Collaboration has least significant influence on the silk weavers, thus the organizational value of Collaboration, was least challenging to the silk weavers.

1.13 Suggestions

1. Organizational Culture: A strong organizational culture interlinked with a societal culture, had bonded the Silk weavers together for a long time. This has created a homogeneous group of weavers, who have formulated various common values and beliefs, and have sustained this rich skill, even in times, when other handloom sectors were facing heavy crises. As the demand for silk products started diminishing, the Silk weavers also started drifting apart, and have scattered themselves into various jobs. To re-establish the silk weaving as an occupation, it is suggested that the Silk weavers bind themselves together again and recreate a stronger organisational culture among them. This traditional approach bond with new corporate outlook can help in sustaining and enhancing the old and world-renowned art of silk weaving.

2. Cultural Values: The primary problem the silk weavers are facing is coping with or accepting changes, both internal and external in their occupation. It is suggested that the silk weavers, confront the change head on. It would also be meaningful, if the Silk weavers have an open discussion, regarding matters which disturb their traditional occupation. Arriving at a feasible and permanent solution will help in sustaining their Quality of Work Life, Socio Economic Wellbeing and sustainable production and consumption of silk fabrics.

To build stronger relationship among them, the Silk Weavers must maintain trust among themselves. This would naturally build stronger association among them. Finally, the Silk Weavers, to sustain their art, should think out of the box, and experiment weaving silk fabrics for other uses also, along with the traditional saris and dhotis. Also, the Silk weaver should show willingness to experiment with new organizational structure and work environment.

1.14 Scope for Further Study

This study does not indicate the end of the road for the silk weaving sector, rather an eye opener for policy makers, social entrepreneurs, and silk weavers in recreating the rich traditional silk weaving industry of India. In seeking ways to deal with the effective economic expansion of the silk weaving sector, conducting an objective assessment of all causes and their interactions shall proves more useful than pointing fingers at a single or few causes.

Organizational Culture shall provide a benchmark of the present work and social life condition of the Silk Weavers. The information on these factors can contribute to defining policy on Rural and Cultural Management, by supporting in providing inclusive job opportunities and responsible production and consumption of eco-friendly fabrics (i.e. silk). Reviving silk weaving will pave a way for attaining UN Agenda 2030 of Sustainable Development Goals.

Reference

1. Anupama K. Malagi, Chachadi A.H. (2013); Innovative HR Practices to Improve Socio-Economic Conditions of Women Workers in Garment Industry - An Empirical Study, IOSR Journal of Business and Management (IOSR-JBM) e-ISSN: 2278-487X, p-ISSN: 2319-7668. Volume 9, Issue 6 (Mar. - Apr. 2013), PP 16-21 www.iosrjournals.org

2. Fillis, I. (2010); "The art of the entrepreneurial marketer", Journal of Research in Marketing and Entrepreneurship, 12 (2), pp.87 – 107

3. Jayashankar. J. Prof Human Resource Management, Pg. no. 29.1, Margham Publications, ISBN: 978-93-81430-31-6

4. Jermy. N. Smith, Great Moments in World Trade, Rewinding the Silk Road, World Trade Journal, October 2005, page no. 68.

5. Lucid Team, Organisation and OCTAPACE Culture, Lucid Outsourcing Solutions, March 2023, https://lucidoutsourcing.com/blog/organisation-and-octapace-culture

6. Nicole Brace, Richard Kemp, Rosemary Snelgar (July 2012), SPSS for Psychologists, ISBN- 10, 1848726007.

7. Pradyumna A, Planetary health, and food systems: insights from global SDGs., Lancet Planet Health. Vol. 2, Issue 10, 2018; 2: e417-e418, DOI: https://doi.org/ 10.1016/S2542-5196(18)30202-X

8. Prasad. L. M- (2004) Organisational Behaviour- Sultan Chand & Sons ISBN 81-7014-888-X

9. Rao T.V., 1999]. HRD Audit Evaluating the Human Resource Function for Business Improvement

10. Rekha Koshla, OCTAPACE Culture: A Study of Hospitality Sector in Lucknow Region, Journal of General Management Research, Vol. 3, Issue 2, July 2016, pp. 50–60, ISSN 2348-2869 Print

11. Schein, E.H. (1999). The Corporate Culture Survival Guide: Sense and Nonsense about Culture Change. San Francisco: Jossey-Bass.

12. Tangirala H.S.K (2006): "Professionalism in Co-Operatives", TN Journal of Co-operation, Jan., 2006, pp. 17-22.

13. Tyler, T.R., Kramer, R. & John, O. (Eds.)(1999). The Psychology of the Social Self. Mahwah, N.J.: Lawrence Erlbaum. http://www.law.yale.edu/documents/pdf/Faculty/Tyler_Pubs.pdf

14. Vaneet Kashyap, Prince Vohra, Tejbir Kaur (2012); Comparative Analysis of Organizational Culture: The Empirical study of IT Organizations in the Region of Mohali (Panjab, India), International Journal of Management & Business Studies, IJMBS Vol. 2, Issue 3, July - Sept 2012, ISSN : 2230-9519 (Online) | ISSN : 2231-2463 (Print)

ISSN 2320-4842

பேரறிஞர் அண்ணாவின் சொற்பொழிவும் சொல்லாற்றலும் – ஓர் ஆய்வு

முனைவர் ந. லெனின்
உதவிப்பேராசிரியர் (SS) – ஆய்வு நெறியாளர், மொழிகள் துறை
பெரியார் மணியம்மை அறிவியல், தொழில் நுட்ப நிறுவனம், வல்லம், தஞ்சை

ஆய்வுச்சுருக்கம்

சொல்லாற்றல்-சொல்லாற்றலின் சிறப்பு-சொல்லாற்றல் மிக்க அறிஞர் அண்ணா-தமிழக முதல்வராக அறிஞர் அண்ணா -கணவன் மனைவி-அவையறிந்து பேசும் அண்ணா-பேச்சுக்கலையில் ஈடுஇணையற்றவர்-சிலேடைப்பேச்சு-ஆங்கிலப் பொழிவுகள்-நகைச்சுவைப் பேச்சு-பேச்சில் கதைகள்-அண்ணாவின் உவமைத்திறன்.

தரவுச் சொற்கள்: அகத்தியன், சட்டம், ஈர்ப்பு, சேவை, கதா, கீழே, அண்ட் நீயூ, எஃகு, பிற.

முன்னுரை

தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் என்று பாடிய மகாகவி பாரதியின் வாக்கிற்பேற்ப, தமிழ் முழக்கமிட்டவர் அறிஞர் அண்ணா. இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற பேச்சுக்கலை வல்லவரான அவர், அழகு தமிழிலும், அன்னிய மொழியாம் ஆங்கிலத்திலும், அடுக்குத் தொடரிலும், எதுகை, மோனை, உவமையோடு பேசி இலட்சக்கணக்கான இளைஞர்களை, கற்றவர்களை, கல்லாதவர்களைத் தம் இயக்கத் துக்குள் கொண்டுவந்து சேர்த்த பெருமைக்குரியவர். அவரது சொல்லாற்றல் அனைவரையும் ஈர்த்த முதன் மையான ஆற்றலாகும். அவரது சொல்லாற்றல் மூலம் திராவிட இயக்கங்களை எவ்வாறு வளர்த்தார் என்ற வினாவிற்கு விடை காணும் நோக்கில் இக்கட்டுரை ஆராயப்படுகின்றது.

சொல்லாற்றல்

மனிதனின் சொல்லாற்றல் என்பது மிக வலிமையான ஓர் ஆற்றல் ஆகும். சொல்லுக்கு அகத்தியன் என்று ஒரு கருத்தும் உண்டு.

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது (குறள், 649)
பொருள்: தான் கருதியவற்றை நன்கு சொல்லவல்லவனாய் சொல்லும் போது சோர்வு இல்லாதவனாய் அஞ்சாதவனாய் உள்ளவனை மாறுபாட்டால் வெல்வது யார்க்கும் முடியாது.

சொல்லாற்றலின் சிறப்பு

மனிதனுடைய சொல்லாற்றல் என்ற ஆற்றல் ஒரு தனிச்சிறப்பான ஆற்றல், அது அவனுடைய மற்ற ஆற்றல்களில் அடங்காது (குறள், 641) என்று வள்ளுவர் கூறுகிறார்.

நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று (குறள், 641)
ஒருவன் தன் சொற்களால் பிறரை மகிழ்விக்க முடியும். துன்புறுத்த முடியும். ஆத்திரம் அடைய செய்ய முடியும். உணர்ச்சிவசப்படுத்த முடியும், தான் விரும்பும் செயல்களைச் செய்யுமாறு ஊக்குவிக்க முடியும். கல்வி கற்பிக்க முடியும். பிறரோடு உரையாடுவதால் அவர்களோடு கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள முடியும். தங்கள் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துரைக்கும் வலிமையான ஆற்றல் அனைவருக்கும் மிகவும் இன்றியமையாதது என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

சொல்லாற்றல் மிக்க அறிஞர் அண்ணா

தமிழ்நாட்டில் முதலமைச்சர் அறிஞர் அண்ணாவைப் பற்றித் தெரியாத தமிழர் எவரும் இருக்கமாட்டார்கள். தமிழ்நாட்டின் வரலாற்றில், தனக்கென்று தனியிடம் படைத்துக் கொண்டவர் அறிஞர் அண்ணா. வள்ளுவர் கூறும் சொல்வன்மைக்கு அவர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். அண்ணாவின் சொற்பொழிவில், கருத்துச் செறிவு இருக்கும், அழகிய தமிழ் இருக்கும், அடுக்குமொழி இருக்கும், நகைச்சுவை இருக்கும்.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து (குறள், 647) என்பதற்கிணங்க, தகுந்த சொற்களைப் பயன்படுத்திப் பேசுவார். அவர் அவையில் பேசும்போது, அவரால் கேட்பவர்களைச் சிந்திக்கவைக்க முடியும். சிரிக்கவைக்க முடியும்,

செயல்செய்யத் தூண்ட முடியும். மாற்றுக் கருத்துடையவர்கள்கூட அவர் பேச்சை விரும்பிக் கேட்பர். அவர் பேச்சைக் கேட்டவர்கள் அதை மறப்பதில்லை. நாம் அவருடைய பேச்சைக் கேட்கும் வாய்ப்பை இழந்து விட்டோமே என வருந்துவோர் இன்றும் உள்ளனர். அவரது சில சொற்பொழிவுகளை இன்றும் எண்ணற்றோர் வலையொளியில் (Youtube) கேட்டு மகிழ்கின்றனர்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல் (குறள், 643) என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக அவர் பேச்சு இருக்கும். அவர் அவையறிந்து பேசும் ஆற்றல் உடையவர். பாமர மக்களிடமும் பேசுவார். பாராளுமன்றத்திலும் பேசுவார். கல்லாதவர்களிடமும் பேசுவார், கல்லூரிகளிலும் பேசுவார், அரசியல் பேசுவார், பொருளாதாரம் பேசுவார், சட்டம் பேசுவார், இலக்கியம் பேசுவார், எந்தத் தலைப்பிலும் பேசுவார், எந்தத் தலைப்பும் இல்லாமலும் பேசுவார். அவர் இந்தியப் பாராளுமன்ற மேலவையில் ஆற்றிய சொற்பொழிவு, அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தில் (Yale University, New Haven Connecticut) ஆற்றிய சொற்பொழிவு மற்றும் தமிழ் நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் அவர் ஆற்றிய ஆயிரக்கணக்கான சொற்பொழிவுகள் கேட்டோர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன.

மணிக்கணக்கில் மக்களை ஈர்க்கும் வகையில் பேசும் ஆற்றல் மட்டுமன்றிச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் ஆற்றலும் உடையவராக இருந்தார் அண்ணா. ஒரு சமயம், ஒரு ஊரில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு ஒன்பது மணிக்கு வரவேண்டியவர் ஏறத்தாழப் பத்தரை மணிக்கு வந்தார். அவர் வந்தவுடன், கூட்ட ஏற்பாட்டாளர்கள், ***ஐயா, பத்தரை மணிவரைதான் கூட்டம் நடத்த நமக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். இப்பொழுது பத்தரை மணிக்கு இன்னும் ஒரு மணித்துளிதான் உள்ளது. என்ன செய்வது?*** என அவரைக் கேட்டனர். அதற்கு அண்ணா, ***பரவாயில்லை, நான் ஒரு மணித்துளியில் என் பேச்சை முடித்துவிடுகிறேன்*** என்று சொல்லிவிட்டு மேடைக்குப் போய் ***மாதமோ சித்திரை, நேரமோ பத்தரை, வருவதோ நித்திரை, குத்துங்கள் முத்திரை உதய சூரியனில்! வணக்கம்*** என்று கூறித் தன் பேச்சை முடித்தார்.

தமிழக முதல்வராக அறிஞர் அண்ணா

தமது அடுக்குமொழிப் பேச்சாற்றலாலும், அறிவாற்றலாலும் தமிழகமக்களைக் கவர்ந்த மாபெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா 1967இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவினால் தமிழக முதல்வராக அரியணை ஏறினார். அப்போது மக்கள் முன் அவர் அறைகூவல் விடும் பேச்சு இதுதான்: ***எல்லா லட்சியமும் ஒரு புள்ளியை மய்யப்படுத்திச் சுற்றிவருகின்றது. மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதுதான். நான் ஏதேதோ எண்ணுகிறேன் லட்சியம் மிகப் பெரியது. நான் மிகச் சாமான்யன் ஆனால் உங்கள் தோழன். இந்த சர்க்கார் மக்களுக்கு நல்ல செயல்களை செய்யப் பயிற்சி பெற்ற பொறியாளர்கள் இல்லையா? தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லையா? ஆற்றல் கொண்ட அலுவலர்கள் இல்லையா? திறமையான மருத்துவர்கள் இல்லையா? ஊக்கமுள்ள இளைஞர்கள் இல்லையா? நிரம்ப இருக்கின்றார்கள். சீரணி என்ற அமைப்பிலே தங்களை இணைத்து, சேவை செய்ய ஏராளமான இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய அறிவு, ஆற்றலோடு மக்கள் பணியாற்ற நான் புறப்படுகிறேன்*** எனக் கர்ஜனை புரிகின்றார்.

கணவன்-மனைவி

இந்திய நாடாளுமன்றத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் கிருஷ்ணமேனன் ***இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்து அண்டைநாட்டு உள்நாட்டுப் பிரச்சனையில் நாம் தலையிடுவது நம் அயல்நாட்டுக் கொள்கைக்கு விரோதமானது இல்லையா?*** என்றார். இதற்கு பதில் அளித்த அண்ணா ***பக்கத்து வீட்டுக் கணவன்-மனைவி சல்லாப பேச்சினையோ, சல்லாபத்தினையோ கேட்பதும், பார்ப்பதும் தவறு. அதே வேளையில் அவன் தன் மனைவியினை அடிக்கின்றபோது அல்லது கழுத்தை நெறிக்கின்றபோது அந்தப் பெண்ணின் அலறல் குரலைக் கேட்ட பிறகும் அமைதியாக இருப்பது நியாயமா? அதுவும் அவள் என் தங்கையாக இருக்கின்றபோது அதைத் தடுக்கவில்லையென்றால் எந்த விதத்தில் நியாயம்*** என்றார்.

மருத்துவரை சட்டமன்றத்திற்கு அனுப்பாதீர்கள்

தேனி தொகுதியில் காங்கிரஸ் சார்பில் மருத்துவர் சீனிவாசன் சட்டமன்ற உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டபோது எதிரணியில் பிரச்சாம் செய்த அண்ணா ***இங்கே போட்டியிடுகின்ற சீனிவாசன் மிகவும் நல்லவர், மக்களின் துயர்நீக்குகின்ற மருத்துவர். பல மனிதர்களைக் குணப்படுத்துகின்ற அவரை சட்டமன்றத்திற்கு அனுப்பாதீர்கள். மருத்துவர்கள் அதுவும் சேவை உள்ளம் கொண்டவர்கள் மிகவும் அரிதாக உள்ளனர். ஆகவே அவரை நீங்கள் மருத்துவ சேவைக்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்*** என்று சாதுர்யமாகப் பேசினார்.

நகைச்சுவை நடிகர் கலைவாணர் கிருஷ்ணன் குறித்து ***இவர் நடிக்க வருவதற்கு முன்னால் நகைச்சுவைப் பாத்திரம் என்பது நகைச்சுவை நடிகரின் ஒட்டப்பட்ட மீசை கீழே விழும் அது நகைச்சுவை. நடந்து செல்பவர் கீழே தடுக்கி விழுவார் அது நகைச்சவை. இவர் வந்த பிறகு தான் நகைச்சுவை என்பது சிந்தித்துச் சிரிக்கும் வகையிலான உரையாடல்கள். தந்தனார் கதா காலட்சேபங்கள் மூடநம்பிக்கை குறித்த நிகழ்வுகளைச் சாடி விஞ்ஞானத்தை வளர்க்க போறேண்டி*** என மேற்கண்டவாறு கூறினார்.

அவையறிந்து பேசும் அண்ணா

அவையறிந்து பேசுவார், சுவையுடன் இரசிக்கலாம், பேச்சிலே சகோதரப் பாச உணர்ச்சி, குறிப்பாக மனித நேயம் வெளிப்படும். மனம் நெகிழலாம். உறுப்பின

ராக இருந்த நேரத்தில் தமது கருத்துக்களை விரிவாகவும், விளக்கமாகவும் கூறுவார். சட்டசபையிலும் மேடையில் பேசுவதுபோன்றே பேசுவார். அண்ணா ஏறத்தாழ 30 ஆண்டுகள் ஓயாது சொற்பொழிவாற்றி வந்துள்ளார். தன் பல்துறை ஆற்றலையும் பேச்சு மூலம் வெளிக்கொணர்ந்து மக்களை மேன்மைப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

அண்ணாவின் உரையில் வரலாறு உண்டு. மூடப் பழக்கவழக்கத்தை முறியடிக்கும் முனைப்புத் திறன் உண்டு. இலக்கியக் காட்சிகளை எடுத்துக்காட்டும் நயம் உண்டு. அரசியல் அறிவிப்புகளைக் கேட்கலாம். கதைகளுக்கோ கணக்கில்லை, உவமைகளுக்கோ அளவில்லை. அத்தனையும் வாரிவாரி வழங்குவார். சொல்லின் செல்வர் என்னும்படி அவர் உரைகள் அமைந்திருந்தன. அவையின் கண்ணியம், நடைமுறைகள், விதிகள் குறித்தும் அதற்கான முன்னதாரணங்களையும் புரியாத விஷயங்களையெல்லாம்கூட, தமது அழகு நடையில் எளிய தமிழில் அனைவருக்கும் புரியும்படி கூறுவார்.

பேச்சுக்கலையில் ஈடுஇணையற்றவர்

எளிய நடையே மேடைப் பேச்சுக்கு உரிய நடை. தொடர்கள் சிறியனவாய் இருந்தால் எளிய நடை அமையும். அண்ணாவின் பேச்சில் இத்தகைய எளிய நடையே காணப்படுகிறது. அவர் அடுக்குமொழியில் சிறந்தவர். அந்த மொழியைத் தமது உரையில் கலந்து பேசிக் கேட்பவரைப் பிணிக்கும் வகையில் பேசுவது அவரது தனிச்சிறப்பு ஆகும்.

பேச்சுக்கலையில் ஈடுஇணையற்றவர் அண்ணா. தம் பேச்சு பெருமையுற எல்லா வகை இலக்கிய நயங்களையும் அவர் கையாண்டார். உவமை, உருவகம், அடுக்குமொழி, சொல்திறன், மேற்கோள் மொழிகள் முதலியவை அவர் உரைகளிலிருந்து பிரிக்கவியலாதவை. அவரது பேச்சு மொழி வனப்பும் வண்ணமும், வீறும் உடையது. தம் ஆழ்ந்த படிப்பால் வியத்தகு முறையில் மொழியினைக் கையாண்டார். உரைகள் முழுவதும் வற்றாக் கற்பனை வளம் ததும்பியுள்ளன. அறிவார்ந்த அவையோருக்குப் பேசுகையில் அண்ணா கவிதைச் செறிவுள்ள நடையையும் பொதுக்கூட்டங்களில் பேசும்போது அவர்களுக்குப் புரிகிற முறையில் எளிய நடையிலும் பேசுவார். பழுத்த அறிவு, கூரிய அறிவுநுட்பம் அகன்ற காட்சியறிவு ஆகியவை அவர்தம் நடையினை அணிசெய்கின்றன. அவர்தம் ஆளுமையும் அதில் முனைப்பாகக் காணப்படுகின்றது. சுருக்கம், தெளிவு, இனிமை, ஓசைநயம், அறிவாழம் முதலியவை அவர் நடையின் பண்புகளாகும்.

சிலேடைப்பேச்சு

பேசும்போது சிலேடையாகப் பல செய்திகளைக் கூறி மற்றவர்களின் மனம் நோகாமல் உண்மையை உணரவைப்பதில் அண்ணா மிகவும் வல்லவர். இயல்பான உரையாடல்களில்கூட இலக்கிய நயம் ததும்பும்.

ஓர் ஆட்சி போற்றப்பட வேண்டுமானால்...

கடமையைச் செய்வதிலே எஃகு போன்ற உள்ளமும் நீதி வழங்குவதிலே துலாக்கோல் போன்ற மனோநிலையும் எளியோர் விஷயத்தில் இளகிய மனமும் இருத்தல் வேண்டும்.

ஆங்கிலப் பொழிவுகள்

அண்ணாவால் ஆங்கிலத்திலும் சரளமாக உரையாற்ற முடியுமா என வினவியவர்களுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக ஆங்கிலத்திலும் சிறந்த பேச்சுத் திறமையுடையவராக அவர் விளங்கினார். பல்கலைக் கழக மாணவர்களிடையே ஆங்கிலத்தில் த வேர்ல்ட் ஒல்ட் அண்ட் நியூ என்ற தலைப்பில் பேசினார். தமிழில் பேசுவதுபோலவே தடையின்றி ஆங்கிலத்தில் சரளமாகப் பேசினார். இவரது உரையின் வாயிலாக இவரது தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிப் புலமை அனைவருக்கும் தெரிந்தது.

நகைச்சுவைப் பேச்சு

அந்தக் காலத்தில் தமிழ் எவ்வாறு மாணவர்களால் புறக்கணிக்கப்பட்டது என்பதை ஓர் உவமையால் விளக்கும்போது, ***தமிழ் வகுப்பு நடந்துகொண்டேயிருக்கும், தெய்வானையை விட்டுவிட்டு வள்ளியைத் தேடிக் கொண்டு முருகன் போனதுபோல், மாணவர்கள் வாத்தியாரை விட்டுவிட்டு வெளியே போய்விடுவார்கள்*** என்று புராணத்தை நகைச்சுவைக்குப் பயன்படுத்தி அனைவர் இதயத்தையும் கவர்ந்தவர் அவர்.

சென்னை மயிலாப்பூரில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றபோது, ஒரே மேடையில் அவரும் மூதறிஞர் இராஜாஜியும் உரையாற்றினர். இராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். ஆனால் இப்போது அதற்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார். இராஜாஜி பேசி முடித்ததும் மேடைக்கு வந்தார் அண்ணா.

பாம்பு ஒருவனைக் கடித்துவிட்டால், அதே பாம்பு கடித்த இடத்தில் வாயை வைத்து, தான் கக்கிய நஞ்சை உறிஞ்சினால்தான் கடிப்பட்டவன் பிழைப்பான் என்பது மரபுவழிச் செய்தி. அதைப்போல இந்தி மொழியைத் தமிழ் நாட்டுக்கு யார் கொண்டுவந்தார்களோ அவர்களே வேண்டாம் என்கிறார். இதை உணர்ந்து நீங்கள் எல்லோரும் இந்தியைஎதிர்க்க வேண்டும் என்று பேசினார். இதனைக் கேட்டு இராஜாஜியே வாய்விட்டுச் சிரித்தார்.

பேச்சில் கதைகள்

சொற்பொழிவாளர்கள் தங்கள் கருத்துக்களை மக்கள் மனதில் எளிமையாகச் செலுத்திடக் கதைகளை ஒரு கருவியாகக் கையாள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இடையிடையே கதைகளைக் கூறிக் கருத்துக்களை விளக்குவதால் சொற்பொழிவுக்கு மேலும் சுவை கூடுகிறது. தம் மேடைச் சொற்பொழிவுகளில் பேச்

சின் சுவை குன்றாது பொருத்தமான இடங்களில் கதைகளை எடுத்தாண்டார் அண்ணா. மக்களிடம் வழங்கிவரும் பழைய கதைகளை எடுத்துச் சொல்லி யும், தாமே பல கதைகளைப் புனைந்துரைத்தும், நிகழ்ச்சிகளைக் கதைப்போலக் கூறியும், சொற்பொழி வுகளில் கதை சொல்லும் உத்தியினை நிறைவு செய் தார் அண்ணா. கோயில்களில் திருட்டுகள் நடப்பது குறித்து அண்ணா ஒரு சொற்பொழிவில் எடுத்துரைத் தார். இவ்வாறு திருட்டுகள் பழங்காலத்திலிருந்தே நடந்துவருகின்றன என்பதற்குச் சான்றாக விசயநகர் அரசர் கிருட்டிணதேவராயர் காலத்துக் கதையொன்றை எடுத்துரைத்தார்.

மேலும், ஒரு நிலையில் உள்ளவர்கள் தம் நிலையில் உள்ள மற்றவர்களோடுதான் தொடர்புகொள்ள வேண் டும். உயர்ந்த நிலையில் உள்ளாரை நாடிச் செல்லக் கூடாது என்ற நீதியை விளக்க ரஷ்யக் கதையை எடுத்துக் கூறினார்.

ஒரு எலியானது தன் இனத்தோடு தொடர்பு கொள்ள விரும்பாமல், வலிமை மிகுந்த சூரியனோடு தொடர்பு கொள்ள எண்ணி, தம் மகளைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கிறது. ஞாயிறோ தன்னைவிட மேகமே வலிமை மிகுந்தது என உரைக் கிறது. இவ்வாறு மேகம் காற்றையும், காற்று சுவரையும் சுட்டிக் காட்டினவாம். சுவரோ என்னையே துளைத்து விடுகிற உங்கள் இனமே என்னைவிட வலிமையானது என்று கூறிற்றாம். பின்னர் எலி தன் இனத்திலேயே தொடர்பு கொண்டதாம் என்ற கதையினைத் திருச்சி மாநாட்டுச் சொற்பொழிவில் கூறி, மன்னர்களையும், ஜமீன்தாரர்களையும் சந்திப்பதை விடுத்து தி.மு.க. மக்களைச் சந்திக்க வந்திருப்பதற்குக் காரணம் அம் மக்களே வலிமை மிகுந்தவர்கள் என்கிற செய்தி யைக் கழகம் உணர்ந்துள்ளது என விளக்கினார்.

அண்ணாவின் உவமைத்திறன்

1964ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா சட்ட எரிப் புப் போராட்டத்தில் தண்டனை பெற்று, சென்னைச் சிறையில் இருந்தார். அப்பொழுது எம்.ஜி.ஆர். தமது சட்ட மேலவை உறுப்பினர் பதவியைத் துறந்தார். ***பட்டுப்புடவையின் வெளிப்புறத்திலே போடப்படும் சரிகையினால் பட்டுப்புடவையின் மதிப்பு உயர்கிறது. அதைப்போல அவர் மதிப்பானவர். அவரால் கட்சிக்கு மதிப்பு உருவாகும் நிலையோடு வைத்துக்கொள்ள வேண் டும். பட்டுப்புடவைக்குப் பூ வேலைப்பாடு போடுவதைப் போன்று கட்சியிலே அவரை வைத்துக்கொள்ள வேண் டும்***என எம்.ஜி.ஆர் பற்றிக் கூறினார். எம்.ஜி.ஆர் அவர்களுக்குக் கட்சியில் கூடுதல் பொறுப்பைத் தருமாறு கழக முன்னணியினர் சிலர் கோரியபோது அதற்கு இவ்வாறு விடை தந்தபோது கையாண்ட உவமை இது. ***விதை செத்துத்தான் பயிர் வளர்கின்றது*** என மேடைப்பேச்சில் கூறுவார்.

அண்ணாவின் தலைசிறந்த சொற்பொழிவுகள்: சில குறிப்புகள்

19.02.1945இல் தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் பேசியதில் சில{

அறிவுக்குப் பொருந்தாதவையும் ஆராய்ச்சிக்கு நிற்காத வையும் அறியாமையை அகற்றி மடமையை மக்கள் மனத்தில் புகுத்தும் போலிகளாகவே உள்ள இலக்கியங் கள் மாற்றப்பட வேண்டும்.

நீதி நிலைமைக்கு ஏற்ப மாறும்.

நீதியின் சக்கரம் சதா உருண்டுகொண்டே இருக்கும். அதனை நாம் நம் அறிவைக் கொண்டு நம் நிலைக் கேற்ப திருப்ப வேண்டும்.

தொல்காப்பியம் ஏன் எளிதாக்கப்படவில்லை. இலக்கியம் என்பதுஎல்லோருக்குமா?அன்பு ஒரு சிலருக்கு மட்டுமா?

திருக்குறளை ஏன் பரப்ப முன்வரவில்லை.

குறை கூறுவதுதான் புலமையா?

நாடு பற்றிக் கூறாத ஏடு வேண்டாம்.

அறிவு பற்றியும் ஆராய்ச்சியின் மேன்மை பற்றியும் அன்றாட வளம் பற்றியும் பலப்பல ஏடுகள் ஏன் எழுதக் கூடாது?

தனித்து இயங்கும் தமிழ்மொழி

ஒரு மொழி பிறமொழிச் சொற்களை இரவல் வாங் காமல் தனித்தியங்கினால் அது உயர்தனிச் செம் மொழியாகவே இருக்கும். இதனை ஓர் உதாரணம் மூலம் அண்ணா எடுத்துக்காட்டுவார். ***சோறு இருக் கிறது, குழம்பு இல்லை அடுத்த வீட்டுக்காரரிடம் குழம்பு வாங்கினால் அதில் காய் இல்லை. இன்னொரு அடுத்த வீடுக்காரரிடம் காய் வாங்கினால் அதில் உப்பு இல்லை. இந்நிலை இருந்தால் நாம் இருப்பது வீடு அல்ல சத்திரம் அல்லது சாவடி.இந்த வார்த்தை இல்லை, அந்த வார்த்தை இல்லை என்று கூறும் மொழி ஒரு மொழியல்ல, வெறும் ஓசைதான்*** என்று மொழியின் இலக்கணத்தைக் கூறு வார்.

முடிவுரை

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல் எனும் குறளுக்கேற்பத் தமது சொற்பொழிவுக் கலையை வெற்றிகரமாகக் கையாண்டவர்களில் முதன்மையானவர் அண்ணா. அவருடைய சொற்பொழிவைக் கேட்டுக் கோடிக் கணக்கான மக்கள் அவரது கொள்கையைப் பின்பற் றினர். இலட்சக்கணக்கான மக்கள் அவரது இயக்கத் தில் சேர்ந்தனர். ஆயிரக்கணக்கானோர் அவரைப் போன்ற சொற்பொழிவாளராக முயன்றனர். நூற்றுக் கணக்கானோர் அவரைப் பின்பற்றி நல்ல சொற் பொழிவாளராக உருவாயினர். அவர் சார்ந்திருந்த இயக்கங்கள் வெற்றிபெற அவரது மேடைப் பேச்சின் கவர்ச்சியே முதற்காரணமாக அமைந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

பார்வை நூல்கள்

வேல்.கார்த்திகேயன், அண்ணா வாழ்வும் பணிகளும், மீரா புத்தகாலயம், சென்னை, முதற்பதிப்பு, செப். 2013,

எஸ்.வஜ்ரவேலு, அறிஞர் அண்ணாவின் பன்முக ஆளுமை,

ISSN 2320-4842

கணக்கியலைக் காட்சிப்படுத்தும் தமிழன் எளிமை

முனைவர் சம்பந்தம் ஏகாம்பரம்
கணக்கியல் துறைத்தலைவர் (ப.நி.), கொலம்பியா கல்லூரி, வான்கூவர்
பிரிட்டிஷ் கொலம்பியா, கனடா

இயற்கையின் நுட்பம்

கணிதம் என்பது நாம் கண்டுபிடித்தது அல்ல. இயற்கையிலுள்ளஉண்மைகளை எடுத்துச்சொல்வதே கணிதம். ஒரு முக்கோணம் என்பது மூன்று கோணங்களைக் கொண்ட வடிவம். பெயரிலே தன்மையை சொல்லும் எளிய முறை. பார்வையில் நுணுக்கம் தேவை. ஒரு பெரிய பாறையைப் பார்க்கும் சிற்பி அதில் மறைந்துள்ள யானை யைப் பார்க்கிறான். கூர்ந்து பார்க்கும் நுண் மா நுழை புலம் கொண்ட ஒருவன் முக்கோணத்தில் அழகிய கலை அம்சங்களைக் காண்கிறான். காணும் நுண்மைக் கலைதான் கணிதம் என்னும் அறிவியல் அரசி. மூன்று என்பது ஒரு எண்ணைக் குறிக்கிறது. அதுவே கணிதம் என்று பாமர மக்கள் நினைக்கிறார்கள். அப்படி இல்லை. மூன்று கோணங்கள் உள்ள ஒரு வடிவம் முக்கோணம் என்பதே கணக்கியல்.

சுழியம் தேவையா?



சுழியம் '0' என்ற எண்ணை எடுத்துக்கொள்வோம். வட்டம் என்றும் சொல்லலாம். சுழியம் என்ற எண்ணைக் கணினியில் நீங்கள் பார்த்தால் அது வட்டமாக இருக்காது. உங்கள் கைபேசியில் பாருங்கள். அது நீள் வட்டம் எனப்படும் ellipse வடிவத்தில்தான் இருக்கும். ஏன்? பூமி என்ற கிரகமே ஒரு பந்துபோன்ற உருவம் அல்ல. அது முட்டைபோன்ற ஒரு வடிவம். பூமியின் சுற்றுப்பாதையும் வட்ட வடிவம் அல்ல. சுற்றுப் பாதையும் நீள் வட்ட வடிவம். அது நீள் வட்டம். சுழியம் நீங்கள் போடுங்கள். அது ஒரு புள்ளியில் தொடங்கி அந்தப் புள்ளி யிலேயே முடியும் தன்மை பெற்றது. தொடக்கமும் முடிவும் ஒரே இடம். அந்த ஒரு புள்ளியும் ஒரே புள்ளி யல்ல. எங்கும் தொடங்கலாம். அங்கேயே முடியும். ஆதி அந்தம் இருக்கும். ஆனால் இருப்பது தெரியாது. ஆதியந்தம் இல்லாதது என்றும் சொல்லலாம். முடிவும் இல்லாத முதலும் இல்லாத ஒரு பொருளற்ற பொருளே இறைநிலை என்ற இயற்கை தத்துவமும் அதுதான். முடிவும் இல்லை. முதலும் இல்லை.

எல்லா எண்களுக்கும் மூலம் சுழியம். ஏன்? ஒன்று என்ற எண்ணை நேர்க்கோட்டில் அமைக்க சுழியம் என்பது இருந்தால்தான் 1 என்ற எண்ணை ஒரு அங்குலம் என்று அளவிட முடியும். சிந்தித்தால் ஒரு அங்குலம் என்று சொல்வதற்கு ஆரம்பம் சுழியம் என்ற புள்ளி. உங்கள் அளவுகோலைப் பாருங்கள். ஆரம்பப் புள்ளி '0' இருக்கும். பிறகு தான் '1' என்ற புள்ளியை நீங்கள் வைக்க முடியும். நீங்கள் நூறு அடி நடக்க வேண்டு மென்றால் ஆரம்பம் '0'தானே இருக்க வேண்டும். இயற்கையாக மலர்ந்ததே சுழியம் என்பது என் கருத்து.

சமச்சீர் (Symmetry)

ஒன்றுக்கொன்று வெவ்வேறு அளவில் இயங்கும் ஒப்பற்ற உயிர்ப்புள்ள கணினி நமது உடல். வெப்ப ஓட்டம் நமது உடலின் வெப்பத்தைச் சீராக வைத்திருக்கும் ஆற்றல் உடையது. வெளியே 50 பாகை அளவு இருப் பினும் உடல் வெப்பம் 37 பாகை அளவு எப்போதும் இருக்கும். உடலின் கணித அமைப்பும் geometry எனப்படும் வடிவ ஒழுங்கமைப்பும் அறிவியலுக்கு அப்பாற்பட்டது. எடுத்துக்காட்டாக வலது கை, இடது கை, வலது காது, இடது காது, கண்கள் இரண்டு, நடுவில் மையமாக ஒழுங்கமைப்பபில் நாசி. மூளைகூட வலம், இடம் என இரண்டு சம அளவுள்ள பகுதியாகப் பிரிந்து அமைந்துள்ளது. வலது மூளை படைப்பாளர்களின் மூலம். இடப்பக்கம் பகுத்தறிவின் களஞ்சியம். உடலின் அமைப்பு நுட்பமான, எளிதான சமச்சீர் ஒழுங்குமுறை யில் அமைந்துள்ளது. நமது இதயம் உணர்வுகள் எழும் இடம். படைப்பாளர்கள் கலை உணர்வுகளில் விஞ்சி நிற்பார்கள். எனவே இதயமும் படைக்கும் பகுதியான மூளையின் பகுதியையும் ஒரே பக்கமாக இறைநிலை இயற்கை அமைத்திருக்கிறது.

கல்வி

கல்வி என்ற அழகிய தமிழ்ச் சொல்லைச் சற்று ஆய்வோம். கல்லுக்கும் எண்ணின் தோற்றத்திற்கும் தொடர்புள்ள தால் சொல்கிறேன். இளமையில் கல் என அவ்வையார் சொன்னார்கள். கல் என்பது வினைச்சொல் என்றால் அது கற்க என்று பொருள்படும். கல் என்பது பெயர்ச்சொல் என்றால் அது ஒரு கல் என்று அர்த்தமாகும்.

'வி' என்பது சிறப்பு விகுதி என்று தமிழ் கூறும். நாயகர் = தலைவர். விநாயகர் = முதன்மையானவர், முன்னோர்க்கும் முன்னவர் எனப் பொருள்படும். கல்வி பஞ்சபூதங்களாலும் அழிக்க முடியாத ஒரு செல்வம். வெள்ளம் வந்தால் உன் கல்வியை அது கரைத்து எடுத்துச்செல்ல முடியாது. வெம்மை மிகுந்த நெருப்பால் நீ கற்ற கல்வி நீங்காது. காற்றும் கல்வியை உன்னிடமிருந்து பிரித்துவிட முடியாது. நம் கல்வி ஏழு பிறப்பிலும் நம்மைப் பாதுகாக்கும் என்பார் வள்ளுவர்.

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து

கல்வி என்று எப்படிப் பெயர் வந்தது. கல்விக்கும் கல்லுக்கும் மூலமான தொடர்பு இருக்கிறது. கல்லிலிருந்து எண்களும், எண்களிலிருந்து வரிவடிவமும், வரிவடிவத்திலிருந்து எழுத்துகளும் தோன்றின.

முதன்முதலில் தோன்றிய மனிதனை நினைத்துப்பாருங்கள். அந்தக் காலகட்டத்திற்குச் செல்லுங்கள். காட்சிப் படுத்திப்பாருங்கள். கைபேசியில் காட்சியைப் பார்த்து உங்கள் கற்பனை வாயிலை அடைத்துவிடாதீர்கள். Imagination is better than knowledge என்பார் ஐன்ஸ்டீன். கல் = படி. கல்லிலேதான் திண்மை இருக்கிறது. கல்லைக் கூர்மையாக்கினால் ஆயுதமாகும். அறிவைக் கூர்மையாக்கினால் அறியாமை விலகும். கல்லில் ஒரு யானை மறைந்திருக்கும். அதைப் பார்க்கும் கண்ணுடையவன் சிற்பி. பழம் கீழே விழுந்தது. அதில் என்ன ஒளிந்திருந்து உணர்த்தியது? புவியீர்ப்பு விசை என்ற சக்தி இயற்கையில் இருப்பதை அறிவுக் கண்ணால் பார்த்தவன் நியூட்டன் என்ற பேரறிஞன். கல்லில் யானை தெரியும் சிற்பிக்கு!

கல்லில் நீண்ட ஆயுதம் தெரியும் வேட்டையாடும் வீரனுக்கு! கல்லில் தெய்வமும் தெரியும் உன் கண்ணில் அன்பிருந்தால். தூணிலும் தோன்றும் விஸ்வரூப தரிசனம், நரசிம்ம அவதாரம், உன் நெஞ்சில் பக்தியிருந்தால். கல் என்பது அடிப்படையான ஒரு அறிவுப் பொருள்.

இருமுறை சார்பு (Bijection)

பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன் உங்களை அழைத்துச் செல்கிறேன். ஆதி மனிதன் வேட்டையாடிக் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தான். Hunter - gatherers என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அவன் தன் குகையைவிட்டுக் காலையில் வேட்டைக்குப் புறப்பட்டான். அவனுடன் 10 பேர் சென்றதாக வைத்துக் கொள்வோம். ஒவ்வொருவருக்கும் ஒரு கல்லைத் தனக்கென குகைக்கு வெளியே வைத்திருந்தனர். அவரவர் கல் அவரவருக்குத் தெரியும்.

வரிசையாக முதலில் வருபவர் வலது பக்கம் உள்ள கல்லை இடது பக்கம் வைத்துவிட்டு வெளியே செல்வார். இப்படிப் பத்து பேருடைய கற்களும் இடது பக்கம் வந்துவிடும் வேறு கல் எதுவும் வலது பக்கம் இருக்காது. அவர்களுக்கு ஒன்று இரண்டு என்று எண் தெரியாது. எழுதவும் தெரியாத நாகரிகமே உலகமென வாழ்ந்தனர். மாலையில் திரும்பி வரும்போது ஒவ்வொருவரும் ஒருகல்லை எடுத்துத் திரும்ப முன்பு இருந்த இடத்திலேயே வைத்துவிடுவார்கள். சரித்திர காலத்திற்கு முன்னர் உங்களை அழைத்துச் செல்கிறேன். எந்தக் கல்லும் இடது பக்கம் இல்லையென்றால் எல்லோரும் திரும்பிவிட்டனர் என்று ஆதி மனிதன் அறிந்துகொண்டான். ஒரு கல் மட்டும் வைக்கப்படவில்லையென்றால் ஒருவர் திரும்பி வரவில்லை என்று பொருள். நீங்கள் மனிதன் மலையிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்த காலத்தில் நாம் இப்போது ஆராய்கிறோம். ஒன்று, இரண்டு,... என்ற குறியீடும் இல்லை. குறியீட்டு அறிவும் எண் என்ற அறிவும் வெளிப்படவில்லை. பத்து கற்களும் திரும்பி வைக்கப்பட்டால் அனைவரும் திரும்பினார்கள். இல்லையேல் ஒருவர் வர வில்லை. இதைக் கூர்ந்து கவனியுங்கள். ஆதி மனிதனுடைய அறிவும் தெளிவும் இன்றைய அறிவியலைவிடச் சிறந்தது என்று தெரியும்.

ஒரு மனிதனின் குறியீடு ஒரு கல். ஒரு கல்லின் குறியீடு ஒரு மனிதன். ஒரு மனிதன் ஒரு கல்.

ஒவ்வொரு கல்லும் ஒரு குறியீடாக மாறியது. தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் 20ஆம் நூற்றாண்டில் பிறந்து 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சமாதி அடைந்தார். அவர் சொல்வார். ஆதி மனிதன் தனது அறிவை அறிந்தான். தவ ஆற்றல் இருப்பதை உணர்ந்தான். தன்னை அறிந்தால் உலகை அறிந்துகொள்ளலாம் என்று உணர்ந்தான். 1,2,3,... என்ற எண்கள் குழந்தை கருவில் உருவாகும்போது இருக்கும் அங்கங்களின் தோற்றங்கள் ஒவ்வொன்றாக மலர்வதைத்தான் கல்லில் வரைந்துவைத்தான். இந்த முறைதான் இன்றுவரை நாம் எண்ணும் முறை. வியப்பாக உள்ளதா? பள்ளியில் உங்கள் தேர்வுத் தாளில் உங்களுக்கென எண் கொடுக்கப்பட்டிருக்கும். அந்த எண்தான் நீங்கள். உங்களைக் குறிக்கும் எண்ணும் அதுதான். தேர்வின் முடிவு அறிவிக்கும்போது அந்த எண்ணைத்தான் அறிவிப்பார்கள்.

ஒரு மனிதனின் குறியீடு ஒரு கல். ஒரு கல்லின் குறியீடு ஒரு மனிதன்.

கல் ↔ மனிதன்

இந்த முறைதான் இன்றுவரை நாம் எண்ணும் முறை. வியப்பாக உள்ளதா? பள்ளியிலே உங்கள் தேர்வுத் தாளில்உங்களுக்கென எண் கொடுக்கப்பட்டிருக்கும்.

ஒரு எண் உங்கள் பெயர். உங்கள் பெயர் அந்த எண். அதாவது உங்கள் பெயருக்கும் ஒரு குறிப்பிட்ட எண்ணுக்கும் வேறுபாடே இல்லை. நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் எண் அதுதான். உங்கள் எண் எங்கிருந்தாலும் அது நீங்களே.

அன்பழகன் ↔ 245

இந்த முறையை இருமுறைச் சார்பு என்பர். ஆங்கிலத்தில் bijection அல்லது one-one correspondence எனலாம்.

இருமுறைச் சார்பு (bijection) எடுத்துக்காட்டு

இரண்டில் எது பெரிய கணம்?



N = {0, 1, 2, 3, … … … }, முடிவில்லாத கணம்
S = {1, 10, 100, 1000 … … … }, முடிவில்லாத கணம்

S உட்கணம் N இல் உள்ளே அடங்கியிருப்பது

இரண்டும் முடிவிலாக் கணங்களே!

கேள்வி: இரண்டில் எது பெரிய கணம்?

பதில்: இரண்டும் சமமான அளவுள்ள கணங்களே! ஒன்றில் குறைவான பொருள்களும் மற்றொன்றில் அதிகமான பொருள்களும் இல்லை! இரண்டும் அளவில் ஒன்றே! வியப்பாக உள்ளதா? இயற்கையின் நுட்பம் என்று சொன்னேன் அல்லவா. இப்போது நிரூபணம் செய்யலாம்.

$$N = \{B0,\ B1,\ B2,\ B3, \dots \dots \dots\} \to B$$

(ஆண் பிள்ளைகள் கணம்)

இது ஒரு முடிவிலாக் கணம்

இந்த கணத்தில் எத்தனை பொருள்கள் உள்ளன?

$n(N) = \infty$, முடிவிலி $(INFINITY)$

S = {G1, G10, G100, G1000, … … … …} GIRLS (பெண் பிள்ளைகள் கணம்)

இதுவும் ஒரு முடிவிலாக் கணம். இந்த கணத்தில் எத்தனை பொருள்கள் உள்ளன?

$n(S) = \infty$, முடிவிலி $(INFINITY)$

இரண்டில் எது பெரியது? நீங்கள் *வென் படம்* என்ற முறையில் வரைந்தால் S என்ற கணம் N என்ற கணத்தின் உள்ளே அடங்கும். Nஇல் அடங்கிய S ஒரு உட்கணம். ஆயினும் இரண்டு கணங்களிலும் அளவின் சமமே. அதாவது எத்தனை எண்கள் ஒவ்வொன்றிலும் இருக்கின்றன என எண்ணிப் பார்த்தல் சமமே. வியப்பாகத்தான் இருக்கும். பூரணத்தில் ஒரு பகுதியை எடுத்தால் பூரணமாகத்தான் இருக்கும்.

$$|\mathbb{N}| = |S| = \infty$$

N	*B0*	*B1*	*B2*	*B3*	*B4*	-	-	-	-
S	*G1*	*G2*	*G3*	*G4*	*G5*	-	-	-	-

S என்ற கணத்தில் குறைவான பொருட்கள் உள்ளன. ஆனால் *N* என்ற கணத்தில் அதிகமான பொருட்கள் உள்ளன என்பது பார்த்தாலே தெரிகிறது.

இப்போது நாம் அட்டவணையில் திருமணம் முடிப்போம்.

B0 என்ற ஆணை யார் திருமணம் செய்துகொள்வது G1 என்ற பெண். அதேபோல G1 என்ற பெண்ணுக்கு B0 என்ற ஆண்தான் கணவன். அடுத்து B1 என்ற ஆணுக்கு G10 மனைவி. அதே போல G10 என்ற பெண்ணுக்கு B1 என்ற ஆண்தான் கணவன்.

இன்னும் ஒரு எடுத்துக்காட்டு பார்ப்போம்.

B2 என்ற ஆணை யார் திருமணம் செய்துகொள்வது G100 என்ற பெண். அதேபோல G100 என்ற பெண்ணுக்கு B2 என்ற ஆண்தான் கணவன்.

இதைத் தொடர்ந்து செய்யலாம்.

இதுவும் இருபுறச் சார்பு

பெண்கள் குறைவாகத் தோன்றுவதால் எல்லாப் பெண்களுக்கும் திருமணம் நடந்துவிடும். ஆனால் சில ஆண்கள் திருமணம் செய்துகொள்ளப் பெண்களே இருக்க மாட்டார்கள். இதுதானே நமது அனுபவ அறிவு.

அந்தம் இல்லாத ∞ முடிவிலி என்பர். முடிவில்லாத மிகப் பெரிய எண் ∞, நமது புலன்களால் மட்டும் புரிந்துகொள்ள முடியாது.கண்ணால் பார்ப்பதும் உண்மையல்ல என்பதற்கு இதுதான் எடுத்துக்காட்டு.

கட்டைவிரலின் சிறிய பரப்பில் எத்தனை விதமான கோலங்கள். அத்தனையும் வெவ்வேறு. உங்கள் ஒளிப்படம் பெரியதாக இருந்தால் சிறியதாக ஒரு நகல் எடுக்கிறோம். இரண்டிலும் உங்கள் முகத்திலோ பார்ப்பவர் கண்ணுக்கு எந்த ஒரு வேறுபாடும் தெரிவதில்லை. அளவில் சிறியது. ஆயினும் தன்மையில் 100 விழுக்காடு ஒன்றே! உருவு கண்டு எள்ளாமை வேண்டும் என்றது தமிழ்தானே.

உடலின் கணக்கியல்

மனிதனுக்கு இதயம் முக்கியமான உறுப்பு. சிவன் தன் இடப் பக்கம் சக்தியை வைத்தது. புராணமாக இருக்கலாம். ஆனால் காட்சிப்படுத்தும் எளிய வழி. சக்தியை உடலெங்கும் கொண்டுசெல்லும் இதயம் மனிதனுக்கு இடப்பக்கம் சற்று நகர்ந்தே இருக்கிறது. சிதம்பரம் கோயிலிலும் மூலக் கருவறையான பொன்னம்பலம் எனப்படும் கூரை சற்று இடப்பக்கம் தள்ளிதான் இருக்கிறது. ஒரு மணித்துளிக்கு 15 முறை சுவாசம். ஒரு நாளைக்கு 15x60x24 = 21600. இது சித்தர்கள் கூற்று. இதை உணர்ந்த ஞானிகள் பலர் தமது கட்டடக்கலையின் அமைப்பைச் சிந்தித்தது செயலாற்றி இருக்கின்றனர். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வடலூர் வள்ளலார் நிறுவிய சத்திய ஞானசபையில் தாம் இருக்கும்பொழுதே தன்கரத்தால் செய்த சங்கிலியில் 21600 கரணைகள் (வளையங்கள்) உள்ளன.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் பொன்னம்பலம் என்று

ISSN 2320-4842

கூறப்படும் கூரையை 21600 தங்க ஓடுகள் தாங்கி நிற்கின்றன. திருப்பெருந்துறை ஆத்மலிங்கர் ஆலயத் தில் 21600 செப்பு ஆணிகள் அடிக்கப்பட்டுள்ளன. ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் என்று ஐம் பெரும் திறன்களைக் கோயில்கட்டி வணங்கினான் தமிழன். ஐம்பெரும் திறன்கள் இல்லையென்றால் எந்த உயிரினமும் இல்லை. நீரின்றி அமையாது உலகு. இது வள்ளுவர் கூற்று.

ஆகாயம்-சிதம்பரம்; காற்று-திருக்காளத்தி; நெருப்பு-திருவண்ணாமலை; நீர்-திருவானைக்கா; மண்-காஞ்சி. நம் உடலை ஐந்திறங்களும் ஆளுகிறது. நெற்றியிலி ருந்து தலை வரை ஆகாயம்; நெஞ்சிலிருந்து நாசி வரை காற்று; இடுப்பிலிருந்து வயிறுவரை நெருப்பு; தொடையிலிருந்து இடுப்புவரை நீர்; பாதத்திலிருந்து தொடைவரை மண்; எண்கள் உடல் கட்டமைப்பின் மூலக்கூறுகள் இயற்கையின் அங்கங்கள். அவையே நமக்கும் அங்கங்களானது. பிண்டத்தின் கட்டமைப்பு அண்டத்தின் நகலாகும்.

உயிரினங்கள்

உயிரினங்களை வகுத்துச் சொன்னது தமிழ். வேறு ஒரு மொழியில் உயிரினப் பாகுபாட்டைத் தொல்காப் பியருக்கு முன்னதாகச் சொன்னார்களா?

ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனோடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே!

தொடு உணர்ச்சி - ஓரறிவின் தோற்றம்-புல். தொடு உணர்ச்சியும் சுவை உணர்ச்சியும் உள்ளது ஈரறிவின் தோற்றம். சங்கு, நத்தைபோன்ற உயிரினங்கள். தொடு உணர்ச்சி, சுவை உணர்ச்சி, வாசம் முகரும் உணர்ச்சி - மூவறிவுள்ள உயிரினம். மூன்றும் உடையது எறும்பு. வெல்லம் எங்கு இருந்தாலும் எறும்பு அங்கு வந்து விடும். பார்க்கும் தன்மையும் சேர்ந்து நான்கு அறிவு கொண்ட உயிரினமாகச் செயல்படுகின்றது. நண்டு, தும்பி போன்றவை. செவியால் கேட்கும், ஒலி உண ரும் தன்மையும் சேர்ந்தவை ஐந்தறிவுடைய உயிரி னம். பறவை, பாம்பு, மீன், ஆமை போன்றவை. மனம் என்ற சிந்தனை சக்தி முழுமையாக வரப்பெற் றவை ஆறறிவுடைய மனித இனம், அரக்கர்கள் இனம், தேவர்கள் இனம்.

நேரத்தைக் கணக்கிடச் சூரியக் குடும்பம் என்னும் ஒன்பது கோள்களும் பூமியில் வாழும் உயிரினங்கள் பார்க்கும் விண்மீன் கூட்டங்களை 12 தொகுதிகளாக, 27 நாள்மீன்களாகப் (விண்மீன்களாகப்) பிரித்தனர் என்பது தொல்காப்பியர் கூற்று.

வானவீதியில் கணக்கியல் இயல்பாக இருப்பதை எந்த கருவியும் இன்றி அறிந்த பேரறிஞர்கள் வாழ்ந்திருக் கிறார்கள். கணியன் பூங்குன்றனார், பக்குடுக்கை நற்கணியார், கணிமேதாவியார் போன்ற வல்லுநர்கள் காலத்தை நமக்குக் கண்ணாடிபோல் காட்டும் கணக் கியலைக் கொடுத்திருக்கிர்ராகள். என்று, எப்போது வான்வெளி அறிவியல் அறிஞர்கள் இருந்திருக்கின் றனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல் 30 தெரிவிக் கிறது. விரிவாகச் சொல்வதென்றால் விண்ணியலின் எண்ணியலை தனிக் கட்டுரையாக எழுதுவது சிறப் பாகப் புரியும்.

செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்பு சூழ்ந்த மண்டிலமும்
வளி திரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந்து அறிந்தார் போல என்றும்
இனைத்து என்போரும் உளரே.

தற்போது உள்ள அறிவியல் கருவியியலாக மாறி விட்டது. கோடிக்கணக்கில் செலவு செய்து இன்றைய அறிவியல், கருவிகள் மூலமாகத்தான் செயல்படு கின்றது.

நாம் முடிவுரையாக ஒரு சிறிய கேள்வி?

இரண்டு எண்கள் உங்களுக்குத் தெரிந்தவையே. இவை இரண்டையும் பாருங்கள்: Rs. 0.99, Rs. 1.00

இரண்டு எண்களும் சமமா? இல்லையா? சமம் இல்லை என்பதே சரி.

எண் 9 முடிவில்லாமல் தொடரும் சங்கிலித் தொடர் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

$$0.99999\ldots\ldots\ldots\ldots = 0.\overline{9},$$

இப்போது ஒரு கேள்வி.

Question: $0.\overline{9} = 1,$ **சரியா, இல்லையா?**

பதில்:இரண்டும்துல்லியமாக முழுக்கமுழுக்க சரியே! விளக்கமாகச் கேட்கிறேன் . தோராயமாக ஒன்றா? அல்லது சமமாக உள்ளதா?

நிரூபணம்: $0.\,9 = 1$

நீங்கள் 1 என்ற என்னை 9ஆல் வகுத்தால் வருவது இதுதான்.

$$\frac{1}{9} = 0.\overline{1} = 0.1111\ldots\ldots\ldots\ldots\ldots\ldots = 0.\overline{1}$$

இரண்டு பக்கமும் 9ஆல் பெருக்குக

$$0.\overline{1} \times 9 = \frac{1}{9} \times 9$$

$$0.\overline{9} = 1,$$

$0.\overline{9} = 1,$ இரண்டும் துல்லியமாக முழுக்க முழுக்க சரியே! உண்மை என்று நிரூபித்துவிட்டோம்.

முடிவுரை

கணிதம் என்பது அளவிடும் அறிவியல் எனலாம். எத்தனை பழங்கள், பூமியின் விட்டம் என்ன, சுற்றளவு என்ன, வட்டத்தின் பரப்பளவு என்ன, விசையின் வேகம்என்ன, சக்தியின்அளவு ***(தொடர்ச்சி: பக். 81)***

ISSN 2320-4842

கலித்தொகையில் உள்ளுறை, இறைச்சி

வே. ரத்னா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்

முனைவர் மு. கவிதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் 641 043

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கியங்களில் குறிப்புப் பொருளாகப் பாடும் முறையில் உள்ளுறை, இறைச்சி என்ற இரு பெரும் பிரிவுகளைக் கொண்டு பாடடப்படும்பொழுது இலக்கியமானது எல்லையற்ற இன்பத்தை வழங்குவதனை அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்-தன்வயின் வருதலும் வகுத்த பண்பே என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு ஏற்றாற்போல் கலித்தொகைப் பாடலடிகளில் உள்ளுறை, இறைச்சி செய்யுளின் அழகையும் இன்பத்தையும் மிகுவிப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. காதல் உணர்வைக் குறிப்பதற்கும், தூண்டுவதற்கும், தலைவனை நெறிப்படுத்துவதற்கும் இறைச்சிப் பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்ககால மக்கள் தமது மகிழ்ச்சியையும், மன வருத்தத்தையும் நேரடியாகக் கூறாமல் மறைமுகமாகக் கூற உள்ளுறை உவமம், இறைச்சியை இலக்கியங்களில் கையாண்டுயுள்ளர்கள். தொல்காப்பியர் குறிப்புப் பொருளாகச் சுட்டும் உள்ளுறை மற்றும் இறைச்சி கலித்தொகைப் பாடல்களில் இடம்பெற்றுப் படிப்பபோரின் இன்பத்தையும் செய்யுளின் அழகையும் மேம்படுத்தத் துணைபுரியும் என்பதைனை இக்கட்டுரை மெய்ப்பிக்கும்.

முன்னுரை

சங்க அகத்திணை இலக்கியங்கள் யாவும் மனிதனின் உள்மன உணர்வுகளைப் பற்றிப் பாடுகின்றன. காதலர் இருவர் கருத்தொருமித்து வாழும் வாழ்க்கை பற்றிய பாடலில் அவர்களது உணர்வுகள் இவ்வாறு இருந்தது என்று ஒருவர் மற்றொருவருக்கு உரைப்பது நாகரிகமாக இராது என்பதால் அன்றைய தமிழ்ப்புலவர்கள் குறிப்பாக ஒன்றை உணர்த்த உள்ளுறை, இறைச்சியைக் கையாண்டுள்ளனர். தமிழ்ச் சமூகத்தின் நாகரிக முதிர்ச்சியால் தமிழிலக்கியத்தில் தோன்றியதே உள்ளுறை, இறைச்சியாகும்.

திறவுச் சொற்கள்: குறியீடு, உடனுறை, உவமம், தங்குதல், இறுத்தல், சிறப்பு, உத்திகள்

உள்ளுறை

உள்ளுறை எனும் சொல்லிற்கு உட்கருத்து, மறைபொருள் என்று பொருள் கூறுகிறது பல்கலைக்கழகப் பேரகராதி. உள்+உறை=உள்ளுறை. அதாவது, உள்ளே உறைகின்ற பொருள். தொல்காப்பியர் உள்ளுறை பற்றிப் பன்னிரண்டு இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளுறை உவமம் ஏனை உவமம்எனத்
தள்ளாது ஆகுத் திணையுணர் வகையே (தொல்.பொருள்.அகத். 49).
இதில் உள்ளுறை உவமம், ஏனைய உவமம் என இரண்டாக உள்ளுறையைப் பகுத்துள்ளார்.

உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன்எனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே (தொல்.பொருள்.அகத். 50)
இந்நூற்பாவின்படி உள்ளுறை என்பது தெய்வம் தவிரப் பிற கருப்பொருட்களில் அமைந்து வரும். கருப்பொருள் தெய்வம் ஒழிந்த பொருளை இடமாகக் கொண்டு உள்ளுறை வரும் என்கிறார் இளம்பூரணார்.

உள்ளுறுத் திதனோ டொத்துப்பொருண் முடிகென
உள்ளுறுத் திறுவதே யுள்ளுறை யுவமம் (தொல்.பொருள்.அகத். 51)
இந்நூற்பாவிற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், ***யான் புலப்படக் கூறுகின்ற இவ்வுமத்தோடு புலப்படக் கூறாத உவமிக்கப்படும் பொருள் ஒத்து முடிவதாகவென்று புலவன் தன் உள்ளத்தே கருதி அல்லது உள்ளறுத்து இறுவதை உள்ளுறை உவமம்*** என்கிறார்.

ஏனைய உவமம் தான்உணர் வகைத்தே (தொல்.பொருள்.அகத். 52) என்னும் நூற்பாவில் அமைந்துள்ள *தான் உணர் வகைத்தே* என்பதற்குச் *சொற்றொடர் தன்னாலே உணரப்படுவது* எனப் பொருள் கொள்ளப்படுகிறது. ***உள்ளுறை உவமம் என்பது தொடர்ப்பொருள் மட்டுமல்லாமல் அத்தொடர் பொருளின் உள்ளே பொதிந்துகிடக்கும் உவமேயப் பொருளையும் இது உணர்த்துகிறது*** எனத் தமிழண்ணல் கூறுகிறார்.

அகத்திணையில் உள்ளுறையின் இலக்கணம் கூறிய தொல்காப்பியர் அதன் வகைகளைப் பொருளியலில்

உடனுறை யுவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே (தொல். பொருள். பொருளி. 46) எனக் கூறியுள்ளார். தொல்காப்பியத் திற்குப் பின் எழுந்த நம்பியகப்பொருள் இலக்கண நூலிலும் உள்ளுறை பற்றிய செய்திகள் இடம்பெற் றுள்ளன. அவை வருமாறு:

உவமைப் பொருளும் இறைச்சிப் பொருளும்என்று
இருவகைப் பொருளும் ஏய்தும் அகப்பாட்டினுள் (நம்பி. 235)
உள்ளுறை உவமம் வெளிப்படை உவமம்என
எள்ளரும் உவமம் இருவகை யுடைத்தே (நம்பி. 236)
உள்ளுறை உவமம் ஏய்த்துணர் வகைத்தாய்ப்
புள்ளோடும் விலங்கொடும் பிறவொடும் புலப்படும் (நம்பி. 237)
வெளிப்படை உவமம் வினைப்பயன் மெய்உரு
வெளிப்பட நின்று விளங்குவ தாகும் (நம்பி. 238)

தொல்காப்பியர் கூறிய கருத்தை நாற்கவிராச நம்பி யும் கூறியுள்ளார். ஆனால் இவர் உள்ளுறை உவ மத்தைமட்டும் கூறி ஏனைய உவமத்தைக் கூறவில்லை.

கலித்தொகையில் உள்ளுறை குறித்த பல பாடல்கள் உள்ளன. இவையாவும் தலைவன் தலைவியின் அக வாழ்வினை உளவியல் நெறியில் கூறுகின்றன.

வீங்கு நீர் அவிழ் நீலம் பகர்பவர் வயற் கொண்ட
ஞாங்கர் மலர் சூழ்தந்து ஊர் புகுந்த வரி வண்டு
ஓங்கு உயர் எழில் யானைக் கனை காடம் கமழ் நாற்றம்
ஆங்கு அவை விருந்து ஆற்ற பகல் அல்கி கங்குலான்
வீங்கு இறை வடுக் கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேம் கமழ் கதுப்பினுள் அரும்பு அவிழ் நறு முல்லை
பாய்ந்து ஊதி படர் தீர்ந்து பண்டு தாம் மரீஇய
பூம் பொய்கை மறந்து உள்ளாப் புனல் அணி நல் ஊர (கலி.மரு.66:1-8)

இப்பாடல்வழித் தலைவி தலைவனின் இழிசெயலை வெளிப்படையாகக் கூறாமல் வண்டின் செயலோடு தொடர்புபடுத்தி அழகாக எடுத்தியம்புகிறாள். இப்பாட லில் வீங்குநீர் என்பது பரத்தையரின் ஊராகும். அதி லுள்ள நிலமலர்கள் பரத்தையர். பூக்களை விற்பவர் பரத்தையரைத் தேரில் ஏற்றிவரும் பாணர் முதலியோ ராவர். மலரைச் சூழந்த வண்டு தலைவன். யானை யின் மதநீரிலுள்ள வண்டிற்கு விருந்து செய்வது என் பது பகற்பொழுதில் புணர்கின்ற சேரிப்பரத்தையர் தலைவனை இன்பம் நுகர்விப்பதாகும். இரவில் முல் லையை மொய்ப்பது இற்பரத்தையருடன் கூடி இரவு துயிலல். முன்பு தான் நுகர்ந்த பொய்கையை மறத் தல் என்பது தலைவியை மறந்த தலைவனின் மன நிலையாகும் எனப் பாடலின் உள்ளுறை அமைந் துள்ளது. இவ்வுள்ளுறை உணர்த்த வரும் செய்து என்னவென்றால், தலைவன் இரவு பகல் பாராது பரத்தையரிடம் இன்பம் நுகர்ந்து தலைவியை மறந்து விட்டான். ஆனால் தலைவியோ தலைவனையே நினைத்துத்தன் இல்லக் கடமைகளை இனிதே செய்து தலைவனைப் பிரிந்த துன்பநிலையோடு ஆற்றியி ருக்கிறாள் எனும் உள்ளக் குறிப்பை உணர்த்துகிறது.

உள்ளுறை உவமம்

ஒரு கருத்தை உள்ளத்தே கருதிக்கொண்டு அக் கருத்தை வெளிப்படையாகக் கூற, கருப்பொருளோடு ஒத்தமைவதாகக் கூறுவது உள்ளுறை உவமமாகும். இவ்வுள்ளுறை உவமத்தைத் தொல்காப்பியர் இன் னொரு வகையாகவும் விளக்குகிறார்.

பிறிதொரு பாடது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபிற் கூறுங் காலைத்
துணிவொடு வருஉந் துணிவினோர் கொளினே (தொல். பொருள், உவமை.23)

இந்நூற்பாவின்வழி உவமம் வேறு, உவமிக்கப்படும் பொருள் வேறு என்று ஒன்றுக்கொன்று வேறாகத் தோன்றாமல் உவமைத் தோற்றத்திலேயே உவமிக்கப் படும் பொருளை உணர்த்துவது உள்ளுறை உவமமா கும். இந்த உட்பொருளைத் தெளிவுடையோரே நுட்ப மாக உணரமுடியும். இவ்வுள்ளுறை உவமம் கருப் பொருட்களைத் தனக்கு இடமாகக் கொண்டு தோன் றும். இதில் தெய்வம் உள்ளுறையாக இடம் பெறாது. ஏனைய கருப்பொருட்கள் மட்டுமே நிலைக்களனாக அமையும்.

தலைவன் தலைவியை மணந்துகொள்ளாது இருப்ப தால் இவர்களுடைய களவொழுக்கம் அலராக மாறி யது என்பதை

வறன் உறல் அறியாத வழை அமை நறுஞ் சாரல்
விறல் மலை வியல் அறை வீழ் பிடி உழையதா
மறல் மிகு வேழம் தன் மாறுகொள் மைந்தினான்
புகர் நுதல் புண் செய்த புய் கோடு போல
உயர் முகை நறுங் காந்தள் நாள்தோறும் புதிது ஈன
அயம் நந்தி அணி பெற அருவி ஆர்த்து இழிதரும்
பய மழை தலைஇய பாடு சால் விறல் வெற்ப (கலி. குறி.53,1-7) என்னும் அடிகளின் வாயிலாகப் பிற யானையைக் குத்தி வாங்கிய கொம்பைப்போல் காந் தள் புதிய அரும்புகளை ஈன்றது என்பது நற்குணம் உடைய தலைவன் தலைவியை மணந்து கொள்ளா திருப்பதால் கொடியவனாகத் தோன்றுகிறான் என்றும், பக்கத்தில் பெருகி அழகு பெறும்படி அருவி ஒழித்து இழிவதற்குக் காரணமான மழை பொருந்திய மலை என்பது அயலவரிடத்தே நிலைபெறுமாறு இவர்களின் களவொழுக்கம் அலராகியது எனவும் பொருள் பொதிந் துள்ளது. அதேபோன்று இவர்களின் களவொழுக்கம் வெளிப்படுதலால் ஊரார் பழி தூற்றுகின்றனர். இத னால் தலைவி வருத்தம் அடைகின்றாள். அவளை நீ! விரைவில் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதைத் தோழி

ஒண் சுடர்கல் சேர உலகு ஊரும் தகையது
தெண் கடல் அழுவத்துத் திரை நீக்கா எழுதரூஉம்
தண் கதிர் மதியத்து அணி நிலா நிறைத்தர
புள்ளினம் இரை மாந்திப் புகல் சேர ஒலி ஆன்று
வள் இதழ் கூம்பிய மணி மருள் இருங் கழி

புள்ளி புக்கது போலும் பரப்பு நீர்த் தண் சேர்ப்ப (கலி. நெய்.121,1-6) என்னும் இப்பாடலில் ஞாயிறு மலையைச்சேர்வது தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்து தன் வீட்டில் சேர்வதால் களவொழுக்கம் வெளிப்பட்டது என்றும், பறவைகளின் ஒலி அடங்கியது என்பது பழி தூற்றுகின்ற மங்கையரின் குரலொலி அடங்கி ஊர் உறங்குகிறது என்றும் உள்ளுறை உவமை அமைந்துள்ளது. இதில் தலைவன் தலைவி இருவருக்கும் இடையே நிகழ்ந்த களவு வாழ்க்கை அலராக மாறியதால், தலைவிக்குக் காவல் நீடித்துள்ளது. அதனால் தலைவன் தன்னை மணந்துகொள்வானோ இல்லையோ என்ற அச்சத்தில் தலைவி இருக்கின்றாள். அவளின் அச்சத்தைப் போக்க வேண்டுமென்றால் நீ விரைவில் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற குறிப்பினைத் தோழி தலைவனுக்கு உணர்த்துகின்றாள்.

இறைச்சிப் பொருள்

இறைச்சி என்பது இலக்கியங்களில் கையாளப்படும் குறிப்புப் பொருளைத் தரக்கூடிய ஓர் உத்தியாகும். இவ்வுத்திமுறை சங்க இலக்கிய அகப்பாடல்களில் மட்டுமே காணப்படுகின்றது. இறைச்சி என்பது கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டது. கருப்பொருள் என்று குறிப்பிடும்போது இதில் ஓரறிவு முதல் அனைத்து உயிரினங்களும் அடங்கும்.

உள்ளுறை போலவே இறைச்சி கருப்பொருட்களை கொண்டு அமைந்திருந்தாலும், இறைச்சியில் தோன்றும் குறிப்புப் பொருளை அறிவுடையோரே உணர முடியும் என்பதை,

இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கின் தெளியு மோர்க்கே
(தொல்.பொருள்.பொருளியல், நூ-226)

இறைச்சி என்பது உள்ளுறையுவமத்தை போலவே உள்ளுறைந்து பொதிந்து கிடக்கும் ஒரு பொருள் நிலையாகும். உள்ளுறை இரண்டு செய்திகளைச் செய்யுளின் வழியாகக் கூறுவதோடு அதன் எல்லைப் பரப்பை முடித்துக்கொள்கிறது. ஆனால் இறைச்சி அச்செய்தியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கிறது. கலித்தொகையில் இறைச்சி பற்றிய குறிப்புகள் பல இடங்களில் உண்டு.

பாடுகம் வா தோழி தோழி நல் தோழி பாடுற்று
இலங்கு அருவித்தே இலங்கு அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தான் உற்ற
சூள் பேணான் பொய்த்தான் மலை (கலி.குறி.41,17-20)

என்னும் பாடலில், இதோ வந்துவிடுகிறேன் எனச் சூளுரைத்த தலைவன் இன்னும் வரவில்லை. ஆனாலும் அவனுடைய மலையில் அருவி பொய்க்கவில்லை. வானிலிருந்து விழுவது போல விழுகிறது. தூரத்திலிருந்து பார்த்தாலும்கூட அது தெரிகிறது. இது வெளிப்படையாக அமைந்த பொருள். ஆனால் இதிலொரு குறிப்பு உள்ளது. தலைவன் உரைத்த சூள் பொய்த்துவிட்டது.ஆனாலும் அருவியில் நீர் பொங்கி வழிகிறதே இது என்ன வியப்பு! இந்த வியப்பு என்பது ஒரு குறிப்பாகும். தூரத்திலிருந்து பார்த்தாலும்கூட அது தெரிகிறது என்றால் இவர்களுடைய உறவு களவொழுக்கமாகும். இக்களவொழுக்கம் அலராக மாறியதால் தலைவி துன்பப்படுகிறாள். அதனால் விரைவில் செய்துகொள்ளவேண்டும்என்பதை மறைமுகமாகத் தலைவனுக்கு எடுத்துரைக்கும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது. இதன் மூலம் தலைவி தன்னை மணந்துகொள் எனத் தலைவனிடம் நேரடியாகக் கூறாது தனது நாணத்தையும் விட்டுத் தராது ஒருசெய்தியை உணர்த்த இறைச்சி எனும் உத்தியைக் கையாண்டுள்ளார்.

தலைவன் தலைவியின் களவொழுக்கம் அலராக மாறியதால் பலர் பழிக்கின்றனர். அப்போது தோழி தலைவனின் தன்மை எத்தகையது என்பதைத் தலைவிக்கு உணர்த்தி ஆறுதல் கூறுகிறாள். தலைவன் எப்படிப்பட்ட நாட்டினை உடையவன் எனத் தோழி கூறுகையில்,

ஆம் இழி அணி மலை அலர் வேங்கைத் தகை போல
தேமூசு நனை கவுள் திசை காவல் கொளற்கு ஒத்த
வாய் நில்லா வலி முன்பின் வண்டு ஊது புகர் முகப்
படு மழை அடுக்கத்த மா விசும்பு ஓங்கிய
கடி மரத் துருத்திய கமழ் கடாம் திகழ்தரும்
பெருங் களிற்றினத்தொடு வீங்கு எருத்து ஏறுழ் முன்பின்
இரும் புலி மயக்குற்ற இகல் மலை நல் வாட (கலி. குறி.48,1-7)

எனக் கூறுகின்றாள். தலைவன் களவொழுக்கத்தின் காரணமாகத் தலைவியைப் பிரிந்திருக்கிறான் என்றும் பிறர் அலர் தூற்றுவதால் அதனைத் தாங்காது தவிக்கிறாள் என்றும் குறிப்புப் பொருள் அமைந்துள்ளதால் இது இறைச்சியாகக் கொள்ளப்படுகின்றது.

முடிவுரை

சங்ககாலப் புலவர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குப் பல்வேறு வகையான உத்திகளைக் கையாண்டுள்ளனர்.இவை பாடலுக்கு வலிவும் பொலிவும் சேர்ப்பதோடு உளவியல் உணர்வுகளையும் சேர்க்கின்றன. மெய்யின்வழித் தோன்றக்கூடிய உணர்வுகளைத் தமது பாடல்களில் புகுத்திக் கற்போர்க்கு நெகிழ்வூட்டவும் செய்கின்றன. அகவாழ்வின் இயல்பினை வெளிப்படையாகக் கூறாமல் உள்ளுறை, இறைச்சியைப் பயன்படுத்திக் கூறிய புலவர்களின் படைப்பாக்கத் திறனைக் கலித்தொகை வாயிலாக அறியலாம்.

துணைநூற்பட்டியல்

1.இளம்பூரணனார், தொல்காப்பியம் பொருளதிகாரம்,சாராத பதிப்பகம்,சென்னை,முதற்பதிப்பு-2005.

2.சாரங்கபாணி.இரா., முனைவர், சங்க இலக்கிய மேற்கோள்கள்,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை,முதற்பதிப்பு 2005.

3 . சேனவரையனார் உ.ஆ,

தொடர்ச்சி: பக். 74

ISSN 2320-4842

முல்லைக்கலியும் புராணக்கதைகளும்

முனைவர் அ. ஜெயக்குமார்
உதவிப்பேராசிரியர், மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),
காளிப்பட்டி, நாமக்கல் மாவட்டம் 637501 (இணைவு: பெரியார் பல்கலைக்கழகம்)

கற்றறிந்தார் ஏத்தும் கலி எனப் போற்றப்பெறும் கலித்தொகை, கடவுள் வாழ்த்துடன் 150 பாடல்களைக் கொண்டது. அகப்பொருளைப் பாடுதற்கேற்றதாகக் கலிப்பாவையும் பரிபாடலையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

எட்டுத்தொகையுள் சிதைவின்றிக் கிடைக்கப்பெறும் நூல்கள் கலித்தொகையும் அகநானூறும் ஆகும். கலிப்பாக்கள் பல வகைப்படும். அவற்றுள் ஒத்தாழிசைக்கலிப்பாவில் கலித்தொகைப் பாடல்கள் அமைந்துள்ளன. தொல்காப்பிய அகத்திணையியலில்

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப என்ற நூற்பா குறிப்பிடும் கைக்கிளை (56, 57, 58, 100) பெருந்திணைப் (139, 140) பாடல்கள் சங்க இலக்கியத்தில் கலித்தொகையில் (138) மட்டுமே இடம்பெற்றுள்ளன என்பது குறிக்கத்தக்கது.

நற்றிணை, குறுந்தொகையின் முதற்பாடல்கள் குறிஞ்சித்திணையிலும் ஐங்குறுநூறு முதற்பாடல் மருதத்திணையிலும் அமைய, அகநானூறு, கலித்தொகை ஆகியவற்றின் முதற்பாடல்கள் பாலைத்திணையில் அமைந்துள.

திணை அமைப்பு முறை

பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் வகையில் திணை அமைப்பு முறை அமைந்துள்ளது. கலித்தொகையில் உள்ள பாடல்கள், கடவுள் வாழ்த்து - 1 (நல்லந்துவனார்), பாலை - 35 (பாலை பாடிய பெருங்கடுங்கோ), குறிஞ்சி - 29(கபிலர்), மருதம் -35 (மருதனிள நாகனார்), முல்லை - 17 (சோழன் நல்லுருத்திரன்), நெய்தல் - 33 (நல்லுந்துவனார்) என்ற முறையில் அமைந்துள்ளன.

கலித்தொகைக்கு உரைகண்டவர் ***உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்*** ஆவார். தொல்காப்பியம், பத்துப்பாட்டு சீவகசிந்தாமணி போன்றவற்றிற்கு இவர் எழுதியுள்ள உரைகளைவிட கலித்தொகைக்கு எழுதியுள்ள உரை சிறந்தது என அறிஞர்கள் போற்றுவர். எட்டுத்தொகையுள் முதலில் (1887) இந்நூலே பதிப்பிக்கப்பெற்றது.

கலித்தொகையை நச்சினார்க்கினியர் உரையுடைன் முதலில் பதிப்பித்தவர் யாழ்ப்பாணத்துத் தமிழறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை ஆவார். அதன்பின்னர் சென்னை மாநிலக்கல்லூரியில் பணியாற்றிய இ.வை. அனந்த ராமையர் 1925இல் இரு பகுதிகளையும் 1931இல் மூன்றாம் பகுதியையும் வெளியிட்டார். கலித்தொகையின் மிகச்சிறந்த பதிப்பென இப்பதிப்பு தமிழ்ச்சான்றோரால் பாராட்டப்பெறுகிறது. முதல் பகுதியில் பாலையும், குறிஞ்சியும் இரண்டாம் பகுதியில் மருத, முல்லைக்கலிகளும் மூன்றாம் பகுதியில் நெய்தல் கலி, பாடினோர் வரலாறு, அரும்பத அகராதி போன்றவையும் இடம்பெறுகின்றன. ***சிறந்த ஒரு பதிப்பு எத்தனை வகையாக ஆராய்ச்சி செய்து பதிப்பிக்கப்பட வேண்டுமோ அத்தனை வகையிலும் சிறிதும் குறைவின்றி ஆராய்ச்சி செய்யப் பெற்று இப்புத்தகம் விளங்குகின்றது*** என்று உ.வே.சா இதனைப் பாராட்டியுள்ளமை குறிக்கத் தக்கது.

சோழன் நல்லுருத்திரன் சோழர் குடியைச் சேர்ந்தவராக இருந்தாலும் பாண்டி நாட்டில் வாழந்தவராக இருக்கலாம். ஏறுகளை வெள்ளை, காரி, குரால் (செங்காரி) புள்ளி வெள்ளை (புள்ளிகளையுடைய வெள்ளேறு) போன்ற பலநிறங்கலந்த ஏறுகளையும் இயல்பாக கூறிச்செல்லும் இவர் ஏறு தழுவுதலை மிக விரிவாகக் காட்சிப்படுத்தியமை எண்ணத்தக்கது. உவமைகளை ஆயர் வாழ்வியலைச் சார்ந்து கூறியுள்ளமை ஆயர் வாழ்வியலை இவர் நன்கு அறிந்தவர் என்று உணரமுடிகின்றது. புறநானூற்றில் 190-வது பாடலையும் இவர் பாடியுள்ளார்.

முல்லைக்கலியில் பீமன் துச்சாதனனைக் கொன்றமை, அசுவத்தாமன் திட்டத்துய்மனைக் கொன்றமை, கிருஷ்ணன் கேசி என்னும் அரக்கனைக் கொன்றமை, கிருஷ்ணன் மகாபாரதப்போரில் சங்கு ஊதியமை, நிலவை விழுங்கிய பாம்புகளைத் திருமால் கொன்றமை, பாண்டவர்களும் கௌரவர்களும் போரிட்ட போர்க்களம், சிவன் எமதர்மனின் நெஞ்சைப் பிளந்தமை, சிவன் நிலவைச் சூடியமை, சிவனின் கழுத்து நீல நிறத்தில் உள்ளமை, முருகன் சூரபத்மனைக் கொன்றமை இந்திரனின் உடலில் ஆயிரம் கண்கள் உள்ளமை போன்ற புராணக் கதைகள் இடம்பெற்றுள்ளன.

பீமன் துச்சாதனனைக் கொன்றமை

முல்லைக்கலியில் இடம்பெறும் முதல் கதையாக மகாபாரதப்போரில் பீமன் துச்சாதனனைக் கொன்ற நிகழ்வு கூறப்படுகிறது. அழகிய கூந்தலையுடைய திரௌபதியைப் பலர் முன்னிலையில் ஆடையை இழுத்து அவமானப்படுத்திய துச்சாதனனைக் கொல்வேன் என்று பீமன் அவையோர் முன்னிலையில் வஞ்சினம் கூறி போர்க்களத்தில் அவன் கைகளை ஒடித்து அவனது இரத்தத்தைக்குடித்து அவனைக்கொன்றான். ஆற்றல் வாய்ந்த பீமன் துச்சாதனனைக் கொன்றது போலவே தன்னைத் தழுவ வந்த வீரனைப் பட்டுப்பூச்சி போன்ற நிறத்தையுடைய ஏறு குத்தித் தன் கொம்புகளுக்கு இடையே அவனுடலைக் குலைத்தது. இதனை,

மேற்பாட்டு உலண்டின் நிறன் ஒக்கும் புன்குருக்கண்
....
அம்சீர் அசைஇயல் கூந்தற்கை நீட்டியான்
நெஞ்சம் பிளந்து இட்டு நேரார் நடுவண் தன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம் (101) என்ற அடிகள் உணர்த்துகின்றன.

அசுவத்தாமன் திட்டத்துய்மனைக் கொன்றமை

பரத்வாஜரின் மகன் துரோணர். துரோணாச்சாரியாரின் நண்பன் துருபதன். இருவரும் ஒன்றாகக் கல்வி பயின்றனர். தான் ஆட்சிக்கு வரும்போது துரோணருக்குப் பாதி நாடு கொடுப்பதாகத் துருபதன் கூறினான். பின்னர் துரோணருக்கு மணமாயிற்று. அசுவத்தாமன் என்ற மகன் பிறந்தான்.

துருபதன் பாஞ்சால நாட்டின் அரசனானான். தன் நண்பன் பாதி நாடு தருவதாகக் கூறியதை எண்ணிய துரோணர் அவனிடம் சென்றால் பெருஞ்செல்வத்தை அடையலாம் என்றெண்ணி அவனிடம் சென்றார். மன்னனின் நண்பன் என்று துரோணர் தன்னை அறிவித்துக்கொண்டதை துருபதன் விரும்பவில்லை. அரசனும் எந்தச்செல்வமும் இல்லாத ஒருவனும் எவ்வாறு நண்பர்களாக இருக்கமுடியும் என்று வினவினான். துரோணர் சினம் கொண்டார். உள்ளத்தில் ஒரு எண்ணம் கொண்டு அஸ்தினாபுரம் சென்றார்.

அஸ்தினாபுரத்தில் ராஜகுமாரர்கள் விளையாடிக் கொண்டிருக்கும்போது கிணற்றில் விழுந்த பந்தையும் மோதிரத்தையும் எடுத்துக்கொடுத்தார். அதைக்கண்டு அச்சிறுவர்கள் பீஷ்மரிடம் சென்று கூறினர். துரோணரை அறிந்த பீஷ்மர் அச்சிறுவர்களுக்கு ஆயுதப் பயிற்சி தருமாறு வேண்டிக்கொண்டார்.

ஆயுதப்பயிற்சி முடிந்ததும் குரு தட்சணையாகத் துருபதனை உயிரோடு பிடித்துவர வேண்டும் என்று துரியோதனனையும் கர்ணனையும் அனுப்பினார். அவர்களால் இயலவில்லை. பின்னர் அர்ச்சுனனை அனுப்ப அவன் துருபதனைக் கொண்டு வந்தான். அவனிடம் துரோணர் 'நான் உன்னோடு நட்பாகவே இருக்கவிரும்புகிறேன். உன் நாட்டை உனக்கே அளிக்கிறேன்' என்றார். துருபதன் வெட்கித்தலை குனிந்தான். துரோணரைக் கொல்லக்கூடிய ஒரு மகனும், அர்ச்சுனனை மணம் புரிய ஒரு மகளும் வேண்டி, பல விரதங்கள் இருந்து திட்டத்துய்மன் என்ற மகனையும், திரௌபதி என்ற மகளையும் பெற்றான். பல வருடங்கள் சென்றன.

மகாபாரதப்போரில் பாண்டவ சேனாதிபதியாகத் திட்டத்துய்மன் நியமிக்கப்பெற்றான். கௌரவ சேனாதிபதியாக பீஷ்மர் நியமிக்கப்பட்டார். பீஷ்மர் மறைவுக்குப்பின் பதினோராம் நாளில் இருந்து துரோணர் கௌரவ சேனாதிபதியாக நியமிக்கப்பட்டார். போரில் துரோணரை யாராலும் வெல்ல இயலவில்லை. அவரைக் கண்டு பாண்டவ வீரர்கள் அஞ்சினர். கிருஷ்ணன் அர்ச்சுனனிடம், துரோணரை வெல்ல யாரும் இல்லை. வேறுவகையில் ஏதேனும் செய்யவேண்டும். துரோணரின் மகன் அசுவத்தாமன் இறந்ததாகக் கேள்விப்பட்டால் துரோணர் போர்புரிய மாட்டார் என்றான். அர்ச்சுனன் உட்பட்ட பலரும் இதை விரும்பவில்லை. நானே அவரிடம் சொல்கிறேன் என்று தருமன் கூறினான்.

பீமன் தன் கதையால் அசுவத்தாமன் என்ற யானையைக் கொன்றான். துரோணர் காதில் விழும்படி, உரத்த குரலில் அசுவத்தாமனைக் கொன்றேன் என்றான். வெட்கத்தில் மூழ்கினான். துரோணர் தன் மகன் இறந்தது உண்மையாக இருக்காது என எண்ணி தருமனிடம் என் மகன் இறந்தானா? உண்மையா? என்று கேட்டார். தருமனும் அசுவத்தாமன் இறந்தது உண்மை என்று உரக்கச்சொன்னான். அசுவத்தாமன் என்னும் யானை என்று பின்னர் தாழ்ந்த குரலில் கூறினான்.

மகன் இறந்துவிட்டான் என்று உயிரை வெறுத்த துரோணர் அம்புகளைக் கீழே எறிந்து தேரில் அமர்ந்து யோகத்தில் ஈடுபட்டார். அப்பொழுது திட்டத்துய்மன் தேரில் ஏறி துரோணரின் தலையை அறுத்து அவரைக் கொன்றான்.

துரியோதனனைக் கதையால் அடித்து பீமன் வீழ்த்தினான். குற்றுயிராய்க் கிடந்த துரியோதனன் கௌரவ சேனைக்குச்சேனாதிபதியாக அசுவத்தாமனை நியமித்தான். அன்றிரவு இருள் சூழ்ந்த ஒரு காட்டில் அசுவத்தாமன் தங்கியிருந்தான். ஆலமரத்தில் தங்கியிருந்த காக்கைகளை ஒரு கோட்டான் கொத்திக்கிழித்தது. நானும் இதுபோலவே திட்டத்துய்மனைக் கொல்வேன் என்று அசுவத்தாமன் பாண்டவர்களின் கூடாரத்திற்குச் சென்றான். உறங்கிக்கொண்டிருந்த திட்டத்துய்மனைக் காலால் உதைத்து, நிலத்தில் தேய்த்து தன் வில்லின் நாண்கயிற்றினால் அவன் கழுத்தைக் கட்டி இழுத்து அவனை மிதித்து வருத்தினான். தன்னைப் படைக்கலத்தால் கொல்லும்படி வேண்டிய திட்டத்துய்மனை, நீ படைக்கலத்தால் கொல்லப்பட வேண்டியவனில்லை என்று தன் கால்களால் உதைத்துக் கொன்றான். மிக விரிவான இக்கதையை,

ISSN 2320-4842

சுடர் விரிந்தன்ன சுரிநெற்றிக்காரி
..
ஆர் இருள் என்னான் அருங்கங்குல் வந்து தன்
தாளின் கடந்துஅட்டு தந்தையைக் கொன்றானைத்
தோளின் திருகுவான் போன்ம் என்று முல்லைக்கலி (101) உணர்த்துகிறது.

மிகுந்த கோபத்தோடு இருந்து திட்டத்துய்மனைக் கொன்ற அசுவத்தாமனைப்போலவே தன்னைத் தழுவ வந்த வீரனை ஏறு தன் கொம்பால் குத்திக்குலைத் தது.

அரக்கன் கேசியைக் கிருஷ்ணன் கொன்றமை

பிருந்தாவனத்தில் இருந்த கேசி என்னும் அரக்கன் கம்சன் தூண்டுதலால் குதிரை வடிவம் கொண்டான். கண்ணன் இருக்கும் இடத்திற்குச் சென்று பெருங் கனைப்புச்செய்தான். ஆயர்கள் அலறினர். கண்ணன் அவர்களிடம் அஞ்சாதீர்கள். இவன் கேசி என்னும் அரக்கன். இவனை நான் கொல்கிறேன் என்று கூறி அக்குதிரையிடம் சென்றான்.

அசுரக்குதிரை வாயைத் திறந்துகொண்டு கண்ணன்மீது பாய்ந்தது. கண்ணன் தன் கையை அக்குதிரையின் வாயில் செலுத்த அக்குதிரையின் வாய் கிழிந்தது. கண்ணனின் கை வளர்ந்துகொண்டே சென்றதால் குதிரை தளர்ந்து அடங்கி நின்றது. கண்ணன் தன் கையைத் தளர்த்தி அக்குதிரையை இரு பிளவுகளா கப் பிளந்து எறிந்தான். கேசி என்னும் அரக்கனைக் கொண்டதால் அவனுக்குக் கேசவன் எனும் பெயரும் உண்டாயிற்று. இதனை

மேவார் விடுத்தந்த கூந்தற்குதிரையை
வாய்பகுத்து இட்டு புடைத்த ஞான்று இன்னன்கொல்
மாயோன் என்று உட்கிற்று என் நெஞ்சு என்ற முல்லைக்கலி(103)அடிகள் உணர்த்துகின்றன ***மாவாய் பிளந்தானை*** என்று திருப்பாவையும் (8) இதனையே உணர்த்துகின்றது. ***கஞ்சனார் வஞ்சம் கடந்தானை*** (ஆய்ச்சியர் குரவை 47) என்று சிலம்பும் இதனை உணர்த்துகின்றது.

தன்னை எதிர்த்த ஏற்றின் வலிமையை அடக்கித் தழு விய வீரனின் அழகைப்பாராய். குதிரையைப் பிளந்து கொன்ற நேரத்தில் மாயனும் இத்தகையனோ என்று தோழி கூறுகிறாள். காளையை அடக்கிய வீரன் திருமா லுடன் ஒப்பிடப்படுகிறான் என்பது குறிக்கத்தக்கது.

பாண்டவர்கள்-கௌரவர்கள் போரிட்ட போர்க்களம்

முல்லை நில ஆயர் மக்கள் தம் கடவுளான கண் ணனை என்றும் போற்றுபவர்கள். மகாபாரப்போரில் கண்ணன் பலவித உதவிகள் செய்து பாண்டவரை வெற்றிபெறச் செய்தான். அவன் பெருமை மகா பாரதப் போராலேயே முழுதும் வெளிப்பட்டது. 18 நாட்கள் நடந்த அப்போரின் போர்க்களம் மிகவும் துன்பத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. ஆயர் களும் ஏறுகளும் தம்முள் பொருதது போன்ற ஏறு தழுவும் களம் கௌரவர்களும் பாண்டவர்களும் போரிட்ட போர்க்களம்போல் இருந்தது. இதனை,

புரிபு மேல் சென்ற நூற்றுவர் மடங்க
வரிபுனை வல்வில் ஐவர் அட்ட
பொருகளம் போமும் தொமூஉ என முல்லைக் கலி (104) குறிக்கின்றது.

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் போர் என முடிவானதும் போர் நடக்கும் இடத்தைத் தேர்வு செய்யும் பொறுப்பைக் கண்ணனுக்குத் தருகிறார்கள். கண்ணன் மிகுந்த யோசனையுடன் தேரில் போய்க் கொண்டிருக்கிறான். ஒரு தந்தை தன் மகனுடன் (சிறுவன்) நெல் வயலிலுள்ள உடைப்பை அடைப் பதற்காக மண்வெட்டியுடன் வருகிறார். மேல் வயலி லுள்ள உடைப்பை மண்வெட்டி கொண்டு அடைக்க முயன்றும் பலனில்லை. தன் மகனை படுக்கச்சொல் கிறார். சிறுவனும் உடைப்புக்கு அருகில் படுக்கிறான். தன் கையில் உள்ள மண்வெட்டியால் அச்சிறுவனின் உடலை இரண்டாக வெட்டி உடைப்பைச் சரிசெய்கி றார். கண்ணன் அதைக்கண்டு வியக்கிறான். உடைப் பைச் சரிசெய்ய வந்த தந்தை மகனைக் கொன்று தன் நோக்கத்தை நிறைவேற்றுகிறார். பாசத்திற்கு முதன்மை தராமல் நோக்கத்திற்கு முதன்மை தந்த இந்த இடமே கௌரவர்களும் பாண்டவர்களும் பாசத்தால் பிணிப்புறாமல் நோக்கத்தை நிறைவேற்றும் போர்க் களத்திற்குச் சரியான இடம் என்று கிருஷ்ணன் முடிவுசெய்கிறான். குருசேத்திரம் என்ற அவ்விடமே பின்னர் போர்க்களமாக அமைந்தது.

மாபாரதப் போர்க்களம்போன்ற பெரிய போர்க் களத் தைக் கலிங்கத்துப்பரணியும் கூறுவது இங்கு நோக் கத்தக்கது (களம் பாடியது 1)

சிவன் நிலவைச் சூடியமை

தட்சன் என்னும் முனிவனுக்கு 27 பெண்கள். அப் பெண்கள் 27 பேரையும் சந்திரன் திருமணம் செய்து கொள்கிறான். 27 பெண்களும் வானில் நட்சத்திரங் களாய் மாறினர். அப்பெண்களுள் ரோகிணி பேரழகி. இதனால் சந்திரன் ரோகிணியைப் பிரியாது இருந் தான். மற்ற பெண்கள் வருத்தமுற்றுத் தன் தந்தை யிடம் முறையிட்டனர்.

தட்சன் சந்திரனை அழைத்து அனைவரிடமும் அன்பு செலுத்து என்று அறிவுரை கூறுகிறான். சந்திரன் அதைப் பின்பற்றவில்லை. மீண்டும் ரோகிணியுட னேயே பொழுதைக் கழிக்கிறான். மற்ற பெண்கள் மீண்டும் தந்தையிடம் முறையிடுகின்றனர். தட்சன் சந்திரனை அழைத்து மீண்டும் அறிவுரை கூறுகிறான். இவ்வாறு இருந்தால் சாபம் இடுவேன் என எச்சரிக் கிறான். ஆனால் சந்திரன் மீண்டும் ரோகிணியிடம் மட்டும் அன்பு செலுத்துகிறான். மற்ற பெண்கள் மீண்டும் தந்தையிடம் முறையிடுகின்றனர். தட்சன் இதனால் மிகுந்த கோபம் கொண்டு சந்திரனிடம் உள்ள கலைகள் அழியும்படி சாபம் இடுகிறான். சந்திர

னிடமிருந்த 30 கலைகளும் ஒவ்வொன்றாய் அழிய ஆரம்பித்தது. சந்திரன் பலரிடம் சென்று வேண்டி யும் அவனுக்குப் பலன் கிட்டவில்லை. அவன் சிவ னிடம் சென்று வேண்டும்பொழுது அவனிடம் ஒரே கலை மட்டுமே இருந்தது. சந்திரன் சிவனைச் சரண டைந்தான். சந்திரன் தான் இழந்த ஒளியை மீண்டும் பெற்றான். இழந்த கலைகள் பதினைந்து நாள் வளர்ந்து முழுமைபெற்று மீண்டும் பதினைந்து நாள் தேய்ந்தும் பின்னர் வளர்ந்தும் தேய்ந்தும் அவன் வாழ்நாள் கழியும் என்று சிவன் கூறினார். இதனால் சிவனின் தலையில் அமரும் பெரும்பேற்றைச் சந்தி ரன் அடைந்தான். சிவனும் சந்திரனைச் சூடியதால் சந்திரசேகரர் ஆனார். இதனை

கொலைவன் சூடிய குழவித் திங்கள் போல் என்று முல்லைக்கலி(1) உணர்த்துகிறது. ***பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி*** (109) என்று புறநானூறு கூறுவ தும் எண்ணத்தக்கது.

முருகன் சூரபத்மனைக் கொன்றமை

காச்யபர் என்ற முனிவருக்கும் மாயை என்ற பெண் ணுக்கும் பிறந்தவன் சூரபத்மன். இவனுக்குச் சிம்ம முகன், தாரகாசுரன் என்ற தம்பியரும் அஜாமுகி என்ற தங்கையும் உண்டு. சூரபத்மன் தன் தம்பி யருடன் மிகப்பெரிய யாகம் செய்து, ***1008 அண்டங் களையும் ஆட்சி செய்ய வேண்டும். பிரம்மா, விஷ்ணு போன்ற தேவர்களும் எனக்குப் பயந்து ஓடி ஒளிய வேண் டும். சகல அண்டங்களுக்கும் நான் சென்று வருவதற் கான ஆற்றலை வழங்க வேண்டும்*** என்று வரங்களை வேண்ட சிவனும் அவற்றை வழங்குகிறார். நூற்றி எட்டு யுக காலம் வரை உன் வரங்கள் இருக்கும். இறுதியில் நீ அழிவாய் என்றும் கூறுகிறார்.

சூரபத்மன் தேவர்களைத் துன்புறுத்திப் பல கொடுஞ் செயல்களில் ஈடுபடுகிறான். சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து பிறந்த முருகன் சூரபத்மனின் தம்பி யரை அழிக்கிறான். பறவையாக மாறிய சூரபத்மன் முருகனின் படைவீரர்களை அழிக்க இந்திரன் மயி லாக மாற அதன்மீது அமர்ந்த முருகன் அசுரனை துரத்திச்சென்று அவன் மேல் பலவித அம்புகளை எய்ய, அசுரன் கடலாக மாற முருகன் அக்னி அம்பு களை எய்துகடலை வற்றச்செய்தார். முருகனின் அம்பு களால் சூரன் ஆயுதம் எதுவும் இல்லாமல் நின்றான். பின்னர் மாமரமாக மாறி அனைவரையும் துன்பப் படுத்தினான். முருகன் தன்னுடைய வேலாயுதத்தால் மாமரத்தை இண்டாகப்பிளக்க மரத்தின் ஒரு பகுதி மயிலாகவும்ஒரு பகுதி கோழிச்சேவலாகவும் மாறின. அவை இரண்டும் முருகனை எதிர்த்துப் போரிட வந்து முருகனின் அன்புப் பார்வையில் ஞான அறிவைப் பெற்றன. இதனை

மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர்
வேல்வலான் நிறனே போல் என்று முல்லைக்கலி (104) உணர்த்துகிறது.

இந்திரனின் உடலில் ஆயிரம் கண்கள் உள்ளமை

கௌதம முனிவரின் மனைவி அகலிகை. பேரழகி யான அவள்மீது இந்திரன் ஆசை கொள்கிறான். கௌதம முனிவரின் குடிலுக்கு நள்ளிரவில் சென்று கோழியைப்போல் கூவுகிறான். விடியற்காலை என்று நினைத்துக் கௌதம முனிவர் பூஜைக்காக ஆற்றுக் குச் செல்கிறார். இந்திரன் கௌதம முனிவர் வேடத் தில்அகலிகையுடன் மகிழ்கிறான். சிறிது தூரம் சென்ற கௌதம முனிவர் இருள் பிரியாமல் இருப்பதைக் கண்டு தன் குடிலுக்குச் செல்ல, அங்கே அகலிகை யும் இந்திரனும் ஒன்றாக இருப்பதைக் காண்கிறார். 1000 ஆண்டுகள் நீ கல்லாக இரு என்று அக லிகைக்கும் 1000 கண்கள் உன் உடலில் தோன்றட் டும் என இந்திரனுக்கும் சாபமளிக்கிறார். அகலிகை தான் தவறு செய்யவில்லையென்று சாப விமோச னம் கேட்க, 'திருமால் மனித அவதாரமாகப் பிறப் பார். அவர் பாதம் பட்டதும் கல்லாக இருக்கும் நீ பெண்ணாக மாறுவாய்' என்று சாப விமோசனமும் அளிக்கிறார். அதிலிருந்து இந்திரனின் உடலில் 1000 கண்கள் தோன்றின. இராமன் திருவடி பட்டுக் கல் லாக இருந்த அகலிகை பெண்ணாக மாறினாள். ஆயிரம் கண்ணோன் என்று இக்காரணத்தினால் இந்திரனுக்குப் பெயர் வந்தது. இதனை

அணங்குடை வச்சிரத்தோள் ஆயிரம்கண் ஏய்க்கும்
கணங்கொள் பல்பொறி என்ற முல்லைக்கலி (5) அடிகள் உணர்த்துகின்றன. உடலில் பல புள்ளிகளை உடைய ஏறு இந்திரனின் கண்களுக்கு உவமையாக் கப்படுகிறது. கம்பராமாயணமும் இதனை,
சிந்தையின் முனிவு தீர்ந்து சிறந்த ஆயிரம் கண்ணாக்க என்று (பாலகாண்டம் அகலிகைப்படலம் 81) கூறுவது எண்ணத்தக்கது.

சிவனின் கழுத்து நீல நிறத்தில் உள்ளமை

திருமால் பாற்கடலைக் கடையும்போது அதிலிருந்து வெளிப்பட்ட நஞ்சை சிவன் உண்டார். பார்வதி சிவ னின் கழுத்தை இறுக்கமாகப் பிடிக்க சிவனின் கண் டம்(தொண்டை) நீல நிறமாக மாறியது. இதனால் சிவன் நீலண்டன், திருநீலகண்டன் என்னும் பெயர் களோடு அழைக்கப்படுகிறார். திருநீலகண்ட யாழ்ப் பாணர் என்னும் பெயரில் நாயன்மார் ஒருவர் இருந் தமை எண்ணத்தக்கது. இதனை, ***பெரும்பெயர்க் கணிச்சியோன்மணிமிடமற்றுஅணிபோல*** என முல்லைக் கலி (5) உணர்த்துகிறது. புறநானூற்றில் (109) ஔவையாரும் தனக்கு நெல்லிக்கனி ஈந்த அதிய மானை, ***நீல மணிமிடற்று ஒருவன் போல/மன்னும பெரும நீயே*** என்று வாழ்த்துவது குறிக்கத்தக்கது.

கண்ணன் மகாபாரதப் போரில் சங்கு ஊதியமை

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் போர் நடந்த போது தூதுவனாக இருந்தவன் கண்ணன். போர் தொடங்கியதன் அடையாளமாக தன் சங்கை எடுத்து ஊதினான் என்று மகாபாரதம் கூறுதுகிறது. இதனை,

வள் உருள் நேமியான் வாய் வைத்த வளைபோல என்று முல்லைக்கலி (5) உணர்த்துகிறது. கண்ணன் தன்னுடைய சங்கை முழங்கியதை, ***நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்/படர்ந்து ஆரணம் முழங்க*** என்ற சிலப்பதிகார அடிகளும் (ஆய்ச்சியர் குரவை) இதே கருத்தையே உணர்த்துகிறது.திருமாலுடைய சங்கின் பெயர் பாஞ்சசன்னியம். இதனைப் பெரியாழ்வார்,

படைபோர் புக்கு முழங்கும்
அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே என்று திருப் பல் லாண்டிலும், ஆண்டாள், ***பாலன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே*** என்று திருப்பாவையிலும் (26) கூறுவது உணரத்தக்கது.

சிவபெருமான் எமனை அழித்தமை

ஊழிக்கால இறுதியில் உயிரினங்களை அழிக்க எருமைக் கடாமீது ஏறிவந்த எமதர்மனைக் காலால் உதைத்துச் சிவன் அழித்ததை,

படர்அணி அந்திப் பசுங்கட் கடவுள்
இடரிய ஏற்று எருமை நெஞ்சு இடந்துஇட்டு
குடர் கூறிக்கு ஆர்த்துவான் போன்ம் என்றும்
ஏற்றெருமை நெஞ்சம் வடிம்பின் இடந்துஇட்டு
சீற்றமோடு ஆருயிர் கொண்ட ஞான்று இன்னன்கொல்
கூற்று என உட்கிற்கு என்நெஞ்சு என்றும் முல்லைக்கலி (101, 103) உணர்த்துகிறது.

திருமால் நிலவை மீட்டமை

இராகு, கேது எனும் பாம்புகள் நிலவை விழுங்கும் போது திருமால் அப்பாம்புகளிடம் இருந்து நிலவை மீட்டார். இதனை,

பால்மதி சேர்ந்த அரவினைக் கோள்விடுக்கும்
நீல்நிற வண்ணனும் போன்ம் என்று முல்லைக்கலி (104) உணர்த்துகிறது.

மேற்கண்ட கதைகள் முல்லைக்கலியிலுள்ள பாடலடி களில் பொதிந்துள. முல்லைக்கலியிலுள்ள புராணக் கதைகள் பல வகைப்பட்டன. முல்லை நிலக் கடவு ளானதிருமாலைச் சார்ந்த கதைகளே அதிகம் பேசப் படுகின்றன. திருமால், சிவன், பலராமன், முருகன், இந்திரன் போன்ற கடவுளர்கள் ஏறுகளின் ஆற்றல், தோற்றம் ஆகிய இரண்டையும் குறிக்க உவமைகள் ஆளப்படுகின்றன. சிவன் எமதர்மனின் நெஞ்சைப் பிளந்தமை, கண்ணன் கேசி என்னும் அரக்கனைக் கொன்றமை ஆகிய இரு கதைகள் மட்டுமே வீரர் களை உவமை வாயிலாகக் குறிக்கின்றன.

மேற்குறித்த கதைகள் மக்களால் வழிவழியாகப் பேசப் பட்டிருக்க வேண்டும். அநீதி செய்த துச்சாதனன் நெஞ்சை பீமன் பிளந்ததுபோல ஏறு ஒருவனைக் குத்தியது எனும்போது தீமை செய்பவர்கள் அழிக்கப் படுவார்கள் எனும் எண்ணம் மக்களுக்கு இருந்தது என அறியமுடிகிறது. முல்லைநில மக்களின் தொழி லான ஆனிரை மேய்த்தல் கதை பேசும் சூழலை உருவாக்கித்தந்தது.மற்ற நில மக்கள் தம் தொழிலைச் செய்யவே நேரம் இருந்தது. வளமான வாழ்க்கை வாழ்ந்த மருதநில மக்கள் வேறு பொழுதுபோக்கு களையும் (புனலாடல், பரத்தையர்) மேற்கொண் டிருந்தனர். முல்லை நில மக்கள் தொழிலோடு சேர்ந்த ஒன்றாகக் கதை பேசியதால் அக்கதைகள் வழிவழியாக வருவதற்குக் காரணமாய் இருந்தது. புலவருக்குக் கதை சொல்வதில் இருந்த ஆர்வமும் இதன்மூலம் புலப்படுகிறது.

சிலம்பில் குன்றக்குரவை, வேட்டுவவரி, கானல்வரி போன்ற திணை சார்ந்த காதைகளைவிட முல்லை நில மக்களின் ஆய்ச்சியர் குரவை பல புராணக் கதைகளைத் தாங்கி நிற்பதால் முல்லைநில மக்களி டம் கதைகள் பல வழிவழியாக வந்துள்ளன என்பது சான்றாக அமைகிறது.

ஆய்விற்குப் பயன்பெற்ற நூல்கள்

கம்பராமாயணம், திருமகள் நிலையம், சென்னை, ஜீன் 2001.

கலித்தொகை, தமிழ்ப் பல்கலைக்கழகம், அனந்தராமையர் பதிப்பு, தஞ்சாவூர், பிப்ரவரி 1984.

சிலப்பதிகாரம், கழகவெளியீடு

திருப்பாவை, கழகவெளியீடு

மகாபாரதம், வானதி பதிப்பகம் (சக்ரவர்த்தி இராஜகோபாலாச் சாரி), சென்னை, நவம்பர் 2000.

ஸ்ரீகந்தபுராணம், பிரேமா பிரசுரம், சென்னை, செப்டம்பர் 2000.

ஸ்ரீ விஷ்ணு புராணம், பிரேமா பிரசுரம், சென்னை, ஜனவரி 2008.

ஸ்ரீசிவபுராணம், பிரேமா பிரசுரம், சென்னை, ஜனவரி 2008.

தொல்காப்பியம் சொல்லதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை,முதற்பதிப்பு 2010.

69ஆம் பக்கத் தொடர்ச்சி

4.சோமசுந்தரனார் பொ.வே, கலித்தொகை நச்சினார்க்கினியர் உரையும் விளக்கமும்,கழக வெளியீடு,சென்னை, முதற்பதிப்பு 1973.

5.திலகவதி.க, சங்ககால மகளிர் வாழ்வியல், இறையருள் பதிப்பகம், திருச்சி, முதற்பதிப்பு 2004.

6.நாற்கவிராச நம்பி, நம்பிகப்பொருள் விளக்கம், தென்னிந் திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற் பதிப்பு 1989.

7.பசும்பொன்.க, செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் கற்பு நெறி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு 2010.

8. மாணிக்கனார்.அ, கலித்தொகை மூலமும் உரையும், வர்த்த மானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 1999.

9.மாணிக்கவாசகம்.ஞ, தொல்காப்பியம், உமா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2006.

ISSN 2320-4842

தொல்காப்பியத்தில் இளமைப்பெயர்கள்

முனைவர் ப. மகேஸ்வரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை 641 018

முன்னுரை

பன்னெடுங்காலப் பழக்கத்தின் விளைவாகத் தோன்றுவது மரபு. இதனை நன்னூல் ***எப்பொருள் சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே*** (நன்.388) என்கிறது. மரபியலின் மூலம் செய்யு ளாக்கத்தில் பின்பற்றப்பட வேண்டிய மரபுகள் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுவதை ஆய்ந்துரைப்பது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

செய்யுளாக்கத்தில் மரபின் இன்றியமையாமை

தொல்காப்பியத்திலுள்ள 27 இயல்களில் 4 இயல்கள் மரபு என முடிகின்றன. மரபியல் என்றே இறுதி இயல் முடிகின்றது. மரபினை அவர் ***மாற்றருஞ் சிறப்பின் மரபு*** எனக் குறிப்பிடுகிறார். மரபு பின்பற்றப்பட வேண்டும் என்பதை,

மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லினானே (தொல்.பொருள்.636)

மரபுநிலை திரியின் பிறிதுபிறிதாகும் (தொல்.பொருள்.637) என்கிறார். இந்நூற்பாக்கள் இலக்கியத்திற்கு மரபு இன்றியமையாதது என்பதை விளக்குகின்றன.

மரபியல் வலியுறுத்தும் மரபுகள்

மரபியலில் 112 நூற்பாக்கள் உள்ளன. மரபை மாற்றக்கூடாது. மாற்றுதற்கு அரியது. மாற்றினால் பொருள் புரியாது. இதனைத் தொல்காப்பியர் செய்யுளியலில் ***மரபே தானும், நாற்சொல் இயலான் யாப்புவழிப் பட்டன்று*** (தொல்.மரபியல் 1337) எனக் கூறுகிறார்.

இலக்கியத்துள் ஆளப்பெறும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற நான்கையும் மரபுவழி ஆளவேண்டும். தொல்காப்பியர் மரபியல் வகுத்திருப்பது, பெரிதும் அகத்திணைப் பாடல்களுக்கு என்றே தோன்றுகிறது. அவற்றில்தான் கருப்பொருள்களான மரம், செடி, கொடி, விலங்கு, பறவை முதலானவை வருகின்றன. அவற்றின் இளமைப்பெயர்கள், பெண்பாற்பெயர்கள், ஆண்பாற்பெயர்கள் பட்டியலிடப்படுகின்றன.

இளமைப் பெயர்கள்

பார்ப்பு - பறப்பவை, தவழ்பவை, குரங்கு

பறழ் - மூங்கா, வெருகு, எலி, அணில், நாய், பன்றி, முயல், புலி, நரி, குரங்கு

குட்டி - மூங்கா(கீரி), வெளுகு(காட்டுப்பூனை), எலி, அணில், நாய், பன்றி, முயல், நரி, குரங்கு

அவற்றுள்
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்று இளமை (1503)
பார்ப்பு, பிள்ளை - என்பன பறப்பனவற்றின் இளமைப்பெயர்கள் ஆகும். (எ.டு) கிளிப்பிள்ளை

ஊர்வன

தவழ்பவை தாமும் அவற்றோரன்ன (1508). தவழ்வனவும், ஊர்வனவும் பார்ப்பு, பிள்ளை எனப்படும். (எ.டு) கீரிப்பிள்ளை

குட்டி

மூங்கா வெருகு எலி மூவரி அணிலொடு
ஆங்கு அவை நான்கும் குட்டிக்குரிய (1505)
குட்டி என அழைக்கப்படுபவை மூங்கா(கீரி), வெருகு (காட்டுப் பூனை), எலிக்குட்டி, அணில்குட்டி முதலியன. முதுகில் மூன்று கோடுகள் உள்ளது அணில் ஆகும். இது இன்று அணிற்பிள்ளை என்றும் வழங்கப்படுகிறது.

பறழ் எனப்படினும் உறழ் ஆண்டு இல்லை (1506)

மேலே கூறிய உயிரினங்களைக் குட்டி என்பதோடன்றிப் *பறழ்* என்று கூறினும் தவறில்லை. குறுந்தொகை

மந்தி வன் பறழ் (குறுந்.69) என்று குறிப்பிடுகிறது

குருளை

நாயே பன்றி புலி முயல் நான்கும்
ஆயுங்காலைக் குருளை என்ப (1507)
குருளை எனும் இளமைப்பெயர் பெறுவன நாய், பன்றி, புலி, முயல் முதலியன. இது பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டு: சாய் செவிக்குருளை (நாய்), புலிக்குருளை

நரியும் அற்றே நாடினர் கொளினே (1508)

நரியும் குருளை எனக் குறிக்கப்படும்.

குட்டி, பறழ்

குட்டியும் பறழும் கூற்று அவண் வரையார் (1509)

நாய்க்குட்டி, புலிக்குட்டி- முன்பு சிறுவழக்காக இருந்தவை இன்று பெருவழக்காயின. அவண் முன் சொல்லிய ஐந்து- நாய், பன்றி, புலி, முயல், நரி

பிள்ளை

பிள்ளைப்பெயரும் பிழைப்பு ஆண்டு இல்லை
கொள்ளும் காலை நாய் அலங்கடையே (1510)
நாய் அல்லாத மற்ற 4 இணையும் (பன்றி, புலி, முயல், நரி) பிள்ளை என அழைத்தாலும் தவறில்லை எனக் குறிப்பிடுகிறது தொல்காப்பியம்.

மறி எனும் இளமைப்பெயர்

யாடும் குதிரையும் நவ்வியும் உழையும்
ஓடும் புல்வாய் உளப்பட மறியே (1511)
மறி எனும் இளமைப்பெயர் பெறுவன - யாடு, குதிரை, நவ்வி, உழை, புல்வாய் முதலியன.

நவ்வி, உழை, புல்வாய் மூன்றும் உழை மான் இன வகைகள் ஆகும்.

குரங்குக்குட்டி

கோடு வாழ் குரங்கும் குட்டி கூறுப (1512)

குரங்கின் இனமான ஊகமும் முசுவும் குட்டி எனப் படும் என்று உரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.

மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையும் அன்ன அப்பா லான (1513)
குரங்கு வகைக்கு மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு என்பன இளமைப்பெயர்கள் ஆகும்.

கன்று

யானையும் குதிரையும் கழுதையும் கடமையும்
மானோடு ஐந்தும் கன்று எனற்கு உரிய (1514)
யானை, குதிரை, கழுதை, கடமை (மான்வகை), மான் முதலிய ஐந்தும் கன்று என அழைக்கப்படுதற்குரியன.

எருமையும் மரையும் வரையார் ஆண்டே (1515)

எருமை, மரை (மான் இனம்) - இவையும் கன்று எனப்படும்.

கவரியும் கராமும் நிகர்அவற் றுள்ளே (1516)

கவரி (மான் வகை), கராம் (முதலை) என்ற இரண்டும் கன்று என்பதற்கு ஒப்புமை உடையது

ஒட்டகம் அவற்றோடு ஒரு வழி நிலையும் (1517)

ஒட்டகமும் கன்று எனப்படும் என்பது சிறுபான்மை வழக்கு ஆகும்.

குழவி

குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க் கொடை (1518)

குஞ்சரம் (யானை) - குழவி என அழைக்கப்படும்.

ஆவும் எருமையும் அது சொலப்படுமே (1519)

எருமை - குழவி எனும் இளமைப்பெயர் பெறும்

கடமையும் மரையும் முதல்நிலை ஒன்றும் (1520)

கடமை, மரை (மான்) இவற்றிற்கும் குழவிப் பெயர் பொருந்தும்.

குரங்கும் முசுவும் ஊகமும் மூன்றும்
நிரம்ப நாடின் அப் பெயர்க்கு உரிய (1521)
குரங்கு, முசு, ஊகம் (குரங்கினம்) என்பன குழவி எனும் பெயர் பெறும்.

குழவி, மகவு இரண்டும் மக்களின் குழந்தைப் பெயர்கள்.

குழவியும் மகவும் ஆ இரண்டு அல்லவை
கிழவ அல்ல மக்கள் கண்ணே (1522)
ஓரறிவுயிர்

பயிரினம் பெறும் இளமைப்பெயர்கள்

பிள்ளை குழவி கன்றே போத்து எனக்
கொள்ளவும் அமையும் ஓரறிவுயிர்க்கே (1523)
ஓரறிவு உயிர் - இளமைப்பெயர் - பிள்ளை, குழவி, கன்று, போத்து (தென்னம்பிள்ளை, மரக்கன்று).

நெல், புல்

நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே'

நெல்லுக்கும் புல்லுக்கும் இளமைப்பெயர் கூறும் வழக்கம் இல்லை

முடிவுரை

தொல்காப்பியத்திலுள்ள மரபியல் சுட்டும் இளமைப் பெயர்கள், ஓரறிவுயிர் பெறும் இளமைப்பெயர்கள், இளமைப்பெயர் பெறாதன பற்றித் தெளிவாக்கப்பட்டுள்ளன.

துணைநின்ற நூல்கள்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி 3 முனைவர் தமிழண்ணல்

2.. நன்னூல்

ISSN 2320-4842

மருக்கை நாவலில் இனவரைவியலும் குடும்பச் சிதைவுகளும்

மு.பெ. சுப்புலட்சுமி
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர் (BDU 2120632779681), தமிழாய்வுத்துறை
தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சி
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

முனைவர் மு. அருணாசலம்
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சி (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

முன்னுரை

தனிமரம் தோப்பாக முடியாது. மனிதனும் அவனைச் சார்ந்தோருமே இணைந்து சமூகத்தை உருவாக்கு கின்றனர். இதற்கு அடிப்படையாக அமைவது குடும்பம் ஆகும். மனித உறவு என்பது உறவுப் பெயர் நிலை யில் மட்டும் அமையாமல் ஒருவர் இன்னொருவர்க்குச் செய்யும் உதவி, காட்டும் அன்பு, பரிவு போன்ற வற்றால் அமைந்திடும்.

உறவு' என்பது அன்பின் வெளிப்பாடு. பண்பின் செயல்பாடு. நல்ல உறவு முறைகளும் நல்ல உணர்வு முறைகளுமே ஆறாம் அறிவு படைத்த மனிதர்களை வாழ்வியலில் உயர்த்தும். மனித வாழக்கையில் உறவு கள் காலங் கடந்து பின்னிப் பிணைந்து நிற்கின்றது. தகவல் தொடர்பு யுகத்தில் ஒன்று பிறிதொன்றுடன் தொடர்பில்லாமல் வாழ்தல் என்பது இயலாது. ஒன்று பிரிதொன்றைச் சார்ந்துதான் இயங்கிடல் வேண்டும். அந்தச் சார்பு நிலையில் ஒழுங்கு அமைய வேண்டும். அதுதான் மனித உறவாகும். உறவு நிலையில் உண்மைத் தன்மை கட்டாயம் இடம்பெறல் வேண்டும். கணவன், மனைவி, தாய், தந்தை, ஆசிரியர், மாணவர், அண்ணன், தம்பி, அக்காள், தம்பி என்று குருதி சார்ந்த மற்றும் குருதி சாராத உறவு நிலைகள் சமூகத்தில் இடம்பெறுகின்றன. பணிபுரியும் இடங்களில் பணி நிமித்தம் சார்ந்த உறவுகள் மலர்கின்றன. ***உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று சொல்வார் உறவு கலவாமை வேண்டும்*** என்னும் அடிப்படையில் உறவு நிலைகள் இருந்திடல் வேண்டும். உண்மை இல்லாமல் போகிறபோது உறவுகள் சிதைந்தும், மனிதர்கள் வீழ்ந்தும் அந்நியமாகிவிடுகின்றனர்.

மருக்கையின் குறியீடு

அன்னம்மா-அழகுமுத்து தம்பதியினருக்கு மூத்த பிள்ளையான பரமசிவத்தைத் தொடர்ந்து காளிமுத்துவும் பிறகு நான்கு பெண் பிள்ளைகளும் பிறக்கின்றனர். வீடு நிறைந்து பிள்ளைகள் ஆட்டுக்குட்டிகளைப் போல இருக்கின்றனர். கொடாப்பில் ஆடுகள் ஒன்றுடன் ஒன்று முட்டியும் மோதியும் நிற்பதுபோல வீட்டில் பிள்ளைகள் ஒன்றுடன் ஒன்று உறவாடிக் கிடப்பதைப் பார்க்கும்போது மருக்கை (வயிற்றில் கருவை சுமந்திருக்கும் ஆடு) போலிருப்பதாக மருக்கை நாவலின் குறியீடு அமைகின்றது.

நாவல் ஆசிரியர் அறிமுகம்

1999ஆம் வருடத்திலிருந்து சிறு பத்திரிக்கைகளில் எழுதிவரும் எஸ். செந்தில்குமார் 1973ஆம் ஆண்டு பிறந்தார். இவரது சிறுகதைத் தொகுப்புகள் *வெய்யில் உலர்த்திய வீடு. சித்திரப்புலி, மஞ்சள் நிறப் பைத்தியங்கள், விலகிச் செல்லும் பருவம், மழைக்குப் பிறகு புறப்படும் ரயில் வண்டி, அலெக்ஸாண்டர் என்கிற கிளி, அனார்கலியின் காதலர்கள்* ஆகியவையாகும். இவர் படைத்த நாவல்களாக *ஜீ. சௌந்தர ராஜனின் கதை, முறி மருந்து, நீங்கள் நான் மற்றும் மரணம். காலண்டம், கழுதைப் பாதை* என்றமை கின்றன. இவரது கவிதைத் தொகுப்புகள் *குழந்தைகள் இல்லாத வீட்டில் உடையும் ஜாடிகள். சமீபத்திய காதலி, முன் சென்ற காலத்தின் சுவை* ஆகியவை வெளிவந்துள்ளன.

இவரது சொந்த ஊர் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த போடிநாயக்கனூர் ஆகும். இவர் ஏழை எளியோர் வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளையும் அவர்களது அபிலாசைகளையும் தனது நாவல்களிலும், சிறுகதைகளிலும் பதிவு செய்துவருகின்றார். அது மட்டுமல்லாது குடும்பச் சூழலை மையமாகக் கொண்டும் கணவன், மனைவி, குழந்தைகள், மாமனார், மாமியார், நாத்தனார் என்ற குடும்ப உறவுகளை மையமாகக் கொண்டும் நாவல்களைப் படைத்துவருகின்றார். மருக்கை நாவலில் இடம்பெறும் இனவரைவியலில் குடும்ப உறவுச் சிதைவுகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

மருக்கை நாவலின் இன வரைவியல் கூறுகள்

ஓர் இனத்தின் தனித்த பண்பாடுகளையும் அவ்வினத்தில் ஆழ்ந்து பொதிந்துள்ள நம்பிக்கைகளையும்,

ISSN 2320-4842

சடங்குகளையும் வெளிக்கொணர்ந்து பதிவு செய்யும் முறையே இனவரைவியல் ஆகும். அதாவது தொல் குடிச் சமூக மரபில் காணப்படும் ஓர் இனத்தின் அடையாளங்களை வெளிப்படுத்திடவும் அதில் இன வரலாறு, சமூக அமைப்பு, புழங்குப் பொருட்கள், பொருளாதாரம், திருமணம், சடங்குகள், சமயம், பஞ்சாயத்து, மருத்துவம், தொன்மைக் கதைகள், உணவுமுறைகள், விலங்குகள், நம்பிக்கை, வழிபாடு, மூலிகைகள் முதலான பரிணாமங்களில் இன அமைப்பு முகிழ்ந்துள்ள மரபுகளை மீட்டெடுப்பதே இனவரை வியல் ஆகும். தொல்குடிச் சமூகம் மட்டுமல்லாமல் அனைத்துச் சமூக அடையாளங்களையும் இதன்வழி மீட்டெடுக்கலாம். மருக்கை நாவலில் இனவரைவி யல் கூறுகள் கீழ்வருமாறு ஆராயப்படுகின்றன.

நம்பிக்கை

மக்களிடத்தில் நம்பிக்கைகள் நன்மை, தீமை கார ணமாக எழும் ஆர்வம், அச்சம் ஆகியவற்றின் அடிப் படையில் எழுகின்றன. இவை வாழ்க்கை தொடர் பான நம்பிக்கைகள், தெய்வம் தொடர்பான நம்பிக் கைகள் என இரண்டாகப் பகுக்கப்படுகின்றன. சில அறிவியலோடு தொடர்புடையதாகவும் அமைகின் றன. இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உண ராதபொழுதும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழு தும் மனித மனமானது சிலவற்றைத் தானாகப் படைத்துக் காரணங் கற்பித்துக்கொள்கிறது. அவையே களே நம்பிக்கைகளாக உருவெடுக்கின்றன.

சுந்தர மகாலிங்கம் இருக்கிற திசையைப் பார்த்து கை யெடுத்துக் கும்பிட்டு கிடா வெட்டி வாங்க வைக்கி றேன்னு வேண்டிக் கொள்வது மருக்கையில் தெய்வ நம்பிக்கையாக இடம்பெறுகின்றது.

கறி திங்கணுமின்னா சுந்தர மகாலிங்க கோயிலுக்குப் போகணுமின்னு சொல்லுவாங்க. கறிக் குழம்புக்கும், சோத்துக்கும் அம்புட்டு ருசி இருக்கும்'

வாசலில் காத்திருக்கும் எமதர்மராசா மனுஷங்க கண் ணுக்குத் தெரிய மாட்டாரு. வீட்டிலே இருக்கிற ஆடு மாடுகளோட கண்ணுக்குத்தான் அவரு தெரிவாரு

ஆம்பளைத் துணைக்கு, பெண்கள் ஆட்டைப் பிடிச் சிட்டு போவது என்று மருக்கை நாவலில் வாழ்க்கை மற்றும் தெய்வம் தொடர்பான நம்பிக்கைகள் இடம் பெறுகின்றன.

சடங்கு

ஆதிமனிதனின் மந்திரங்களிலிருந்து சடங்குகள் உரு வெடுத்தன. பூப்பு, திருமணம், இறப்பு, பிள்ளைப் பேறு, திருவிழா, தொழில்கள் போன்ற சூழல்களில் சடங்குகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

மருக்கை நாவலில் மக்கள் தமது ஆடு மேய்க்கும் தொழில்முறையில் இத்தகு சடங்கு நடைமுறையைப் பின்பற்றுகின்றனர். தாம் வளர்க்கும் ஆட்டுக்குட்டிகளுக்கு லெட்சணக் குறி இடுவதை மருக்கை நாவலில் எஸ். செந்தில் குமார் பதிவு செய்கின்றார்.

லெட்சணக் குறி இடுவது

லெட்சணக் குறி இடுவது பற்றி மருக்கை நாவலில் கீழ்வருமாறு கூறப்படுகின்றது. ***ஒரு நபரின் கையில் வெட்டுக் கத்தியும், மற்றொரு கையில் சூரிக்கத்தியும் கொடுத்து ஒவ்வொருவரும் தங்களது வீட்டு லெட்சணங் களை அவரிடம் சொல்லி, இடது காது, வலது காது, முன்நெற்றி, வலதுநெற்றி, இடது நெற்றி என்று ஒவ்வொரு அடையாளமாகச் சொல்லி, ராமம் சூலாயுதம், பொட்டு நிலாப்பிறை, நட்சத்திரம், வட்டம், சதுரம் என்று அடையாள லெட்சணங்களை போட்டுவிடச் சொல்வார்கள்*** என்றும் ***நுனிக் காதறுப்பை மட்டும் அறுத்து புத்தில் போட்டு விட்டுப் போய்விடும் குடும்பங்களும் உண்டு*** என்று காதறுப்புச் சடங்கு குறித்துக் கூறப்படுகின்றது.

வழிபாடு முறைகள்

இயற்கை வழிபாட்டு முறைகளைத் தொடர்ந்து பல தெய்வ வழிபாட்டு கொள்கை சமூகத்தில் உருவெ டுத்தன. நடுகற்கள் உருவ வழிபாடுகளின் முன்னோ டியாக அமைகின்றன. அதில் கிராமப் பகுதிகளில் உள்ள முனியாண்டி, ஐயனார், செல்லாயி அம்மன், கன்னிமார் சாமிகள், மதுரைவீரன், கருப்பசாமி, வீரபாண்டியன் ஆகியவை சிறு தெய்வங்கள் எனப் பட்டன. முன்னோர்களின் நினைவாகவே இச்சிறு தெய்வங்கள் அமைக்கப்பட்டன. இவை ஊரின் காவல் தெய்வமாகவும் வழிபடப்பட்டன. மருக்கை நாவலில் ***ஏர்றபடி முத்தம்மா வழிபாடு*** எனும் எல்லைக் காவல் தெய்வம் கூறப்படுகின்றது.

இவள் தன்னை வணங்குபவர்களுக்கு காவலாகவும், கேட்டதைக் கொடுப்பவளாகவும் அமைகின்றாள். எளசைக்காரர்களுக்கும், சில்லமரத்துப்பட்டி, சிலமலை போடி, பாளையம், தேவாரத்துக்காரர்களும் வருடா வருடம் சித்திரை மாதத்தில் வீரபாண்டி அம்மனுக்கு பொங்கல் வைத்து, கிடா வெட்டி, கொடை வழங்கி வழிபாடு செய்வார்கள். சேவலறுப்பு நடத்துவார்கள். சுற்றியுள்ள அனைத்துக் கிராமத்து மக்களும் ஒன்று கூடி, தாய்தெய்வங்களை வணங்கும் முறை கூறப் படுகின்றது.

தாயின் உணர்வு பாடல்

இனவரைவியல் கூறுகளில் பாடல்களும் இடம்பெறு கின்றன.

ஓடுற தண்ணியில ஒரு மடக்கு நா குடிச்சேன்
இனிக்கவுமில்ல கரக்கவுமில்ல
குளத்துத் தண்ணிய நா எடுத்துக் குடிச்சேன்
புளிக்கவுமில்ல தொலக்கவுமில்ல
ஏங்கை ஒழுகுகிற கையில்லையே
ஓங்கையில என் தாகத்துக்கு
வாங்கி குடிக்க வந்து நின்னா
நீயும் தவிச்சுப் போய் கையேந்தி

நிக்குறேயே என் முன்னாடி என்று அன்னம்மா தன் மகள் ஜெயலெட்சுமியை நினைத்து ஒப்பாரி பாடுகின்றாள். அன்னம்மா தன்னுடைய மகளின் வாழா நிலை குறித்த உணர்வினைப் பாட்டின் மூலம் வெளிப்படுத்துகிறாள். அன்றியும், அன்னம்மா கிழவி தனது மகனைப் பார்க்க வாரந்தோறும் போகும் போது அவள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு பாடும் பாடல்களும் மருக்கை நாவலில் இடம்பெறுகின்றன.

வெளக்க ஏத்த நான் கொடுத்தேன்
வெளக்கு ஏத்த நான் கொடுத்தேன்
தகரத்திலே நீ கேட்டிருந்த தட்டியெடுத்து நா கொடுத்திருப்பேன்
வெள்ளியில கேட்டிருந்தா வெட்டியெடுத்துக் கொடுத்திருப்பேன்
தங்கத்துல கேட்டிருந்தா தாலி வித்து வாங்கியிருப்பேன்
செகப்புல கேட்டிருந்தா நெருப்ப வளைச்சு செஞ்சிருப்பேன்
கருப்புல வேணுமின்னா ஏந்தோலை கருக்கியெடுத்திருப்பேன்
வட்டமா கேட்டிருந்தா உடம்பை வளைச்சிருப்பேன்
நீட்டமா கேட்டிருந்தா என் உசிரை நீட்டி செய்திருப்பேன்
நீ கேட்டதும் புலப்படல
உனக்குக் கொடுக்கிறதுக்கும் ஒண்ணும் அகப்படல
எங்கதான் நான் போவேன் எதையின்னுதான் நான் கேட்பேன் என்று அன்னம்மா கிழவி பாடுகிறாள்.

கதைகள்

கிராமத்துமக்களிடையே வாய்மொழிக் கதைகள் அதிகம் சொல்லப்படுகின்றன. அடுத்த தலைமுறைக்கு தங்களின் வாழ்க்கை நிலை இப்படித்தான் இருந்தன என்பதனைச் சொல்வதற்குக் கதைகள் உதவுகின்றன. மருக்கை நாவலில் கதைசொல்லிகள் வாயிலாகப் பல தொன்ம வரலாறு வெளிப்படுத்தப்படுகின்றன. அன்னம்மா கிழவி மிகச் சிறந்த கதைசொல்லி ஆவார். ***காமக்காப்பட்டி திருடர்கள் ஆடு திருடும் கதை, கன்னிமார் சாமிகள் குளத்தை திறந்து கொண்டு பெற்றோர்களை கட்டிப்பிடித்து அழும் கதை, குளத்தில் இருக்கும் பூதம் சிறுவர்களையும் குமரிப் பெண்களையும், நீச்சலடிப்பவர்களையும் இழுத்துக்கொண்டு போய் பாதாளத்தில் அடைத்துவைக்கும் கதை, கோஸ்மூக்கு பண்டாரம் கதை, ஏர்றட்டி முத்தம்மா கதை, ஆடு மாடு கண்களுக்கு எமதர்மன் கண்ணுக்கு தெரிவாரு கதை*** ஆகிய கதைகள் இடம்பெறுகின்றன. சான்றாக,

காமாக்காப்பட்டி திருடர்கள் ஆடு திருடும் கதையில், ***காமக்காப்பட்டி திருடர்கள் கோணார்பட்டி, எளசை, பாலாறுப்பட்டி சுற்றி இருக்கும் ஊர்களுக்குச் சென்று கெடாப்பில் இரவு நேரங்களில் ஆடு திருடுகின் றனர். இவர்கள் ஆடு திருடும் முறை சற்று வித்தி யாசமானது. இரண்டு பேர் சுற்றிப் பார்த்தும், இரண்டு பேர்கள் ஆடுகளைத் தூக்கிக்கொண்டு ஒருவனும், பின்னாடியில் இருந்து இரண்டு நபர்கள் ஆடுகள் கத்தாமல் இருப்பதற்குச் சங்கை ஒதுக்கி விடுவதுமாக ஆடு திருடும் தொழிலைச் செய்துவந்தார்கள்*** என்று பதிவு செய்யப் படுகின்றது.

நாட்டுப்புற மருத்துவம்

கிராமத்து மக்கள் இயற்கையோடு சேர்ந்து வாழ்ந்து வருவதால் அவர்களுக்கான மருத்துவமும் இயற்கையிலேயே கிடைக்கின்றன. அன்னம்மா கிழவியின் மூலமாக இவை நாவலில் பதிவு செய்யப்படுகின்றது.

வெற்றிலையைச் சூடாக்கி தொப்புள் மேல் வைத்தால் வயிற்றுப் பொருமல் போய்விடும்.

ஆடுகளின் மேல் உடம்புகளிலும், கால்களிலும், முகத்திலும் ஒட்டி இருக்கும் உண்ணிகளை எடுப்பதற்கு, மண் சட்டியில் விறகு போட்டு தீ மூட்டி கருவாட்டைப் புகையை விடுவது போன்ற நாட்டுப்புற மருத்துவக் குறிப்பு முறைகள் இடம்பெறுகின்றன.

தொழில்

மருக்கை நாவலில் எஸ். செந்தில்குமார் ஆடுகள் வளர்ப்பு, அது சார்ந்த தொழில் முறைகளைக் கூறிடுகின்றார். ஆடுகள் மேய்ப்பது, கொடாப்பு போடுவது, லெட்சணக் குறி இடுவது என்று இவை அமைகின்றன.

கூட்டுக் குடும்ப அமைப்பில் உறவுச் சிதைவுகள்

மனிதனின் படைப்புகள் எத்தகைய உயர்வான மதிப்புடையனவோ, அதைவிடப் பன்மடங்கு மதிப்புடையவன் மனிதன். அம்மனிதன் காலங்காலமாகப் போற்றிக்கொண்டிருப்பது உறவுகளையே ஆகும். ஆண்-பெண் உறவுகள் பழமையானது. மருக்கை நாவலில் எஸ். செந்தில்குமார் கூட்டுக் குடும்ப உறவுச் சிதைவுகளைப் பதிவு செய்கின்றார்.

எஸ். செந்தில்குமார் கூட்டுக் குடும்ப வாழ்வு முறைகளில் உறவுகளில் ஏற்படும் சிதைவுகளைக் கீழ்வருமாறு பகுத்து ஆராயலாம்.

அன்னம்மா + அழகுமுத்து

(1) பரமசிவம் + பொன்னம்மா (முத்துமீனா, செல்வி + துரைச்சாமி)
(2) காளிமுத்து + செல்லம்மா
(3) சுப்பக்கா + சின்னச்சாமி
(4) சௌடம்மா
(5) காமாட்சி
(6) ஜெயலட்சுமி + கொண்டலு

அன்னம்மாவும், அழகுமுத்துவும் கல்யாணம் முடித்து கோணார்பட்டியில் இருந்து எளசை வந்து தங்குகின்றனர். பட்டிபெருக்கி ஆறு பிள்ளைகளைப் பெற்றெடுக்கின்றனர். வீடு நிறைந்து பிள்ளைகள் ஆட்டுக்குட்டிகளைப்போல இருந்திடுகின்றனர். ஆடுகளை மேய்ப்பது, கொடாப்பு போடுவது போன்ற தொழில் செய்து வாழ்ந்துவருகின்றனர். அழகுமுத்து இறந்தபிறகு அன்னம்மா தனி ஆளாக, தயங்காத

உழைப்பும் சுணங்காத உடலுமாகப் பிள்ளைகளை வளர்த்து, அவர்களுக்குத் திருமணம் செய்து வைத் திடுகின்றாள். திடீரென்று உடல் நலம் குன்றி அன் னம்மா கிழவி படுத்த படுக்கையாகி விடுகிறாள். பிள்ளைகள் அவரவரின் குடும்பமாக வாழந்து வந்த நிலையில் நான்காவது பெண் பிள்ளையான ஜெயலெட்சுமியைப் புலிகுத்தியைச் சேர்ந்த கொண்ட லுவுக்குத் திருமணம் செய்து வைத்திடுகின்றனர். திருமணமாகி மூன்றாவது மாதத்திலேயே கொண் டலு கிடாமுட்டுச் சண்டையில் கத்தி குத்துப்பட்டு இறந்துவிடுகிறான். பிறகு ஜெயலெட்சுமியை அண் ணன், தம்பி இருவரும் அவர்களுடன் சேர்த்துக் கொள்ள மறுத்து விடுகிறார்கள். தனியாக சொந்த பந்தம் என அனைவரையும் வெறுத்து வாழ்ந்து வருகிறாள். அன்னம்மா கிழவி இறந்த பிறகு அவளது சொத்தைப் பிரித்துக் கொள்ள பஞ்சாயத்து வைத்துப் பேசும்பொழுது மூன்று பெண் பிள்ளை களும் ஆளுக்கு இவ்வளவு என்று பணத்தைப் பெற்றுக்கொண்டு கையெழுத்து போடுகின்றனர். அன்னம்மா கிழவி காலத்திலே கூட்டுக்குடும்பம் சிதைவடைவது சித்திரிக்கப்படுகின்றது.

கணவன் மனைவி உறவுச்சிதைவுகள்

மருக்கை புதினத்தில் துரை என்ற துரைச்சாமி மற்றும் செல்வி இரண்டு கதாபாத்திரங்கள் கணவன் மனைவி நிலையில் உறவுச் சிதைவுகள் ஏற்படும் நிலையினை எஸ். செந்தில்குமார் காட்டுகின்றார்.

கணவன் மனைவியாக வாழ்ந்து வரும் துரைச்சாமி செல்வி,உறவுகளுக்கிடையே மாமன் மச்சான் (அழகு முத்து) இடையே ஏற்படும் பந்தயத்தில் மாமனான துரைச்சாமி தோல்வி அடைந்த காரணத்தினால் தாழ்வு மனப்பான்மை மற்றும் போட்டி பொறாமை காரணமாக செல்வியுடன் வாழாமல் அவராகவே தனியாக வாழ்ந்திட முடிவு செய்கின்றார்.

உங்க மகளும் இப்படித்தான் சொன்னா. அதுக்குத்தான் எல்லாரும் முன்னாடியும் அவளை அடிச்சேன். விளை யாட்டு இல்லை மாமா. இது பந்தயம், தோத்துட்டு நிக்குறப்போ அசிங்கப்படுறவனுக்குத் தான் தெரியும்

தோத்துப் போனது உங்க மாப்பிள்ளைகிட்டே தானே

ஆடு மேய்க்கிறவன்கிட்டே நான் தோத்துப் போயிருக் கிறேன்

அப்படிச் சொல்லாதீங்க மாப்பிள்ளை. செல்வி மாப்பிள் ளையோடு பேசி அவரை சமாதானம் செய்யும்மா போ. வீட்டிற்குக் கூட்டிட்டுப் போ

நான் உங்க வீட்டிற்கெல்லாம் வரலை. எங்க ஊருக்குப் போறேன். இனி அடுத்த வருஷம் திருவிழாலே வந்து அந்த ஆடு மேய்க்கிறவன் ஆட்டை முட்டி குடலு வேறா குந்தாணி வேறா கிழிச்ச பின்னாடி தான் உங்க மகளைக் கூட்டிட்டுப் போவேன். அதுவரைக்கு உங்க மகள் உங்க வீட்டில இருக்கட்டும் என்று திரும்பி பார்க்காமல் நடந்தான். (எஸ். செந்தில்குமார், ப.81)

இவ்வாறு 'மருக்கை' நாவலில் கணவன் மனைவி யிடையே ஏற்படும் உறவுச் சிதைவுகளுக்கு போட்டி பந்தயமும் காரணமாக அமைவதை எடுத்துக்காட்டி யுள்ளார்.

தனிநபர் சிதைவுகள்

ஜெயலெட்சுமி என்ற கதாபாத்திரத்தைத் தனிநபர் வீழ்ச்சிக்குள்ளாகும் பாத்திரமாக எஸ். செந்தில்குமார் சித்திரிக்கின்றார்.

கல்யாணம் முடிந்து மூன்றாவது மாதத்தில் அவளது கணவன் கொண்டலு இறந்து போனான். அப்போது அவளுக்கு முப்பது நாட்கள் தீட்டு தள்ளிப் போயி ருந்தது. பாளையத்திற்கு கிடாமுட்டுக்கு போய்த் திரும்பும்போது அவனைக் கத்தியால் குத்திச் சரித்து விடுகின்றனர். ஜெயலெட்சுமி முப்பது நாள் உயி ரைக் குச்சி வைத்துக் கழித்துவிட்டு ஊருக்கு வரு கின்றாள். மூத்த அண்ணன் பரமசிவத்தின் வீட்டில் அவளைக் குடியிருக்க விடவில்லை. முண்டச்சி வீட் டிலிருக்கக் கூடாது என்று பொன்னம்மா சொல்லி விடுகின்றாள். காளிமுத்து வீட்டில் அவளை நுழைய விடவில்லை. அன்னம்மா அவர்களுடன் எவ்வளவோ வாதாடிப் பார்த்தும் வீட்டில்விட மறுக்கின்றனர். கடைசி வரை ஜெயலெட்சுமியைத் தாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டியதாகப் போய்விடுமென நினைத்து மருமக்களும் ஆதரிக்கவில்லை. தன் கணவன் வீட் டில் கொண்டலு நினைவாக இருபது கிடாக்களையும் பத்து மருக்கைகளையும் மட்டும் வாங்கிக் கொண்டு தனியாக ஜெயலெட்சுமி வாழ்ந்துவருகிறாள். யாரும் அற்ற அனாதையாக வாழும் ஜெயலெட்சுமிக்கு தன் கவலைகளையும், வேதனைகளையும் சொல்லி அழ கிறிஸ்துவ மதத்திற்கு மாறித் தனது பெயரை ஜெய மேரி மாற்றிக்கொள்கின்றாள். ஊர்காரர்கள் தன்னைப் பற்றி என்ன வேண்டுமென்றாலும் பேசட்டும். தெளி வாகவும்தைரியமாகவும் இருந்திடுகின்றாள். தன்னைப் போலச் செல்விக்கும் வாழ்க்கை அமைந்ததை எண்ணி வருந்தி உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாகி இறந்து போகிறாள்.

இவ்வாறு மருக்கை புதினத்தில் திருமணமான செல்வி, ஜெயலெட்சுமி கதாபாத்திரங்கள் மறுமணம் செய்துகொள்ளாமலும் தனியாக வாழ்ந்து தம்மையே வருத்திக்கொள்ளும் பெண்களாகவும் எஸ். செந்தில் குமார் பதிவு செய்திருக்கிறார்.

முடிவுரை

குடும்பத்தின் தோற்றம் குறித்த ஆய்வுகள் 19ஆம் நூற்றாண்டில் தொடக்கம் பெற்றன. மருக்கை நாவ லில் இனவரைவியல் கூறுகளாக, நம்பிக்கைகள், சடங் குகள், சிறுதெய்வ வழிபாடுகள், கதைகள், பாடல்கள் போன்றவை அமைகின்றன.

அன்னம்மா, அழகுமுத்து கூட்டுக் குடும்பத்தின் உறவுச் சிதைவுகள் இந்நாவலில் பதிவு செய்யப்பட் டுள்ளன. செல்வி கதாபாத்திரம் ஆடுகளில் போட்டி பந்தயம் காரணமாக வாழாவெட்டியாக மாறுகிறாள். துரைசாமி அவளை ஒதுக்கிவிடுகின்றான். ஜெயலட் சுமியைத் திருமணம் செய்துகொண்ட கொண்டலு கொலைசெய்யப்படுகின்றான். ஜெயலட்சுமியை அவள் அண்ணன், தம்பி, தமக்கைகள்கூட ஏற்க மறுத் திடுகின்றனர். தனியாக வாழும் ஜெயலட்சுமி ஜெயமேரி என்று கிறித்துவ மதத்திற்கு மாறி இறுதியில் இறந்து போகின்றாள். கூட்டுக் குடும்ப உறவுச்சிதைவுகளில் குறியீடாக அன்னம்மா கிழவி இருந்திடுகின்றாள். எஸ்.செந்தில்குமாரின் மருக்கை இனவரைவியலும், குடும்ப உறவுச் சிதைவுகளும் நிறைந்த நாவலாக அமைகின்றது.

பயன்பட்ட நூல்கள்

செந்தில்குமார், எஸ். மருக்கை, ஜீரோ டிகிரி வெளியீடு, சென்னை.

துணை ஆதாரம்

1. சற்குணவதி, முனைவர், மு., தமிழ் இலக்கியங்களில் மனித உறவுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

2. பிரபஞ்சன் ----------------சிவகுரு பதிப்பகம், சென்னை.

3. குணசேகரன், அ. தமிழ் நாவல்களில் குடும்பச் சிதைவுகள், விக்கி மூலம்.

4. பாலசுப்ரமணியன், இரா. நாவல் கலையியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

5. அறவாணன், க.ப. தமிழ்ச் சமுதாய வரலாறு, தமிழ்க் கோட்டம், புதுச்சேரி.

6. கா. சிவசுப்பிரமணியன், சங்ககாலச் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 2011.

7. தமிழண்ணல், சங்கமரபு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை 2009

8. கழகப் புலவர் குழுவினர், கழகத் தமிழ் அகராதி, முதற் பதிப்பு 1964, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை.

9. சாமிநாதையர், உ.வே. புறநானூறு மூலமும் உரையும், ஆறாம் பதிப்பு-1963, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

10. அரங்க சுப்பையா இலக்கியத் திறனாய்வு இசங்கள், கொள்கைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை முதல் பதிப்பு ஜூலை 2000, ப.231

66ஆம் பக்கத் தொடர்ச்சி

என்ன, கொள்ளளவு என்ன, அனைத்தும் அளவீடு களே. எத்தனை உந்துவண்டிகள் குப்பை அகற்ற ஒரு நகரத்திற்கு ஒருநாள் காலையில் தேவை, சென்ற பாதை யில் இன்னொரு உந்துவண்டி வராமல் இருக்க வேண் டும், நகரத்தின் வீடுகள் அனைத்திற்கும் செல்ல வேண் டும், குப்பைகளை அகற்றிக்கொண்டு வரும் நேரமும் மிகக் குறைவாக இருக்க வேண்டும், ஓட்டுநர்களும் குப்பையால் நலம் கெடாமல் நலம் காக்கும் நோக்குடன் செயல்பட வேண்டும், இவை அனைத்தையும் செய்யும் பணிக்கு வேண்டிய நிதியும் குறைவாக இருக்க வேண்டும். சிந்தித்துப் பாருங்கள். சிந்தாமல் எண்ணங்களைத் தொகுத்தும் பகுத்தும் வரையறை செய்வதே கணக்கியல் என்பதாகும். பகுப்பது, தொகுப் பது, வகுப்பது அனைத்தும், அளவிடும் செயல்பாடு தானே! அந்தம் இல்லாத எல்லையைக் கடந்தும் (∞) செல்லும் ஒரே அறிவியல் கணக்கியல்தானே. அனைத் துக் கலைகளுக்கும் மூலமும் கணக்கியல்தானே! உண்மையைத் தவிர வேறு எதையும் சொல்லாதது கணக்கியல் ஒன்றே! கணக்கியல் கற்பனை எண்களைப் படைக்கும், காட்சிப்படுத்தும், நடைமுறை வாழ்வை யும் கற்பனை எண்கள் அளவிடுமே. உலகமே பயன் படுத்தும் பதின்மக் கணக்கியலைத் (Decimal System) தந்தவன் தொல்காப்பியத்திற்கும் முந்தைய தமிழன்! எண்ணியலின் கண்களைத் திறந்தவன் தமிழன்!!

And this our life, exempt from public haunt,
Finds tongues in trees, books in the running brooks,
Sermons in stones, and good in everything.

- William Shakespeare in *As You Like It*

The web of our life is of a mingled yarn, good and ill together.

- William Shakespeare in *All's Well That Ends Well*

ISSN 2320-4842

தமிழக நடுகல் மரபும் திரைக்கதைத் தளங்களும்

முனைவர் சு. நாகரத்தினம்
ஒருங்கிணைப்பாளர், தமிழக நடுகல் மரபுக் கண்காட்சி
பேராசிரியர்–தலைவர், தொடர்பியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
டே. ஜூலியன் பிளேஸ்
முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர், தொடர்பியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
பா. ராமகிருஷ்ணன்
முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர், தொடர்பியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

இன்றைய இளம் தலைமுறையினருக்குத் தமிழகத்தின் வரலாறும் மரபும் சென்று சேர, ஊடகங்கள், குறிப்பாகத் திரைப்படங்கள் முக்கிய இடம் பெறும். பழங்காலத் தமிழர் வாழ்க்கையை இன்று திரைப்படங்களாக்குவது ஆங்காங்கு நிகழ்ந்தாலும், அது முழுவதுமாகவோ தொடர்ச்சியாகவோ நடைபெறவில்லை. குறும்படங்களோ திரைப்படங்களோ எதிர்காலச் சந்ததியினருக்கு அழியா மரபாகத் தமிழர்தம் வாழ்க்கையை எடுத்துச் சொல்லும் என்பது திண்ணம்.

2022 டிசம்பர் 14 முதல் 17 வரை, யாக்கை மரபு அறக்கட்டளை, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், மதுரை காமராசர் பல்கலைக்கழக வரலாற்றுப் புலம் ஆகியன இணைந்து தமிழக நடுகல் மரபுக் கண்காட்சி மற்றும் பயிலரங்கு நிகழ்ச்சிகளை நடத்தின. இந்நிகழ்ச்சியில், யாக்கை மற்றும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இணைந்து ஒளிப்படம் எடுத்திருந்த தமிழக நடுகல் காட்சிப் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த நடுகல் பின்னணித் தகவல்களைக் கொண்டு, திரைக்காட்சிகளாக்கும் ஊடக உத்திகள் பற்றி விளக்குகிறது இந்த ஆய்வுக் கட்டுரை.

நடுகல் மரபு

உலகெங்கிலும், வீரமுடனும் தீரமுடன் திகழ்ந்தவர்களுக்குப் பெருமை சேர்க்கும் அடையாளங்கள் காலம் கடந்தும் நினைவுகூர்வனவாக உள்ளன. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அதில் பங்குபெற்ற நாடுகளில் உயிர்நீத்த படைவீரர்களுக்குப் பளிங்கினாலான நினைவுக்கற்கள் நடப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன. போர்க்காலம், போரை நடத்தியோர், வென்றோர் தோற்றோர் குறிப்புகளும் அதில் இடம்பெறுகின்றன[1].

தமிழ்ச் சமூகத்தில் முன்னுதாரணமாக வீரமுடன் திகழ்ந்து தியாகம் புரிந்தவர்களுக்கு நடுகற்கள் நாட்டும் மரபு இருந்திருக்கிறது. வீரர் நிகழ்த்திய சம்பவம் தொடர்பான அல்லது வீரர் தொடர்பான குறிப்புகளைக் கொண்ட கல்லை நட்டதால், அந்த நடப்பட்ட கல், வீரர்களின் நினைவுக்குறிகளாக நடுகல் ஆனது.

இன்று அக்கற்கள் கண்டறியும் வரலாற்றாய்வாளர்கள், தன்னார்வலர்கள், தமிழ் அறிஞர்கள் நம் தமிழ்ச் சமூகத்தின் பழக்கவழக்கங்கள், வழிபாடுகள் மற்றும் பண்பாடு குறித்த புதிய வெளிச்சங்களைத் தற்போது பாய்ச்சி வருகிறார்கள்.

போரில் உயிர் நீத்தவர்கள், ஆநிரை மீட்டுக்கொண்டு வரும்போது உயிர்த்தியாகம் செய்தவர்கள், கால்நடைகளைக் கவர்தலில் உயிர்நீத்தவர்கள் உள்ளிட்ட வீரதீரச் செயல்கள் புரிந்து மாண்டவர்களைப் புதைத்த இடத்திலோ, பொது இடத்திலோ, ஊர் மையத்திலோ நடுகற்கள் சித்தரிப்பதும், அதை ஊன்றுவதும் வழிபடுவதும் தமிழர் இயல்பாக இருந்திருக்கிறது.

பதுக்கை, வல்லான் பதுக்கை, நடுகல், நெடுங்கல் என்று நடுகற்களைப் பல பெயர்களால் சங்க இலக்கியங்கள் அழைக்கின்றன[2]. இறந்தவர்களின் உடலை மூடாது அவ்வுடல்களின்மீது கற்குவைகளை இட்டு மறைப்பது கற்பதுக்கை, கற்றிட்டை முறை என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. வீரர்களின் நடுகற்கள் பின்னாளில், கடவுளாக மதித்து வணங்கப்பட்டன[3]. அதையொட்டிக் கோயில்களும் எழுப்பப்பட்டன. வழியில் செல்வோர் வணங்கியும் சென்றனர். நெடுநிலைக்கல், ஓங்கியகல் என்ற பெயர்களையும் இலக்கியங்கள் கூறுகின்றன. மக்கள்வேடன் கல் என்றும் அழைப்பதும் உண்டு[4].

நடுகற்களுக்குப் படைத்தல் என்பது அவர்கள் விரும்பிப் பயன்கொண்ட பொருட்களாகலாம். இன்றைய நிலையில் இறந்தோர்க்குப் படைத்தலில் அவர்கள் விரும்பிய, அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் இடம் பெறும் நிலை ஒப்புநோக்கவல்லது[5].

பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்
திமையவச் சென்னித் தெய்வம் பரசிக்
கைவினை முற்றியத் தெய்வப் படிமத்து
வித்தக ரியற்றிய விளங்கிய கோலத்து
முற்றிழை நன்கல முழுவதும் பூட்டி
பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி
வேள்வியும் விழாவு நாடொறும் வகுத்துக்
கடவுண் மங்கலஞ் செயகென வேவினன் (சிலப். 3: 225-234) எனச் சிலப்பதிகாரத்தின் நடுகற் காதையில், இமயத்திலுள்ள சிவனை வழிபட்டு, கண்ணகி தெய்வப் படிமத்துக்குப் பொன் அணிகலன்களைப் பூட்டினான். பூக்களால் வழிபாடு செய்து, காவல் தெய்வங்களைக் கடைவாயிலில் காப்பாகக் கட்டி நிறுத்தி, வேள்விகளும் விழாக்களும் நாள்தோறும் நடைபெறச் சேரன் செங்குட்டுவன் நடுகல் எடுத்து வழிபட்டது குறித்து சிலப்பதிகாரம் விளக்குகிறது.
அதனையடுத்து, இலங்கை மன்னன் கசபாகு ஈழ நாட்டில் கண்ணகிக்குக் கோயில் அமைத்துப் பெரு விழா எடுத்தான்[6].

கல்லைத் தேடுதல், இசையொலியுடன் கல்லைக் கொண்டுவருதல், கல்லினைத் தண்ணீரில் ஊறவைத்தல், கல்லை வடித்து எழுத்துப் பொறித்தல், செம்மறிப் பலியிடல், மயிற்பீலி இடல், கற்பதுக்கை, பீடங்கள் அமைத்து வழிபடல், நடுகல் வணங்குதல் ஆகிய ஆறு நிலைகளைத் தொல்காப்பியர்,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று வகையிற் கல்லொடு புணர (தொல். 1006)
என்று நடுகல் பற்றி அறிய விரும்பும் அனைவருக்காகவும் குறிப்பிடுகிறார்.

சிலைஏ றட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக்கு இவர்ந்த ததர்கொடி அதிரல்
நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும் (அகம்.289: 1-3)

வீரதீரம் காட்டி இறந்தவர்கள் உடல்கள் புதைக்கப்பட்ட இடத்தில் கல் நடுவது தமிழக மரபாக இருந்திருக்கிறது. அது வீரக்கல் என்றும் அழைக்கப்படும். வில் எய்த அம்பால் கொல்லப்பட்ட வழிப்போக்கர்களின் உடல் கற்குவியல்களால் மூடப்பட்டுள்ளது. அக்கற்குவியல்களில் காட்டுமல்லிகை ஏறிப் படரும், அம்மலர்கள் கொண்டு நீண்ட காலம் நிலைத்து நிற்கும் நடுகல் தெய்வத்திற்கு நாள் பலியிட்டு வழிபடுவர். நடுகற்களில் புடைப்புச் சிற்பமாக வீரர்களின் உருவங்கள் பதிக்கப்பட்டன.

ஆடவர் பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல் (அகம். 131: 9-11)
ஆண்மை மிக்கவர்கள் விழுப்புண் பட்டு இறந்துவிடும்போது, அவர்கள் பெயரும் பெருமையும் மயில் தோகை சூட்டிய நடுகல்லில் எழுதி வழிபடுவதைப் பற்றி இப்பாடல் குறிப்பிடுகிறது.

வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்,
நடுகல் பீலி சூட்டி, துடிப்படுத்து,
தோப்பிக் கள்ளோடு துரூஉப் பலி கொடுக்கும் (அகம். 35: 7-10)
வலிய ஆண்மைக்கு அறிகுறியாக, மணல் குன்றின் மேல் அமைக்கப்பட்ட நடுகல்லை வழிபடுவதற்காக அந்நடுகல்லில் மயில் தோகைகளைச் சூட்டி, துடிக் கருவியை இசைத்து, நெல்லிலிருந்து தயாரித்த கள்ளுடன் செம்மறிக்குட்டியைப் பலியிட்டனர் என்கிறது குடவாயிற்கீரத்தனாரின் அகநானூற்றுப் பாடல். தமிழக மரபில் நடுகல் அமைப்பதும், அதை வழிபடு வதும், அதற்குப் படைப்பதும் வழக்கத்திலிருந்தது தெரிய வருகிறது.

இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லின் நாட்பலி யூட்டி,
நன்னீர் ஆட்டி, நெய்ந்நறைக் கொளீஇய,
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும் (புறம்: 330: 1-4)

வீட்டில் காய்ச்சிய கள்ளுடன் சிற்றூர் மக்கள் கூட்டமாகச் சென்று, நடுகல்லுக்குப் பகலில் படையல் செய்வர். அப்போது நடுகல்லுக்கு நீராட்டி, நெய் விளக்கும் ஏற்றுவர். அந்த நெய் விளக்கிலிருந்து வரும் வாசனை ஊர்ப்பகுதியில் தெருவெல்லாம் மணக்கும் என்கிறது அகநானூற்றுப் பாடல்.

நனந் தலை உலகம் அரந்தை தூங்க,
கெடு இல் நல் இசை ஆடி,
நடுகல் ஆயினன் புரவலன் (புறம். 221: 11-14)
தன் மகன் பிறந்த பின், சோழன் நடுகல் இருக்கும் இடத்துக்குச் சென்று தாமும் உயிர்விட எண்ணிய பொத்தியார் இப்பாடலைப் புனைந்துள்ளார். பரந்து விரிந்த இடத்தைக் கொண்ட இந்த உலகம் துன்பம் மிகுதியான, கேடுகள் அற்ற நல்ல புகழைச் சூடி நட்ட கல்லானார் நம்மைப் பாதுகாக்கும் சோழன் என்று பாடப்பெறும் இப்பாடலால், நடுகல் ஆனவர்கள் மக்களைப் பாதுகாக்கிறார்கள் என்ற நம்பிக்கை புலனாகிறது.

ஆநிரைகளைக் கவர்தல், கவர்ந்த ஆநிரைகளை மீட்டல் ஆகிய செயல்களில் உயிர்நீத்தவர்களுக்கு நடுகல் நடப்பட்டிருந்திருக்கிறது. நடுகல் கோயில்களும் கட்டப்பட்டன. விலங்குகளிலிருந்து ஊரைக் காப்பாற்றியவர்கள், நீர்நிலைப் பாதுகாப்பின் போதும் உயிரை மாய்த்தவர்களுக்கும் நடுகல் எடுக்கப்பட்டிருக்கிறது.

நடுகல் வழிபாட்டு முறை சங்க காலத்திலிருந்து 12 ஆம் நூற்றாண்டுவரை அதே நடைமுறைகளில் தொடர்ந்திருந்தாலும், பிற்காலத்தில் அதன் வழக்குகள் மறையத் தொடங்கியிருக்கின்றன. இன்றும் போராட்டங்களில் அல்லது போரில் உயிர்நீத்தவர்களுக்குச் சின்னங்கள் எழுப்பும் முறை இருந்தாலும், அவற்றுக்கும் நடுகல் மரபுக்கும் வித்தியாசங்கள் உள்ளன.

ஆய்வு அணுகுமுறை:

இந்த ஆய்வு திரைக்கதைக்கான செயல்முறை விளக்கத்தை, தமிழக நடுகல் மரபின்வழியே பரிந்துரைப்

பதாக அமைகிறது. 2022 டிசம்பரில் நான்கு நாட்கள் நடைபெற்ற தமிழக நடுகல் மரபுக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட நடுகற்களின் படங்கள் இப்பரிந் துரைக்கு அடிப்படையாக உள்ளன. யாக்கை மரபு அறக்கட்டளை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, ரோஜா முத்தையா நூலகம் ஆகிய நிறுவனங்கள் நடுகல் காட்சிப் பொருட்களைக் காட்சிப்படுத்தியிருந் தன. நடுகல் கண்காட்சிகளின் போது வழங்கப்பட்ட இக்கண்காட்சிக் கையேடு[7] இணையதளத்தில் அனை வரும் அணுகும்படி மின்னூலாக உள்ளது. இதில் இடம்பெற்றிருந்த நடுகற்களின் கதையே, திரைக்கதை காட்சிகளுக்கான பரிந்துரைகளாக அமைகின்றன.

நடுகல்லின் கதைப் பின்புலங்கள் திரைக்கதைக் கட் டமைப்புகளுக்குள் வடிவமைப்பதே இந்த ஆய்வின் நோக்கம். இதற்காக மொத்தம் 33 நடுகல் படங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வு செயல்முறையிலான பயன்பாட்டு அணுகுமுறையைக் கொண்டது.

திரைப்படங்களில் நடுகற்கள்

திரைப்படங்களில் நடுகற்கள் பற்றிய தரவுகள் அரி தாகக் காணினும், அரவான் எனும் திரைப்படத்தில், நடுகல் மரபு சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அரவான் திரைப்படம் சாகித்ய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர் சு. வெங்கடேசனின் காவல் கோட்டம் நாவலின் துணைக்கதை அடிப்படையில் படமாக்கப்பட்டது.

இரு கிராமங்களுக்கு இடையிலான மோதலைத் தவிர்க்க, ஒரு பலியாள் கொடுக்க கிராமம் முடிவு செய்கிறது. நடிகர் ஆதி அக்கதாபாத்திரத்தில் நடித் திருந்தார். அவர் உண்மையான குற்றவாளியைக் கொண்டு வர இடையில் தப்பிக்கிறார். பின்னர் அவர் பலிகொடுக்கும் நாளில் வரவியலாமல் போகவே, அவர் நண்பர் பலியிடப்படுகிறார். எனினும், தப்பிச் சென்ற பலியாள் திரும்பியவுடன் அவரையும் பலி கொடுக்க முடிவாகிறது. அவ்வாறு பலி கொடுக்கப் பட்டவனுக்கு ஊர்ப்பகையைத் தீர்த்து வைத்ததற்காக நடுகல் வைக்கப்படுகிறது. இந்தப் படம் நிறைவு பெறுவது நடுகல் காட்சியுடன்தான். அவ்வகையில் நடுகல்லை மையப்படுத்தி இக்கதை அமைந்திருக் கிறது.

கே.ஜி.எப்., திரைப்படத்தில், தங்கச் சுரங்கத்தைத் தோண்ட ஆயிரக்கணக்கான அடிமைகள் ஈடுபடுத் தப்பட்டனர். அவர்களில் அடிமைகளோடு அடிமை யாக இருந்த ராக்கி எதிர்க்கிறார். அதிகார பலத்தை தனது வீர உணர்வால் எதிர்க்கும் ராக்கியை மக்கள் தம்மை மீட்க வந்த கடவுளாகப் பார்க்கின்றனர். ராக்கியின் வீர தீரச் செயல்களுக்காக அந்த மக்கள் நடுகல் நிறுவியதாகக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்தில் ஒருவன் படத்தில் சோழர்கள் தொடர் பான அகழ்வாராய்ச்சிப் பணியைச் செய்வதாகக் கதைக்களம் அமைக்கப்பட்டுள்ளது. சோழர்களின் ஒரு இடத்தைத் தேடி அந்த அகழாய்வுக் குழு தன் பயணத்தை மேற்கொள்கிறது. அதன் இறுதியாக ஒரு பாழடைந்த இடத்தை அடைகின்றனர். சோழர்கள் வாழ்ந்த அந்த இடத்தில் பல நடுகற்கள் இருப்பதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

பத்மாவத் போன்ற படங்களில் நடுகற்கள் காண்பிக் கப்படாமல், சதிகற்கள் பேசும் கதையம்சங்களும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, பிற நாட்டு மன்னன், தம்மைக் கவர்ந்து செல்லாமலிருக்க அரசி உள்ளிட்ட பெண்கள் தீக்குளிக்கும் முடிவினை எடுக்கிறார்கள். இப்படத்தில் இக்காட்சிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

நடுகல் திரைக்கதைக் களமாக்கல் உத்திகள் ஆய்வுரை

நடுகல் திரைக்கதை உத்திகளுக்குச் சமகாலத்திய படங்கள் எங்ஙனம், நடுகல் வரலாற்றைத் திரைக் கதையில் கையாளலாம் என்பது குறித்தும், வர லாற்றுக்காலத் திரைப்படங்கள் மற்றும் குறும்படங்கள், ஆவணப்படங்கள் மற்றும் அசைவூட்டப்படங்களில் எவ்வாறு நடுகற்கள் பற்றி மையப்படுத்தலாம் என்ப தாக இந்த ஆய்வுரை அமைகிறது.

சமகாலத் திரைப்படங்களில் வரலாற்று நிகழ்வுகள்

சமகாலத்தைச் சித்திரிக்கக்கூடிய திரைப்படங்களில் நடு கற்களை பயன்படுத்துவது குறித்து இப்பகுதி உத்தி களை முன்வைக்கிறது. திரைப்படங்களில் திரைக் கதை உத்திகளில், நிகழ்காலம் மற்றும் கடந்த காலம் ஆக இரண்டையையும் தொடர்புபடுத்தும் கதை உத்தி களில் நடுகற்கள், வீரக்கற்கள், சதிகற்கள், புலிக்குத் திக்கல், யானைக்குத்திக்கல், அரிகண்டம், நவகண் டம், தூங்குதலைக் கற்கள் ஆகியன நல்ல கதைக் களன்களை வழங்கும்.

பல காலவரிசைத் திரைக்கதை[8] அமைப்பில் ஒரு திரைப்படத்தில் பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த காட்சிகள் இடம்பெறும். இந்தக் காட்சிகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட கதைக்கருவை ஒட்டியதாக இருக்கும்.

உதாரணமாக, கரந்தை எனப்படும் ஆநிரைகளை மீட்டலில் தம் இன்னுயிரை இழந்தவர்களுக்கு அக் காலத்தில் நடுகற்கள் எழுப்பப்பட்டுள்ளன. அவ் வகையில் இப்போதும் கிராமச் சூழலில் ஆடுகள் திருடுபோவதும் அதை மீட்கச் செல்வதும் செய்தி களில் மட்டுமல்ல திரைப்படக் காட்சிகளிலும் இடம் பெற்றுள்ளன. அவ்வகையில் இன்றைய தலைமுறை சந்திக்கும் ஒரு குறிப்பிட்ட திரைக்காட்சிக்கு, அந் நாயகன் அல்லது அவ்வூரின் முந்தைய தலைமுறை சந்தித்த, உணர்வுகளை, இன்னல்களை அல்லது வீரத் தைப் போற்றுவதாக அமைக்க நடுகற்களின் வரலாற் றுத் தகவல்களைப் பயன்படும். ஒரு நிகழ்ச்சி முன் நிகழ்ந்த ஒன்றின் தொடர்ச்சியாக இருக்கிறது என்ப தையும் நாம் இக்கதையமைப்பில் நிறுவலாம்.

ISSN 2320-4842

இணைப்புத் திரைக்கதை[9] அமைப்பில் பல கால வரிசைத் திரைக்கதைக் காட்சிகள் இடம்பெறும். இக் காட்சிகள் எவ்வாறு ஒன்றையொன்று தொடர்பு கொண்டவை என்பதிலிருந்து இணைப்புத் திரைக் கதை வடிவம் பெறுகிறது. ஒன்றைத் தொட்டு இன்னொன்று நடப்பதாக இணைவிப்புப் பெறும் காட்சிகளில், நடுகற்கள் குறித்தான வரலாற்றுக் கதையம்சங்கள் இடம்பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளன.

தலைகீழான காலவரிசைத் திரைக்கதையமைப்பில்[10], காட்சிகள் அமைப்பது சிக்கலான ஒன்று எனினும், அதன் கதையமைப்பு பார்க்கின்றோரை மிகுந்த ஆர்வத்துக்குள்ளாக்கும். இதில் எளிதாக வரலாற்றுத் தகவல்களைப் பதிவு செய்ய இயலும்.

வட்டசுற்றுக் கதை தொடங்கிய இடத்தில் முடிகிறது. முடிந்த இடத்தில் தொடங்குகிறது. இவ்வகைக்கதை அமைப்பில் காலப் பயணக் காட்சிகள் இடம்பெறுகின்றன. கதாபாத்திரங்கள் கால இடைவெளிகளில் பயணப்படுகின்றன. அவ்வாறெனில், கரந்தை வீரர் பல்வேறு கால இடைவெளிகளில் தனது சாகசத்தைக் காட்டுவதாக நடுகல் காட்சிகள் இடம்பெறலாம். அல்லது சதிக்கற்களில் கதையை இங்குப் பயன்படுத்தலாம்.

வரிசை முறையற்ற கதையமைப்பு[11] முன்னிகழ்ந்த நிகழ்வுகள், நடக்கப்போகும் நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கும் நிகழ்வுகள் ஆகியவற்றைக் காட்சிகளாகக் கொண்டவை. நடுகல் கதைக்களனுக்கு இது மிகவும் பொருத்தமானதாக அமையும்.

முன்னிகழ்வு (பிளாஷ்பேக்) உத்திகள். திரைக்கதைகளில் தொடர்ச்சியாக இயக்குனர்களால் கையாளப் பட்டாலும்கூட சிறிது கால முந்தைய சம்பவங்களின் முன்னிகழ்வு, நீண்ட கால முந்தைய முன்னிகழ்வு என்று கதைகளின் தேவைகளுக்கு ஏற்ப இது அமைக்கப்படுகிறது. நடுகற்களுக்கு வரலாற்றுக் கால முன்னிகழ்ந்த காட்சிகளாக அமையும்.

வரலாற்றுக் கால திரைப்படங்கள்:

அரவான் போன்ற வரலாற்று காலத் திரைப்படங்களுக்கு நடுகல் சிறந்த கதைக்களத்தை அமைத்துத் தந்திருக்கின்றன. வரலாற்றுத் திரைக்கதைத் தெரிவில் நடுகல் தெரிவு செய்யப்பட வேண்டும். அதற்கு விதவிதமான கதைகளை நடுகல் வரலாறு அளிக்கிறது.

ரசோமான் திரைக்கதையமைப்பில் ஒரு சம்பவத்தைப் பல்வேறு கோணங்களில் காட்சிப்படுத்துவது. உதாரணமாக ஒரு கொலை நடந்தால், அது வெவ்வேறு பார்வையாளர்களின் கண்ணோட்டத்திலும் கருத்திலும் காட்சியமைக்கப்படுவது. இது நடுகல்லில் பதிவு செய்யப்பட்ட காட்சியை மையமாகக் கொண்டு, வெவ்வேறு பார்வைக் கோணங்களில் காட்சி அமைக்கும் வாய்ப்பினை நடுகல் கதைக்களம் வழங்குகிறது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஒருங்கிணைத் திருந்த, யாக்கை மரபு அறக்கட்டளையின் நடுகல் காட்சிகள்: பகைவர்களால் கவர்ந்து செல்லப்பட்ட கால்நடைகளை மீட்கும் பூசலில் வீரத்தை வெளிப் படுத்தி மடிந்தவர்களுக்கான வீரக்கல், அடுத்தவர்கள் கால்நடைகளைக் கவரச் சென்று மடிந்தவர்களுக்கு நடுகல், தமது ஊரைக் காப்பாற்ற எதிரிகளுடன் போராடி மாண்டவர்களுக்கான நடுகல், மேய்ச்சல் நிலத்தின் எல்லையை அதிகரிக்கும் பொருட்டுப் போராடி மடிந்தவர்களுக்கான வீரக்கல், கால்நடைகளைத் தாக்க வந்த விலங்குகளை எதிர்த்துப் போரிட்டு மடிந்தவர்களுக்கு புலிக்குத்திக் கல், ஊர் நீர்நிலைப்புனரமைப்புப் பணி செய்வனே நடக்கவும், தன் படைக்கு வெற்றி வேண்டியும் தன் தலையையே காணிக்கையாகக் அளித்தவர்களுக்கான தூங்குதலை நடுகற்கள், ஜல்லிக்கட்டு போன்ற ஓர் எருதுவிடுதல் போட்டியில் காயம்பட்டு இறந்தவருக்கான ஆனேறு தழுவுவதற்கான நடுகல், தன் தலையைத்தானே அரியும் வீரர்களின் அரிகண்ட நடுகல்கள், போரில் இறந்த கணவனுடன் தானும் மடிந்த பெண்ணுக்கான சதிக்கல், தாக்க வந்த யானையுடன் போரிட்டு மடிந்த வீரருக்கான யானைகுத்திக்கல் ஆகியன இடம்பெற் றிருந்தன. தவிரவும், கோழிச்சண்டை போட்டியில் பங்கேற்று வென்று காயமடைந்து மாண்ட வீரச் சேவல் நினைவாக ஒரு நடுகல் பற்றித் தகவல்களை பகிர்ந்து கொள்கிறது.

இதேபோல் தமது உடலில் 9 இடங்களில் காயங்களை ஏற்படுத்தித் தம்மைப் பலி கொடுக்கும் நவ கண்டம் நடுகற்களும் உள்ளன. இந்த நடுகற்கள் அனைத்தும் வெவ்வேறு சமூகங்கள், பணி செய்தவர்கள், அரசியல் பொருளாதார நிலையில் இருந்தவர்கள், சூழ்நிலைகளை வெவ்வேறாகக் கொண்டவர்கள், வெவ்வேறு விதமாகப் போராடியவர்கள், தம் இன்னுயிரை வெவ்வேறு விதங்களில் பலி கொடுத்தவர்கள என்று நடுகற்கள் பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நடந்த நிகழ்வுகளைச் சித்திரிப்பதாக, வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன. இவை அளிக்கும் விதவிதமான கதைக்களன்கள் மேற்கூறிய திரைகக்கதை வடிவங்களுடன் சேரும்போது, நடுகல் வரலாற்றுப் படங்களாகும்.

குறும்படங்கள், ஆவணப்படங்கள் மற்றும் அசைவூட்டப் படங்கள்

நடுகல்லிலிருந்த ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை எடுத்துக்கொண்டு அதைக் குறும்படக் கதையாக்க இயலும். அதற்கு மேலே கூறிய கதைவடிவங்கள் கதாபாத்திரங்கள், சூழல்கள் மற்றும் கதைக்களங்கள் உதவும். 20 நிமிடப் படங்களை இளைஞர்கள் எடுக்க முன் வரும்போது, தமிழகத்தின் சமூகப் பண்பாட்டினை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல முடியும்.

நடுகற்களை ஆவணப்படுத்த விரும்புவோர், யாக்கை

மரபு அறக்கட்டளை உள்ளிட்ட குழுவினர், வரலாற்றாசிரியர்கள் ஆகியோரின் நடுகற்கள் அதன் பின்னணி, இடம் மற்றும் முக்கியத்துவம் குறித்து நேர்காணல்களுடன் களக் காட்சிகளையும் இணைக்கலாம். புதிய நடுகற்களைத் தேடிச் சென்று கண்டறியும் விதங்களையும் ஆவணப் படமாக்குவதும் சிறந்த உத்தியாக அமையும்.

அசைவூட்டப்படங்கள் நடுகற்கள் காட்சிப்படுத்துவதற்கான மிகச்சிறந்த உத்தியாகும். இது கால எல்லை, வரலாற்றுக் கதையம்சம், கதாபாத்திரங்கள், சூழல் காட்சி அமைப்பு ஆகியவற்றை நம் விருப்பத்திற்கு ஏற்றவகையில் வடிவமைத்துக்கொள்ள முடியும். ஆவணப்படம் தவிர்த்து, திரைப்படங்கள், குறும் படங்கள், அசைவூட்டப்படங்கள் ஆகிய அனைத்துக்கும் கதைப்படக்காட்சி உருவாக்குவது அத்தியாவசியமானது.

முடிவுரை

வடக்கிருந்து உயிர் துறந்த கோப்பெருஞ்சோழனுக்கு நடுகல் நடப்பட்டது[12]. தமக்கென்று வாழாமல் பிறருக்காக வாழ்ந்தவர்களைப் போற்றும் விதமாக அமைக்கப்பட்ட நடுகல்கள், தமிழகத்தின் தொல் மரபினைச் சுட்டுவதாக உள்ளன. இக்கட்டுரை, நடுகல் கதையின் மையக்கருத்தினை, பொருத்தக் கூடிய திரைக்கதை வடிவங்கள் அவற்றில் இடம்பெறக்கூடிய காட்சி அமைப்பும் விளக்கப்பட்டுள்ளது. ஊடகம் வழியாக, குறிப்பாக, திரைப்படம் வழியாக எதிர் காலச்சந்ததியினருக்குத் தமிழரின் பண்டைய மரபின் மீது விழிப்பு நிலையினை ஏற்படுத்தி அதன் வழியாகத் தமிழ் மற்றும் தமிழரின் பண்பாட்டினை அறிய வழிவகுக்க வேண்டும்.

மேற்கோள்கள்

தமிழ்மாணி, தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை, ஆய்வுக்கட்டுரை, நெதர்லாந்து, இணையவழி அணுகல் 15 சனவரி 2023.

தி.ஸ்ரீ. ஸ்ரீதர் & தி. சுப்ரமணியன், நடுகல் அகழ்வைப்பகம் (தருமபுரி கையேடு), தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2010.

வே.மகாதேவன், நடுகல் வழிபாடு. R. Nagasamy (Ed.), Seminar on Hero-Stones, the State Dept. of Archaeology, Govt. of Tamilnadu, (ஆங்கிலம் மற்றும் தமிழ் இணைந்த பதிப்பு) 1974.

செ. இராசு, நடுகல்லும் வரலாறும், R. Nagasamy (Ed.), Seminar on Hero-Stones, the State Dept. of Archaeology, Govt. of Tamilnadu, (ஆங்கிலம் மற்றும் தமிழ் இணைந்த பதிப்பு) 1974.

க.காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1981

க.இ.க.கந்தசுவாமி, ஓலை, கலை இலக்கிய மேம்பாட்டுத் திங்கள் ஏடு, கொழும்புத் தமிழ்ச் சங்கம், இலங்கை, வைகாசி, 2010.

தமிழக நடுகல் மரபு கண்காட்சிக் கையேடு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், யாக்கை மரபு அறக்கட்டளை, கோயம்புத்தூர், 2022.

James Bang, Script Analysis Deconstructing Screenplay Fundamentals, Focal Press Book, Routledge, New York, 2022 (Multiple)

Miyamoto, Ken. "10 Screenplay Structures That Screenwriters Can Use." ScreenCraft, 20 July 2021, https://screencraft.org/blog/10-screenplay-structures-that-screenwriters-can-use/. (Hyper)

Isabelle Raynauld, Reading and Writing a Screenplay Fiction, Documentary and New Media, Routledge, Focal Press Book, New York, 2022 (Reverse)

Linda Aronson, The 21st Century Screen Play, A Comprehensive Guide to Writing Tomorrow's Films, Allen & Unwin, Australia 2010 (non linear)

லீலாவதி திருநாவுக்கரசு, சோழர் கால நடுகற்கள், R. Nagasamy (Ed.), Seminar on Hero-Stones, the State Dept. of Archaeology, Govt. of Tamilnadu, (ஆங்கிலம் மற்றும் தமிழ் இணைந்த பதிப்பு) 1974.

The Road Not Taken

Two roads diverged in a yellow wood,
And sorry I could not travel both
And be one traveler, long I stood
And looked down one as far as I could
To where it bent in the undergrowth;

Then took the other, as just as fair,
And having perhaps the better claim,
Because it was grassy and wanted wear;
Though as for that the passing there
Had worn them really about the same,

And both that morning equally lay
In leaves no step had trodden black.
Oh, I kept the first for another day!
Yet knowing how way leads on to way,
I doubted if I should ever come back.

I shall be telling this with a sigh
Somewhere ages and ages hence:
Two roads diverged in a wood, and I—
I took the one less traveled by,
And that has made all the difference.

- Robert Frost

ISSN 2320-4842

பெண் மைய வாழ்வியல்: *அன்னை வயல்* புதினத்தை முன் வைத்து...

முனைவர் க. மாரிமுத்து
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, து.கோ.வைணவக் கல்லூரி, சென்னை 600 106

உண்மை நிகழ்வுகளோடு கற்பனையைக் கலந்து ஒரு புனைவை உருவாக்கும்போது அது படைப்பிலக்கியமாக உருப்பெறுகிறது. அவ்வாறான படைப்பிலக்கியங்கள் சங்கக் கவிதையாக்கம் தொடங்கி, சமகாலப் புனைவிலக் கியங்களான புதுக்கவிதை, சிறுகதை, புதினம், நாடகம் எனப் பல வடிவங்களில் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றுள் புதின இலக்கியம் தமிழில் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றி, 20ஆம் நூற்றாண்டில் பல்கிப் பெரு கியது. அன்றியும், பிறமொழி இலக்கியங்கள் ஏராளமாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. அவற்றுள், ஆய் வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது *அன்னை வயல்* புதினம்.

காடுவாழ் மக்கள் பொருளாதாரத்தின் வேலைக்காரியாக இருந்த கவிதை தற்கால நாகரிகத்தில் ஒரு விரிவான கலாச் சார நடவடிக்கையாக மாறி நாவல், வரலாறு, நாடகம் ஆகியவற்றுடன் இடம்பெறுகிறது என்று கிறிஸ்டோபர் காட் வெல் (2007:4) கூற்று பழங்காலத்தில் கவிதை வடிவில் இருந்த இலக்கியம் இக்காலத்தில் சிறுகதை, நாடகம், புதினம் எனும் பரிமாணம் பெற்றுள்ள வரலாற்றைக் கூறுவதாகும். அதேவேளை, பழங்காலத்தில் நிலவிய கூட்டு வாழ்க்கைமுறையையும் அவர்கள் ஓர்மையாக வேலை செய்த குடிமுறை வாழ்க்கை வாழ்ந்ததையும் ஒப்பிட வழிவகுக்கிறது. அவரே, ***உணர்ச்சிகர மொழியான கவிதை என்பது கூட்டு அறிவின் பொதுச் சாதனமாக விளங் கியது*** என்கிறார் (மேலது 2007:5). இக்கூற்றைப் புதின இலக்கியத்திற்கும் பொருத்திப் பார்க்கலாம். அந்த வகையில் அன்னை வயல் புதினமும் சோவியத் மக்களின் கூட்டுப் பண்ணை முறையைப் பதிவுசெய்கிறது. அதில் பதிவாகியுள்ள பெண் மைய வாழ்வியலை இக்கட்டுரை ஆராய்கிறது.

அன்னை வயல்: அறிமுகம்

அன்னை வயல் புதினம், இரண்டாம் உலகப்போர் காலக்கட்டத்தில் பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து சோவியத் மக்கள் நிகழ்த்திய மாபெரும் தேசபக்தப் போரைக் கதைக்களமாகக்கொண்டு புனையப்பட்டது. தல்கோனை என்ற முதுபெண்ணும் அவள் அன்னையாகப் போற்றும் அவளது வயலும் பேசுவதாகக் கற்பனை செய்து இயற்றிய புதினமே அன்னை வயல். ஒரு நிலத்தில் நிகழும் நிகழ்வுகளை அங்கு வாழும் மக்களின் கூட்டு அறிவின் பொதுச் சாதனமாக இருந்து உண்மையோடு கற்பனையைப் புகுத்திப் புனைவது இலக்கியமாக இலங்குகின்றது. அவ்வகையில் இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்த காலத்தின் வரலாற்றைப் புனைவு கலந்து பதிவுசெய்கிறது இப்புதினம்.

சோவியத் யூனியனின் எழுத்தாளர் சிங்கிஸ் ஐத்மாத்தவ், கிர்கீஸிய மொழியில் எழுதி 50க்கும் மேற்பட்ட உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள அன்னை வயலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் பூ. சோமசுந்தரம். இவரது மொழிபெயர்ப்பு 1966, 1985களில் மாஸ்கோவிலுள்ள ராதுகா பதிப்பகத்தால் இரு பதிப்புகள் வெளி வந்துள்ளன. இவரது மொழிபெயர்ப்பு, புதினத்தைப் படிப்பவரைத் தன்வசப்படுத்துவதாக உள்ளதோடு வாசகர் தாம் வாழும் நிலச் சூழலோடு பொருத்திப் பார்க்கவும் இடந்தருகிறது.

கதைச்சுருக்கம்

ஒரு இலக்கியப் படைப்பு உருப்பெறுவதற்குப் படைப்பாளியின் வாழ்க்கை அனுபவமும், மொழித்திறனும் அடிப்படைக் காரணங்களாகின்றன. எனினும் படைப்பு உருப்பெற்ற பின்னர் அவனுக்கும் அதற்கும் யாதொரு தொடர்புமில்லை. உருவாகிய படைப்பு இப்போது ஒரு புறமைப் பொருள் (object) தகுதியைப் பெற்று விடுகிறது. எனவே, படைப் பாளியையும் படைப்பை நுகரும் வாசகனையும் தொடர்புபடுத்தாமலே ஒரு படைப்பை ஆராயலாம் (2010:30) என் கிறார் அ.அ. மணவாளன். அவ்வகையில் அன்னை வயல் புதினத்தைத் தல்கோனையும் அவள் அன்னையாகப் போற்றும் வயலும் பேசுவதாகக் கற்பனை செய்து கதையைத் தொடங்குகிறார் கதைசொல்லி. அன்னை வயலைப் பார்த்து மூதாட்டி தன் கடந்தகால நினைவுகளைப் பகிர்ந்துகொள்வதாகக் கதை நகர்கிறது. தல்கோனைக்கும் அவள் கணவன் ஸூவான்குலுக்கும் இடையிலான வாழ்க்கைத் தொடக்கம், அவர்களது காதல், திருமண வாழ்க்கை, அவர்களின் மூன்று மகன்களும் கணவன் ஸூவான்குலுக்கும் நாட்டு மக்களுக்காகப் போரில் ஈடுபட்டு மடிந்த கதை, கணவன் போரில் ஈடுபட்டதால் தல்கோனை கூட்டுப் பண்ணையின் தலைவியான கதை, மருமகளான மூத்த மகன் காஸிமின் மனைவி அலிமானின் துயர நிலை ஆகியன கடந்த கால வரலாறா கின்றன. வரலாற்றை வயலோடு சேர்ந்து வலியோடு பகிர்கின்றது புதினம். வயல் தனது கடந்த காலச் சுவடு களை நெஞ்சில் இருத்தித் தல்கோனையிடம் பேசுவதாகப் புனையப்பட்டிருப்பது ஆசிரியரின் கற்பனைத்

திறத்தையும் எடுத்துரைப்பு உத்தியையும் காட்டுகிறது.

பெண் கதைமாந்தர்கள்

அன்னைவயல் புதினத்தில் பெண்கதைமாந்தர்களாகத் தல்கோனை[1], அவள் மருமகள் அலிமான்[2], அடுத்த வீட்டு ஆய்ஷா[3] ஜென்ஷெல்குல் மனைவி[4] ஆகிய நால்வரும் குறிப்பிடப்படுகின்றனர். ஆனால், புதினம் முழுவதும் தல்கோனையும் வயலும் தமது வாழ்வியல் அனுபவங்களை ஒருவருக்கொருவர் ஒரே நாளில் பேசுவதாக அமைகின்றது.

தல்கோனை

புதினம் முழுவதும் தல்கோனையின் வாழ்வையும் அவள் சார்ந்த கூட்டுப்பண்ணை, குடும்பமாக வாழும் கணவன்,மகன்கள், மருமகள், அன்னையாகக் கருதும் வயல் என்று ஒட்டுமொத்த உருவமாகத் திகழ்கிறது. தல்கோனையின் வாழ்வு இவற்றிலிருந்து ஒன்றையொன்று பிரிக்க முடியாவண்ணம் இணைந்து செல்கிறது. இவற்றின் அடிப்படையில் தல்கோனையின் குடும்பம், சமுதாயச்சிந்தனை, கூட்டு வாழ்க்கை, தலைமைப் பண்பு, போரும் வலியும், வரலாற்றுணர்வு எனப் பாகுபடுத்தி அன்னை வயலில் காணலாகும் பெண்மைய வாழ்வியலை விளக்க முடியும்.

குடும்ப வாழ்வு

ஸுவான்குலும் தல்கோனையும் இளம்பருவத்தில் கூட்டுப்பண்ணையில் வேலை செய்யும்பொழுது அவர்களுக்குள் காதல் மலர்கிறது; காதல் கற்பாக மாறுகிறது; மூன்று ஆண் குழந்தைகள்; காஸிம், மாஷெல்பேக், ஜைனாக். காஸிமின் காதல் மனைவியாக அலிமான் குடும்பத்தில் சேர்கிறாள். குடும்ப வாழ்வு உழைப்பில் திளைத்து உள்ளம் குளிர்கிறது. காஸிம் தந்தைக்குத் துணையாகக் கூட்டுப்பண்ணையில் கதிரடிக்கும் தொழில் செய்கிறான். மாஷெல்பேக் நாட்டுக்கு உழைக்கப் பாதுகாப்புப் படையில் சேர்கிறான். ஜைனாக் கம்யூனிஸ்ட் தோழர்களோடு சேர்ந்து கூட்டம், போராட்டம் என்று சென்று விடுகிறான். மூவரும் சமுதாயச் சிந்தனையுள்ள பிள்ளைகளாக வளர்க்கப்படுகின்றனர். அவர்களின் வளர்ப்பை நேரில் பார்த்துப் பூரிக்கும் அன்னையாகத் தல்கோனை விளங்குகிறாள். அவள் தன் பிள்ளைகளைப் பார்த்து, ***என் அருமைப் புதல்வர்களே, எப்போதும் இதுபோலவே தகப்பன் அருகே இருப்பீர்களாக! நீங்கள் அவன் போன்ற மனிதர்களாக மட்டும் வளர்ந்துவிட்டால், எனக்கு வேறு ஒன்றும் வேண்டியதில்லை (2021:21)*** என்கிறாள். இக்கூற்று அவள் தன் கணவன் ஸுவான்குல்மீது கொண்டிருந்த நல்லெண்ணத்தையும் அவனது நற்குணத்தையும் வெளிப்படுத்துகின்றது. குடும்பத்தில் தந்தை சரியாக இருந்தால் மகன்களும் நற்பண்போடு இருப்பார்கள் என்பதற்குச் சான்றாக அமைகிறது. பிள்ளைகளை நன்முறையில் வளர்ப்பதிலும் மிகுந்த கவனம் உடைய குடும்பமாக விளங்குகிறது. அதற்குச் சான்றாக, ***நீ மனத்தை அலட்டிக்கொள்ளாதே. அவன் மக்களோடு சேர்ந்து வாழக் கற்றுக்கொள்ளட்டும். அர்த்தமில்லாமல் அவன் உளறியிருந்தால் நானே அவன் மண்டையைத் தட்டிச் சரிப்படுத்தியிருப்பேன்(2021:22)*** என்னும் ஸுவான்குல் கூற்றும், ***பாடு மகனே, இளைஞனாயிருக்கும் வரை பாடு. பாட்டு மனிதனைத் தூய்மையாக்குகிறது, மக்களை நண்பர்கள் ஆக்குகிறது. அப்புறம் எப்போதாவது இந்தப் பாட்டைக் கேட்பாய், இந்தக் கோடைக்கால மாலையில் உன்னுடன் சேர்ந்து இதைப் பாடியவர்களை நினைவுபடுத்திக்கொள்ளலாம் (2021:29)*** என்னும் தல்கோனையின் கூற்றும் அமைகின்றன. இவ்விருவர் கூற்றும் பிள்ளை தவறு செய்தால் திருத்தும் தந்தையையும், கடந்த கால நிகழ்வுகளை மறத்தல் கூடாது என்று பிள்ளையைப் பண்புடன் வளர்க்கும் தாயையும் முன்னிறுத்துகின்றன.

சமுதாயச் சிந்தனை

தல்கோனையின் குடும்பம் சமுதாயத்தை நேசிக்கும் குடும்பம். அவர்கள் நாட்டு மக்கள் அனைவரும் சமமாகவும் சுதந்திரமாகவும் இருக்க வேண்டும் என்று சிந்திப்பவர்கள். இளம்பருவத்துக் காதற்காலத்தில் தல்கோனை ஸுவான்குலிடம் *நாம் எப்போது மகிழ்ச்சியாக இருப்போம்* என்பதாக ஒரு வினாவை எழுப்புகிறாள். அதற்கு, ***நிலமும் நீரும் எல்லாருக்கும் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்பட்டால், நம்மிடமும் சொந்த நிலம் இருந்தால், நாமும் உழுது, விதைத்து, நமது கோதுமையைக் கதிரடித்தால்நாமும் இன்பமாக இருப்போம். உழுது, விதைத்து, அறுப்பதைவிட மேலான இன்பம் மனிதனுக்கு ஒன்றுமில்லை தல்கோனை. குடியானவனின் இன்பம் பயிரிடுவதும் அறுவடை செய்வதுமே (2021:13)*** எனப் பதிலுரைக்கிறான். இக்கூற்று நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவாக்கப்படவேண்டும்;நிலமும் நீரும் அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனும் பொதுவுடைமைச் சிந்தனையை மையமிட்டமைகிறது. அன்றியும், உற்பத்தியைத் தவிர உயர்ந்தது உலகில் இல்லை என்ற சிந்தனையும் வலுவாக முன்வைக்கப் படுகிறது.

ஜெர்மானியர்களுக்கும் சோவியத் மக்களுக்கும் போர் மூளுகிறது. தன் வீட்டிற்குப் புதிதாய் வந்த மருமகள் அலிமான் கணவன் காஸிமைப் போருக்கு அனுப்ப மாட்டேன் என அழுது புரளுகிறாள். அப்போது தல்கோனை இடையிட்டு, ***நீ என்ன மற்றவர்களைவிட உசத்தியோ? எல்லாருமே படையில் சேர்கிறார்கள், உன் கணவன் மட்டுமே அல்ல.என்னவோ கேவிக்கேவி அழுதுகொண்டு கை சோர்ந்து உட்கார்ந்து விட்டாயே. இப்படி இருக்கக் கூடாது. அப்புறம் நாம் வாழ்க்கை நடத்துவது எப்படி? (2021:43)*** எனக் கேள்வி எழுப்புகிறாள். இக்கூற்று, தம் நாட்டுக்குக் கேடு நேர்ந்தால் தன் பிள்ளைகளைப் போருக்கு அனுப்பும் வீரத்தாயாகத் திகழ்ந்த தல்கோனையின்வழி வீரயுகத் தாயை நினைவுகூர முடிகிறது. அத்துடன், தாம் வாழும் சமுதாயம் நலமுற்றிருக்க அனைவரும் இணைந்து ஓர்மையாகச் செயலாற்ற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளது.

கூட்டு வாழ்முறை

இப்புதினம் காட்டும் சமூகம் கூட்டு வாழ்க்கை முறையினைமையமிட்டதாகும்.அதனால்தான் கூட்டுப் பண்ணையின் குழுத்தலைவனாக ஸுவான்குல் பணியாற்றுகிறான். அவன் போருக்குச் சென்றபின் அவன் மனைவி தல்கோனை தலைமைப் பொறுப்பை ஏற்கிறாள். போர்ச்சூழலில் காஸிமை இழந்த தல்கோனை தன் கணவனைப் போருக்கு அனுப்பும்போது சிறு வருத்தம் கொள்கிறாள். அப்போது ஸுவான்குல், ***தல்கோனை நானும் நீயும் எந்த நிலையில் இருந்தோம்? இந்த மக்களோடு சேர்ந்தே மனிதர்கள் ஆனோம். ஆகவே, எல்லாவற்றையும்-இன்பத்தையும் துன்பத்தையும் - அவர்களோடு சமமாகப் பகிர்ந்து கொள்வோம். எல்லாம் நன்றாயிருந்தபோது எல்லாரும் சந்தோஷமாயிருந்தார்கள். இப்போது, ஒவ்வொருவனும் தன்னைப் பற்றியே எண்ணித் தன் விதிக்காக அழுவதா? இல்லை அது நேர்மையற்ற செயல் (2021:46)*** என்று கூறுகிறான். இக்கூற்று, மனித வாழ்க்கை என்பது தனித்துப் பிரிந்து வாழ்வதல்ல. மக்களோடு மக்களாக ஒன்றி ஓர்மையாக வாழ்வதே வாழ்வு. மகிழ்ச்சியாக இருக்கும்போது அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். துன்பம் நேரிடும்போது அதை அனைவரும் சேர்ந்தே பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று சமுதாயச் சமத்துவத்தை நிலைநாட்டுவதாக விளங்குகிறது.

தாய்மைத்தன்மை என்பதும் தலைமைத்தன்மை என்பதும் கூட்டு வாழ்முறையின் பயனாக வருவதுதான் எனும் ஆழமான சிந்தனையை முன்னிறுத்துவதாக, ***தாயின் மகிழ்ச்சி மக்களது மகிழ்ச்சி யிலிருந்தே, வேரிலிருந்து தண்டுபோல வருகிறது என்று அக்கணத்தில் நான் எண்ணமிட்டேன். மக்களது ஆக்கம் இல்லாவிட்டால் தாயின் ஆக்கமும் இராது. இப்போதும் நான் என்னதான் துன்பப் பட்டிருந்தபோதிலும், வாழ்க்கை எனக்கு எவ்வளவுதான் கடினமாய் இருந்தபோதிலும் என் நம்பிக்கை இன்னும் போகவில்லை. மக்கள்வாழ்கிறார்கள்,ஆகையினால் நானும் வாழ்கிறேன் (2021:29)*** என்னும் கூற்று இடம்பெறுகிறது. மக்கள் வாழ்கிறார்கள்; நான் மக்களோடு வாழ்கிறேன் என்பது மானுட நேயத்தின் மனத்திலிருந்து வரும் சிந்தனையை வெளிப்படுத்துகிறது.

போரின் வலியும் மனப்போராட்டமும்

தன் குடும்பத்தில் இருந்த ஆண்கள் அனைவரையும் போருக்கு இரையாக்கிய பின்னரும் தாம் சார்ந்த சமூகத்திற்காகப் போரில் ஈடுபட்டுள்ள வீரர்களுக்கு உணவு வழங்க முடியவில்லையே; அதற்காக நம்மால் உழைக்க என்று கூட்டுப் பண்ணையின் தலைவி தல்கோனை வருந்துகிறாள். போரினால் எல்லாம் முடங்கிக் கிடக்கின்றன. அந்த நேரத்தில் தரையில் போகும் எறும்புகளைப் பார்த்துப் பொறாமைப்படுவதாக, ***எறும்புகள் சாரைசாரையாகப் பாதையில் ஊர்ந்து கொண்டிருந்தன. அவையும் உழைத்தன, வைக்கோலையும் தானியத்தையும் சுமந்து சென்றன. துயரத்தில் ஆழ்ந்த மனிதப் பிறவி, உழைப்பாளி, அவற்றிற்கு எவ்விதத்திலும் குறையாத உழைப்பாளி அருகே வீற்றிருப்பது, அந்தக் கணத்தில் அவற்றின் மேல், அற்ப உழைப்பாளிகளான எறும்புகள் மேல் கூட அந்த மனிதப் பிறவி பொறாமைப்படுவது அவற்றுக்குத் தெரியவே தெரியாது. நிம்மதியுடன் தங்கள் வேலையைச் செய்ய அவற்றிற்கு முடிந்தது. யுத்தம் மட்டும் மூளாவிட்டால், எறும்புகளின் வாழ்வைக் கண்டு நான் பொறாமைப்படுவேனா? சொல்லவே வெட்கமாயிருக்கிறது (2021:41-42)*** என்னும் கூற்று இடம்பெறுகிறது. இது போரின் கொடுமையையும் அதனால் நேர்ந்த வறுமையையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தல்

அதிகார வர்க்கம் உழைக்கும் வர்க்கத்தை அடக்குமுறைக்கு உள்ளாக்கும்போது போராட்டம் உருவாகிறது. அதனை எண்ணிக் கூட்டுப்பண்ணைத் தலைவி தல்கோனை மனமுடைந்து அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் வண்ணம் நிலத்திடம் சில கேள்விகளை முன்வைக்கிறாள். ***அன்னை நிலமே! ஸுவான்குலையும் காஸிமையும் போன்ற மனிதர்கள் கொல்லப்படும் போது மலைகள் சரிந்து விழாதது ஏன்? ஏரிகள் கரைகளை உடைத்துக்கொண்டு பெருகாதது ஏன்? அவர்கள் இருவரும்-தகப்பனும்-மகனும்-பேருழவர்களாக விளங்கினார்கள். இத்தகைய மனிதர்களாலேயே உலகம் நிலைத்திருக்கிறது. அவர்கள் அதற்கு உணர்வூட்டுகிறார்கள், பருகப் பானம் தருகிறார்கள், போரில் அவர்களே அதைக் காக்கிறார்கள், முதன்முதலில் படை வீரர்களாக அவர்களே சேர்கிறார்கள். போர் மட்டும் இல்லாவிட்டால் ஸுவான்குலும் காஸிமும் இன்னும் எத்தனை செயல்களை ஆற்றியிருப்பார்கள். தங்கள் உழைப்பின் விளைவுகளை இன்னும் எத்தனை மக்களுக்கு அளித்திருப்பார்கள். இன்னும் எத்தனை வயல்களில் பயிர் செய்திருப்பார்கள். இன்னும் எவ்வளவு தானியம் கதிரடித்திருப்பார்கள். யுத்தம் இல்லாமல் வாழ மக்களால் முடியாதா? (2021:83)*** என்ற தல்கோனையின் கேள்விக்கணைகள் புலப்படுத்துகின்றன. போரில்லாமல் வாழ மக்களால் முடியாதா என்ற வினாவிற்குப் பதிலளிக்கும் வயல் ***மிகக் கடினமான கேள்வியைக் கேட்டு விட்டாய் தல்கோனை. போரினால் மானுடம் மட்டும் துன்பம் அடைவதில்லை. மானுட சமூகத்தைத் தாங்கி நிற்கும் நிலமாகிய நானும் பல இன்னல்களுக்கு உள்ளாகிறேன்*** எனப் பதிலுரைக்கிறது. அதற்குத் தல்கோனை,

நீ எப்படி நினைக்கிறாய், என் அருமை நிலமே! உனது மக்கள் யாவரிலும் சிறந்த உழைப்பாளிகள். யாவரிலும் தேர்ந்த நிபுணர்கள் போரினால் அழிக்கப் படுகிறார்கள். நான் இதை ஏற்க மாட்டேன், என்வாழ்வு முழுவதும் போவதானாலும் ஏற்க மாட்டேன் (2021:83)

எனது கொடிய ஜன்மப் பகைவன் யுத்தம் தொடங்குபவன்தான் (2021:97) என்பதாகத் தனது ஆற்றாமையை வெளிப்படுத்துகிறாள். இவை அனைத்தும் அதிகாரத்தையெதிர்த்துக் குரலெழுப்புகின்றன. உழைப்பவர்மீது போர் தொடுப்பவர்களே இவ்வுலகில் மாபெரும் குற்றவாளிகள் என்பதையும் உழைப்பவர்கள் இல்லாமல் போனால் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதையும் உலகியல் நடைபெறாது என்பதையும் உழைப்பாளிகளே

ISSN 2320-4842

உலகின் முதுகெலும்பு என்பதையும் தல்கோனையின் இக்கூற்றுகள் புலப்படுத்துகின்றன.

வரலாற்று உணர்வு

மனித வாழ்வியலில் வரலாற்று உணர்வு இன்றியமை யாதது. முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற வர லாற்றை முறையாகப் பாதுகாத்துப் பின்வரும் தலை முறையிடம் கொண்டு சேர்ப்பது அனைவரின் கடமை யாகும். அவ்வகையில், தன் மருமகள் அலிமானுக் குப் பிறந்த குழந்தை ஷான்பொலோத் அவனது வரலாற்றைச் சரியாக விளங்கிக்கொள்ள வேண்டும் என்று தல்கோனை விரும்புகிறாள். அதனை அன்னை வயலிடம் கூறுகிறாள்.

எவ்வுளவுதான் சிந்தித்தாலும் ஒரே முடிவுக்குத்தான் வரு கிறேன். நடந்ததை அவன் சரியாக மதிப்பிட வேண்டும். வாழ்க்கையை அவன் சரிவரப் புரிந்துகொள்ள வேண் டும் என்றால் அவனைப் பற்றி மட்டுமே அல்ல, அவன் விதியைப் பற்றி மட்டுமே அல்ல, வேறு பல மனிதர் களையும் அவர்களுடைய விதிகளையும் பற்றி, என் காலத்தைப் பற்றி, என் வயலே, உன்னைப் பற்றி, நம் அனைவருடைய வாழ்க்கையையும் பற்றி நான் அவனுக் குச் சொல்லியாக வேண்டும். எந்த சைக்கிளில் அவன் எதையும் சந்தேகிக்காமல் சவாரி செய்கிறானோ, பள்ளிக் கூடம் போய் வருகிறானோ, அந்த சைக்கிளைப் பற்றி யும்கூட நான் அவனுக்கு உண்மையைத் தெரிவிக்க வேண்டும் (2021:9) என்று கூறுகிறாள். இக்கூற்று மிக ஆழமான பொருளுடையது. உழைப்பு இல்லா மல் எதுவும் உற்பத்தி ஆவதில்லை. உழைப்பாளர் களே உற்பத்திக்கு மூலாதாரம். உழைப்பாளர்கள் தாம் எல்லாவற்றையும் உற்பத்தி செய்தார்கள் என்ற உண்மையை அவன் உணரும் வகையில் நீ வந்த தும் உன் சைக்கிள் வந்ததும் உற்பத்தியிலிருந்துதான் என்பதை வலியுறுத்துவதாக அமைகின்றது.

நிறைவாக,

அன்னை வயல் புதினம் தல்கோனை எனும் பெண் ணைத் தலைமைக் கதைமாந்தராக வைத்து இரண் டாம் உலகப்போர்க் காலத்தை மனக்கண்ணில் காட் டுகிறது.

உற்பத்தியே வாழ்க்கையின் உச்சம்; உழவே உழைப் பின் உச்சம்; வேளாண்மையிலிருந்து வந்த உணவே உயிர்களின் உச்சம் என்பதைப் பறைசாற்றும் பனுவ லாக அன்னை வயல் விளங்குகிறது.

அன்னை வயல் காட்டும் பெண் மைய வாழ்வு சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் இன்பத்தையும் துன்பத்தையும் உற்பத்தியையும் உணவையும் சரிநிகர் சமமாகப் பகுத்து அனைவருக்கும் வழங்க வேண் டும் என்பதை வலியுறுத்தும் பொதுவுடைமை வாழ் வாக அமைந்திருப்பதைப் புதினம் நெடுகிலும் காண முடிகின்றது.

பழங்காலத்தில் பெண் தலைமையேற்றிருந்த தாய் வழிச் சமூகத்தை மனநிழலில் பதிவு செய்யும் புதின மாகவும் இப்புதினத்தைக் காணமுடிகிறது.

உண்மை நிகழ்ச்சியைக் கற்பனை கலந்த புனைவோடு வழங்குவது படைப்புக்கலை. அக்கலையில் சிறந்த தேர்ந்த படைப்பாளியாக சிங்கிஸ் ஐத்மாத்தவ் திகழ் கிறார். அதற்குச் சான்றாக வயலை அன்னையாகப் பாவித்துப் பேச வைத்த எடுத்துரைப்பு முயற்சியைச் சுட்டலாம். அதேபோன்று, கதைசொல்லி ஓரிடத்தி லும் பிரதிக்குள் தலைகாட்டாது, கதை மாந்தர்களே கதையைச் சொல்வது வியக்கத்தக்க உத்தியாக விளங் குகிறது.

துணையன்கள்

கிறிஸ்டோபர் காட்வெல் (மூ.ஆ.), தோதாத்ரி. எஸ். (மொ.ஆ.), 2007, கானலும் உண்மையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

சிங்கிஸ் ஐத்மாத்தவ் (மூ.ஆ.), சோமசுந்தரம். பூ. (மொ.ஆ.), 2021, அன்னை வயல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, மூன்றாம் பதிப்பு.

மணவாளன். அ.அ., 2010, இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மூன்றாம் பதிப்பு.

Leadership is the capacity to translate a vision into reality.

—Warren Bennis

Leadership cannot just go along to get along. Leadership must meet the moral challenge of the day.

—Jesse Jackson

The very essence of leadership is that you have to have a vision. It's got to be a vision you articulate clearly and forcefully on every occasion. You can't blow an uncertain trumpet.

—Theodore Hesburgh

ISSN 2320-4842

கவியரசு நா. காமராசன் கறுப்பு மலர்கள் கவிதைத் தொகுப்பில் சமூகச் சிந்தனைகள்

ரா. ஜெயஸ்ரீ
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம் 637 205

நெறியாளர்: முனைவர் ந. கமலஹாசன்
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம் 637205
(இணைவு: பெரியார் பல்கலைக்கழகம்

முன்னுரை

பழமை, பெண்ணடிமை, நாகரிக மாற்றம், சாதியப் பிரிவினை, கலாச்சாரச் சீரழிவுகள் உள்ளிட்ட கருத்தாக் கங்கள் சமூகத்தில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துகின்றன என்பதைக் கவியரசு நா. காமராசன் தமது கவிதைகளில் பல வடிவங்களில் வெளிக்காட்டியுள்ளார். கறுப்பு மலர்கள் கவிதைத் தொகுதியில் இடம்பெறும் அவரது சமூகச் சிந்தனைகள் குறித்து அமைகிறது இவ்வாய்வுக் கட்டுரை.

சமுதாயமும் கவிஞனும்

சமுதாயத்தில் அன்றாட வாழ்வில் நாம் காணும் பல்வேறு அவலங்களை நம்மைவிடக் கூர்மையாகக் கவிஞர்கள் காண்பர். தாம் கண்ட சமுதாய அவலங்களைத் தம் கவிதைகளில் பதிவு செய்து வெளிப்படுத்தி மக்களை விழிப்படையச் செய்யும் பெரும் பொறுப்பு கவிஞர்களுக்கு உண்டு. ***கவிஞர் என்பவர் காட்டிலோ, குகையிலோ, தன்னந்தனியே வாழ்ந்துவரும் சித்தர் அல்லர். சமுதாயத்தில் மக்களோடு மக்களாய் ஒன்று சேர்ந்து வாழ்ந்து வரும் ஓர் உறுப்பினரே ஆவார். எனவே, அவரது கவிதைகளில் சமுதாய நிகழ்வுகளின் பதிவு, சமுதாய அவலங்களின் தாக்கம், சமுதாய நலன்களின் மீதான அக்கறை, புதிய சமுதாயம் பற்றிய சிந்தனைகள் கட்டாயம் இருந்தே தீரும்*** என்ற அறிஞரின் கருத்து இங்குக் கருதத் தக்கது.

கவிஞன் தான் காணும் சமுதாய நிகழ்வுகளையே கவிதையாக்குகிறான். சமுதாயத்திலிருந்து தான் பெற்ற அனுபவங்களை வெளியிடுவதோடு, சில சமயங்களில் பிரச்சனைகளால் நேரும் அவலங்களையும் கவிஞன் வெளிப்படுத்தி வருகிறான் என்பதைப் பல்வேறு கவிதைகள் உணர்த்திவருகின்றன. ***சமுதாய நோக்கோடு பாடப்பட்ட கவிதைகளில் மக்களின் நிலை, அவர்களின் போக்கு, அவர்தம் பொருளாதாரம், அரசியல் போன்ற சிந்தனைகள் வாழ்வோடு தொடர்புடைய கூறுகளே அதிகம்*** என்ற அறிஞரின் சிந்தனை இங்கு ஒப்பு நோக்கு தற்குரியதாகும்.

சமுதாயத்தில் நிலவும் பல்வேறு அவல நிகழ்வுகள் மக்களை எந்தெந்த வகைகளில் பாதிப்புக்கு உள்ளாக்கி வருகின்றன என்பதனைப் படம்பிடித்துக்காட்டி வருவதில் புதுக்கவிதைகள் முன்னணியில் விளங்குகின்றன. அவ்வகையில் நா.காமராசன் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள் நம் சமுதாயத்தில் மக்களின் இயல்பான வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

வறுமை நிலை

நாடு சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளில் வறுமையும் ஒன்றாகும். உணவு, உடை, இருப்பிடம் இன்றி அல் லல் படுவோர் மிகுதியாகவே வாழ்கின்றனர். உழைப்பின்மை, உழைப்பிற்கேற்ற ஊதியமில்லாமை, செல்வம் ஓரிடத்தில் முடக்கப்படுதல் போன்றவை வறுமை தோன்ற காரணங்களாக அமைகின்றன எனலாம்.

சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளை உலகுக்கு உணர்த்தும் பணி உன்னதமானது. அதனைச் செய்யாத வர் நல்ல கவிஞரல்லர். வாழ்கின்ற காலத்தில் உண்டாகும் மாற்றங்களை இயற்றும் கவிஞரே காலத்தை வென்ற கவியாகின்றார். நாட்டின் வறுமை நிலை மாற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் பற்றி பிச்சைக் காரி என்ற கவிதையில்,

இரவுகூட விடியலில் மன்னிக்கப்படுகிறது
இன்றும் நாங்கள் மன்னிக்கப்படவில்லை.
கால்நடைகள்
கட்டுத்தறிகளை நோக்கிப்
போவதைப் போல
நாங்கள் சிறைச்சாலைகளை நோக்கிப்
போய்க்கொண்டிருக்கிறோம்

ISSN 2320-4842

எமக்கு..
இந்த உலகில் பெறுவதற்கு
என்ன இருக்கிறது.. கைவிலங்குகளைத் தவிர...?
உனது விசாரணையே "கூண்டு" களில்
தொடங்கும் போது
தீர்ப்பு
சிறைச்சாலைகளில் முடிவதில்
வியப்பொன்றும் இல்லை,
நம்பினேன்
ஆனால், நீதி தேவனுக்கு
நீ வெறும் தபால் நிலையம் தான்! என்றமையும் அடிகள் வறுமையின் உச்சத்தைப் பிரதிபலிக்கின்றன. நாட்டில் சிறைக்கைதிகளைப்போல வறுமைப்பிடியில் சிக்கித் தவிக்கும் மக்களின் அவலநிலையை உணர முடிகிறது.

சமுதாயச் சூழ்நிலையில் பொருளாதார ஏற்றத்தாழ்வின் காரணமாக அத்தியாவசியத் தேவையான உணவு, உடை, உறையுள் இவை இல்லாத நிலையில் இவற்றைப் பெறுவதற்காக மனிதன் நாள்தோறும் போராடிக்கொண் டிருக்கிற நிலையே வறுமை நிலை எனக் கவிஞர் சிற்பி வறுமை நிலைக்கு விளக்கம் தருகிறார்.

அமாவாசைக்கு முதல்நாள் இரவில் ஒரு பிச்சைக் காரனின் கண்ணீர் நினைவுகளோடு வருந்துவதை நிலாச்சோறு என்னும் கவிதையில்

பூமியாத்தாள் மடியுண்டு
புழுதிப்பொன் விரிப்புண்டு
புழுதிப் பொன் விரிப்புக்குப்
புத்திரனாய் வந்தவன் நான்.
பூகம்பம் முத்தமழை
புயல் எனக்குத் தாலாட்டு
தண்ணீரே தாய்ப்பாலாம்
கண்ணீர் என் புன்னகையாம்!
பசி எனக்கு விளையாட்டு
பருவங்கள் மாற்றுடைகள்.
இடுகாடே மண்குடிசை
இறப்பெனது நித்திரையாம் என்று கண்ணீரில் வாழும் மனிதன் மனம் நொந்து இறப்பே எனது உறக்கம் என்று விரக்தியில் கூறுவதாகப் பாடியுள் ளார். மேலும்

துண்டுநிலா சோறாக
துளிவிண்மீன் கறியாக
கண்டு பசிநோய் கொண்டேன்
காலன் தேர் என்றுவரும்? என்றமையும் கவியடிகள் சுதந்திர நாட்டில் உணவின்றிப் பிச்சைக் காரர்கள்போலவுள்ள மக்கள் அவல நிலையை எடுத் துக்காட்டுகின்றன.

அம்மா பசிக்குது
அடிவயிறு துடிக்குது
சும்மா நீ இருந்தால்
சோறுதான் வருவதெப்போ
முந்தா நாள் குடித்த கஞ்சி
முழுமையா நிறையிலேயே
அடிவயிற்றில் தீ ஒன்று
அனலா கொதிக்குதிங்கே எனும் அடிகள் வீட்டில் குழந்தைகள் எப்பொழுது அம்மா உணவு சமைத்துத் தருவாள், சோறில்லாமல் வயிறு அன லாய்க் கொதிக்கிறது என அழுது புலம்பும் நிலை யைப் படம் பிடித்துக்காட்டுகின்றன.

அநாதைகள்

அநாதைகள் என்போர் தாய், தந்தை ஆகியோரை இழந்து ஆதரவற்ற நிலையல் வாழ்பவர்கள் ஆவர். குறிப்பாக குழந்தைகள் பெற்றோரின் பாசம் இன்றி வளரும்போது பல இன்னல்களை அவர்கள் சந்திக் கிறார்கள். அநாதைகள் தமது வேர்களை அறிய முயல்வதன் மூலம் சுய புரிதலை உருவகமாகத் தேட லாம். பெற்றோர் குழந்தைகளுக்கு நண்பர்களாகவும் உதவுவதில் தெய்வங்களாகவும் காட்சியளிக்கின்றனர் எனலாம். இவர்கள் இல்லாதபோதுதான் அவர்கள் யாரும் இல்லாதவர்களாக உணரப்படுகின்றனர்.

அநாதைகளே உங்கள் பாடகன் பாடுகிறான்
அரை வெண்ணிலவின் மீன்களின் ஒளியில்
ஆயிரம் நுரைமலர் ஆற்றங் கரையில்
ஆவியின் நாக்கில் மௌனத்தின் குரலில்
அவன் பாடுகிறான்!
அனாதைகளே, உங்கள் பாடகன் பாடுகிறான்!.
சூனியம் ஏந்திய தீபங்களே!
சூரியன் தூங்கிய துருவங்களே!
ஊமையன் பாடிய பாடல்களே
உயிர்நிழல் இல்லாக் கோடைகளே
உறவெனும் பூமியின் தூசுகளே
ஆவியின் நாக்கில் மௌனத்தின் குரலில்
அவன் பாடுகிறான்!
அநாதைகளே, உங்கள் பாடகன் பாடுகிறான்! என்ற கவித்தொடர்கள் எடுத்தியம்புகின்றன. மண்ணில் மனித நேயமின்றி வாழும் சில சுயநலமிக்கவர்களால்தான் குழந்தைச் செல்வங்கள் அநாதைகளாக்கப்பட்டு அரசு காப்பகங்களில் ஆதரவின்றி வாழும் சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர் எனக் கவிஞர் எடுத்துக்காட்டு கின்றார்.

திருநங்கைகள்

காலங் காலமாக ஒன்பது, அலி, அரவாணி என்று பல்வேறு தரப்பட்ட அருவெறுக்கத்தக்க பட்டப்பெயர் களில் அழைக்கப்பட்டு வந்தவர்கள். சமீப காலமா கத்தான் பொருத்தமான திருநங்கை என்ற பெயரில் அழைக்கப்படுகின்றனர். திரு என்பது ஆண்மகன், நங்கை என்பது பெண்மகள். ஆணாகப் பிறந்து, பாலின உணர்வு பெறும் வயதில் குரோமோசோம் குறைபாட்டால் மனதளவில் மட்டும் பெண்ணாக உணர்ச்சி மாற்றம் அடைபவர்கள் எனலாம்.

இது அவர்களே வேண்டுமென்று நினைத்து மாறு வதில்லை. இது, விடை சொல்ல முடியாத இயற்கை யின் விளையாட்டு. மனதளவில் பெண்ணாகப் பருவ மாற்றம் அடையும்போது அவர்களின் பிறப்பு

உறுப்பு மீதே வெறுப்பு உண்டாகி, பின் முறையான ஆங்கில மருத்துவ அறுவை சிகிச்சை அல்லது முன்னோர் அனுபவத்தின் மூலம் உறுப்பை நீக்கி விடுவார்கள். உண்மையான ஆணுக்கு உறுப்பை நீக்கி விட்டால், அத்தோடு அவர் மரணமடைய வேண்டியதுதான். ஆனால், திருநங்கைகளுக்கு அப்படி இல்லை. இதிலிருந்தே இவர்களது மாற்றம் இயற்கையின் விதிவசத்தால் நடப்பது என்பதை அறியலாம். மனதளவில் பெண்ணுக்குரிய உணர்வுகள் இயல்பாகவே வந்து விடுவதால், பெண்களைப் போலவே ஆடை, அலங்காரம் ஆகியவற்றைச் செய்துகொள்வார்கள்.

திருநங்கைகளோ ஆண் என்ற உடம்பில், பெண்ணுக்குரிய உணர்வுகளை அடக்கி வைத்திருப்பவர்கள். அடக்கி வைத்த உணர்வுகள் வெளிப்படும் போது அதிகமாக அலங்காரம் செய்து கொள்கின்றனர். இதை நாம் புரிந்துகொள்ளாமல் அவர்களை அருவெறுப்புடனும் வித்தியாசமாகவும் பார்க்கிறோம்.

மனதளவில் பெண் தன்மை குடி கொண்டிருப்பதால் எதிர்பாலினமான ஆண்களின் ஆதரவுதான் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. ஆகவேதான் ஆண்களைச் சீண்டுகிறார்கள் என்றும் கொள்ளலாம்.

காலமழைத் தூறலிலே
களையாய்ப் பிறப்பெடுத்தோம்
தாய்ப்பாலின் சரித்திரத்தில்
சதுராடும் புதிரானோம்.
விதைவளர்த்த முள்ளானோம்
விளக்கின் இருளானோம்
சதைவளர்க்கும் பிணம் நாங்கள்
சாவின் சிரிப்புகள்.
மூங்கையொரு பாட்டிசைக்க
முடவனதை எழுதி வைக்க
முடவன்கை எழுதியதை
முழுக்குருடர் படித்ததுண்டோ? எனும் காமராசனின் அடிகள் மனிதப்பிறவியில் திருநங்கைகள் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படும் அவலத்தை எடுத்துரைக்கின்றன.

மது

இது மூளைத்திறன் மயக்க மருந்தாகச் செயற்படுகிறது. பல நாடுகள் மதுபான உற்பத்தி, விற்பனை, உட்கொள்ளல் தொடர்பான விதிமுறைகளைக் கையாண்டு வருகின்றன. மதுபானம் உலக நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டும் உட்கொள்ளப்பட்டும் வருகின்றது. மதுபானங்களை உட்கொள்ளல் சில கலாச்சாரங்களில்சமூக நிகழ்வுகளில் முக்கிய அம்சமாக காணப்படுகிறது. ஆனால், மிதமான சிக்கல்களுக்குக் காரணமாக அமைகின்றது இதனை,

இந்தியாவில்
கங்கை வற்றிப் போனாலும்
மதுவெள்ளம் பாய்ந்து கொண்டுதான் இருக்கும் எனும் கவிவரிகள் சமூகச் சீரழிவுக்கும் காரணமாக அமைகிறது என்பதையும் கங்கை நதி வற்றினாலும் மது குடிக்கும் பழக்கம் நாட்டில் அமோகமாகக் காணப்படுகிறது என சுட்டிக்காட்டுகின்றன.

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்உண் பவர் என்று வள்ளுவர் கள் உண்பது நஞ்சிற்கு சமம் என்றும் கள் உண்பார் இறந்தார்க்குச் சமம் என்றும் சமுதாயத்துக்குச் சான்று பகர்வது நோக்கத்தக்கதாகும்.

தொகுப்புரை

மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையே நிலவும் உறவு முரண்பாடுகள், இயற்கையாகவும், செயற்கையாகவும்அமைந்துவிடுவதை நா.காமராசனின் கவிதைகள் புலப்படுத்திக் காட்டுகின்றன.

ஏழ்மை என்னும் கொடிய நோயினைத் துரத்தியடிப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். இணைந்த கைகளால்தான் எதையும் சாதிக்க முடியும் என்பதைக் கவிஞர் தன் படைப்புக்களின் வழியாகச் சமுதாயத்திற்கு உணர்த்துகின்றார்.

உலகம் முழுவதிலும் வாழும் மக்கள் அனைவரும் அமைதியுடனும், ஆதரவுடனும், மகிழ்வுடனும் வாழ்வதற்கு வழிகாட்ட வேண்டும். சமுதாய நல்லிணக்கம் தோன்றி அனைவரும் அன்பெனும் ஒரு குடையின்கீழ் அகமகிழ வேண்டும் என்னும் சிந்தனையை தன் கவிதைகளில் மிகுதியும் பதிவுசெய்துள்ளதை அறியமுடிகிறது.

துணைநின்ற நூல்கள்

1. நா. காமராசன். கறுப்பு மலர்கள்
2. இரா. மோகன, காந்தியக் கவிஞருடன் ஒரு கை குலுக்கல்
3. இல.செ. கந்தசாமி, புதுக்கவிதை ஒரு பார்வை
4. இரா. சந்திரசேகரன் (தொ.ஆ,) கவிஞர் சிற்பி கருத்தியல் வளம்
5. சினேகன், முதல் அத்தியாயம்-2004
6. பரிமேலழகர், திருக்குறள் உரை-2002

There is nothing either good or bad,
but thinking makes it so.

- William Shakespeare in *Hamlet*

ISSN 2320-4842

நவீன கால நளாயினி

முனைவர் த. தனஞ்செயன்

இந்தியச் சமூக வரலாறு என்பது இலக்கியங்களும் இலக்கணங்களும் எழுதப்பட்ட காலந்தொட்டு ஒரு பக்கச் சார்புடையதாகவேஎழுதப்பட்டுவந்துள்ளது.இதன்காரணமாகவே, உண்மைவரலாற்றைக் கட்டமைக்கும் பணியை முற்போக்குச் சிந்தனையாளர்கள், பகுத்தறிவாளர்கள், அறிவியலாளர்கள், தொல்லியலாளர்கள், மானுடவியலாளர்கள் முதலானோர் மேற்கொண்டுவருகின்றனர். இப்பணியை ஓர் இயக்கமாக முன்னெடுத்ததில் ஜோதிராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே, டாக்டர் அம்பேத்கர், அய்யன் காளி, அயோத்திதாசப் பண்டிதர், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி முதலானோர் தீவிரமாக ஈடுபட்டனர். குறிப்பாக, இவர்கள் அனைவரும் உரிமைகள் மறுக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட மக்களை ஒன்று திரட்டுதல், அவர்கள்மீது காலங்காலமாகத் திணிக்கப்பட்டுவரும் சமூக அவலத்தை உணரச்செய்தல், ஆணாதிக்க மற்றும் பெண்ணடிமையை அடையாளங்காணச் செய்தல் முதலான பல்வேறு பணிகளில் முன்னின்று செயல்பட்டனர்.

குறிப்பாக, ஆங்கிலேயர்களை எதிர்த்த போராட்டங்களுக்கு ஈடாக உள்நாட்டு ஆதிக்கச் சக்திகளை எதிர்க்கும் போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.இதன் விளைவாகவே மண் விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்ற அதே காலகட்டத்தில் பெண் விடுதலைப் போராட்டங்களும் ஆங்காங்கே உருவாயின. மேலும், இத்தகைய போராட்டத்தில் மண் விடுதலைப் போராட்டமே முதன்மையாகக் கருதப்பட்டதால் அதற்கான ஆதரவு அதிகமாகி, பெண் விடுதலைப் போராட்டங்கள் குறிப்பிடத்தக்க அளவில் பின்னடைவையும் சந்தித்திருந்தன. இந்நிலை தென்னிந்தியாவில் உருவான சமூகநீதி இயக்கங்களின் தோற்றத்திற்குப் பின்பு மாறத்தொடங்கியது. குறிப்பாக, சென்னை மாகாணத்தை மையமாகக் கொண்டு உருவான பஞ்சமர் மகாசன சபை, தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்கம், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் முதலானவை பெண் விடுதலையை மையப்படுத்திப் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை மேற்கொண்டன. இப்பின்னணியிலேயே பெண் விடுதலையை அடிப்படையாகக் கொண்ட புனைவிலக்கியங்கள் புதினங்களாகவும் சிறுகதைகளாகவும் அதிக அளவில் எழுதப்பட்டன. அவ்வாறு எழுதப்பட்டவற்றுள் பெரும்பாலானவை திராவிட இயக்கச் சிந்தனையாளர்களால் எழுதப்பட்டவை.

இந்தியாவைப் பொறுத்தவரை பெண்ணடிமைச் சிந்தனைகளைப் பரவலாக்கி, அவற்றை நிலைபெறச் செய்வதில் புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றின் பங்கு குறிப்பிடத்தக்க அளவில் இருந்தன. இவற்றில் இடம்பெற்றிருந்த கிளைக்கதைகளும் பிற கதைகளும் பெண் என்பவள் ஆண்களுக்குச் சேவகம் செய்வதற்கெனப் பிறப்பெடுத்தவள் என்பன போன்ற சிந்தனைகளைத் தீவிரமாக வலியுறுத்திப் பேசின. குறிப்பாக, ஆணாதிக்கச் செயல்பாடுகளுக்குக் கட்டுப்பட்டுக் கிடப்பதோடு மட்டுமன்றி, ஆணாதிக்க ஏவல்களின் அடிமையாகச் செயல்படுவதையே ஒரு பெண் பெருமையாகக் கருதவேண்டும் என்கிற சிந்தனையைப் பெண்களிடத்தில் இப்புராண, இதிகாசங்கள் பரப்பின. அவ்வாறு பரப்பப்பட்டவற்றைப் பொய் எனவும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை எனவும் மக்களிடம் எடுத்துரைக்கும் பணியை முன்னர்க் குறிப்பிட்ட இயக்கங்கள் முன்னெடுத்தபோது, பல்வேறு இடையூறுகளையும் ஒடுக்குமுறைகளையும் அந்த இயக்கங்கள் சந்தித்தன. மாறாக, சமூகச் சீர்திருத்த இயக்கங்களின் இடையறாத களப்பணியின் வழியாகப் புராண, இதிகாசக்கதைகளின் உண்மையான முகத்தை மக்கள் படிப்படியாக அறியத் தொடங்கினர். இதன் விளைவாக, ஆணாதிக்கப் போக்கிலிருந்து பெண்கள் மெல்ல விடுதலையடைந்து கடந்த முக்கால் நூற்றாண்டாகச் சுதந்திரக் காற்றைச் சுவாசித்துவருகின்றனர். அவ்வகையில் பெண்களைப் போகப் பொருளாகவும் ஆணின் ஏவல்படி நடப்பவளாகவும் கட்டமைக்கப்பெற்றிருந்த பல்வேறு மகாபாரதக் கதைகளில் ஒன்றான 'நளாயினி' கதை வழியாக அறியவேண்டிய அரசியலை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

நளாயினியும் சமூக நிலையும்

புராண இதிகாசக் கதைகளைப் பொறுத்தவரை அவை இந்தியச் சமூகத்தில் பல்வேறு வடிவங்களில் மக்களிடம் பரவிக் காணப்படுகின்றன. குறிப்பாக, அவற்றின் கிளைக்கதைகள் என்பவை ஆண், பெண் உறவைத் தீர்மானிப்பதுத் தொடங்கி, யார் யாருக்குக் கட்டுப்பட்டவர்கள், யார் யாருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்பதில் ஒரு தெளிவான சித்தாந்தத்தைக் கொண்டிருந்தன. அவ்வகையில் வியாச முனிவர் சொல்லச் சொல்ல விநாயகரால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் மகாபாரதம், நூற்றுக் கணக்கான கிளைக்கதைகளைத் தன்னிடத்தே கொண்டுள்ளது. அக்கதைகளுள் ஒன்றான 'நளாயினி' கதையை வைத்து, மற்றொரு கதையைப் புனைந்துள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்ச் சமூகத்தில் பேசப்பட்டு வரும்,

ISSN 2320-4842

- அமைந்தால் நளாயினிபோல மனைவி அமைய வேண்டும்.
- எல்லோருக்கும் நளாயினிபோல மனைவி அமைஞ் சிடுமா...
- இவர் பெரிய முனிவரு...நளாயினிபோல பேசாம வரணும்கிறாரு...
- நான் என்ன நளாயினிபோல, என்னைக் கூடை யில வெச்சித் தூக்கிக்கிட்டாப் போகச்சொல்லு றேன்...

என்பன் போன்ற தொடர்களை நளாயினி கதையின் வழியாகக் கலைஞர் கேள்விக்கு உட்படுத்தியுள்ளார்.

என் தெய்வமே! என்னை ஏன் இப்படி சோதிக்கிறீர்கள்? என் கூடுவிட்டு ஆவி போனாலும் கூடையைக் கீழே போடமாட்டேன். கூடையிலென்ன வியாபாரப் பொருளா இருக்கிறது? வீட்டுச் சாமானா தூக்கிச்செல்கிறேன்? விலை மதிக்கவொண்ணா என் ரத்தினமல்லவா தாங்கள்! தங்களையா கீழே போட்டுவிடுவேன்? அபச்சாரம்! அபச்சாரம்! 1

என நளாயினி, தன் கணவர் 'மௌத்கல்யர்' உடனான மேற்கூறிய உடையாடல், அக்காலத்தில் பெண் எப்படிப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்தாள் என்பதற்குச் சான்றாக அமைவதைக் காணமுடிகிறது. குறிப்பாக, நளாயினியின் அந்தப் புலம்பலானது,

பெண் என்பவள் கணவனைத் தெய்வமாகக் கருதவேண்டும்.

உயிரே போனாலும் கணவனைச் சுமப்பதிலிருந்து பின்வாங்கக் கூடாது.

வியாபாரப் பொருட்கள், பண்ட பாத்திரங்கள் முதலானவற்றைக் காட்டிலும் விலைமதிப்பற்ற ரத்தினமாகக் கணவனைக் கருதவேண்டும்.

கணவனை எந்தச் சூழ்நிலையிலும் கைவிட்டுவிடமாட்டேன் என மனைவி உத்திரவாதம் அளிப்பது.

முதலான பல்வேறு ஆணாதிக்கச் சமூக ஒழுங்குகளைப் படம்பிடித்துக் காட்டுவதைக் காணமுடிகின்றது. இத்தகைய சூழல் மட்டுமின்றி, மேலும் பல்வேறு வகையான நெருக்கடிகளையும் பெண்கள் எதிர்கொண்டதைக் கதையின் அடுத்தடுத்தப் பகுதிகள் படம்பிடித்துக் காட்டியுள்ளன. அதன்படி,

கணவன் எப்பேற்பட்ட நோயாளியாகவும் கீழ்மை குணங்களைக் கொண்டவனாக இருந்தாலும் அவனுக்குக் கீழ்ப்படிதலையே மனைவியானவள் கொண்டிருக்க வேண்டும்.

அவனுடைய ஆசைகள், மனைவியைத் தவிர்த்துப் பிற பெண்கள் மீதான ஆசையாக இருப்பினும் அதனை மனைவி நிறைவேற்ற வேண்டும்.

எவ்வளவு விலை கொடுத்தேனும் கணவனின் ஆசையை நிறைவேற்ற வேண்டும்.

என்பன போன்ற பல்வேறு ஆணாதிக்க அடையாளங்களைச் சுமப்பவளாகப் பெண் இருந்திருக்கிறாள் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இந்நிலையைக் கண்டு மனம் பொறுக்காத கலைஞர் அவர்கள் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா முதலான தமது முன்னோர்களிடம் பெற்ற சமூக அறிவின் கண்கொண்டு பெண் விடுதலைக் கருத்துகளை நளாயினி கதையின் பிற்பகுதியில் வெளிப்படுத்துகின்றார். குறிப்பாக, அறிஞர் அண்ணாவின் 'கட்டை விரல்' கதையை முன்மாதிரியாகக் கொண்டு கலைஞர் அவர்கள் இக்கதையை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நாள் கடந்து பேசிய நளாயினி

துரோணாச்சாரியாரின் பெயரால் காலங்காலமாகக் கட்டமைக்கப்பட்ட போலி, குரு - சிஷ்ய பிம்பத்தைச் சிதைக்க அறிஞர் அண்ணா மேற்கொண்ட உத்தியைக் கலைஞர் அவர்கள் இக்கதையில் பின்பற்றியுள்ளார். குறிப்பாக, நளாயினி கதையின்படி, தன் கணவரான 'மௌத்கல்யர்' முனிவரைத் தாசி வீட்டில் விட்டுவிட்டு வரும் நளாயினியிடம் பேசுவதாக வரும் உலகா, இதயா ஆகிய இரு பெண் பாத்திரங்கள் வழி, பெண் விடுதலைக்கான மாற்றுச் சிந்தனை வெளிப்படுவதைக் காணமுடிகின்றது. அதன்படி,

'உலகா' என்ற பெயரில் வரும் தோழியிடம் கணவனின் ஆசைகளை நிறைவேற்றுவதே மனைவியின் கடமை எனும் அக்கால உளவியலைப் பேசுவது.

'இதயா' என்ற பெயரில் வரும் தோழியிடம் நோய்வாய்ப்பட்ட குஷ்டரோகிக் கணவனிடம் கிடந்து சீரழிவதில் எனக்கு விருப்பம் இல்லை எனப் புரட்சிப் பெண்ணாய்ப் பேசுவது

என இரு நிலையினராகப் படைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. கதையின்படி, கணவனைத் தாசி வீட்டில் விட்டுவிட்டு வரும்போது சந்திக்கும் 'உலகா' என்ற தோழியிடம் உலக வழக்கப்படி கணவன் விரும்பியதைச் செய்துவிட்டு வருகிறேன் எனக் கூறிவிட்டு வீடு வருகிறாள் நளாயினி. பிறகு, வீட்டில் புறண்டு அழும்பொழுது தன்னைக் காணவரும் மற்றொரு தோழியான 'இதயா'வுடன் பேசுகையில்,

நளா! உன் கணவன் எவ்வளவு சுடுமொழியைக் கூறினாலும் எதிர்த்து ஒரு சொல் கூறாத கற்பரசி என நேற்றுக்கூட உலகா என்னிடம் உன்னைப் புகழ்ந்தாள்...

தொடர்ச்சி: பக். 97)

ISSN 2320-4842

கட்டடக் கலை

முனைவர் அ. ஸ்ரீதேவி
உதவிப்பேராசிரியர் & தமிழ்த் துறைத் தலைவர்
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் 641 105

Abstract

Every region has a temple architectural tradition. Similarly, Tamil Nadu also has such a tradition. 80% of the inscriptions available in India are found in Tamilnadu temples. The temples in Tamil Nadu are unique. They show the peak of Tamil architectural development. In Tamilnadu temples there was a technique of building a gap between the inner wall and the outer wall. Tower casket. It is a symbol of Tamil's high character. Perhaps if the town is affected by a natural disaster, the kalas also protects like the temple shelters. Temples are spiritual and scientific treasures left to us by our forefathers.

ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு கோவில் கட்டடக் கலை மரபு உண்டு. அதேபோல தமிழகத்திற்கும் இதுபோன்ற மரபு உண்டு. இந்தியாவில் கிடைக்கும் 80% கல்வெட்டுகள் தமிழகக் கோயில்களில்தான் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டிலுள்ள பெருங்கோயில்கள் தனித்துவம் மிக்கவை. தமிழர் கட்டடக் கலை வளர்ச்சியின் உச்சத்தைக் காட்டுபவை. தமிழகக் கோயில்களில் அகச்சுவருக்கும் புறச்சுவருக்கும் இடையே இடைவெளி விட்டுக் கட்டும் தொழில்நுட்பம் இருந்தது. கோபுரக் கலசம். தமிழனின் உயரிய குணத்தின் அடையாளம். ஒருவேளை ஊர் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கபட்டால் கோயில் தங்குமிடமாவதைப்போல் கலசமும் காக்கும். கோயில்கள் நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற ஆன்மீக மற்றும் அறிவியல் பொக்கிஷங்கள்.

நூலறி புலவர் நுண்ணிதில் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து[1] என நெடுநல்வாடையில் கோவில் குறித்துக் குறிப்பிடப்படுகிறது.

கட்டடக் கலை

நமது பழங்காலக் கோயில்கள் மிகுந்த நுண்ணுணர்வுடன், நீண்ட காலம் நிலைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கட்டப்பட்டவை. கோயில் கட்டடக் கலைகளில் நாகரம், வேசரம், திராவிடம் என மூவகை உண்டு. இந்தியக் கோயில்களில் தமிழ்நாட்டுக் கோயில்களை வேறுபடுத்திக் காட்டுபவைகளில் மிகவும் முக்கியமானவை அவற்றின் கோபுரங்கள். தமிழ்நாட்டில் திருவரங்கம், மீனாட்சியம்மன் கோயில் உள்ளிட்ட பல கோயில்களில் கோபுரங்கள் உண்டு. இருக்கும் கோபுரத்திலேயே பெரிய கோபுரம் ராஜகோபுரம் என்று அழைக்கப்படுகிறது.

அழகர் மலை

குலசேகர பாண்டியனின் மகனான மலையத்துவசப் பாண்டியனே இவ்வாலயத்தைக் கட்டினார். உற்சவ மூர்த்தி உலகிலேயே பழமையான அபரஞ்சி தங்கத்தால் ஆனது. மலையத்துவசப் பாண்டியனே இக்கோயிலுக்குத் திருப்பணி செய்து அழகர் மலையைக் கட்டிக்காத்தான். கருவரையின் மேல் வளைவான வடிவில் விமானம் உள்ள ஆலயம் இது.

கற்றளி

தமிழர் கட்டடக்கலையில் கற்றளி என்பது நிலத்திலிருந்து துருத்திக்கொண்டிருக்கும் பாறை அல்லது குன்றுப் பகுதியை வெளிப்புறமாக மேலிருந்து கீழாகக் குடைந்து அமைக்கப்படும் கோயில் அமைப்பு ஆகும். பின்னர், ஏழாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் கற்கள் கொண்டு கட்டுமான கோயில்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் முக்கியமானது மாமல்லபுரக் கடற்கரைக் கோயில் ஆகும். யுனெஸ்கோ அமைப்பால் புராதன சின்னமாக அது அறிவிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 45 அடி உயரத்தில் கட்டுமான கோவில்களுக்கும், தமிழர் கட்டுமான நுட்பத்திற்கும் எடுத்துக்காட்டாக இன்றும் அது போன்ற கோவில்கள் உள்ளன.

சிதம்பரம் கோயில்:

பிரமாண்டமான கோயில் அமைப்பில் ஒன்பது நுழைவாயில்கள் உள்ளன. அவற்றில் நான்கு *கோபுரங்கள்* அல்லது கோபுரங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அவை மிகவும் நேர்த்தியான மற்றும் சிக்கலான சிற்ப வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. கோவிலில் ஐந்து விரிவான மண்டபங்கள் உள்ளன, அதில் ராஜ சபை அல்லது 1000 தூண்கள் கொண்ட மண்டபம் கோவிலின் மிக அற்புதமான அம்சங்களில் ஒன்றாகும். தமிழில், *கோபுர தரிசனம் கோடி புண்யம்* என்று ஒரு பிரபலமான பழமொழி உள்ளது. இது

நிச்சயமாக ஒரு கட்டடக்கலை அற்புதம்!

நவபாஷாணம் கோவில், தேவிபட்டினம்

தமிழ்நாட்டிலுள்ள நவக்கிரகக் கோயில்கள் ஒன்பது கோயில்களின் தொகுப்பாகும். அவை ஒவ்வொன்றும் ஒன்பது கிரக தெய்வங்களில் ஒன்றிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இந்தப் புகழ்பெற்ற நவக்கிரகக் கோயில்களில் ஒன்று தமிழ்நாட்டின் தேவிபட்டினத்தில் அமைந்துள்ள நவபாஷாணம் கோயிலாகும். இக்கோவிலின் முக்கியத்துவம், பக்தர்கள் ஒன்பது கிரக தெய்வங்களையும் ஒரே நேரத்தில் வழிபடலாம் என்ற உண்மையை மையமாகக் கொண்டுள்ளது. இராமேசுவரத்திலுள்ள இராமநாதசுவாமி கோயில் மற்றும் திருப்புல்லாணியில் உள்ள ஆதி ஜகன்னாத பெருமாள் கோயிலுடன் இது ஒரு பிரபலமான இந்து யாத்திரை தலமாகவும் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள இந்த நவக்கிரகக் கோவிலில் உள்ள கிரக தெய்வங்களின் சன்னதிகள் விஷ்ணுவின் அவதாரமான இராமரால் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது.

முடிவுரை

தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு என்று தமிழரை அடையாளப்படுத்தினார் நாமக்கல் கவிஞர். வேறு எந்த இனத்திற்கும் மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கும் தமிழருக்கும் உண்டு.

பல்லவர் காலத்தில் தொடங்கிய கோவில் கலை இப்படியாக நாயக்கர் காலத்தில் ஒரு தேக்கத்தை வந்தடைந்தது. தமிழ்நாட்டில் கோயில்கள் என்பவை வெறும் வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல; அவை அந்தந்தப்பகுதிகளின் கலைக்கூடங்கள். பண்பாட்டுச் சின்னங்கள். தமிழகக்கோயில்களில் அகச்சுவருக்கும் புறச்சுவருக்கும் இடையே இடைவெளி விட்டுக் கட்டும் தொழில்நுட்பம் இருந்தது.

பார்வை

1. சங்க காலத் தமிழர் பண்பாடு - நுணாவிலூர் கா. விசயரத்தினம் மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

2. தமிழர் கட்டடக்கலை - தெய்வநாயகம் கோ. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

(95ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறும் இதயாவிடம்,

கணவன் திட்டினான் - நான் மறுமொழி பேசவில்லை. உண்மைதான். குஷ்டரோகிதானே திட்டுகிறான் என்று அலட்சியப்படுத்தினேன். நானும் அவனுடன் பேசினால் பேச்சு வளரும். அந்த வாதத்தின் காரணமாக அவனோடு நெருங்கி நின்று வார்த்தையாடவேண்டும். அதற்காகத்தானடி, அந்தக் குட்டம் பிடித்தவன் குரைத்துக் கொண்டிருக்கட்டும் என்று விட்டுவிட்டேன்[2]

என நளாயினி முற்போக்குச் சிந்தனையை வெளிப்படுத்துவதைக் காணமுடிகின்றது. இங்கு, இந்தியச் சமூக அமைப்பின் ஒரு அங்கமான இல்லற வாழ்வு எப்படிப் போலியாகக் கட்டமைக்கப்பட்டிருந்தது என்பதையும் அவ்வமைப்பு எவ்வாறு உடைபடுகின்றது என்பதையும் கலைஞர் அவர்கள் நுட்பமாக எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. மாறாக, நளாயினி கதையைப் போன்று ஆதிக்கம் செலுத்தும் புராண, இதிகாசக் கதைகளைக் கண்டறிந்து அவற்றையும் அவற்றால் உருவாகியுள்ள மரபையும் உடைத்தெறியவேண்டும் என்ற விழிப்புணர்வைக் கலைஞரின் இக்கதை ஏற்படுத்துகின்றது.

நிறைவாக

‘நளாயினி’ கதையைப் போன்று ஒவ்வொரு மகாபாரதக் கதையும் இந்தியச் சமூக அமைப்பில் இன்றும் அதிகாரம் செலுத்தி வருகின்றது. அவ்வாறு அதிகாரம் செலுத்தி வரும் வடிவங்களைக் கண்டறிந்து அவற்றின் மூலநோக்கத்தைத் தோலுரித்துக் காட்டும் பணியில் குறிப்பிடத்தக்க வெற்றியைக் கலைஞர் அவர்கள் அண்ணாவின் வழிநின்று பெற்றிருப்பதற்கு ‘நளாயினி’ கதை ஒரு சான்றாகும். மாறாக, சமூக நீதியில் அக்கறை கொண்டவர்களுக்கான இலக்கியப் பார்வை எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதையும் இக்கதை வெளிப்படுத்தியுள்ளமை கவனிக்கத்தக்கது.

அடிக்குறிப்புகள்

1. 16 கதையினிலே, கலைஞர் மு.கருணாநிதி, ப.86
2. மேலது, ப.93.

துணைநூற்பட்டியல்

கலைஞர் மு.கருணாநிதி, 16 கதையினிலே, திருமகள் நிலையம், சென்னை, 2009.

Love looks not with the eyes, but with the mind; and therefore is winged Cupid painted blind.

- William Shakespeare in *A Midsummer Night’s Dream*

ISSN 2320-4842

பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்

ப. பிரபு

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்) (Ref.No.14125/Ph.D.K8/Tamil/P.T./October 2017/ Confirm./Dt:06.02.2020)

முனைவர் இரா. ஜெய்சங்கர்

உதவிப் பேராசிரியர் – ஆய்வு நெறியாளர்

தமிழியல் துறை (CDOE), பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி (Affiliated to Bharathidasan University)

ஆய்வுச்சுருக்கம்

கி.பி. 12ஆம் நூற்றாண்டு சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரியபுராணத்தில் இடம்பெறும் தனியடியார்கள் எனப்படும் 63 நாயன்மார் சிறப்புக்களும் தொகையடியார்கள் ஒன்பதின்மர் சிறப்புக்களும் இன்றும் பேசப்பட்டுவருகின்றன. மேற்படி தனியடியார்களில் 1. அப்பூதியடிகள், 2. தண்டியடிகள் ஆகிய இரண்டு சிவனடியார்களின் அறச் சிந்தனைகள் பற்றி இவ்வாய்வுக் கட்டுரை எடுத்தியம்புகிறது.

கருவிச்சொற்கள் Keywords: அப்பூதியடிகள், சைவம், தண்டியடிகள். நாயனார்-தனியடியார், பெரியபுராணம்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

மனிதநேயமே மனிதனின் முதன்மைப் பண்பாகும். சக மனிதரிடம் மட்டுமன்றி எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டிப் பரிவோடும் இணக்கமாகவும் நடந்துகொள்ளும் தன்மைதான் நற்குணம் என்று போற்றப்படும். அறம் செய்தலைவிட ஒருவனுக்கு மேலான வாழ்வு, நன்மை, செல்வம், சிறப்பு, இன்பம் எதுவுமே இல்லை. அறம் செய்யாது விடுவானேயானால் அதனினும் மேலான கேடும் வேறு இல்லை. இதனைத் திருவள்ளுவர்,

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.*(குறள்.32)** என்று சமூகத்திற்கு வலியுறுத்துகிறார். இக்குறளுக்கு உரையெழுதும் சு. சிவகாமசுந்தரி, ***எல்லாமே நன்மையாக அமையும் என்று கூறுகின்ற அதே போழ்தில், அந்த நன்மையை அடைய முயற்சிக்காமல், கைகட்டி, வாய் புதைத்துச் சோம்பி இருப்பானேயானால், அதுவே அவனுக்கு அழிவாகவும் மாறி விடும் (ப.27) என்ற உண்மையையும் எடுத்துக்காட்டித் திருவள்ளுவர் எச்சரிக்கிறார் எனக் குறிப்பிடுகின்றார். இது அறவழியிலே நடக்கின்ற மனிதனுக்கு இம்மையிலே அவன் விரும்புகின்ற அனைத்தும் கிடைக்கும். மனிதனுடைய இன்றியமையாத் தேவைகள் நிறைவுசெய்யப்படாமல், அவன் படுகின்ற எண்ணிலாத் தொல்லை களினின்றும் விடுதலை கிடைக்கும். இன்று மானுட சமூகம் வாழ்ந்துகொண்டிருப்பதற்குக் காரணம் திருவள்ளு வர், நாயன்மார்கள், வள்ளலார் முதலிய சான்றோர்களே எனலாம். திருத்தொண்டர் எண்ணிக்கை என்பது ***திருநீலகண்டக் குயவனார் முதல் திருநீலகண்டத்துப் பாணனார் ஈறாக அடியார் அறுபதின்மர் சுந்தரரால் போற்றப் படுகின்றனர். திருத்தொண்டத் தொகையில் இறுதிப் பாடலாகிய பதினோராம் பாடலில் தன்னையும் தம் தந்தை சடைய னார், தாய் இசைஞானியார் இம்மூவரையும் எண்ணித் தனியடியார் அறுபத்து மூவர்*** (பாலசுப்பிரமணியம் & பத்மநாபன், ப.195) எனக் கூறப்படுகின்றது. சிவனடியார்கள் பலருள் சமுதாயத்திற்குத் தம் காலத்து செய்த தொண்டுகளில் அறப்பணிகள் இன்றைய காலகட்டத்தில் விழுமியங்களாக நிற்கின்றன என்பதை கண்டறி வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

பெரியபுராணம்

இந்நூல் இரண்டு காண்டங்களில் 13 சருக்கங்களைக் கொண்டமைந்துள்ளது. இது இடைக்காலத்துத் தமிழ் மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் விளக்கும் பக்தி கலந்த வரலாற்றுக் காப்பியம்; இறையடியார் களுக்குச் சாதியில்லை எனப் பாடிய புரட்சிக் காப்பியம்; சைவத் திருத்தொணடர்களின் வரலாற்றைக் கூறும் நூல். 63 நாயன்மார்களின் பெருமையை எடுத்தோதும் இக்காப்பியத்தைச் சேக்கிழார் *திருத்தொண்டர் புரா ணம்* என்றழைத்தார். இவர் குலோத்துங்க சோழ மன்னனிடம் அமைச்சராக இருந்ததன் காரணம் *உத்தம சோழப் பல்லவன்* எனவும் பெரியபுராணம் பாடிய அருள்தன்மையால் *தொண்டர் சீர்பரவுவார்* எனவும் அழைக்கப்படுகிறார். சேக்கிழார் ஊர் தொண்டை நாட்டுக் குன்றத்தூர். காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு. இயற்பெயர் அருண்மொழித் தேவர். ஆனால் கல்வெட்டு இவரை *இராமதேவர்* எனக் குறிப்பிடுகின்றது (ஆனந்தன், ப.164). இடைக்காலத்தில் பெரும்பான்மையான தமிழ்க் காப்பியங்கள் மொழிபெயர்ப்பாக இருந்த நிலையில் இக்காப்பியக்கரு தமிழிலேயே அமைந்தமை சிறப்பிற்குரியது. சேக்கிழார் தம் நூலை

'மாக்கதை' என்றழைத்தார். மா என்றால் பெரிய, கதை எனின் புராணம் எனவே அவர் பயன்படுத்திய சொற்றொடரால் 'பெரியபுராணம்' எனக் கூறப்படுகிறது. பெரியபுராணம் சைவ உலகிற்குக் கிடைத்த தனிவிளக்கு என்று மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தம் சேக்கிழார் பிள்ளைத்தமிழில் ***பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ*** என்று சேக்கிழாரைப் பாராட்டிய திறம் போற்றுதலுக்குரியது எனச் சு. ஆனந்தன் எடுத்துக்காட்டுகிறார் (ப.165). காதலும் பக்தியும்போல் இயற்கை வருணனையிலும் சேக்கிழார் மக்கள் உள்ளம் கவர்கின்றார். நன்செய் நிலம் கண்முன் வருமாறு தம் *திருநாட்டுப் படலத்*தில் பின்வரும் பாடலில் சோழநாட்டு நீர்வளத்தைக் காட்சிப்படுத்துகிறார் சேக்கிழார்.

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடவன்னம் குளமெல்லாம் கடலன்னம்
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம் (67)

என்பது அப்பாடல். நீர்நிலையின் கரையில் ங்கும் இளைய அன்னங்கள் உலவும். குளங்கள் எல்லாம் கடலைப் போன்ற பரப்பை உடையன. எந்த நாடும் எந்த நலத்தாலும் சோழ நாட்டுக்கு நிகராகாது என்பது இப்பாடலின் உட்கருத்து.

நாயனார் - தனியடியார்

63 நாயன்மார்களும் சுந்தரர் காலத்திற்குப் பின் தோன்றி நிலைபெற்றுள்ள அடியார்களை நாயனார் என அழைப்பது மரபு. நாயன்=*தலைவன்.* ***நாயனனை அடியான் ஏவும் காரியம் நன்று*** என இச்சொல்லை இப்பொருளில் வழங்கியுள்ளார் சேக்கிழார் (ஆனந்தன், ப.185). நாயன் என்னும் சொல் உயர்திணை ஆர் விகுதியைப் பெற்று நாயனார் என வழங்கியது. இச்சொல் சிவபெருமானைக் குறித்து வழங்கிய சிறப்பு உடையது. நாயன்மார்கள்/நாயனார்கள் என்பதற்குச் சைவ சித்தாந்த அகராதி ***சிவத்தொண்டர்கள் அதிபத்த நாயனார் முதல் விறல்மிண்ட நாயனார் வரை 63 பேர் இருண்ட காலத்தில் பக்திநெறி பரப்பியவர்கள்*** (ப.167) என்று விளக்குகின்றது.

சைவம்

தோற்றமும் முடிவும் இல்லாத, பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவன்பாலும் சிவனடியார் பாலும் அன்பு கொண்டு, தொண்டு செய்வதொன்றையே அளவுகோலாகக் கொண்டு ஒழுகுபவர் எவரேயாயினும் அவரைப் போற்றிப் பணிந்தனர். *இவர், இன்னவர்* எனப் பிறப்பினால் இனம் பிரித்துப் பாராது அனைவரையும் சமமாகக் கருதும் பேருள்ளம் கொண்டது சைவம் (சடையப்பன், ப.13) எனச் சைவ சமயம் போற்றப்படுகின்றது.

அதிவீரராமபாண்டியர் ***பெருமையும் சிறுமையுந் தாந்தர வருமே*** (சூ.30) என்று குறிப்பிடுகின்றார். இதற்கு உரையெழுதும் ந.மு.வேங்கடசாமி நாட்டார் ***மேன்மையும் கீழ்மையும் தான் செய்யுஞ் செய்கையாலே உண்டாகும் (பிறரால் உண்டாவதில்லை) என்றெழுதுகின்றார்*** (ப.119). இக்கருத்து சிவத்தொண்டு புரிந்த அடியார்களுக்குப் பொருந்துவதாகக் கொள்ளலாம்.

அப்பூதியடிகள்

இவர் சோழ நாட்டில் திங்களூரில் அந்தணர் மரபில் தோன்றினார். அப்பூதியடிகள் *திங்களூர் அப்பூதியார்* என்றழைக்கப்படுகிறார்.திருநாவுக்கரசரை நேரில் கண்டிராவிடினும், அவரின் தொண்டின் திறம், சிவனார், அவருக்கு அருளிய திறம், அவரைக் காணாமலேயே அவர்மீது பேரன்பு கொண்டவர். இதன் பொருட்டுத் தன் உள்ளத்து உறுதிகொண்டு, தம்மனையிலுள்ள அனைத்து அளவுக் கருவிகளுக்கும், தம் மைந்தர்களுக்கும். ஆக்கள், எருமைகள் முதலானவற்றிற்கும் திருநாவுக்கரசர் என்னும் பெயர் வைத்தே அழைத்து வந்தார். இதனைப் பின்வரும் பாடலில் சேக்கிழார் பெருமான்,

அப்பதி அடிக ளார்தம் அடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி அணிந்தார் தம்மை விரும்பு சொன் மாலைவேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோர் எல்லையில் அன்பால் என்றுஞ்
செப்பு ஊதி யங்கைக் கொண்டார் திருநாவுக் கரசர் பாதம் (பா.1825) என்று பாடுகின்றார். இது நாவுக்கரசரின் திருவடிகளே பொருள் என்று கொண்டு, எல்லையற்ற அன்பினால் எப்போதும் எந்நாளும் கூறித் துதிக்கின்ற ஊதியத்தைக் கையில் பெற்றுத் திகழ்ந்தவர் அப்பூதியடிகள். இவர் தம் மனையில் உள்ள பொருள்களுக்குத் 'திருநாவுக்கரசர்' பெயர் சூட்டி அழைத்துச் சிவ நெறியில் நின்றதனைக்,

களவுபொய் காமம்கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப்பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
உளவெலாம் அரசின் நாமஞ் சாற்றும்அவ் வொழுக்க லாற்றார் (பா.1784) என்று சேக்கிழார் பெருமான் பாடுகின்றார். அப்பூதியடிகள் தம்காலத்துச் செய்த அறப்பணிகள், தற்காலத்தில் கருணை உள்ளம் படைத்தவர்கள்,கோயில் திருவிழாக்கள், தேரோட்ட நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்துகொள்ளும் பொதுமக்கள் தம் பசிப்பிணி போக்கவும்; தாகம் தீர்க்கவும்; திருமடம் அமைத்தல், அன்னதானம் மற்றும் தண்ணீர் வழங்குதல் போன்றவை காணமுடிகின்றன. இது சிவனடியார் (அப்பூதியடிகள்) செய்துகாட்டிய செயலின் விழுமியங்களாக நிலைநிற்கின்றன எனலாம்.

தண்டியடிகள்

இவர் சோழநாட்டில் திருவாரூரில் பிறந்தார். கண் பார்வையைப் பிறப்பிலேயே இழந்தவர். சிவனைச் செவ்வனே நேர்கண்டு வணங்கும் அரிய பெரிய வாய்ப்பு இல்லையே என்னும் குறையை, தம் அகக் கண்ணால் கண்டு வணங்கிப் போக்கினவர். ஆரூர்க்

கோவில் தேவாசிரிய மண்டபத்தின் முன்னின்று, நமசிவாய என்னும் ஐந்தெழுத்து நாளும் ஓதி வழி பட்டுவந்தவர். இவரைக் ***கண்ணொளி இல்லா அடியார், கண்ணுதலான் தாள் படிவார்*** (சடையப்பன், ப.207) என்றழைப்பர். எட்டுத் திசைகளிலும் விரிந்து பரந்த புகழையுடைய திருவாரூரிலே சமணர்களின் கீழான செயல்களான கலகம் விளைத்தலைச் செய்த உலகில் விளங்கிய வன்மையுடைய தண்டியடிகளின் *அடிமைத் திறம்* பற்றிக் காணலாம். அடிமை = தொண்டு செய் யும் நிலை (மூர்த்தி, ப.8).

திருவாரூக் கோவிலின் குடக்கே (மேற்குப் பக்கம்) கமலாலயம் அமைந்துள்ளது. இதன் பரப்பு ஐந்து வேலி. இக்குளத்தின் கரைகளில் பாழிகளையும் சம ணப் பள்ளிகளையும் அமைத்தனர் சமணர். இதனால் இக்குளத்தின் அளவு குறுகிப் போயிற்று. அமணரின் அடாச் செயல்கண்ட தண்டியடிகள் சினம் கொண்டு ஆரூரானின் கோவில் சென்று, ***பெருமானே! அமணர் அடாச் செயல் செய்ததோடு என் மானத்துக்கும் ஈனமும் செய்தனர். இதற்குத் தக்க தீர்வு தந்தருள்வீர்!*** (சடையப் பன், ப.209) எனப் பணிந்து வேண்டினார் என்ப தைச் சேக்கிழார் எழுசீர்க் கழிநெடிலடிப் பாடலில்

செங்கண் விடையார் திருக்கோயிற் குடபால் தீர்த்தக் குளத்தின் பாங்கு
எங்கும் அமணர் பாழிகளாய் இடத்தாற் குறைபா டெய்துதலால்
அங்கந் நிலைமை தனைத்தண்டி யடிகள் அறிந்தே ஆதரவால்
இங்கு நான்இக் குளம்பெருகக் கல்ல வேண்டும் என்றெழுந்தார் **(3595)** என்று பாடுகின்றார். கமலால யம் என்ற குளம் அமணர்களின் பாழிகளாய் ஆக் கித் தூர்க்கப்பட்டு இடத்தினால் குறைபாடு உண்டா யிற்று. இந்நிலைமையைத் தண்டியடிகள் அறிந்து, ***அன்பினால் நான் இந்தக் குளத்தை அகலமாய்ப் பெரு கும்படி தோண்டிட வேண்டும்*** (மாணிக்கம், தொ. 23, ப.321) எனத் தன் உள்ளத் துணிவுடன் மேற்கொண் டார். தண்டியடிகள் மேற்கொண்ட பணியினை அறு சீர்க்கழிநெடிலடியில்

குழிவாயதனிற் குறிநட்டுக் கட்டுங் கயிறு குளக்குலையின்
இழிவாய்ப் புறத்து நடுத்தறியோ டிசையக் கட்டி இடைதடவி
வழியால் வந்து மண்கல்லி எடுத்து மறித்துந் தடவிப்போய்
ஒழியா முயற்சி யாலுய்த்தார் ஓதும் எழுத்தஞ் சுடனுய்ப்பார் **(பா.3596)** எனப் பாடுகின்றார் சேக் கிழார். இப்பாடலுக்கு உரையாசிரியர் அ. மாணிக் கம், ***குளத்தில் தோண்டும் குழியின் ஓரத்தில் குறியான கோல் நட்டு, அதில் கட்டிய கயிற்றைக் குளத்தின் கரை யின்மீது தாழ்ந்த உயரத்தில் நட்ட தறியுடன் பொருந்தும் படி கட்டி, இடையில் அந்தக் கயிற்றைத் தொட்டுத் தடவிக் கொண்டு அவ்வழியால் வழிதவறாது இறங்கிவந்து, மண் ணைத் தோண்டி எடுத்துப் பின்னும் முன் தடவிய அந்த வழியிலே மேலே சென்று இப்படி இடைவிடாத முயற்சி யினால் மண்ணை மேலே கொட்டினார்*** (ப.321) என் றெழுதுகின்றார். இச்செயலினை நிறைவேற விடாது அடாவடி செய்த அமணர் நிலையினை ***நான் செய்து வந்த பணியை இன்று செய்ய முடியவில்லையே என்று அழுதுபுலம்பினார்.*** அன்றிரவு அவர் கனவில் தோன் றியசிவன், ***அன்பனே, உனக்குள்ள மனக்கவலை விடுக! உன் கண்கள், நாளை, பார்வை பெறும்! அமணர் கண் கள் பார்வை அறும்! அஞ்சேல்! காண்பாய்! என்று கூறினான்*** (சடையப்பன், ப.209). இதனை,

ஏய்ந்த அடிமை சிவனுக்கியான் என்னில் இன்றென் கண்பெற்று
வேந்தன் எதிரே திருவாரூர் விரவுஞ் சமணர் கண்ணிழப்பார்
ஆய்ந்த பொருளுஞ் சிவபதமே ஆவதென்றே அஞ்செழுத்தை
வாய்ந்த தொண்டர் எடுத்தோதி மணிநீர் வாவி மூழ்கினார் **(3610)** என்று பாடுகிறார். சிவபெருமா னுக்கு நான் பொருந்திய அடியவனாகில், இன்று இம் மன்னன் எதிரில் நான் எனது கண்களைப் பெற, திருவாரூர் விரவும் சமணர்கள் தம் கண்களை இழப் பர்; இது ஆய்ந்து துணிந்த முடிவான பொருளும் சிவபதமேயாகும்! சூள் சொல்லித் திருவைந்தெழுத்து தண்டியடிகள் ஓதி அழகிய நீல் நிலையினுள்ளே முழுகினார். இறைவன் அருளைத் தொழுது மேலே எழுந்த அடியார் (தண்டி) தம் தூய்மையான மலர் போன்ற கண்களில் ஒளி பெற்றெழுந்தார். (5 ஆம் பாகம், பா.3611). ***அமணர் விழித்திருந்தும் தம் கண் களை இழந்து தடுமாறுவதைக் கண்டு தீமை செய்த சமண சமயம் கெட்டது*** (மாணிக்கம், ப.329) என்று மன்னன் அனபாயன் சொல்லுகின்றான். இதிலிருந்து சிவனின் அருள் திறம் வெளிப்படுகிறது.

செய்யும் செயலின் கருத்தாக இருப்பவரின் இயல்பு பற்றி நீதிநெறி விளக்கம், ***தாம் செய்யத் தொடங்கிய செயலை முடிப்பதிலேயே கருத்தாக இருப்பவர், செயல் படும்போது தம் உடலுக்கு உண்டாகும் வருத்தத்தைக் கவனிக்க மாட்டார். பசியையும் பார்க்க மாட்டார், இடை இடாத எண்ணத்தினால் தூங்கவும் மாட்டார். மற்றவர் செய்யும் இடையூறுகளையும் பொருட்படுத்த மாட்டார். காலத்தின் அருமையையும் பார்க்க மாட்டார். பிறர் செய்யும் அவமதிப்பையும் பொருட்படுத்த மாட்டார்*** (தமிழ்ப்பிரியன், பா.53 உரை, ப.56) என்று விளக் கம் தருகின்றது. இவ்விளக்கம் மேற்படி இரண்டு சிவ அடியார்களின் செயல்களைப் போற்றுவதாகவும் வழிநின்றதாகவும் அறியமுடிகிறது.

முடிவுரை

சிவன் ஐந்தெழுத்தால் போற்றப்படுவதும்; நிலம் ஐந் தனுக்கும் தெய்வம் என்பதும்; நீர் தாங்கும் தலைவன், பார் தாங்கும் தலைவன் என்பதும் பெறப்படுகிறது. அப்பூதியடியும் தண்டியடியும் பூவுலகில் தோன்றிப் பணிந்தும், அறப் பணிகள் செய்தும், பேறும், சீரும் பெற்று பெருவாழ்வு எய்தியுள்ளனர். சிவனடி மேவி னால், பிறவாப் பெருவாழ்வு பெறலாம் என்பதைத் தெளியமுடிகிறது.

தொடர்ச்சி: பக். 119

ISSN 2320-4842

திரிகடுகம் வலியுறுத்தும் புணை நெறி

இரா. ஹேமலதா
முனைவர் பட்ட ஆய்வாளர்
(Ref.No:47437/Ph.D.K8/Tamil/FT/Change of Guide/January 2013/Dt: 14.06.2024)
நெறியாளர்: **முனைவர் ம. இளையராஜா**
இணைப்பேராசிரியர் – தலைவர், தமிழாய்வுத் துறை, அரசுக் கலைக் கல்லூரி,
அரியலூர் 621 713 (Affiliated to Bharathidasan University)

ஆய்வுச்சுருக்கம்

பதினெண் கீழ்க்கணக்குள் அற இலக்கியங்கள் 11 ஆகும். இல்லறம், துறவறம் என்ற இரண்டையும் வெவ்வேறு முறையில் இவை வெளிப்படுத்துகின்றன. இவை இரண்டும் தமிழ் அறநூல்களின் இலக்கியக் கொள்கைகள், கோட் பாடுகளில் அடங்குமாறும் காணப்படுகின்றன. கோட்பாடு = கொள்ளப்படுதல், கொள்கை.

கருவிச்சொற்கள் (Keywords): அருந்ததி, இறவா புகழடம்பு, குடும்பம், கெடுதி தவிர்த்தல், திரிகடுகம், தெப்பம் கைவிட்டவர், பேதைமை, வாழ்வியல்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

கி.பி.100 முதல் கி.பி.500 வரை நீண்ட இந்தக் காலத்தில் எழுந்த இலக்கியங்கள் நீதி நெறிகளை வலியுறுத்தி எழுந்தவை (சிற்பி பாலசுப்பிரமணியன் & நீல பத்மனாபன், ப.333) என்பர். இவை குறைந்த அடிவரையறை கொண்ட செய்யுட்களால் எழுதப்பட்டன. இந்தக் காலமே கீழ்க்கணக்கு காலம் அல்லது அறநெறிக் காலம் எனப்படுகிறது. இக்காலத்தில் எழுந்தவற்றுள் ஒன்று திரிகடுகம். ஆய்வுக் கட்டுரையில் ***வரையறை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்*** (பொற்கோ 81) என்ற கோட்பாட்டினை ஆய்வாளர் தம் கருத்தில் கொண்டு திரி கடுகத்தின் 5 பாடல்கள் மட்டும் தேர்ந்து எடுத்துக்கொண்டு அதில் வலியுறுத்தப்படும் புணை நெறி (righteous conduct) பற்றிய செய்திகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள. புணை - ஆள் பொறுப்பு, உதவி, ஈடு, ஒப்பு, தெப்பம், மரக்கலம், மூங்கில், விலங்கு (ப.780) எனும் பொருள்களையும் நெறி - ஆளுகை, ஒழுக்கம், கண் மண்டைக்குழி, கோயில், குலம், குதிரை முதலியவற்றின் நடை, சமயம், சுருள், செய்யுள் நடை, தாழ்ப்பாள், வழி, வழிவகை, விதி, வீடுபேறு (ப.690) எனும் பொருள்களையும் *தமிழ்-தமிழ் அகரமுதலி* தருகிறது.

திரிகடுகம் - நூலமைப்பும் பொருண்மையும்

இந்நூல் கடவுள் வாழ்த்து உட்பட101 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலின் மூன்றாம் அடியிலும் இம்மூன்றும் அல்லது இம்மூவர் எனும் சொல்லாட்சி இடம்பெறுகின்றது. இதில் மனித உடலுக்கு மருந்தாகும் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றையும் திரித்துப் பொடி செய்து கடுகுபோல் அமைந்த மருந்துப் பொருளுக்குத் திரிகடுகம் என்று பெயர். இந்தத் திரிகடுகம் உடலுக்கு மருந்தாவதுபோல் உயிருக்கு உறுதி நல்கும் மூவகைக் கருத்துக்களையும் மூவகை நபர்களையும் ஒவ்வொரு பாடலிலும் எடுத்துரைக்கின் றன. மூவகைக் கருத்துக்கள் அமைந்த பாடல்கள் காப்பு உள்பட 67, மூவகை நபர்கள் பற்றிய பாடல்கள் 34, ஆக 101 வெண்பாக்கள் அமைந்துள்ளன. இவற்றில் யார்யார் என்னென்ன செய்ய வேண்டும் செய்யக் கூடாது என்பது மானிட வாழ்வில் மனிதர்கள் நெறிகளைப் (ஒழுக்கம்) பின்பற்றி வாழவேண்டும் என வலி யுறுத்தப்பட்டுள்ளன. இந்நூலின் சருக்கமான வரலாறு பல நூல்களிலும் நூலாசிரியர்களால் குறிப்பிடப்பட்டுள் ளது. இதனை *அபிதான சிந்தாமணி,* ***திரிகடுகம் சங்கம் மருவிய நீதி நூலாகும். இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இது நல்லாதனாரால் இயற்றப்பட்டது. மும்மூன்று பொருளை விளக்கும் வெண்பாக்கள் இதன்கண் அமைந்துள்ளன*** (சிங்காரவேலு முதலியார், பக்.997-998) என்று விளக்குகிறது.

வாழ்வியல்

வாழ்வியல் = வாழ்வின் இலக்கணம். வாழ்வியலை விளக்குவதற்கு முன்னர் இருத்தல், வாழ்தல் என்ற சொற் களின் பொருளை விளங்கிக்கொள்ள வேண்டும். **அவர் இருக்கிறார்** என்று கூறப்படும்பொழுது, யாருக்கும் பயனின்றி சும்மாவே இருந்துவருகிறார் என்பது பொருள். வாழ்வின் இலக்கணமாக மதிக்கப்பெறும் இந்நல் லியல்புகள் மனிதனை, தலையாய மனிதனாக உயர்த்தவல்லன. வாழ்வின் இலக்கணமே வாழ்வியல் எனப் படும். வாழ்வியல் கோட்பாடுகளை வரையறை செய்து வழங்கிய சான்றோர்களில் முதல் நிலையில் வைத்து எண்ணப் பெறுபவர்களில் தமிழகத்தில் திருவள்ளுவரும் (கி.மு.50-கி.பி.50), ஆசியப் பேரொளி எனப் போற்றப்பெறும் புத்தர்பிரானும் (கி.மு.6 ஆம் நூற்றாண்டு) ஆவர். ***கபிலவத்துவில் தோன்றிய புத்தர் பிரான்***

அரசமரபினர். அவர் காலத்துச் சமுதாயச் சீர்கேடுகளையும் மூடநம்பிக்கைகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் கடுமையாகச் சாடிய புரட்சியாளர். சமுதாயச் சமத்துவத்திற்கு முதன்முதல் குரல் கொடுத்தவர் (ப.156) என்று சோ.ந.கந்தசாமி குறிக்கிறார். இஃது சமதர்மச் சமுதாயம் அக்காலத்தே விளங்கினமையைப் புலப்படுத்துகிறது. தலைமக்கள் அன்பும் அறனும் மேற்கொண்டு வாழ்தலே இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும். பழிச்செயலுக்கு அஞ்சுதல், பகுத்துண்டு வாழ்தல், இவர்தம் இயல்பு. தமிழ் முன்னோர், இறை, விருந்தினர், உறவினர் என்னும் இவருடன் தன் குடும்பத்தார் என்ற ஐவரையும் பேணி ஒழுகுதல் தலையாய கடமையாகக் கொண்டு வாழ்ந்தனர்.

குடும்பம்

குடும்பம் எனும் நிறுவனமே ஒரு நாட்டின் அடிப்படை அலகாகும். கணவன், மனைவி, மக்கள் என்பவரால் உருப்பெறும் இது வலிமையும் மாண்பும் உடையதாய் அமையின், நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நலம் பயக்கும். எஞ்ஞான்றும் மனைவியிடம் இன்சொல் பகர்ந்து இனியனாய் நடத்தல், உண்மையுள்ளவனாக ஒழுகுதல், ஆளும் உரிமையினை முழுமையாக மனைவிக்கு வழங்குதல், கடமையாகும். கணவனிடம் என்றென்றும் நம்பிக்கைக்கு உரியவளாக (கற்பு) நடத்தல் (கோபால், ப.20), சுற்றத்தாரைப்பேணுதல், குடும்பப் பொருளாதாரத்தை வளர்த்தல், குடும்பக் கௌரவத்தினைக் காத்தல், சமுதாய நன்மதிப்பினைப் பெறுதல் முதலியவை ஆற்றவேண்டிய கடமைகளையும் புத்தர்பிரான் கூறியுள்ளார். ‘திரிகடுகம்’ எனும் அறநூல் இயற்றியவர் நல்லாதனார். மேற்படி கருத்தாக்கங்கள் பற்றி ஒருசில பாடல்களில் இவர்தம் நூலில் கையாண்டுள்ளார். அவை பற்றி இங்கு விளக்கப்படுகின்றது.

‘திரிகடுகத்’தில் மனித வாழ்வில் ஆண், பெண் இருபாலரும் கடைப்பிடிக்க வலியுறுத்தப்படும் பொருள்கள் பின்வரும் தலைப்புக்களாகப் பிரித்து அமைத்துக் கொள்ளல் தகும்.

1.இறவாப் புகழுடம்பு (16) (அறச்செயல்)

2.தெப்பம்கைவிட்டவர்(17) (கல்வி தவறவிட்டவர்)

3.கெடுதி தவிர்த்தல் (24) (கணிகைவாயின் சொல்)

4.பேதைமை (3) (கற்றறியாதார் செயல்)

5.அருந்ததி (மனையாள் கற்பு) (பா.1)

1. இறவாப் புகழுடம்பு

இறவா உடம்பு பெறுதற்கு மூன்று நெறிகளை வலியுறுத்துகின்றது பின்வரும் பாடல்.

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும் உண்ணுநீர்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
***சாவா உடம்பெய்தி னார்*(திரி.16)** என்பது அப்பாடல். அதாவது மண்ணின்மேல் சிறந்த புகழை நிறுத்தியவனும்; மாசில்லாச் சீர்மை உடைய கற்புடையாளை மனையாளாய்ப் பெற்றவனும்; உண்ணும் நீருக்குக் குறைவில்லாதவாறு கிணறுகள் தோண்டித் தந்தவனும் சாவா உடம்பு எய்துவர் என்று விளம்புகின்றது. கூவல் = உண்ணும்நீர்க் கிணறு. கிணறு உண்டாக்குபவர் இறந்தும் இறவாத புகழுடம்பைப் பெற்றவராவார் என்பது கருத்து. மேற்படி பாடல் மூன்று அறச்செயலைப் புரிந்தோர் இம்மண்ணில் வான்புகழ் எய்துவர் என்பதாகும்.

திருவள்ளுவர் ஆடவர் மனையாளோடு இல்லிருந்து வாழ்க்கை நடத்துவதற்கு *இல்வாழ்க்கை* அதிகாரத்தில் வலியுறுத்துவதுபோல் *வாழ்க்கைத் துணைநலம்* அதிகாரத்தில்,

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின் என்ற குறளில் (குறள். 54) கற்பின் வலிமையினை வலியுறுத்துகிறார். ***மனைவியிடம் கற்பு என்னும் கலங்கா நிலைமை ஏற்பட்டிருக்குமானால், பெண்மையினும் மேம்பட்டனவாய பொருள்கள் எவை உள்ளன?*** (ப.26) என்று உரையாசிரியர் கா.சுப்பிரமணியம் பிள்ளையின் உரை குறித்தற்பாலது. மனையாள் கற்பு நெறி போற்றப்படுகின்றது.

2. தெப்பம் கைவிட்டவர் (கல்வி தவறவிட்டவர்)

ஒருவர் தனக்கு மூப்பு வந்தபோதும், துறவறத்தை அடைதற்கு அஞ்சி நீங்கியபோதும், கற்புடைய தன் மனைவியைப் பூப்பெய்திய காலத்தே அடையாத கணவனும் (தமிழர் மரபு) கல்வியாகிய தெப்பத்தைக் கைக்கணின்றும் தவறவிட்டவராவார். இதனைப் பின்வரும் பாடல்

மூப்பின்க ணன்மைக் ககன்றானுங் கற்புடையாட்
பூப்பின்கட்சாராத் தலைமகனும் — வாய்ப்பகையுட்
சொல்வென்றி வேண்டு மிலிங்கியு மிம்மூவர்
***கல்விப் புணைகை விட்டார்* (திரி.17)** என்கிறது. துன்பத்தில் அழுந்தும் நிலையெய்துவர். இலிங்கி - துறவி, தவக்கோலந் தாங்கியவன் என்றும், தார்க்கிகன் என்றும் உரைத்தலுமாம், துன்பக் கடலினின்றும் கரையேறுதற்குப்புணையாகிய கல்வி இவர்கட்கு அப்பயன் விளைத்திலாமையின் கல்விப்புணை கைவிட்டார் என்பது கருத்து. இதனைத் தொல்காப்பியர் கற்பியலில் (நூ.46) சுட்டிக் காட்டுகிறார்.

பூப்பின் புறப்பா டீராறு நாளும்
நீத்தகன் றுறையா ரென்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான என்று பூப்பு = மாதவிடாய். பூத்தபின் மூன்றுநாள் சொற்கேட்கும் வழியுறைதலும், பன்னிருநாள் கூடியுறைதலும் வேண்டும் என்கிறார். இதற்கு உரையாசிரியர் இளம்பூரணர், ***பரத்தையர் சேரியானாயினும் பூத்தோன்றி மூன்று நாள் கழித்த பின்பு பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று என்றும்; இதனாற் பயன் என்னையெனின் அது***

கருத்தோன்றுங்காலம் (கௌமாரீஸ்வரி, ப.311) என உரையெழுதுகின்றார். இந்நூற்பாவிற்குக் கருத்துரை யெழுதும் தமிழண்ணல், ***தலைவி மாதப் பூப்படையும் காலத்திற்குப் பின்வரும் பன்னிரண்டு நாளும் தலைவன் அவளைப் பிரிந்து பரத்தையரை நாடிச் செல்ல மாட்டான். ஏனெனில் அது கருவுருவாகும் காலம் என்பது உட்பொருள்***(தமிழண்ணல், ப.385, தொல். மூலமும் கருத்துரையும்) என்கிறார். இஃது பண்டைய சமூகம் பின்பற்றிய நெறி எனக் கொள்ளல் தகும்.

3. கெடுதி தவிர்த்தல் (கணிகைவாயின் சொல்)

தம் நலம் விலை கொடுப்பார் யாவருக்கும் விற்பது அல்லது அதற்கு ஆவார் ஆகாதார் எனும் வரைவு இல்லாத பொதுமகளிர் இயல்பு பற்றி ***அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்*** (குறள். 911) என்று கூறும் பரிமேலழகர் ***ஒருவனை அன்பு பற்றி விழையாது பொருள் பற்றி விழையும் மகளிர்*** எனச் சுட்டிக் காட்டுகிறார். ***ஆழ்ச்சிப் படுக்கும் அளறு*** என்பது உயிர்களைத் தன்னுள்ளே (அறியாது இறங்கினாரை) அழுந்தப் பண்ணுகின்ற நரகம் ஆகும். காணுதற்குத் தக்க, மென்தோள்களையுடைய வேசையின் வாயிலிருந்து வரும் இனிய பேச்சு (மொழி), தூண்டிலினிடத்து மீனுக்கு இரையாக அதன் முள்ளை மறைத்து வைக்கப்பட்ட பொருள், மனவைரங் கொள்ளும் பகைவர்களின் வணக்கம் ஆகிய இம்மூன்றும் உயிர்களைத் தன்னுள்ளே அழுந்தப் பண்ணுகின்ற நரகம் போன்றதாகும். இதனை நல்லாதனார்,

காண்டகு மென்றோட் கணிகைவா யின்சொல்லும்
தூண்டிலி னுட்பொதிந்த தேரையும்-மாண்டசீர்க்
காழ்த்த பகைவர் வணக்கமு மிம்மூன்றும்
ஆழ்ச்சிப் படுக்கு மளறு **(திரி.24)** என்ற பாடலில் விளக்குகிறார். காழ்த்த பகைவர்=மனவைரங் கொண்டவர். அளறு=நரகம்.

4. பேதைமை மூன்று செயல்கள்

பேதைமை=அறிவின்மை, ஏழைமை (கழகத் தமிழ் அகராதி,ப.709). உலா எனும் சிற்றிலக்கிய வகையில் வழங்கப்படும் உயர் வழக்குச் சொல் *பேதை* என்பதற்கு ***எதையும் பகுத்தறிந்து பார்த்துச் செயல்படத் தெரியாத தன்மை உடைய நபர்; எதையும் நம்பிவிடும் நபர்*** (8.ப.1021) என்றும் ஆங்கிலத்தில் (person having no discernment; person who is naive) என்றும் 'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி' குறிப்பிடுகிறது. இஃது உணரச் செய்வதாவது பேதை என்னும் பெண்ணுக்கு 5 வயது முதல் 7 வயது வரை உள்ள இளம்பெண் எனத் தமிழ் உலகியலில் அறியப்படும். அதாவது எதையும் ஆராய்ந்து அறியும் திறனற்ற நிலை என்பது பொருள். ஆனால் திரிகடுகம் 3 ஆம் பாடல் தரும் கருத்துக்கள் மூடரோடு சேர்ந்திருப்பதும், கற்புடை மனைவியை அடித்தலும், கல்வி கற்றறியாதவரானஅறிவீனரை வீட்டுள் அழைத்துச் செல்லுதலும் கேட்டைத் தருவனவாகும் என்பதை,

கல்லார்க் கின்னா யொழுகலுங் காழ்கொண்ட
இல்லாளைக் கோலாற் புடைத்தலும் — இல்லஞ்
சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்
அறியா மையான்வருங் கேடு **(திரி. 3)** என்று நல்லாதனார் சுட்டிக் காட்டுகிறார். இதனை பொய்யாமொழிப் புலவர், பொருட்பாலில் *.குற்றங் கடிதல்* அதிகாரத்தில் ***காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட ஆறு குற்றங்கள் அரசன் தன்கண் நிகழவிடாமல்*** (பரிமேலழகர் உரை, ப.177) பாதுகாத்தல் வேண்டும் எனப் பரிமேலழகர் விளக்குகிறார். மதம்=செருக்கு, பெற்றதைப் பெரிதாக மதிப்பது.

5. அருந்ததி மூன்று செயல்கள்

ஒருவன் அருந்ததி போன்ற கற்புடைய மகளிரது தோளின்சேரக்கையும், குற்றமற்ற மாட்சிமை பொருந்திய தொல்குடியின் பிறப்பின்கண் மாட்சிமையுற்றார் தொடர்பும், சொல்லும் சொற்களினிடத்தே குற்றங்களை நீக்கவல்ல நூற்கேள்வியுடையாரிடத்துக் கொண்ட புணை நட்பும் ஆகிய இந்த மூன்றும் அவனுக்குச் சுக்கு, திப்பிலி, மிளகு என்னும் மூன்று கார்ப்புடைய மருந்துப் பொருள்கள் ஆகும். இதனை,

அருந்ததிக் கற்பினார் தோளுந் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியுஞ்-சொல்லின்
அரிலகற்றுங் கேள்வியார் நட்புமிம் மூன்றுந்
திரிகடுகம் போலு மருந்து **(திரி., பா.1)** என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. உடற் பிணியை அகற்றி இன்பஞ் செய்தல்போல் இந்நூற்பாவிடத்தே கூறப்படும் மூன்று பொருள்களும் உயிர்ப்பிணியாகிய அறியாமையை நீக்கி இன்பஞ் செய்வனவாம் என்பது கருத்து. அருந்ததி-வசிட்டன் மனைவி; கற்பிற்கு எடுத்துக் காட்டானவள். அரில் அகற்றும்-குற்றம் நீக்கும். குற்றமில்லாத அருந்ததியின் கற்பு ஒக்கும் கற்பினள் என்பதற்குச் சிலப்பதிகாரத்தின் மங்கல வாழ்த்துக் காதையில் ***தீதிலா வடமீனின் திறமிவள் திறம்*** (1:26)என்பதும்; சீவகசிந்தாமணியின் கனக மாலையார் இலம்பகத்தில், ***அருந்ததிக் கற்பினாளை யடிபணிந் தவனுங் கண்டான்*** (7:1729/4) என்பதும் கம்பராமாயணம் அயோத்தியா காண்டத்தில் ***சீலமின்ன தொன்ற ருந்ததிக் கருளிய திருவே*** (10:16-1)என்பதும் கூறப்பெற்றுள்ளமையைக் காணலாம்.

முடிவுரை

உலக வாழ்வில் இருபாலரும் ஒழுகவேண்டிய செய்கைகள் பற்றிச் சிறப்புத் தரும் நல்லொழுக்கங்களை ஒப்ப நல்ல வழியில், மனிதர்கள் விதியாகப் பேணல் வேண்டும் என்பதும், தீயஒழுக்கங்கள் கைவிடப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. சுக்கு, திப்பிலி, மிளகு எனும் மருந்துப் பொருள்கள் எவ்வாறு மனித உடலின் உள்ளுறுப்புகளுக்கு வரும் பிணியினை அறுக்குமோ அதன்படி ஒவ்வொரு பாடலிலும் மூன்று ஒழுக்க விதிகளை பகுத்துத் தந்திருக்கிறது திரிகடுகம்.

தொடர்ச்சி: பக். 113

ISSN 2320-4842

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்

அ. ஷமீலா பேகம்
முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref.No.:7883/Ph.D.K8/Tamil/P.T./April 2017/Confirm./Dt:10.06.2019)
நெறியாளர்: **முனைவர் கு. சந்திரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்த் துறை, மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி (த), தஞ்சை
(Affiliated to Bharathidasan University)

ஆய்வுச்சுருக்கம்

உலகிலுள்ள குறிப்பிடத்தக்க மதங்களுள் இஸ்லாமும் ஒன்றாகும். இதற்கென்று தனி வரலாறு உண்டு. முகமது நபியின் முயற்சியாலும் அவர் பெற்ற அனுபவத்தாலும் அது உருவாயிற்று எனலாம். பௌத்தம் தவிரப் பிற மதங்கள் கடவுள் வழிபாடு உடையவை. ஓர் இறையை வணங்கும் மதங்களும் உலகெங்கும் காணப்படுகின்றன. இவற்றுள் 'ஓர் இறை' என்ற நம்பிக்கையை ஆழமாகக் கொண்டு பின்பற்றிவரும் சமயம் இஸ்லாம் ஆகும். எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தமக்கென வழிபாட்டு முறையையும் வாழ்க்கை முறையையும் கொண்டவர்கள் இஸ்லாமியர்கள். முஸ்லிம், இஸ்லாம் என்ற பெயர்கள் நபிகள்நாயகம் காலத்திற்குச் சற்று முன்னும் பின்னும் தோன்றி வழங்கியதாகத் தெரிகிறது. மக்களுக்கு இடும் பெயர்கள்கூட ஒரே பாவனையில் இருத்தலையும் காணமுடிகிறது.

கருவிச்சொற்கள்: இஸ்லாமும் ஒழுக்கமும், ஒழுக்கம், ஒழுக்கத்தின் உயர்வு, ஒழுக்கத்தின் பயன்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

மன்னராட்சிக் காலத்தில் இறைத் தொண்டர்களுக்கும் மன்னர்களுக்கும் பகைமை உணர்வும், மன்னன் இறைத் தொண்டர்களை மதியாமையும், இறைத் தொண்டர்கள் இறைவன் அருளால் வலியுறுத்தி நிலை நின்றதையும் வரலாற்றில் காணமுடிகிறது. காலப்போக்கில் இந்நிலை மாறி, இந்தியாவில் இஸ்லாம் மன்னர் பலர் இந்துப் பெண்களை மணந்துகொண்டனர். அப்படி மணம் செய்யப்பட்ட இந்துப் பெண்கள் இந்து முறைப்படியே அங்கு வாழ்ந்துவந்திருக்கிறார்கள். இந்த வரலாற்று நிகழ்வு, 'இந்திய முஸ்லீம் தலைவர்கள்: விடுதலைப் போராட்டமும் அதற்கு அப்பாலும்' என்ற நூலில் ராஜ்மோகன் காந்தி அளிக்கும்,

அக்பரின் இந்து மனைவி பெற்றுக் கொடுத்த மைந்தன்-அக்பருக்கு வாரிசாக வந்த ஜகாங்கீர்; அதுபோன்றே ஜகாங்கீரின் இந்து மனைவிதான் பேரரசரின் ஷாஜகானின் அன்னை. சீரிய முஸ்லிம் பற்றாளர் என்று அழைக்கப்படுகிற (மற்றவர்களுக்கு மதவெறியர்) ஔரங்கசீப் திருமணம் புரிந்துகொண்டது இந்து உயர்குலப் பெண்ணையே! கடைசி மாமன்னர் பகதூர்ஷா-2 (கி.பி1837-1857)வைப் பெற்றெடுத்தவள் ஓர் இந்துப் பெண்மணி. பெயர் லால்பாய்! இந்துப் பெண்கள் அனைவருமே இஸ்லாத்துக்கு மாற்றப்பட்டார்கள் உண்மையே. ஆனால் இவர்கள் அனைவருமே இந்து கலாச்சாரத்தைச் செங்கோட்டைக்குள் எடுத்துச் செல்லவும் செய்திருக்கிறார்கள். இதே கலாச்சாரம் இன்னொரு வழியிலும் வேகம் கொண்டு பாய்ந்து சென்றது. ஆம் இந்துக்கள் முஸ்லிம்களின் ஆடை வகைகளை அணியத் தொடங்கினார்கள்...மேலும் இந்துக்களில் இருபாலினத்தினரும்-முஸ்லிம் சூஃபிகளின் கல்லறைக்குச் சென்று வேண்டிக்கொள்வதுண்டு (நஸீமுத்தீன், ப.31) என்ற விளக்கம் இந்து-இஸ்லாம் ஒற்றுமையாக வாழ மன்னர்களே வழிகோலிய வரலாற்றை நஸீமுத்தீன் சுட்டிக்காட்டி உணர்த்துகிறார். இதுபோலவே ஆட்சி அதிகாரத்திலும் பேசும் மொழியிலும் இருபாலர்க்கும் சமூகம் சார்ந்த ஒற்றுமைகளும் இருந்தன. எனினும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில சிறப்பான ஒழுக்கங்களை இஸ்லாமியர்களுக்குக் குர்ஆன் போதிக்கிறது. அது எல்லா மக்களுக்கும் உயிரினங்களுக்கும் பொதுவாய்த் தோன்றினும் அல்லாஹ்வின் பெயரால் சொல்லப்பட்டமையின் இஸ்லாமியர்களுக்கென்று தொழுகை முதலாயின வரையறுக்கப்பட்டன. இந்நிலையில் குர்ஆன் கூறும் பொது ஒழுக்கங்களில் ஒருசில ஒழுக்கங்கள் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது. இந்த அடிப்படையில் இவ்வொழுக்கங்கள் சமுதாயத்தினர்க்குக் குறுகிய அளவில் பிரித்துக் கூறப்படுகின்றன.

ஒழுக்கம்-விளக்கம்

இஸ்லாமும் ஒழுக்கமும், ஒழுக்கத்தின் பயன், ஒழுக்கத்தின் உயர்வு, தூய எண்ணம், கல்வி, நன்றியுணர்வு, உண்மை (பேசல்)

1.1. ஒழுக்கம் - விளக்கம்

ஒழுக்கம் என்பது ஒழுகுதல், பழுகுதல், வாழ்தல், ஒரு குறிப்பிட்ட முறையைப் பின்பற்றுதல் போன்ற பொருண்மையில் ஆளப்படுகிறது. இது அறம் சார்ந்ததாகவும் கூறப்படும். திருக்குறள் இதனை அறத்துப்பாலில் வைத்துள்ளது. ஒழுக்கம் என்பது ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தின்வழி விளக்கப்படுகிறது. பரிமேலழகர்,

அஃதாவது, தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப் பட்ட ஒழுக்கத்தினை உடையராதல். இது, மெய்ம் முதலிய அடங்கினார்க்கல்லது முடியாதது ஆகலின் அடக்கமு டைமையின் பின் வைக்கப்பட்டது (ஜெயக்குமார், ப. 56) என்கிறார். ஒவ்வொரு நாட்டினர்க்கும் அங்கு வாழும் பல பிரிவினர்க்கும் தொன்றுதொட்டு வரும் நடைமுறை ஒன்று உண்டென்றும் அதுவே ஒழுக்க மாகக் கருதப்படுகிறதெனும் கருத்துப்படப் பரிமே லழகர் இவ்வாறு கூறினார். எவனும் முதலில் தானே நல்ல நடத்தையில் நிலைபெற வேண்டும்; பிறகு தான் பிறருக்கு உபதேசிக்கப் புறப்பட வேண்டும் என்பர் புத்தர். அவர் கூறியவற்றுள் ***ஒழுக்கம் என்பது வரையறுக்கப்பெற்ற சமுதாயச் சட்ட நெறிமுறைகளுக்குட் பட்டு ஒழுகும் முறையாகும்*** என மானிட வாழ்வியல் சிந்தனைகள் பகுதியில் புத்தரின் பொன்மொழி வரிசை எண்:77இல் சுட்டப்பட்டிருக்கிறது (கோபால், ப.71). பொதுவாக, மனிதர்களின் நல்ல நடத்தை முறையை ஒழுக்கம் என்ற பொதுச்சொல் குறிக்கி றது. எல்லா மதங்களும் ஒழுக்கத்திற்கு முதன்மை தருகின்றன. ஒப்பீட்டு அளவில் இஸ்லாத்தில் இது மிகவும் வற்புறுத்தப்படுகிறது. இஸ்லாத்தில் அடிப் படைக் கோட்பாடுகளுள் ஒன்றாக இது பேசப்படு கிறது. ஹெச்.அப்துர் ரகீப் தம் *அன்பு நபியின் (ஸல்) அமுத வாக்குகள்* தொகுதி-1 என்ற நூலின் பதிப்புரையில், ***இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடு, சமூகவியல், பொருளியல், அரசியல், ஒழுக்கவியல், அமைப்பியில் எனப் பல்வேறு துறைகள் தொடர்பான நூற்றுக் கணக்கான நபி மொழிகளை... ஆறு தொகுதி களில் கலாமே நுபுவ்வத் என்ற அறிஞர் தொகுத்துள் ளார்*** (ப.10) எனக் குறிப்பிடுகிறார். ஆறு தொகுதி களுள் ஒரு தொகுதி ஒழுக்கவியலாகும். முகமது நபி (ஸல்) ஒழுக்கம் சமூக வளர்ச்சிக்கு மிகத் தேவை என்பதை உணர்ந்திருப்பதை இப்பகுதி காட்டுகிறது. நபிகளின் கூற்று அல்லாஹ் அறுவுறுத்தியதாகத் தெரிகிறது.

1.2. இஸ்லாமும் ஒழுக்கமும்

உலகில் மக்களுக்கு ஒழுக்கத்தின் மேன்மையையும் பலனையும் உணர்த்தத்தான் தன்னை இறைவன் அனுப் பியதாக நபிகள் குர்ஆனில் கூறுகிறார். இமாம் மாலிக் முக்தா என்பார் எழுதிய நபிகள் பற்றிய நூல் ஒன் றில் குர்ஆன் தெரிவிக்கும் நபிகளின் கூற்றை அறி விக்கிறார். ***சிறந்த ஒழுக்கங்களையும் நன்மைகளையும் அழகிய நற்செயல்களையும் நிறைவு செய்வதற்காகத்தான் இறைவன் என்னை அனுப்பினான்*** (மேற்கோள்: ஃபாருக் கான், ப.50) என எழுதியுள்ளார். இது மானுடத் துக்கு ஒழுக்கம் தேவையானது; அதிலே மனிதர் ஒவ்வொருவரும் சிறந்து விளங்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. அந்த முறைப்படியே நபிகள் நாய கமும் விளங்கியுள்ளார்.

இஸ்லாத்தில் ஒழுக்கமும் மேன்மைக் குணங்குளும் மிக முக்கியமானவை என்றும் நபியினுடைய கூரிய சொற்கள் இதனை ஆழமாகப் பதியச் செய்கின்றன என்றும் முஹம்மத் ஃபாருக் கான் தெளிவுபடுத்து கிறார். ***அண்ணல் நபிகளாரின் மிகப்பெரும் சாதனையே இதுதான். 'நன்னடத்தையை நிறைவு செய்வதற்காகவே நான் அனுப்பப்பட்டேன்' என்கிற நபிமொழியில் மனித வாழ்வு பற்றிய சரியான சிறப்பான விளக்கம் பொதிந் துள்ளது... மனிதனின் தனிப்பட்ட வாழ்விலும் சரி, கூட்டு வாழ்விலும் சரி அவற்றின் யாதொரு பகுதியும் ஒழுக்கத்துக்கு அப்பாற்பட்டதாக ஒழுக்க நெறிமுறை களை விட்டுச் சுதந்திரமாக எஞ்சியிருக்கவில்லை*** (ஃபாருக் கான், ப.51) என்கிறார் அவர். சொல்லும் செயலும் தூய்மையாகவே அமைவதைக் குர்ஆன் முகமது வழியாகக் கூறுகிறது. திருக்குறள் கூறும் *இன்சொல்* (அதிகாரம் 10), *ஒழுக்கமுடைமை* (அதிகாரம் 14) ஆகியவை இதில் அடங்கும்.

எந்த மனிதனுக்கு அவனுடைய தீயசெயல் அலங்கார மாக்கப்பட்டிருக்கிறதோ மேலும் அதனை அவன் நல்ல தென்று கருதிக்கொண்டிருக்கின்றானோ (அந்த மனித னின் வழி கேட்டிற்கு எல்லையேதும் உண்டா என்ன? திண்ணமாக அல்லாஹ்தான் நாடுவோரை நெறிபிறழச் செய்கிறான். மேலும் தான் நாடுவோரை நேர்வழியில் செலுத்துகிறான் (திருக்குர்ஆன், 35:8, பக்.875-876) என்கிறது குர்ஆன். மேலும், நற்செயல் செய்வோர் நன்மையையும் தீச்செயல் செய்வோர் தீமையையும் அடைவார் என்றும் குர்ஆனில் சொல்லப்பட்டிருப் பதுஎண்ணத்தக்கது. ***எவரேனும் கண்ணியத்தை விரும் பினால்-கண்ணியம் முழுவதும் அல்லாஹ்வுக்கே உரிய தாகும் (என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும்). அவனை நோக்கி உயர்ந்து செல்வது தூய்மையான சொல் மட்டுமே! இன்னும் நற்செயல் அவனை மேலே உயர்த்துகிறது. மேலும், எவர்கள் தீயசூழ்ச்சிகள் செய் கின்றார்களோ அவர்களுக்குக் கடுமையான வேதனை இருக்கிறது. மேலும் அவர்களுடைய சூழ்ச்சிகள் தானா கவே அழியக் கூடியவையாக இருக்கின்றன*** (திருக் குர்ஆன்,35:10,ப.876) என்பதும் ஒழுக்கம் பற்றிக் குர்ஆன் கூறும் வாசகம். நன்மையும் தீமையும் ஒழுக்கம் சார்ந்தவை. ஒழுக்கம் உயிரைக் காட்டி லும் பெரிதாய்ப் பாதுகாக்கப்பட வேண்டும் என் பதை,

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (குறள்.131) என்றார் வள்ளுவர். தீமையை உள்ளத்தாலும் எண்ணக் கூடாது என்பதை இக்குறள் வெளிப்படுத்துகிறது. எண்ணுவது செய்தலோடு ஒக்கும் என்பதைப் பரி மேலழகர் ***நினைத்தலும் செய்தலோடு ஒக்கும்*** (குறள். 116 உரைவிளக்கம், ப.51) என்றார். வள்ளுவத் தின் சிந்தனைகள் குர்ஆனில் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது.

1.3. ஒழுக்கத்தின் பயன்

மனிதர்க்கு வாழ்க்கையில் பயன்படும் குணங்களில் முக்கியமானது ஒழுக்கம் எனலாம். ஒழுக்கம் வாழ்க் கையோடு மிகவும் தொடர்புடையது. தீய ஒழுக்கம்

ISSN 2320-4842

மனிதரை அண்டாதவரை எல்லா நடத்தைகளும் நல்லொழுக்கத்தில் அடங்கியவை. நல்லொழுக்கம் நற்பெயரையும் முன்னேற்றத்தையும் தரக்கூடியது. ***நீடித்த ஆயுளும் நிறைவான நல்லொழுக்கத்தையும் உடையவர்கள்தாம் உங்களில் சிறந்தவர்கள்*** (ஃபாருக் கான், ப.61) என்று நபிகள் தன்னை வினவிய வர்களிடம் கூறியதாகக் குர்ஆன் தெரிவிக்கின்றது. இதனை *அஹ்மத்* என்ற நூல் குறிப்பதாக எடுத்துக் கூறப்படுகிறது. இதனை மேலும் விளக்கும் இந்நூல், ***நீடித்த ஆயுள் கிடைக்கும் போதுதான் நல் லறங்களை அதிகமாகச் செய்வதற்கும், இறைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கும் அவனுக்கு அடிபணிந்து வாழ்வதற்கும் அதிகமான வாய்ப்புக்கள் கிடைக்கும்*** (ப.61) என்கிறது. ஒழுக்கம் மனிதனுக்குத் தரும் பயன்களில் முதன்மையானது. எப்போதும் மகிழ்ச்சி வேண்டும் என்று எண்ணுபவர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பது நபி களின் எண்ணம் என இஸ்லாத்தை நன்கறிந்த அறிஞர்கள் கூறுகிறார்கள்.

மகிழ்ச்சிக்கு (pleasure) ஒழுக்கத்துடன் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. சரியான ஒழுக்க வழிமுறையை மேற்கொள்கின்ற போது உண்மையான மகிழ்ச்சியும் உவகையும் ஏற்படுகின்றன. இந்த உவகையும் களிப்பும் ஆன்மிக களிப்பேருவகையாக மட்டும் இருப்பதில்லை. அதற்கு மேலாக இதயபூர்வமான, உணர்வுபூர்வமான அழகுணர்வு பொங்குகின்ற மகிழ்வாகவும் இனிமை தருகின்ற உவகையாகவும் இருக்கின்றன (ப.31) என்கிறார் முஹம்மத் ஃபாருக் கான்.

1.4. ஒழுக்கத்தின் உயர்வு

ஒழுக்கத்தின் உயர்வு என்பது ஒழுக்கத்தினால் கிடைக்கும் புகழைக் குறிக்கும். ஒழுக்கம் உள்ளவர்களுக்குத் தனிப்பட்ட சுயநல வாழ்க்கை என்பதே அமைவதில்லை. எதையும் அவர்கள் விட்டுக் கொடுப்பார்கள். மானம், அன்பு, சுயமரியாதை போன்ற ஒழுக்கத்தினால் மக்கள் தரும் பரிசாகும். மனிதனை மற்ற உயிர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது இந்த ஒழுக்கம்தான். இதுபற்றி முஹம்மத் ஃபாருக் கான் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

மனிதனை நாம் சுய அதிகாரமும் சுதந்திரமும் பெற்ற படைப்பாகப் பார்க்கிறோம். சுயமாகத் தீர்மானித்து, தேர்ந்தெடுத்துச் செயல்படுகின்ற சுதந்திரமோ, அதிகாரமோ வழங்கப்படாத படைப்புக்களிடம் நன்னடத்தையோ நல்லொழுக்கமோ எதிர்பார்க்கப்படுவதில்லை. அந்தக் கேள்வியே அங்கு எழுவதில்லை. மனிதனுக்கு இருக்கின்ற அதிகாரம் சுதந்திரம் ஆகியவற்றுடன் அழுத்தமான தொடர்புடையதுதான் ஒழுக்கம். இந்த உலகில், தான் நினைத்ததைச் செய்து முடிக்கின்ற சுதந்திரமும் மனிதனுக்குண்டு. இதனால்தான் அவன் ஓர் ஒழுக்கப் படைப்பாக இருக்கின்றான். மற்ற பொதுவான படைப்புக்களிலிருந்தும் அவனை வேறுபடுத்திக் காட்டுவதும் இதுதான் (ப.13) என்பது ஒழுக்கத்தின் உயர்வுக்கு அவர் தரும் விளக்கமாகும்.

இந்தப்பேரண்டத்தை எத்தகைய நெறிமுறைகள் இயக்கி வருகின்றனவோ அந்த நெறிமுறைகளோடு இயைந்து போனதாக மனித வாழ்வு ஆகிவிட்டது. இந்த உண்மையைத்தான் திருக்குர்ஆன் பின்வருமாறு அழகாகப் படம்பிடித்துக்காட்டுகிறது(ப.52) என்று கூறும் அவர் குர்ஆனிலிருந்து எடுத்துக்காட்டும் தருகிறார். ***அவன் ஒவ்வொன்றின் மீதும் ஆற்றலுடையவன்.*** (திருக் குர்ஆன், 64:1, ப.1125). இவை யாவும் ஒழுக்கத்தின் உயர்வையும் தனிச் சிறப்பையும் காட்டுகின்றன.

1.4.1. தூய எண்ணம்

மனிதர்கள் மனத்தில் தூய எண்ணம் கொண்டவர்களாக வாழ்தல் வேண்டும். ஒழுக்கத்திற்கு அடிப்படையாக இது அமைவதாக குர்ஆனில் குறிப்பிடப் படுகின்றது. இஸ்லாத்தை விரும்பும் அனைவரும், இறைவன் எப்படி வாழவேண்டும் என்பதை ***நிச்சயமாக என் இறைவன் நேர்மையாக இருக்கிறான்*** (திருக் குர்ஆன், 11:55, ப.455) என்று பேசப்படுகிறது. ஹூத் = ஓர் இறைத்தூதர். ***அதாவது எந்த ஒரு வேலையும் நீதி, நியாயம். விவேகம். சத்தியம் ஆகிய வற்றுக்கு அப்பாற்பட்டதாகவோ, எதிரானதாகவோ இருக்க முடியாது. அவன் சத்தியத்துடனும், நலத்துடனும்தான் இந்தப் பேரண்டத் தைப் படைத்திருக்கிறான். நமது எண்ணங்களின்படிச் செயல்படுகிற அதிகாரம் நமக்குத் தரப்பட்டிருக்கிறது. எனில்அதற்குரிய நோக்கமும் சத்தியத்தையும் வாய்மை யையும் தவிர வேறு ஒன்றும் இல்லை. மனிதன் அகமும் புறமும் இரண்டுமே செம்மைப் படுத்தப்பட்டு நேரானவையாய் இருக்க வேண்டும். ஏனெனில் மனித னின் வெற்றியே அதில் அடங்கியிருக்கிறது***(ஃபாருக் கான், பக்.9-10) என்று மேல் குர்ஆன் வாசகத்திற்கு விளக்கம் தரப்படுகிறது. அஃதாவது சத்தியம், உண்மை, வாய்மை போன்ற அருங்குணங்களை அல்லாஹ் இறைத் தூதர்க்கு(நபி) போதித்தனுப்பியிருக்கிறான் என்பது பொருள்.இதைத்தான் பலரும் குர்ஆனில் வாய்மை அல்லது தூய எண்ணம் சுட்டப்பட்டிருக்கிறது. ***திண்ணமாக, வெற்றி பெற்று விட்டான் மனத்தைத் தூய்மைப் படுத்தியவன்; மேலும், தோற்றுவிட்டான் அதனை நசுக்கியவன்!***(திருக்குர்ஆன்,அத்.91:9-10,ப.1212) என நல்லொழுக்கத்திற்குச் சான்றாக மனத் தூய்மையைக் குர்ஆன் வலியுறுத்தியுள்ளது. அஷ்ஷம்ஸ்= சூரியன்.

1.4.2. கல்வி

மதம்சார் கல்வியோ, பொதுவான கல்வி அறிவோ இல்லாதவர்கள் இறைவனை (அல்லாஹ்) சரியாகப் புரிந்துகொள்ள இயலாது. இறைத்தன்மையை இறைவனின் பண்பைப் புரிந்துகொள்வதற்குக் கல்வியறிவு வேண்டும் என்று நபிகள் நாயகமும் வற்புறுத்துகிறார். இதே கருத்து குர்ஆனிலும் விதந்தோதப் பட்டிருக்கிறது. ***உண்மையில் அல்லாஹ்வின் அடியார்களில் ஞானமுடையோர் மட்டுமே அவனுக்கு அஞ்சுகின்றார்கள்*** (திருக்குர்ஆன், 35:28, ப.878) என்று கல்வி அறிவுடையோரின் (அறிஞர்களின்) பண்பையும் ஒழுகும் முறையையும் குர்ஆன் குறிப்பிடு

கின்றது. முகமது இக்பால் சிறந்த கவிஞர். பல மொழிகற்றவர். அவருடைய மிகுந்த பாராட்டுக்குரியவராகத் தோன்றினார். ஃபாத்திர்=படைப்பவன்.

1.4.3. நன்றியுணர்வு

நன்றியுணர்வு பற்றித் தமிழ் அற இலக்கியங்கள் அனைத்தும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பேசுகின்றன. புலவர்கள் அரசர்களைப் பாராட்டுவதுகூட அவர்கள் செய்யும் நல்லாட்சிக்காக எனவும் கருதலாம். நன்றிமறத்தல், செய்ந்நன்றி மறத்தல் ஆகியன செய்தோர்க்கு தேருவதற்கு வழியே இல்லை என்கிறது புறநானூறு. ***…ஒருவர் செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லை*** (புறம். பா.34:5-6) என்பது அது. ***நான் நல்லதைச் செய்யும்போது மகிழ்கிறேன் தீமையைச் செய்துவிட்டால் அதற்காக வருந்துகிறேன்*** (Afraham Lincon, p.505) என்கிறார் ஆப்ரஹாம் லிங்கன். (When I do good I feel good; When I do bad I feel bad. This is my religion — Afraham Lincon). ***நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்…*** என்ற குறள் (138) தொடரும் இதனுடன் ஒப்பிடத்தகும். இத்தகு நன்றியுணர்வை குர்ஆன், ***நீங்கள் நன்றி செலுத்துபவர்களாய் இருந்து இறை நம்பிக்கையின் வழியில் நடப்பீர்களாயின் உங்களை ஏன் அல்லாஹ் தண்டிக்கப் போகின்றான்*** (திருக்குர்ஆன், 4:147, ப.200) என்கிறது. இது நபிகளின் சொற்கள்போல் தோன்றினும் அல்லாஹின் சொற்களாகவே வெளிவந்துள்ளன.

1.4.4. உண்மை பேசல்

உண்மை என்பது இங்கு மெய்ம்மையைக் கண்டறிவது. குறிப்பாக இறைவனின் உண்மை உணர்வைத் தம் உணர்வாக்கிக் கொண்டு அதற்கேற்ப ஒழுக்கத்தை மேற்கொள்ளலாகும். பொய்மை தவிர்த்துத் தாம் கண்டுணர்ந்ததைப் பேசும் வழக்கத்தை இஸ்லாம் மேற்கொள்ள வேண்டும் என்ற கொள்கை. உண்மையைப் பற்றி நபிகள் பின்வருமாறு விவரிக்கிறார். அவர் உண்மை பேசும் மனிதர்களையும் உண்மைக்கு மாறாகப் பொய்மை பேசும் மனிதர்களையும் இறைவன் எப்படி நடத்துகிறான் என்பதைத் தெளிவாக்குகிறார். ***உண்மை நன்மையின் பாதையைக் காட்டுகிறது. மனிதன் உண்மை பேசிக் கொண்டேஇருக்கின்றான். இவ்வாறாக அவன் உண்மையாளனாக (சித்திக் ஆக) ஆகிவிடுகின்றான்*** (ஃபாருக் கான், ப.215) என்று *புகாரி* (6094) நூலில் குறிப்பிட்டிருப்பதை முஹம்மத் ஃபாருக் கான் எடுத்துரைக்கிறார். உண்மையுடன் வாழ்தல் என்ற ஒழுக்கத்தின் தனிச் சிறப்பை குர்ஆன், *அல்பகராவில்*, ***தொழுகையை நிலைநாட்டி ஜகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயலாகும். மேலும் வாக்குறுதி அளித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்களும் வறுமை மற்றும் துன்பங்களின்போதும் சத்தியத்தித்திற்கும் அசத்தியத்திற்கும் நடக்கும் போராட்டத்தின்போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்களுமே புண்ணியவான்கள் ஆவர். இவர்களே உண்மையாளர்கள். மேலும் இவர்களே இறையச்சம் உடையவர்கள்*** (திருக்குர்ஆன், 2:177, ப.128) எனக் குறிப்பிட்டுள்ளது. அல்பஹறதா=மாடு. அது காளை, பசு இரண்டையும் இச்சொல் குறிக்கும்.

முடிவுரை

உலகிலுள்ள அனைத்தையும் படைத்து அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு வாழஅறிவுரை கூறும் நூலாக -வேதமாகக் குர்ஆன் விளங்குகிறது. இப்படி இஸ்லாம் நம்பிக்கைக் கொண்டுள்ளது. இதற்காக மனிதர்களுக்குச் சில ஒழுக்கங்களையும் கற்பிக்கின்றது. இந்த ஒழுக்கங்கள், மனிதர்களை நல்ல சிந்தனையுடனும் அறிவு வளத்தைப் பெற்று அன்பு கலந்து இரக்க மனப்பான்மையுடனும் வாழ வழி வகுக்கின்றன.

பார்வை நூல்கள்

ஃபாருக் கான், முஹம்மத். *அன்பு நபியின் (ஸல்) அமுத வாக்குகள் - ஒழுக்கவியல், தொகுதி-1.* சென்னை: IFT (Islamic Foundation Trust), 2015.

அப்தூர் ரகீப், ஹெச். "பதிப்புரை", *அன்பு நபியின் (ஸல்) அமுத வாக்குகள்: ஒழுக்கவியல், தொகுதி-1.* சென்னை: IFT (Islamic Foundation Trust), 2013.

கோபால், சி.பி., *புத்தர் பொன்மொழிகளும் மானிட வாழ்வியல் சிந்தனைகளும்.* கோயம்புத்தூர்: இலட்சுமி பதிப்பகம், முதற்பதிப்பு, 2001.

திருக்குர்ஆன்-மூலம்-தமிழாக்கம். அஹ்மத் பாகவி, A. குத்புத்தீன், ரவூஃப் பாகவி, R. அப்துர் (மொ.ஆ.), சென்னை: இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், 6 ஆம் பதிப்பு, 2010.

துரைசாமிப் பிள்ளை, ஔவை (உ.ஆ.), *புறநானூறு மூலமும் உரையும்.* ப.103. சென்னை: சாரதா பதிப்பகம், 2 ஆம் பதிப்பு, 2017.

நயினார் முகமது, சி., *உமறுப் புலவர்: இந்திய இலக்கியச் சிற்பிகள்.* புதுதில்லி: சாகித்திய அகாதெமி, 2 ஆம் பதிப்பு, 2007.

நஸீமுத்தீன்,ஏ.வி.எம்.(தமிழில்). *இந்திய முஸ்லிம் தலைவர்கள்: விடுதலைப் போராட்டமும் அதற்கு அப்பாலும்.* சென்னை: கிழக்குப் பதிப்பகம், 2023.

மாணிக்கவாசகன், ஞா. *தொல்காப்பியம் மூலமும் உரையும்.* சென்னை: உமா பதிப்பகம், 2 ஆம் பதிப்பு 2010.

முகமது உவைஸ், ம. & அஜ்மல் கான், பீ.மு., *இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு (தொடக்க காலம், 1100 வரை) தொகுதி-1.* மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1986:6.

ராமகிருஷணன், எஸ். (ப.ஆ.), *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்).* சென்னை: க்ரியா, விரிவாக்கித் திருத்திய புதிய பதிப்பு, அக்டோபர் 2018:605.

வீரமணி, கி., *டாக்டர் அம்பேத்கரின் புத்தக் காதலும் புத்தகக் காதலும்*, சென்னை: திராவிடர் கழக வெளியீடு, 2 ஆம் பதிப்பு, 2018:7

ஜெயக்குமார், சி. (ப.ஆ.), *திருக்குறள் மூலமும் உரையும் (பரிமேலழகர் உரை).* சென்னை: அருணா பப்ளிகேஷன்ஸ், 2020:56, 51,

Afraham Lincon, *Big Quotations: An A to Z Companion.* Noida, U.P., India: Maple Press, n.d.

ISSN 2320-4842

திருக்குற்றாலக் குறவஞ்சி: குறத்தி குறிசொல்லும் பான்மை

க. நித்தியா
முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref.No.BDU1920630034, dt: 24.05.2024)
நெறியாளர்: **முனைவர் க. பூபதி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த் துறை, மருதுபாண்டியர் கல்லூரி, தஞ்சாவூர் 613 403
(Affiliated to Bharathidasan University)

ஆய்வுச் சுருக்கம்

சங்க காலக் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலில் அடங்கிய கழங்காடுதல், குறிபார்த்தல், நிமித்தம் பார்த்தல், குறி கேட்டல், தெய்வத்திடம் இன்னல்கள் தீர வேண்டுதல் போன்ற பண்பாட்டு மரபுகள் இன்றும் தமிழ்ச் சமூகத் தில் நடைமுறையில் காணப்படுகின்றன. நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றின. இவற்றுள் திருக்குற்றாலக் குறவஞ்சி நாடகமும் ஒன்று. இந்நூலுள் குறத்தி குறிசொல்லும் பான்மையை இக்கட்டுரை விளக்குகிறது.

கருவிச்சொற்கள்: குறவஞ்சியின் பொருளமைதி, குறத்திப்பாட்டு, குறத்தி குறிபார்த்தல், குறவஞ்சி பெயர்க்காரணம், குறவஞ்சியின் அழகு, பக்தி இலக்கியங்கள், வசந்தவல்லி.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

தமிழ்நாட்டில் தமிழ் மன்னர் மறைந்து சில நூற்றாண்டுகள் கடந்து, விசயநகரப் பேரரசும் முகமதியர்களால் அழிந்து நீண்டகாலம் ஆகியது. இந்தச்சூழலில், விசயநகர அரசின் பிரதிநிதிகளாய் இருந்த நாயக்கர் என்னும் பட்டமுடைய சிலர், மதுரை, திருச்சி, தஞ்சை ஆகிய பெருநகரங்களில், பிரதிநிதிகளாய்த் தங்கிப் பின்னர் … தனியரசு செலுத்தும் நிலைபெற்றனர். இவர்கள் தெலுங்கு நாட்டினர். தெலுங்கு தாய்மொழி. அவ்வமயம் பொருளாதாரமின்றித் தவித்த தமிழ்ப் புலவர்கள் நாயக்க மன்னர்களிடம் புகலிடம் ஆகினர். சீவைகுண்டத்திலிருந்து வடக்கு நோக்கி வந்து மதுரை யில் மீனாட்சியம்பிகையைத் தரிசித்த குமரகுருபர சுவாமிகளைத் திருமலை நாயக்கன் பெரிதும் போற்றி அம்பிகை மீது பிள்ளைத்தமிழும், திருக்குறளின் சாரமாக 'நீதிநெறி விளக்க'மும் இயற்ற வைத்தான் (அருணாசலம், *முன் னுரை*, ப.10). ***இஃது நாயக்க மன்னனின் உயர்ந்த பண்பைக் காட்டுகிறது. கி.பி.1350 முதல் தமிழகத்தை ஆட்சி புரிந்த நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கிய காலம்*** (சந்திரசேகரன், ப.288) என அறுதியிட்டுக் கூறுவர். இவ்வகைச் சிற்றிலக்கிங்கள் எண்ணிக்கை அடிப்படையில், புகழ்பெற்ற சிற்றிலக்கியங்கள் எனப் பதினொரு வகைகளை (பக்.206-207) ந.வீ.செயராமன் பட்டியலிட்டுள்ளார். அவற்றுள் ஒன்பதாம் இடத்தினைப் பெற் றுத் திகழும் 'திருக்குற்றாலக் குறவஞ்சி'யைக் கி.பி.18ஆம் நூற்றாண்டு திருநெல்வேலி மாவட்டம் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் என்னும் புலமை நல்லார் இயற்றியுள்ளார். இது, இவ்ஆய்வுக் கட்டுரைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள மூலநூல் ஆகும். நுண்ணிலக்கியங்கள் எனக் கருதப்படுவனவற்றுள் குறவஞ்சி யும் ஒன்றாகும். கி.பி.10முதல் 19ஆம் நூற்றாண்டுவரை இலக்கிய வகைகளைத் தரும் பனுவல்கள் 'பன் னிரு பாட்டியல்' முதல் 'இலக்கண விளக்கப் பாட்டியல்' வரை எந்த நூலிலும் குறவஞ்சி என்ற சொல் லாட்சி இல்லை (ப.81) என்கிறார் பி. இரத்தினசபாபதி.

குறத்திப்பாட்டு

பன்னிரு பாட்டியல், *குறத்திப்பாட்டு* என்னும் தலைப்பில் ***இறப்பு நிகழ்வெதிர் வெண்ணுமுக் காலமும்/ திறம்பட உரைப்பது குறத்திப் பாட்டே*** **(சூ.131)** என்றும் ***குறத்திப் பாட்டும் அதனோ ரற்றே*** **(சூ.132)** என்றும் குறிப்பிடு கின்றது. இச்சூத்திரங்களுக்குக் கா.ர.கோவிந்தராச முதலியார் ***குறத்திப்பாட்டு (குறத்தி), இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலத்து நிகழ்வனவற்றையும் அறிந்து சிறந்த வகையின் உரைத்தலைப் பாடுவதாம்*** என்றும்; ***குறத்திப் பாட்டும் உழத்திப் பாட்டைப் போலப் பத்துப் பாட்டாற் பாடப்படுதற்கு உரியது*** (ப.145) என்றும் விளக் கம் எழுதுகின்றார். ஆக, பன்னிரு பாட்டியலில் குறத்திப் பாட்டுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. மேற்படி இரண்டாவது சூத்திரம் குறத்திப் பாட்டும் உழத்திப் பாட்டைப்போலப் பத்துச் செய்யுட்களால் ஆகியது என் னும் பொருளமைதியுடன் பத்துச் செய்யுட்களால் இயன்றது குறத்திப் பாட்டு என்பதும் அறியமுடிகின்றது.

குறவஞ்சி பெயர்க்காரணம்

குறவஞ்சி இலக்கிய வகையினுள் இடம்பெறும் செய்திகளில், குறத்தி குறிகூறுதல், குறவனுடன் உரையாடுதல் என்பனபெரும் பாங்காற்றுகின்றன. எனவேகுறவஞ்சி என்ற பெயர் ஏற்பட்டது என்பர். குறவஞ்சி என்ற சொல் லுக்குக் குறப்பெண் என்பது பொருள். கழகத் தமிழ் அகராதி, வஞ்சி - பெண், தருமதேவதை (ப.809) என்று பொருள் கூறுகிறது. குறவஞ்சி இலக்கியத்தில் குறத்தியின் செயல்களும், குறி வகைகளும் தலைமை

இடம்பெறுகின்ற காரணத்தால் இவ்வகை இலக்கியத் திற்குக் குறவஞ்சி என்ற பெயர் சான்றோரால் வழங் கப்படுகிறது. நர்மதாவின் தமிழ் அகராதி, குறவஞ்சி என்னும் பதத்திற்குத் ***தலைவன் உலா வரும் சமயத் தில் அவன்மீது காதல் கொண்டு தவித்திடும் ஒரு பெண் ணுக்குக் குறத்தி குறி சொல்வ தாக அமைத்துப் பாடும் ஒரு சிற்றிலக்கிய வகைப் பாடல்*** (ப.291) என்று தந் துள்ள விளக்கம் மேற்படி சான்றோர்கூற்றினைஉறுதி செய்கிறது.குறவஞ்சிஇலக்கியங்கள் பாட்டுடைத் தலை வன் பெயரிலோ, ஊர்ப் பெயரோடு பாட்டுடைத் தலை வன் பெயரிலோ, ஊர்ப் பெயர், இயற்பெயர் ஆகிய இரண்டோடும் நுவலப்படும் பொருளமைதி சார்ந்தே பெயர் பெற்றிருக்கின்றன. ஊர்ப்பெயரில் திருக்குற் றாலக் குறவஞ்சி, திருவாரூர் குறவஞ்சி, விராலி மலைக் குறவஞ்சி, பெத்லேகம் குறவஞ்சி ஆகியன விளங்குகின்றன.

குறவஞ்சி பொருளமைதி

பொதுவாகக் குறவஞ்சி நூல்கள் அனைத்திலும் பொரு ளமைதி ஒன்றே. குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டு இதன் பொருளமைதி பல்வேறு உறுப்புக்களாக அமைந் துள்ளது. தலைவன் பவனி வரவு, மகளிர் காமுறு தல், தலைவி வரவு, உலாப் போந்த தலைவனைக் கண்டு விரக நோயால் வருந்துதல், திங்கள், தென்றல் ஆகியவற்றோடு புலம்பல், பாங்கியிடம் உற்றது கூறித் தூது சென்று வருமாறு வேண்டுதல், குறத்தி வரவு, தலைவி குறத்தியின் மலைவளம், ஊர்வளம், நதி வளம் முதலியவற்றை வினவுதல், குறத்தி அவற்றைக் கூறுவதோடு தலைவனின் தல வளம், கிளை வளம் (தலைவன் சுற்றம், உறவினர்) முதலியன கூறுதல். அயல்நாடுகளில் குறிசொல்லி வந்த தன் பெருமை யைக் குறத்தி கூறுதல், தலைவி குறிகூறுமாறு வேண்டுதல், தெய்வம் பராவிக் குறத்தி குறிகூறுதல், தலைவி அவளுக்குப் பரிசில் அளித்தல், குறவன் வரவு, குளுவனொடு புள் வேட்டையாடுதல், குறத் தியை எண்ணிய குறவன் அவளைத் தேடுதல்,குற வன் குறத்தியைக் கண்ணுறுதல், குறவன் குறத்தி யின் அணி முதலியவற்றைக் கண்டு ஐயுற்று வினவ, குறத்தி பதிலுரைத்தல், இருவரும் பாட்டுடைத் தலை வனாகிய இறைவனைப் போற்றி வாழ்த் தல் ஆகிய இவ்வுறுப்புக்களே குறவஞ்சி இலக்கியத்தின் பொருள மைதியைக் கூறுவனவாகும். சிற்சில நூல்களில் இவ் வுறுப்புக்கள் சற்றே விரிவாகவும் குறைவாகவும் வருத லுண்டு.

குறத்திப் பாட்டு இலக்கியம் குறவஞ்சியினின்றும் அமைப்பு நிலையில் வேறுபாடுடையதாயினும் பொரு ளமைதியில் ஒத்த நிலையினதே என்பதை ஐந்திலக் கணத் தொன்னூல் விளக்கம், ***பாப்பொரு ளளவாதி பலபெய ருளபிற*** (சூ.283, ப.206) என உரைக்கிறது. அதாவது, ***...தலைவி பாங்கியைத் தூதாக வேண் டலும், தலைவி பாங்கிக்குத் தலைவன் இயல் (அடையாளம்) கூறலும், குறத்தி வருதலும், தலைவி குறத்தியை மலை வளம் முதலியவற்றை வினவலும், குறத்தி தங்கள் மலை வள முதலியவற்றைக் கூறலும், தான் முன்னே சொன்ன குறிகளைக் கூறலும், தலைவி குறி வினாவலும், குறத்தி தெய்வம் பராவலும், குறிதேர்ந்து நலம் வரல் கூறலும் இன்னபிற... ஆகிய உறுப்புக்களைப் பொருந்தவைத்து, ஆசிரியப்பா, வெண்பா, தரவுகொச்ச கம், கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் முதலிய இயற்றமிழ் செய்யுட்களை இடைஇடை அமைத்துச் சிந்து முதலிய நாடகச்செய்யுட்களாற் பாடுதல்*** (ப.145) என்று கோவிந் தராச முதலியார் விளக்குகின்றார்.

குறத்தி குறிபார்த்தல்

குறவஞ்சி நூல்களில் வரும் குறிசொல்லும் நிகழ்வு கள் சங்க காலத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்தன. குறி பார்த்தல் என்னும் சொல்லுக்குத் தமிழ்-தமிழ் அகர முதலி, ***நிமித்தம் பார்த்தல், நன்மை தீமைகளைக் குறி பார்த்துச் சொல்லுதல், இலக்குப் பார்த்தல்*** (ப.361) என்று குறிப்பிடுகின்றது. இவற்றைப் பற்றிய செய்திகள் தொல்காப்பியர் காலம் தொட்டுக் காணப்படுகின்றன. சான்றாகத் ***தலைவனும் தலைவியும் காதல் கொள்கின் றனர். தலைவன் தலைவியைப் பொருள்வயிற் பிரிந்து செல்கின்றான். அதனால் தலைவி மனம் வருந்தி உடல் மெலிகின்றாள். தலைவியின்பால் வருந்திய நற்றாயும் செவிலித்தாயும் அவள் உடல் மெலிவிற்கான காரணத் தைக் கண்டறிய முற்படுகின்றனர். இவர்கள் கட்டு, கழங்கு, வெறியாடல் போன்றவற்றை நிகழ்த்தித் தெய்வத்தின் மூலம் தலைவி மெலிவு காரணம் கண்டறியவும் அதனைத் தீர்க்கவும் முயன்றனர். இந்நிகழ்வே குறவஞ்சி இலக்கி யத்திற்கு அடிப்படையாகும்*** (ப.108) என்று ஆய்வா ளர் இரத்தின வேங்கடேசன் குறிப்பிடுகின்றார். இத னைத் தொல்காப்பியர் களவியலில்,

கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும் (நூ.25:3-4)

என்கிறார். தலைவி தலைவனை நினைத்து உடல் மெலிகின்றாள்.இதனைக் கண்ட நற்றாயும் செவிலித் தாயும், மெலிவிற்கான காரணம் கண்டறியக் கட்டு, கழங்கு, வெறியாடல் போன்றவற்றை நிகழ்த்துகின் றனர். இது, ***கட்டுப்பார்த்தல்-கட்டுவிச்சி குறிகூறல்; கழங்கு-கோடாங்கி அருள்வந்து ஆடிக் கழற்சிக்காயை உருட்டிக் குறிகூறல்; இருவரும்-மேற்படி இவர்களிருவ ரும் ஒரே மாதிரி 'வெறியாட்டு' எடுக்க வேண்டுதல்*** (ப.355) என்று தமிழண்ணல் விளக்கம் தருகிறார். இவர் கூறும் செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப் படுகின்றன.

குறி என்னும் பதத்திற்குத் தமிழ்-தமிழ் அகர முதலி ***குறியிடம், முன்னறிந்து கூறும் நிமித்தம், முறை, காலம், ஒழுக்கம், இலக்கணம் இலக்கு, அடையாளம்*** (ப.360) எனும் பொருள்களைத் தருகிறது. பண்டைய தமிழ் இலக்கியங்களில் குறவஞ்சி இலக்கிய வகையின் கரு உள்ளமைக்குச் சான்றாக ஐங்குறுநூற்றில் ஒரு பாடல் (பா.245:1-3) காணலாம். அது வருமாறு:

பொய்யா மரபின் ஊர் முதுவேலன்
கழங்குமெய்ப் படுத்துக் கன்னந் தூக்கி

எழுந்து உலா வந்தானோ? இளஞாயிறு போன்ற சிவப்பு அழகினையும், அழகிய கழுத்திலே தோன்றும் கறுப்பின் அழகினையும் பாம்பணி விளங்கும் இருகாதுகளின் அழகினையும் காணப்பெற்றால் பொற்பாவைகளும் அந்த அழகுக்கு உருகிடுவர் என உரையாசிரியர் புலியூர்க் கேசிகன் குற்றாலநாதனைக் குறிப்பிடுகிறார் (பக். 51-52). தினகரன்-உதயசூரியன்.

குறவஞ்சி வருகிறாள்

குறிசொல்லும் குறத்தி வருகிறாள். கொங்கணம் ஆரியம் குச்சலம் ஆகிய நாடுகளில் செங்கோல் செலுத்தியவள் என்றும்; கன்னடம் தெலுங்கு கலிங்க நாடுகளில் செந்தமிழினாலே வெற்றிக்கொடி நாட்டியவள் என்றும் குறத்தி பற்றிக் கவிராயர் (பா.2: 31-34, ப. 83) கூறுகிறார். ஆடவர்களுக்கு வலது கையும், இன்பமான அழகிய பெண்களுக்கு இடது கையும் பார்த்துக்கடந்த காலத்தில் நிகழ்ந்தவை பற்றிய குறிகளும் தற்பொழுது கைப்பலனாகச் நிகழ்வன பற்றிய குறிகளும் (பா.2:35-37, ப.83), எதிர்காலத்தில் வருவன பற்றிய குறிகளும், மனத்தில் எண்ணியவை, உடலின் குறிப்பால் சொல்லக்கூடியவை, கைரேகைகளினால் அறிந்தும், கண்களின் குறிப்பினால் அறிந்தும், பேச்சிலே அறிந்தும் எந்தவகைக் குறியானாலும் துரிதகதியிலே உரைக்க வல்ல வசந்தவல்லி முன்தோன்றினாள். இஃது குறி சொல்லுபவர்கள் என்னென்ன வகையிலே குறிசொல்லுவார்கள் என்பதனைப் புலப்படுத்துகின்றது.

இவள் காலின் சிலம்புகள் கொஞ்சக் கொஞ்ச நடை நடந்து வருகின்ற பான்மையைக் கவிராயர்,

சிலைநுதலிற் கஸ்தூரித் திலதமிட்டு நறுங்குழலிற் செச்சை சூடிக்
கொலைமதர்க்கண மையெழுதி மாத்திரைக்கோல் வாங்கி மணிக்கூடை தாங்கி
முலைமுகத்திற் குன்றிமணி வடம்பூண்ட திரிகூட முதல்வர் சாரல்
மலைதனிற்பொன் வஞ்சிகுற வஞ்சியப ரஞ்சி கொஞ்சி வருகின்றாளே! (பா.3, ப.83)

என்று பாடுகின்றார். தன் நெற்றியில் கஸ்தூரிப் பொட்டும், கூந்தலில் வெட்சிப் பூவும் சூடி, கொல்லும் தன்மைபொருந்திய கண்களுக்கு மையெழுதி இருந்தாள். கையிலே மாத்திரைக்கோலையும், இடுப்பிலே மணிக்கூடையும், மார்பினில் (முலைமுகங்களிலே) குன்றிமணி மாலையினையும் பூண்டிருந்தாள் என்று பாராட்டுகின்றார் கவிராயர். கஸ்தூரி - ஆண் கஸ்தூரி மானிடமிருந்து பெறப்படும் ஒருவித வாசனைப் பொருள்: musk (நர்மதாவின் தமிழ் அகராதி, ப.248)

குறவஞ்சியின் அழகு

மேருமலையையே வில்லாக வளைத்தவர் முக்கண்ணராகிய திருக்குற்றாலநாதர். இவருடைய மலைச்சாரலிலுள்ள, கருங்கூந்தலுடைய அழகிய குறத்தி அவள். அவள் மார்பிடத்தே பொற்குடங்கள்போலப் புடைத்து எழுந்துள்ள பருத்த கொங்கைகளானவை இன்னமும் பருத்தால், அச்சுமையை அவளுடைய இடையானது பொறுக்க மாட்டாது ஒடிந்துவிடும் என்று கண்டோர் கூற்றாகக் கவிராயர் வருணிக்கின்றார். வசந்தவல்லியின் முன்னாக, மலைக் குறவஞ்சி வந்தாள். வசந்தவல்லியின் மிதமிஞ்சிய விரக நோய்க்கு ஒரு சஞ்சீவி மருந்தினைப்போலே, குறவஞ்சி வந்தாள். இதனை,

வஞ்சி வந்தாள்திரிகூட ரஞ்சித மோகினி முன்னே
மிஞ்சிய விரகநோய்க்குச்
சஞ்சவீமருந்துபோலே (வஞ்சி)
மும்மை உலகெங்கும் வெல்லக்
கொம்மைமுலை யார்க்குநல்ல
செம்மையா குறிகள்சொல்ல
அம்மே அம்மே என்று சொல்ல (வஞ்சி)

(கொடி வந்தாள், பா.6, ப,88) என்று பாடுகின்றார் கவிராயர். சோலைகளில், வசந்த காலத்தில் இளமையுடைய குயிலினம் வந்தாற்போல் கூவியபடி குறவஞ்சி வரும்பொழுது அவள் கொண்டுவந்த பொருள்கள் பற்றிக் கவிராயர்,

மாத்திரைக் கோலது துன்னச்
சாத்திரக் கண்பார்வை பன்னத்
தோத்திர வடிவம் மின்னப்
பூத்தமலர்க்கொடி என்ன (வஞ்சி) என்று குறிசொல்லும் கருவியாகிய மாத்திரைக்கோல் (மந்திரக்கோல் என்பர் வழக்கில்) கையிலே வைத்திருப்பதும், கண்களின் பார்வை குறிசொல்லுதலிலே குறவஞ்சிக்குஆற்றல் மிகுதி என்றும்; கண்டவர் போற்றும் வடிவம் ஒளிவீசும் என்றும் பூத்த மலர்க்கொடி நடந்து வந்தாற்போல வந்தாள் (பா.6, ப.88) என்றும் குறவஞ்சியைக் கவிராயர் படம்பிடித்துக் காட்டுகிறார்.

வசந்தவல்லிக்கு மலை வளம் கூறி, அடுத்து மூன்று போகங்கள் விளைகின்ற நாட்டு வளம் கூறுகிறாள். தொடர்ந்து குற்றாலநாதரின் கிளைகள் (சொந்த பந்தங்கள்) பற்றி எடுத்துரைக்கிறாள். மாதம் மும்மழை தவறாமல் பொழியும் என்றும் இந்நாட்டிலே எம் மருங்கும் நெருங்கிக்கிடக்கக் காண்பதெல்லாம் வயல்களிலேயுள்ள கரும்பும் செந்நெல்லும் விளைந்துகிடக்கும். இப்படிப்பட்ட ஈசருக்குச் சொந்தமான மேலான நாடே எங்களுடைய நாடாகும் என்று குறத்தி பாடுகிறாள் (குறவஞ்சி நாடகம், பா.10:7,8). குறிப்பாக பாவந்தவிர ஏதும் இங்கே நீங்குவதில்லை எனமாம் பழம் தொங்குவதன்றிமனிதர் தொங்கிக்கிடந்து வாடுவதில்லை என்றும்; மத்துகள் சுழல்வதன்றி மக்கள் வருந்தி வாடி மனம் கழல்வதில்லை என்றும்; பேரிகை புலம்புவதன்றி (மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தல்) மக்களுள்ளே எவரும் வாய்விட்டுப் புலம்புவதில்லை. தூங்குதல், புலம்பி அழுதலில்லாத பெருமை கொண்ட வளநாடு என வசந்தவல்லிக்குக் கூறுகிறாள் குறத்தி.

கவிராயர், உமையம்மையைத் தன் ஒரு பாகத்திலே கொண்டிருப்பவர்; சிவந்த கையிலே மழுவாயுதம் தரித்திருக்கும் குற்றாலநாதர் மலைச்சாரலைத் தன்

முருகென மொழியும் என்பது பாடல் தொடர்கள். இத் தொடர்களுக்குஉரையாசிரியர்,***ஊர் முதுவேலன் என்பது ஊருக்கு ஒருவனாக, வழிவழி வேலனாக விளங்கும் முதுகுடியிலே பிறந்து, அந்த வெறியாடும் உரிமை பெற்று, அதன் மரபையும் பேணி வருபவன். அவன் தன் உடம் பில் கழற்காயை அணிந்து, படிமக் கலத்தைத் தூக்கி வைத்து, தலைவியின் துயருக்கு முருகு என்னும் அணங் கின் குறையே காரணம் என்கின்றான்*** (புலியூர்க் கேசி கன், பா.245 உரை, ப.315) என்று விளக்கம் கூறு கின்றார். இது குறிசொல்லல்/குறிபார்த்தல் நிகழ்வு என் பதை உறுதிசெய்கிறது. முதுகுடி என்பதற்குத் தொன்று தொட்டு வரும் குடி என்பது பொருள்.

பக்தி இலக்கியங்களில்

திருவாய்மொழியில் நம்மாழ்வார் குறிபார்க்கும் பெண் ணைக் கட்டுவிச்சி (பா.6:3) என்கிறார். திருமங்கை யாழ்வார் சிறிய திருமடலில்

. . . . அதுகேட்டுக்
காரார் குழல்கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறிச்
சீரார் சுளகிற் சிலநெற் பிடித்தெறியா
. . . . .
சீரார் வலம்புரியே யென்றாள் திருத்துழாய்த்
தாரார் நறுமாலை கட்டுரைத்தாள் என்று பாடுகிறார்.

என் நிலையைக் கண்ணுற்ற குறமகள் ஒருத்தி யாரும் அழைக்காமலேயே தானாக என் முன்வந்தாள். உடனே தெய்வம் அவள்மேல் பற்றிய அச்சம் கொள்ளத் தக்க உருவம் உடையவளானாள்...வானில் பரந்திருந்த கருமை நிறமுடைய கார்மேகங்களைக் காட்டி அதில் திருமா லின் வடிவத்தை உணரச் செய்தாள். அவனின் கை யில் இருக்கின்ற வலம்புரிச் சங்கு கூறி, துளசிமாலை அணிந்திருக்கும் திருமால் (அடி.39-46, ப.12) என்று குறி கூறுகின்றாள். இது அன்னையர் குறிகேட்பது சிறந்தவழி என்றும் உலக வழக்கு என்றும் புலப் படுத்துகின்றது. மேலும், தொடர்ந்து குறத்தி கூறு கிறாள், ***நீங்கள் இதற்காக அச்சம் கொள்ள வேண் டாம். உங்களுடைய பெண்ணுக்கு இத்தகைய நோயை உண்டாக்கியது துன்பம் விளைவிக்கக்கூடிய தேவதை என மயக்கம் கொள்ள வேண்டாம்; அவன் யார் என்று அறிந்து கொண்டேன்*** (மேலது., அடி.47-49, ப.13) எனக் குறத்தி குறிகூறுகிறாள் என்று கதிர் முருகு உரையெழுதுகின்றார்.

குறவஞ்சி வளர்ச்சிநிலை

குறவஞ்சி இலக்கியப் பாட்டுடைத் தலைவனின் (இறை வன், மன்னன்) அழகு, அருள், சீர்மை, பெருமை முதலானவற்றைச் சாதாரண பேச்சு வழக்கில் ஆடல், பாடல் நிறைந்த நாடக வடிவில் பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதே நோக்கமாகக் கொண்டெழுந்த ஒரு சிற்றிலக்கிய வகையாகும். இதில் குறிப்பாகக் குறிஞ்சிநிலக் குறவர் இன மக்களின் வாழ்க்கையை யும் பேசுவதாக அமைந்துள்ளது. உழவுத் தொழில் செய்யும் பள்ளர்களின் வாழ்வைப் பேசுவது பள்ளு இலக்கியம் ஆகும். இதுபோல் குறவர்களின் குறி சொல்லுதலும் வேட்டையாடுதலும் பற்றி பேசுவது குறவஞ்சி ஆயிற்று. ***நாட்டு மக்கள் வழக்கினையொட்டி அவர்கள் வழக்கு மொழிகளிலேயே இலக்கியமாக்க முயன்றனர். குறிஞ்சிநில மக்கள் வாழ்வியல் 'குறவஞ்சி' இலக்கியம் ஆயிற்று. மருதநில மக்கள் வாழ்வியல் பள்ளு இலக்கியம் ஆயிற்று*** (ப.44) என்று ந.வீ. செய ராமன் சிற்றிலக்கியச் செல்வங்கள் எனும் நூலில் குறிப்பிடுகின்றார். இக்குறவஞ்சி வளர்ச்சிநிலை பற்றி ஆய்வாளர் அமுதன், ***இலக்கியம் படைப்பவர்களைப் போற்றுகின்ற பேரரசர்கள் இல்லாத அரசியல் சூழலில் பேரிலக்கியங்களும் காப்பியங்களும் தோன்றுகின்ற வாய்ப்புதடைபட்டது. திணைநிலை வாரியாக ஐந்திணைக் கும் உள்ள பாடல்களில் சுவை நலங்களை அறிந்த புலவர் பெருமக்கள் குறவஞ்சி, பள்ளு முதலிய அவ்வவ் நில மாந்தர் வழக்கிலிருந்த நாட்டுப் பாடல் மரபுகளை இலக்கியமாக்கி உயிர் கொடுக்க முனைந்தனர்*** (ப. 281) என்று குறிப்பிடுகின்றார்.

வசந்தவல்லி

குறவஞ்சி நூல்களில் தலைவியின் பெயர்களின் இறுதியில் காமரசவல்லி, மதனவல்லி, வசந்தவல்லி, செகன்மோகினி, மோகனவல்லி, மோகனாங்கி, மதன ரதி, இராசமோகினி, தெய்வமோகினி என்பனபோல வல்லி அல்லது மோகினி என்ற சொல் காணப் படும். பிற்காலத்தில் தமிழ் நாட்டில் ஆடப்பட்டுவந்த நாடகங்களில் கணபதி வருதல், கட்டியங்காரன் வருதல், மோகினி வருதல் போன்றவை முதலில் நிகழும். இம்முறையைப் பின்பற்றியே திருக்குற்றா லக் குறவஞ்சியில் காப்பு, இறைவன் திருவுலா, வசந்தவல்லி இறைவன்மீது காதல் கொள்ளுதல், குறவஞ்சி நாடகம், சிங்கனும் சிங்கியும், நிறைவில் வாழ்த்துடன் நாடகம் நிறைவுபெறுகின்றது. இந்நாட கத்தில் வசந்தவல்லி கதைத் தலைவியாவாள்.

வசந்தவல்லி தலைவன் உலா வருவதைக் காண் கின்றாள். காதல் கொள்கின்றாள். அவள் கொண்ட காதல் மணிக்கு மணி வளர்கிறது. அவளுடைய நினைவு முழுவதும் குற்றாலயீசர் மீதே நிலைத்து நிற்கிறது. காதல் காரணமாக மயங்கி விழுகின்றாள். அவள் தோழியர்கள் அவள் மயக்கத்தை நீக்க முயல்கின்றனர். இதனைக் கவிராயர், வசந்தவல்லி யின் காதல் என்ற பகுதியில்,

முனிபரவும் இனியானோ-வேத
முழுப்பலவின் கனிதானோ
கனியில் வைத்த செந்தேனோ-பெண்கள்
கருத்துருக்க வந்தானோ?
தினகரன்போற் சிவப்பழகும்-அவன்
திருமிடற்றிற் கறுப்பழகும்
பகைமணி இருகாதும்-கண்டால்
பாவையுந்தான் உருகாதோ? (பா.11:1) என்று

பாடுகின்றார். ***அகத்திய முனிவரைப் போற்றி பரவு கின்றவன். வேதங்கள் அனைத்தின் பொருளாகவும் அமைந்த இறையவன். அவன் அடியவர்களுக்காக உரு வத்திருமேனி காட்டி வருவது வேதசாரம். பெண்க ளின் கருத்துக்களை உருக்குவதற்கென்றே இப்படி***

வாழிடமாகக் கொண்டவர், அவர் பேரிலே ஆசை கொண்டவள் வசந்தவல்லி. அவளுடைய கைரேகை பார்த்துக் கொவ்வைக்கனி போன்று செம்மை கனிந்த வாயினாளான அழகிற் சிறந்த குறவஞ்சியானவள், வசந்தவல்லி அன்போடு அளித்த பழைய கூழினை உண்ட தன் வாயினால் குறியினை விரிவாகச் சொல்லு வாள் என்று கொச்சகக்கலிப்பாவில் (குறவஞ்சி நாட கம், பா.22, ப.115)

ஏழைபங்கர் செங்கைமழு வேற்றவர்குற் றாலர்வெற்பில்
வழிகொண்ட மோக வசந்தவல்லி கைபார்த்து
வீழிகொண்ட செங்கனிவாய் ***மிக்ககுற வஞ்சி****பழம்*
கூழையுண்ட வாயாற் குறியைவிண்டு சொல்வாளே.

எனக் கவிராயர் பாடுகிறார். மிக்ககுறவஞ்சி- அழகு மிக்க குறப்பெண் என்பதாம்.

அறம் வளர்க்கும் கை

முருகப்பெருமான் அருளால் வாய்பேசிப் புலமை பெற்ற குமரகுருபரர் துன்பம் நீக்கிய அவர் மீது கந்தர் கலிவெண்பா, கைலாயபுரத்திலுள்ள இறைவன் மீதுகைலைக் கலம்பகம், மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் முதலிய பல நூல்களை இயற்றியதோடு இறை யருள் வாய்க்கப்பெற்ற அவர் பல தலங்களுக்கும் சென்று சிவபெருமானை வழிபடத் தொடங்கினார். தில்லையம்பதிக்குச் சென்று அங்கு அவர் தங்கி யிருந்த காலத்தில், சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை ஆகிய சிற்றிலக்கியங் களை இயற்றியதோடு நீதிநெறி விளக்கம் என்ற நூலும் இயற்றியுள்ளார். இதில், மனிதர்கள் கடைப் பிடிக்க வேண்டிய முதன்மையான அறிவுரைகளாகக் கடவுள் வாழ்த்து உள்பட 102 செய்யுள்கள் உள. இதனைத் திருக்குறள் சாரம் என்று அறிஞர் போற் றுவர். நீதிநெறி என்பது அறநெறி. அதனைக் காட்டும் விளக்காக அமைந்தது என்பது பொருள். குமரகுரபரர் தம் செய்யுள் ஒன்றில்(பா.62) மனிதன் உலக வாழ்வில், ***ஒருவன் தன் குலத்தை விற்றுத் தேடும் பொருளும், உண்மையை விட்டுத் தேடும் செல் வமும், தான் நோற்கும் நோன்பைக் கைவிட்டுத் தன் உடலைப் பாதுகாத்துக் கொள்ளும் வாழ்க்கையும், தன் உரிமையை விற்று வயிறு நிறைப்பதும் ஆகிய இவை எவையுமே தன்னை அடையாதபடி தன்னை விழிப்புடன் காத்துக்கொள்வது சிறந்த அறமாகும்*** (தமிழ்ப்பிரியன், ப.63) என்று வலியுறுத்துகின்றார். திருவள்ளுவரும் அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில், ***ஒருவனுக்கு அறம் செய்தலைக் காட்டிலும், மேலான வாழ்வு. நன்மை, செல் வம், சிறப்பு, இன்பம் எதுவுமே இல்லை. அத்தருமத்தைச் செய்யாது விடுவானேயானால். அதனைக் காட்டிலும், மேலான கேடும் வேறு இல்லை*** (குறள்.32) என்று உலகுக்கு வலியுறுத்துகின்றார்.

மேற்குறித்த அறச் சிறப்புக்களையெல்லாம் செய்யும் குறிசொல்லும் குறத்திவழிக் குற்றாலநாதர் செய்துவரு கின்றார்.இதனைக் கவிராயர் பின்வரும் கண்ணிகளில்

மாறாமல் இருநிலத்தில் அறம் வளர்க்கும் கையே!
மனையறத்தால் அறம்பெருக்கித் திறம் வளர்க்கும் கையே (1)
வீறாக நவநிதியும் விளையும் இந்தக் கையே
மேன்மேலும் பாலமுதம் அளையும் இந்தக் கையே(2)
ஆறாத சனங்கள்பசி ஆற்றுமிந்தக் கையே
அணங்கைனையார் வணங்கிநித்தம் போற்றும்இந்தக் கையே (3)
பேறாக நன்னகரங் காக்கும் இந்தக் கையே
பிறவாத நெறியார்க்கே ஏற்கும் இந்தக் கையே. (4)

என்று பாடுகிறார் (குறவஞ்சி நாடகம், பா.23, ப.115-116). குற்றாலநாதர், இந்நிலவுலக மக்களுக்கு எல்லாக் காலத்தும் அறம் வளர்க்கும் கை, மனை யறம், நவநிதிகள் பெருக்கம், பாலமுதம் அளைவது, பசியாறாத சனங்களின் பசியாற்றுவது, தேவமாதர் ஒத்த பெண்கள் தினமும் வணங்குதல் ஆகியவற் றைச் சிறப்புடன் நிகழ்த்தும், பெறுதற்குரிய பெரும் பேறாக விளங்கி நிற்கும் திருக்குற்றால நகரத்தை காப்பதும் பிறவாத தன்மையுடைய குற்றாலநாதர் ஒருவருக்கே இந்தக் கையின் மேன்மை பொருத்த மாகும். எக்காலத்தும் தர்மம் சிதையாமல் வளமைச் சிறப்புப் பொருந்திய பாலும் சோறும் (பாலமுதம் அளையும்) அளிப்பவன் குற்றாலநாதரின் அருள் தன்மை.

வசந்தவல்லியின் கைரேகை பார்த்த குறவஞ்சி

அம்மையே! நின் கையிலே தோன்றும் குறியினைப் பார்த்தால் இந்தக் கையைப் பிடித்து மணவாளராக வரப் போகிறவர், எட்டுத் திசைகளையுமே தமக்குச் சொந்த மாக உடையவராவர் என்றே சொல்லலாம். வசந்தவல் லிக்கு, நீயோ இந்த உலகம் முழுமைக்குமே பேரரசி யாகத் திகழ்பவளாவாய். இந்தக் குறி ஒருபோதும் பொய்யாகாது என்று சொல்லிவிட்டு, முருகன், பிள்ளை யார், ஐயனார், சேவகன், சீவனோ, உயிரில் பொருளோ, தசவ தானியம், புன்செய்ப் பொருள்கள், கட்டி வராக வன் போன்ற எல்லாவற்றுக்கும் தெய்வவணக்கம் கூறு கிறாள் குறவஞ்சி (பா.25, ப.117)). பின்னர் சொல் லப் போகிறேன். ***குறளிப் பேய் வந்து என் வாயிலே சொல்லச் சொல்லி இடிக்கிறது. இனிக்குறி சொல்லுகி றேன் கேட்பாயாக*** என்கிறாள். இதனைக் கவிராயர்,

சொல்லக் கேளாய்குறி சொல்லக்கேளாய்-அம்மே
தோகையர்க் கரசேகுறி சொல்லக் கேளாய்
முல்லைப்பூங் குழலாளே நன்னகரில்வாழ்-முத்து
மோகனப் பசுங்கிளியே சொல்லக் கேளாய்
பல்லக்கே றுந்தெருவில் ஆனை நடத்தி-மணிப்
பணியா பரணம்பூண்ட பார்த்திபன் வந்தான்
செல்லப்பூங் கோதையேநீ பந்தடிக்கையில்-அவன்
சேனைகண்ட வெருட்சிபோற் காணுதே அம்மே.

(குறவஞ்சி நாடகம், பா.26) என்று பாடுகின்றார். மோகனம்-பிறரை வசமாக்குகிற கவர்ச்சித் தன்மை. ***குற்றாலத்தரசன் பவனிவந்தான். செல்வத்தில் வளர்ந்த பூங்கோதையே! நீ பந்தடித்துக் கொண்டிருக்கையிலே அவனுடைய படைகளைப் பார்த்ததனால் நின்பால் தோன்றிய அச்சத்தால் ஏற்பட்ட மயக்கம் போலக் குறிதோன்றுகிறது அம்மை*** (ப.120) என்று குறி சொல்லுகிறாள் குறத்தி, வசந்தவல்லிக்கு.

குறத்தி கேலிபேசுகிறாள்-கக்கத்தில் இடுக்குவாயோ?

நின் உள்ளத்தில் இடம்பெற்ற மன்னவர் திரிகூட நாதர்என்று குறத்தி சொன்னவுடனே மாணிக்க அணிகள் பூண்ட வசந்தவல்லி முகத்திலே நாணங் கொண்டு தலை கவிழ்ந்தாள். ***நன்னகரிலேயுள்ள ஈசர் உன்னை அணைவதற்கு விரை விலேயே வரப் போகிறார். இந்த நாணத்தின் வயணமெல்லாம் நாளைக்கு நானும் காணத் தான் போகிறேன். ஒரு கைந்நொடி நேரத்திற்குள்ளாக உனக்குப் பொன்னிற முடைய கொன்றைப்பூ மாலை உன் தோழியின் மூலம் வந்து விடுவதைக் காண்பாயாக. இனிமேல் உன் வெட்கத்தை எல்லாம் கக்கத்தில் இடுக் கிக்கொள்வாயோ அம்மே?*** (குறவஞ்சி நாடகம், பக். 123-124) என்று குறத்தி கேலிபேசுகிறாள். வயணம்- வேதம், பழமொழி. அதனைக் கேட்ட வசந்தவல்லி மனங்களிப்புற்று, தான் தேடி வைத்திருந்த ஆபரணம் அனைத்தையும் வசந்தவல்லி மகிழ்ச்சியுடன் குறவஞ் சிக்குக் கொடுத்தனுப்பினாள் இதனைக் கவிராயர்,

மன்னர்திரி கூடநாதர் என்னும் போதிலே-முகம்
மாணிக்க வசந்தவல்லி நாணிக் கவிழ்ந்தாள்(1)
நன்னகரில் ஈசருன்னை மேவவருவார்-இந்த
நாணமெல்லாம் நாளைநானும் காணவே போறேன(2)
கைந்நொடியில் பொன்னிதழி மாலைவருங்காண்-இனிக்
கக்கத்தில் இடுக்குவாயோ வெட்கத்தை அம்மே(3)
என்னுமொரு குறவஞ்சி தன்னை அழைத்தே-அவட்கு
ஈட்டுசரு வாபரணம் பூட்டினாளே (4) என்று

பாடுகின்றார். வசந்தவல்லி குறவஞ்சிக்குக் கொடுத்த ஆபரணங்கள் பற்றிய விளக்கம் இந்நூலின் *சிங்கன் சிங்கி* பகுதியில் இடம்பெறுகிறது.

முடிவுரை

குறிசொல்லும் பண்பாடு மரபிலக்கியங்களான சங்க இலக்கியந்தொட்டு வேரூன்றியிருப்பதனைத் தெளிவு படுத்தியும், குறவஞ்சி இலக்கியங்களில் திருக்குற்றா லக் குறவஞ்சி முதன்மையானது என்பதைச் சுட்டி யும், இக்குறவஞ்சியில் குறிசொல்லும் குறத்தி இயற்கை வளங்கள், தொழில்கள், மக்கள் மன ஒடுக்கமின்றி வாழ்தல் பற்றியும், அண்டைநாட்டு மொழிகள் அறிந்த வளாகவும், ஆடவர்களுக்கு வலது கையும், பெண் களுக்கு இடது கையும் பார்த்து கடந்தகால நிகழ்வு களைச் சொல்வதுடன், இப்பொழுது நிகழ் பலன் களையும் குறிசொல்லுகின்றாள் என்பதும், எதிர்காலப் பலன்களும், மனத்திலே எண்ணிய பலன்களும், உடலின் குறிப்பால் சொல்வதோடு கண்கள், பேச்சு முதலியவற்றானும் அறிந்து குறிசொல்லும் ஆற்ற லுடையவளாகக் குறத்தி இருந்தமை நிறுவப்பட்டது. குற்றாலயீசர் நாட்டில் மாதம் மும்மழை பெய்து, எங்கும் நெருங்கிக்கிடக்கக் காண்பதெல்லாம் வயல் களிலேயுள்ள கரும்பும் செந்நெல்லுமெனப் புகழ்ந்து பேசுகிறாள். தென்னாடு வளமிக்க நாடு என்பதும் உணர்த்தப்பட்டது.

பார்வை நூல்கள்

அமுதன் (க.ஆ.), *சிற்றிலக்கியங்கள், புதிய தமிழ் இலக்கிய வரலாறு (இடைக்கால இலக்கியம்) தொகுதி-2.* (ப.ஆ.) சிற்பி பாலசுப்பிரமணியன், நீல பத்மநாபன், புது டெல்லி: சாகித்திய அகாதெமி, 3 ஆம் பதிப்பு, 2019:257-289.

அருணாசலம், மு., *முன்னுரை, குறவஞ்சி : 1.பொய்யாமொழியீசர் குறவஞ்சி* (தத்துவலிங்கன்), 2. *காங்கேயன் குறவஞ்சி* (பொன்மணி செல்லப்பன்), 3. *சிக்கல் நவநீதேசுவர சுவாமி குறவஞ்சி* (சொக்கலிங்கம் பிள்ளை), 4. *மண்ணிப்படிக்கரை நீலகண்டர் குறவஞ்சி நாடகம்* (சாமிநாதய்யர்). (ப.ஆ.) 1. மு.அருணாசலம், 2-4. புலவர் இரா.இளங்குமரன். சென்னை: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 3 ஆம் பதிப்பு, 2022:1-38.

ஆசிரியர்குழு, *நர்மதாவின் தமிழ் அகராதி (Tamil-Tamil-English).* சென்னை: நர்மதா பதிப்பகம், 2018.

இரத்தின வேங்கடேசன் (க.ஆ.) *குறம் என்னும் குறவஞ்சி சிற்றிலக்கியச் சீர் (வலையுரைத் தொடர் தொகுப்பு).* தொகுப்பாசிரியர்:இன்பா, சிங்கப்பூர் : கவிமாலை வெளியீடு, முதற்பதிப்பு 2021:107-119.

இரத்தினசபாபதி, பி. (க.ஆ.) *குறவஞ்சி இலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும். சிற்றிலக்கியக் கட்டுரைகள் தொகுதி-1* . ந.உமாதேவி (ப.ஆ.). சிதம்பரம்:மெய்யப்பன் பதிப்பகம், முதற்பதிப்பு 2014:78-99.

கதிர் முருகு (உ.ஆ.), *சிறிய திருமடல் பெரிய திருமடல் மூலமும் உரையும்.* சென்னை: சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு, 2009.

கழகப் புலவர் குழுவினர், *கழகத் தமிழ் அகராதி* (1964). சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்., 101 ஆம் பதிப்பு, 2017.

கோவிந்தராச முதலியார், கா.ர. (உ.ஆ.), *பன்னிரு பாட்டியல் (மேற்கோள் சூத்திரங்களுடன்)* (1943). சென்னை:சென்னை, மறுபதிப்பு 1963.

சந்திரசேகரன், இரா., *தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்.* சென்னை: சாரதா பதிப்பகம், 4 ஆம் பதிப்பு, 2020/01.

செயராமன், ந.வீ., *சிற்றிலக்கியச் செல்வங்கள்.* சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம், முதற்பதிப்பு 2021.

தமிழண்ணல், *தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்.* மதுரை: செல்லப்பா பதிப்பகம், 6 ஆம் பதிப்பு, 2021.

தமிழ்ப்பிரியன் (உ.ஆ.), *குமரகுருபரர் அருளிய நீதிநெறி விளக்கம் (மூலமும் உரையும்)* பதிப்பாசிரியர்: சி.ஜெயக்குமார் சென்னை: அருணா பப்ளிகேஷன்ஸ், 2015.

புலியூர்க் கேசிகன் (உ.ஆ.), *ஐங்குறுநூறு மூலமும் உரையும்.* சென்னை: சாரதா பதிப்பகம், 5 ஆம் பதிப்பு, 2019/7.

புலியூர்க் கேசிகன் (உ.ஆ.), *திருக்குற்றாலக் குறவஞ்சி (தெளிவுரையுடன்)* (1960). சென்னை: பாரி நிலையம், மறுபதிப்பு, 2000:1-192

மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ.), *தொல்காப்பியம் மூலமும் உரையும்.* சென்னை: உமா பதிப்பகம், 2 ஆம் பதிப்பு, 2010.

வீரமாமுனிவர் (உ.ஆ.) *ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம் மூலமும் உரையும்.* கனம் ஜி.மெக்கென்ஜி காபன் அய்யர் (ப.ஆ.). ம.ள.ள.ஸ்ரீ.உ.ஸ்ரீநிவாச ராகவாசாரியாரால் பார்வை யிடப்பட்டது. சென்னை: அர்ச்.சூசையப்பர் அச்சுக்கூடம், 2 ஆம் பதிப்பு, 1891.

We are such stuff as dreams are made on, and our little life is rounded with a sleep.

- William Shakespeare in *The Tempest*

ISSN 2320-4842

கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்

இரா. கலாவதி
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்) (Ref.No:005041/Ph.D.K8/Tamil/P.T./April 2019/ Confirm., dt:05.03.2022), தமிழ்த்துறை, மா.மன்னர் கல்லூரி (தன்னாட்சி), புதுக்கோட்டை
நெறியாளர்: **முனைவர் சு. மாதவன்**
தமிழ்த்துறைத் தலைவர், இராஜேஸ்வரி வேதாச்சலம் அரசு கலைக்கல்லூரி, செங்கல்பட்டு
இணை நெறியாளர்: **முனைவர் ஆ. செந்தாமரைக்கண்ணி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மா.மன்னர் கல்லூரி (தன்னாட்சி), புதுக்கோட்டை
(Affiliated to Bharathidasan University)

ஆய்வுச்சுருக்கம்

இக்கால இலக்கியங்கள் அனைத்துமே சமூகத்தைச் சீரமைக்கும் நோக்கோடே படைக்கப்படுகின்றன. இவ்வகை யில் கவிமதி சோலச்சியின் கவிதைகளும் சமூகச் சிக்கல்களைக் கோபாவேசத்தோடு, ஒரு சில சிக்கல்களை மட்டும் ஆய்வு நோக்கம் கருதி, சமூகச்சிக்கல்கள், மூடநம்பிக்கை, அரசியல், கட்டுண்ட பெண்களின் நிலை ஆகியவற்றை எடுத்துரைப்பதோடு தீர்வுகளையும் முன்வைக்கின்றன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

கருவிச்சொற்கள் (Keywords): காந்தி கனவு, புதுமைப்பெண், பெண்ணியம், பெண்ணின் பெருமை, மகளிர் தினம்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

'விரிசல்' கவிதையின் உள்ளடக்கங்கள்

ஆசிரியரின் இரண்டாம் கவிதைத் தொகுப்பு நூல் **'விரிசல்'** அனைத்துக் கவிதைகளும் சமூகம் சார்ந்தவையே. அழகிய சிநேகிதம் என்பது பேனாவைப் பற்றிய கவிதை. நண்பனைப் பற்றி பாடுவதைப்போல் ஆரம்பித்து கடைசியில் பேனாவைச் சொல்கிறார். இதில் நான்கு உத்தி நிலைமை கையாண்டு உள்ளார். இந்த உத்தி வாசகர்களைக் கவரும்வகையில் உள்ளது. இதில் எழுதுகோலை அவர் எவ்வாறு எவ்வளவு நேசிக்கிறார் என்பது புரியும்.

காற்புள்ளி

இக்கவிதை மூடநம்பிக்கைகளைப் பறைசாற்றுகின்றது. மக்கள் இன்னும் இருட்டில்தான் வாழ்கின்றனர் என்று சன சமூக அவலத்தைச் சுட்டிச் செல்கின்றது.

தலையில் தேய்க்க
எண்ணையில்லை!
விநாயகருக்கு விளக்கேற்று
சோசியக்காரனின் சூழ்ச்சி
இருட்டில் வீடு
வெளிச்சத்தில் விநாயகர்
கல்சிலைக்கு
காஞ்சிபுரப் பட்டு
கந்தத் துணியின்றி
கடைக்கோடியில் தாய்
சிற்பியின் சிலைகளுக்கு
சந்தனக்காப்பு
மறுவாழ்வின்றி தவிக்கும்
விதவைகளுக்கு யார் பாதுகாப்பு
தோழா!
மூட நம்பிக்கைக்கு
முற்றுப்புள்ளியிடு
முறையான நம்பிக்கைக்கு
காற்புள்ளியிடு...! (ப.23) என இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கிறார்.

பழைய கீறலோடு

அரசியல்வாதிகளின் செயல்பாடுகள், மக்களின் அவலம், கேட்பாரற்றுக் கிடக்கும் கிராமங்கள் தேர்தல் நேரங்

களில் செல்லப்பிள்ளையாக மாறும் அவலம் ஆகியன இக்கவிதையில் சுட்டப்பெறுகின்றன.

உறங்கிக் கிடக்கும்
மண் சாலைகளும்
உயிர் பெற்றுவிடும்
புழுதிகளோடு!
ஒற்றையடிப்பாதை ஊருக்கு
இனி வாகன வருகை தான்
வண்டிப் பாதையிலும் இனி
கச்சேரிதான்
எப்போதோ வந்து சென்ற வாகனங்கள்
அவ்வப்போது வந்து போகும்.
ஓட்டுச் சுவரும் பல வண்ணங்களுடன்
நகரத்து ஆடுமாடுகளுக்கு நல்ல தீனி
சுவரொட்டியால் (ப.24)

குருதி

இப்போது நான்
நடத்திருக்கும்
அந்தப் படுகொலை
வழியும் குருதியோடு
வாகனத்தில்
ஆற்று நீரில்
அள்ளிய மணல் (ப.29) என்ற கவிதை ஆற்றுமணல் கொள்ளையை அம்பலப்படுத்தி ஈரமில்லாத கொள்ளைக்காரர்களை நினைவூட்டுகின்றது.

பிறப்பு ஒரு முறை

போராடு காயமின்றி
ஒத்துப்போகவில்லையெனில்
ஒதுங்கிவிடு
படுகொலை தான்
தீர்வு யெனில்
பிரபஞ்சம் மட்டுமே
எஞ்சி இருக்கும்.
மனம் ஒத்துப்போனால்
வாழட்டும்
பிறப்பு ஒருமுறை
உயிர் எடுக்க வேண்டாம்
தொடரட்டும் தலைமுறை (ப.32)

உலகத்தில் சர்வாதிகாரப் போக்குள்ளதால் இறப்பு நிகழ்கின்றது.பதின்பருவப் பிள்ளைகளும் தற்கொலை செய்வது வழக்கமாக இருக்கிறது. கடவுள் கொடுத்த உயிரை எடுக்க யாருக்கும் அதிகாரம் இல்லை எனச் சமூகத்துக்கு அறிவுறுத்துகிறார் கவிஞர்.

மதங்களை கடந்து வா!

கடவுள் விவாதத்திற்கு உரியது அன்று
இயற்கையே ரசிப்பது
இன்பத்திற்கு உரியது
இல்லாத ஒன்றால்
இருப்பவர்கள் அழியலாமா
இளைஞன் நீ
இமைமூடி தூங்கலாமா
இயற்கை சக்திக்கு
மனிதசக்தி வெறும் புள்ளிதான்
இயற்கை மதத்தில்
சாத்யத்தில் மூழ்கி இருந்தால்
நீர் நெருங்காது
காற்று நம்மை காணாது
நிலம் நம்மை ஏற்காது
தோழா
வெற்றுச் சங்கிலியை
விரட்டி விட்டு
மனிதச் சங்கிலிக்கு கை கொடு
மனிதம் வளர்ப்போம் (ப.49)

இதில் சாதி வெறியோடுள்ள நம் சமூக இளைஞர்களை இருகரம் ஏந்தி மனிதம் வளர்க்க வரவேற்கிறார் கவிஞர். சாதிகள் வெறும் இயற்கை அல்ல. மனிதன் தன் கவுரவத்திற்கு உண்டாக்கப்பட்ட தூண். அதை உடைக்கவேண்டும் என்கிறார்! ***சாதிகள் இல்லையடி பாப்பா*** என்ற பாரதியின் அடிகள் நம்மை நினைவு கூர வைக்கின்றன.

கருத்தடை மாத்திரை

உடலை விட்டு
ஆவி போனால்
வீணாய் போகும்
நீரை விட்டு
ஆவி போனால்
மழையாகும்
தன்னை வருத்தி
உழைத்த போதும்
சுயநலமாய் மனிதன்
தான் வருந்தி அழுதபோகும்
பொது நலமாய் மழை
கடகடனு வளரும்
யூகலிப்ட்ஸ்சு
மழை மேகத்தின்
கருத்தடை மாத்திரை (ப.52)

ஒவ்வொரு நாளும் நாம் சந்திக்கும் சமூகமும் மக்களும் மிகவும் மோசமானது பாலிதின்களை நாம் அப்படியே போடுவதால் மண் மக்கும் நிலை இல்லை. நீர் வளம் குன்றிவிடும்; மண் வளம் மங்கிப்போகும். நீர் இல்லையேல் நிலம் பாதிப்படையும்; இயற்கை அழியும்போது நிலத்தடி நீர் பாதிக்கும். இந்த வகை நச்சுக்கள் நம் நிலங்களின் கருத்தடை மாத்திரை யாகின்றன.

விரிசல்

யதார்த்தமாய் வாசிக்கிறேன்
உற்றுப் பார்க்கிறேன்
அன்றொரு நாள்
விரிசல்விடத் தொடங்குகிறது
அடைக்க முயற்சிக்கிறேன்
தொடர்கதையாகிறது விரிசல் (ப.76)

மனித வாழ்க்கையில் ஒவ்வோர் இடமும் விரிசலோடுதான் காணப்படுகிறது. பொதுவாக வாழ்க்கை, சமூகம், உறவுகள் எல்லாமே விரிசலோடும், கசப்பு

ISSN 2320-4842

களோடும் கனத்த இதயங்களோடும் நகர்கின்றன. ஆனாலும், வாழ்கிறோம் ஏதோ ஒரு நம்பிக்கை யோடு; தன்னம்பிக்கை மிகுந்த வாழ்க்கை மனிதனை முன்னிறுத்திச் செல்லும் என்ற நம்பிக்கையை இக் கவிதை விதைக்கின்றது.

கவிமதி சோலச்சியின் கவிதைகளில் சமூகச் சிக்கல் கள் ஏராளமாக இடம்பெற்றுள்ளன. அரசியல், சமூகம், குடும்ப உறவுகள் அரசியல் சகாக்கள், உறவுகளின் பின்னணி வாழும்வரை நீ நீயாக வாழக் கற்றுக் கொள்; ஒத்து ஊத கற்றுக்கொண்டால் நீ அடிமை யாக வாழ நேரிடும் என்றும் சமூகத்தின் கூக்குரல் களை இதில் காட்டியுள்ளார். காசுக்கு ஓட்டு விற்கப் படும் அவலங்களும் சொல்லப்படுகின்றன.

மேலும், அரசியல், ஆன்மீகம், கட்டுண்ட பெண்கள் நிலை, ஒடுக்கப்பட்ட சமூகம், பரத்தையர் சிக்கல், கற்பு பற்றிய புதிய மதிப்பீடுகளைத் தன் கவிதையின் மூலம் உருவாக்கும் போக்கு ஆகியன இக்கவிதை களில் காணக்கிடக்கின்றன. மானுட சமூகத்தின் அவ லங்களை எடுத்துக்கூறி மக்களை விழிப்படையச் செய்யும் நோக்கும் போக்கும் உடையனவாக இத் தொகுப்பின் கவிதைகள் விளங்குகின்றன.

துணைநூற் பட்டியல்

அப்துல் காதர். *மீராவின் கனவுகள்.* சிவகங்கை: அன்னம் வெளியீடு, முதற்பதிப்பு -1987.

அப்துல் ரகுமான். *புதுக்கவிதையில் குறியீடு.* சிவகங்கை: செல்மா வெளியீடு, முதற்பதிப்பு -1990.

இராசா, கி. *பெண்ணும் பெண்மையும்.* எத்திராஜ் கல்லூரி வெளியீடு, சென்னை, நியூசெஞ்சுரி பப்ளிஷர், முதற்பதிப்பு - 2008.

சோலாச்சி, கவிமதி. *விரிசல்.* சென்னை: மேன்மை வெளியீடு, கேபிடல் இம்ப்ரசன், முதற்பதிப்பு - 2017.

103ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்நூலில் பயின்றுள்ள ஒழுக்க விதிகளைப் பின்பற் றினோர்தம் வாழ்வில் நன்மை கிட்டும் என்பது திண்ணம்.

துணைநூற் பட்டியல்

கந்தசாமி, சோ.ந., *செவ்வியல் இலக்கிய ஆய்வுகள்.* சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம், முதற்பதிப்பு, 2011.

கௌமாரீஸ்வரி, எஸ்.(ப.ஆ.), *தொல்காப்பியம் பொருளதிகாரம் (இளம். உரை).* சென்னை: சாரதா பதிப்பகம், 14ஆம் பதிப்பு, 2016.:ப.311.

கௌமாரீஸ்வரி,எஸ்.(ப.ஆ.), *நல்லாதனார் இயற்றிய திரிகடுகம் மூலமும் உரையும்.* சென்னை: சாரதா பதிப்பகம், 6 ஆம் பதிப்பு, 2012.

கோபால்,சி.பா. (iii. தீர்க்க நிகாயம்-51) *புத்தர் பொன்மொழி களும் மானிட வாழ்வியல் சிந்தனைகளும்.* கோயம்புத்தூர்: இலட்சுமி பதிப்பகம், 2001:20 (51. கணவன்-மனைவி: மனைவி யிடம் மதிப்பு காட்டுவது; அவளோடு இணங்கியிருப்பது; பரஸ்திரியை நாடாதிருப்பது; மனைவியிடம் பொறுப்பு கொடுப் பது; அவளுக்கு ஆடையணிகள் தருவது- இந்த ஐந்து வழி களின் மூலம் மனைவியைக் கணவன் போற்றல் வேண்டும்).

கோபாலகிருஷ்ணமாச்சாரியார், வை.மு.(உ.ஆ.).*கம்பராமாய ணம்: அயோத்தியா காண்டம்.* சென்னை: உமா பதிப்பகம், 3 ஆம் பதிப்பு, 2017.

சண்முகம் பிள்ளை, மு. (ப.ஆ.), *தமிழ்-தமிழ் அகர முதலி* (1985). தமிழ்நாட்டு அரசு: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வி யியல் பணிகள் கழகம், 4ஆம் மறுபதிப்பு, 2022:689 (நெறி). 780 (புணை)

சிங்காரவேலு முதலியார், ஆ., *அபிதான சிந்தாமணி (செம் பதிப்பு).* சென்னை: சாரதா பதிப்பகம், 16ஆம் பதிப்பு, 2018.

சுப்பிரமணியம் பிள்ளை, கா., *திருக்குறள் மூலமும் உரையும்.* சென்னை: பூம்புகார் பதிப்பகம், முதற்பதிப்பு, 2012.

தமிழண்ணல் (உ.ஆ.) *தொல்காப்பியம் மூலமும் கருத்துரை யும்.* மதுரை: செல்லப்பா பதிப்பகம், 6ஆம் பதிப்பு, 2021: 385. நூ.1133.

தமிழமுதன், புலவர் (உ.ஆ.). *சீவகசிந்தாமணி (பகுதி-2).* சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம், முதற்பதிப்பு 2016 (கனக மாலையார் இலம்பகம்-7:1729/4).

பாலசுப்பிரமணியன், சிற்பி. & நீல பத்மநாபன், *தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி-1.* சென்னை: சாகித்திய அகாதெமி, 3 ஆம் பதிப்பு, 2019.

பொற்கோ, *ஆராய்ச்சி நெறிமுறைகள்.* சென்னை: ஐந்திணைப் பதிப்பகம், 7 ஆம் பதிப்ப, 2016.

ராமகிருஷ்ணன், எஸ். (ப.ஆ.), *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி-தமிழ்-தமிழ்-ஆங்கிலம்.* சென்னை:க்ரியா, மறுபதிப்பு, 2018:1021

வேங்கடசாமி நாட்டார், ந.மு. *சிலப்பதிகாரம்: மூலமும் உரை யும்.* சென்னை: ராமையா பதிப்பகம், 2005:50.

ஜெயக்குமார், சி. (ப.ஆ.), *திருக்குறள் மூலமும் உரையும் (பரிமேலழகர் உரை).* சென்னை:அருணா பப்ளிகேஷன்ஸ், முதற்பதிப்பு, 2020:177.

Be not afraid of greatness: some are born great, some achieve greatness and some have greatness thrust upon them.

- William Shakespeare in *Twelfth Night*

ISSN 2320-4842

தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் வாகைத்திணையில் பாடவேறுபாடுகள்

கு. செந்தமிழ்ச்செல்வி
முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref.No:25806/Ph.D.K8/Tamil/F.T./April 2018/Confirm., dt:19.04.2021)
நெறியாளர்: **முனைவர் தே. வீ. சுமதி**
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை (CDOE), பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி
(Affiliated to Bharathidasan University)

ஆய்வுச்சுருக்கம்

தொல்காப்பியம் காலந்தோறும் உரைகள் பல கண்டுள்ளது. நூலாசிரியர் கூறாது விட்டுச் சென்ற பல பகுதி களையும், சுருங்கக் கூறிச்சென்ற பல பகுதிகளையும் நாம் அறிய உதவுவன உரைகளேயாகும். தொல்காப்பியத்தைப் பொறுத்த மட்டில் இப்பணியைத் தொடங்கிவைத்த பெருமைக்குரியவர் இளம்பூரணர். அவரைத் தொடர்ந்து நச்சினாரக்கினி யரைக் கூறலாம். இவ்விரு உரையாசிரியர்களின் தொல்காப்பிய உரையிலும் ஒற்றுமைப் பண்புகள் காணப்படினும் பாடவேறுபாடுகளும் உரைவேறுபாடுகளுமே மிகுந்து காணப்படுகின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத் திணையியல் வாகைத்திணையிலுள்ள பாடவேறுபாடுகள் பற்றிய ஆய்வே இக்கட்டுரை.

கருவிச்சொற்கள் (Keywords): உரைவேறுபாடு, துறை, பாடவேறுபாடு, வாகைத்திணை.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

பாடவேறுபாடு

பாடவேறுபாடு என்பது மூலபாடத்திலிருந்து எழுத்தாலும் சொல்லாலும் வேறுபட்டு நிற்பதாகும். பாடவேறு பாடு பற்றிப் பலரும் பல காலகட்டங்களில் ஆராய்ந்துள்ளனர் என்பதைப் பின்வரும் கூற்றுக்கள்வழி அறிய லாம்: ***பாடவேறுபாடு என்பது பாட்டின் வடிவம் பற்றியதோர் கூறுபாடு*** (திருக்குறள் ஆராய்ச்சி,1- யாப்பு அமைதியும் பாடவேறுபாடும், நூன்முகம்.Vlll). ***பாடலின் கருத்தை மாற்றுவதாகவோ, தொடரின் பொருட் க்கை திருப்புவதாகவோ அமைவது பாடவேறுபாடு*** ஆகும் (மூலபாட ஆய்வியல், ப. 32).

வாகைத் திணையும் துறைகளும்

தொல்காப்பியர் கருத்துப்படி வாகைத்திணை என்பது வாழ்க்கையின் மேம்பட்ட வெற்றி நிலையைக் குறிக் கும். பகைவரை வென்று அதற்கு அறிகுறியாக வாகை மாலையைச் சூடுவது வாகைத் திணையாகும். இவ்வாகைத் திணை பாலை எனும் அகத்திணைக்குப் புறனாகும். வாகைத்திணையில் பதினெண துறைகள் உள்ளமையை,

கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும்
ஏரோர் களவழி அன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியுந் தேரார்
வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்
ஒன்றிய மரபிற் பின்தேர்க் குரவையும் ந
பெரும்பகை தாங்கும் வேலி னானும்
அரும்பகை தாங்கும் ஆற்ற லானும்
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்
ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றோடு புணர்த்துத்
தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி யானும்
ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கினும்
பகட்டி னானும் மாவி னானுந்
துகட்டபு சிறப்பின் சான்றோர் பக்கமும்
கடிமனை நீத்த பாலின் கண்ணும்
எட்டுவகை நுதலிய அவையகத் தானும்
கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வண்புகழ்க் கொடையி னானும்

பிழைத்தோர்த் தாங்கும் காவ லானும்
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொட புணர்ந்த அகற்சி யானும்
காமம் நீத்த பாலி னானுமென்று
இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே ***(தொல். பொருள். புறம்.இளம்.நு.17.1-24)*** என்ற நூற்பாவால் அறியலாம். இந்த வாகைத் திணையின் பதினெட்டுத் துறைகளில் இளம்பூரணர் உரையிலிருந்து நச்சினார்க்கினியர் உரை யில் மூன்று துறைகளிலும், துறைகளின் எண்ணிக்கை யைக் குறிக்கும் ஓர் இடத்திலும் என மொத்தம் நான்கு இடங்களில் பாடவேறுபாடு காணமுடிகிறது. அவை,

பாசறைக் காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும் / பாசறைக் காதலினொன்றிக் கண்ணிய மரபினும்
கடிமனை நீத்த பாலின் கண்ணும்/கட்டி னீத்த பாலி னானும்
இடையில் வண்புகழ்க் கொடையி னானும் / இடையில் வண்புகழ்க் கொடைமை யானும்
இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே / இருபாற் பட்ட ஒன்பதிற்றுத் துறைத்தே என்பதாகும்.
பாசறைக் காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும் / பாசறைக் காதலி னொன்றிக் கண்ணிய மரபினும்

இத்துறையில் இளம்பூரணர் கூறியுள்ள வகையினும் என்ற சொல்லை நச்சினார்க்கினியர் மரபினும் என்று பயன்படுத்தியுள்ளார். ***வகை*** என்பதற்குத் தமிழ் தமிழ் அகரமுதலி ***கூறுபாடு, சாதியினம், இனம், முறை, வழி, காரணம், தந்திரம், வலிமை, தன்மை, வாழ்க்கைக்குரிய பொருள் முதலியன, வணிக முதல், இடம், உறுப்பு, குறுந் தெரு, மனையின் பகுப்பு, விவரம், கூட்டப்படும் எண் கள்*** (தமிழ் தமிழ் அகரமுதலி.ப. 929) என்றும், ***மரபு*** என்பதற்கு ***முறைமை, சான்றோரின் சொல்வழக்கு முறை, பழைமை, வமிசம், பாரம்பரியம், இயல்பு, இலக்கணம், நல் லொழுக்கம், பெருமை, பாடு, நியாயம், வழிபாடு, பருவம்*** (தமிழ் தமிழ் அகரமுதலி.ப. 852) என்றும் பொருள் உரைக்கின்றது.

பாசறைக் காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும் என இளம்பூரணரும் ***பாசறைக் காதலி னொன்றிக் கண்ணிய மரபினும்*** என நச்சினார்க்கினியரும் இத்துறையில் பாடவேறுபாடு கொண்டுள்ளனர். இதற்கு முறையே ***போரின் து கொண்ட காதலால் பொருந்தி கருதிய போர்நிலை வகை*** என்றும்***, பாசறைக் கண் காதலால் திரிவில்லாத மனத்தாகி நிகழ்த்தும் போர்த்தொழில் கருதிய மரபு*** என்றும் விளக்கப்பட்டுள்ளன. அதாவது வகையினும் மரபினும் எனும் சொற்கள்

கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும் (தொல். பொருள்.புறம்.இளம்.நூ.17.1-2)

கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலி னொன்றிக் கண்ணிய மரபினும் ***(தொல். பொருள்.புறம்.நச்சர்.நூ.2.21-1)*** ஆகிய அடிகளில் பாட வேறுபாட்டுடன் இருப்பதைக் காணமுடிகிறது .இதில் உரை வேறுபாடும் அமைந்துள்ளன.

கடிமனை நீத்த பாலின் கண்ணும் / கட்டி னீத்த பாலி னானும்

வாகைத்திணையின் துறைகளுள் ஒன்றான ***கடிமனை நீத்த பாலின் கண்ணும்*** என்பதற்கு இளம்பூரணர் ***பிறர் மனை நயவாமை மேல்*** என்று பொருளுரைக்கின்றார். ஆனால் இத்துறையை நச்சினார்க்கினியர் ***கட்டி னீத்த பாலி னானும்*** என மாற்றி ***அரசன் அரச உரிமையைக் கைவிட்ட பகுதியானும்*** என்று பொருளுரைக்கின்றார். இப்பாடவேறுபாட்டினை,

கடிமனை நீத்த பாலின் கண்ணும்(தொல். பொருள். புறம்.இளம்.நூ.17.16)

கட்டி னீத்த பாலி னானும் (தொல். பொருள். புறம். நச்சர்.நூ.21.16) என்ற அடிகளின் மூலம் அறியலாம் . இதில் பாடவேறுபாடும் உரை வேறுபாடும் காணப்படு கின்றன.

இடையில் வண்புகழ் கொடையி னானும் / இடையில் வண்புகழ்க் கொடைமை யானும்

இதில் இளம்பூரணர் ***கொடை*** என்று கூறிய சொல்லை நச்சினார்க்கினியர் ***கொடைமை*** எனக் கூறியுள்ளார். ***கொடை*** என்பதற்கு ***ஈகம், தியாகம், ஈகை, உதவிப் பொருள், கைக்கொண்ட ஆநிரையை இரவலர்க்கு வரை யாத கொடுக்கும் புறத்துறை, ஊர்த்தேவதைக்கு மூன்று நாள் செய்யும் திருவிழா, வசவு, அடி*** (தமிழ் தமிழ் அகரமுதலி.ப.387)என்றும், ***கொடைமை*** என்பதற்கு ***கொடைத்தொழில்*** (தமிழ் தமிழ் அகரமுதலி.ப. 387) என்றும் தமிழ் தமிழ் அகரமுதலி பொருள் உரைக் கின்றது.

இடையில் வண்புகழ் கொடையி னானும் என்பதற்கு இளம்பூரணர் ***இடைதல் இல்லாத வளவிய புகழினை தரும் கொடை*** என்று பொருளுரைக்கின்றார். ஆனால் ***இடையில் வண்புகழ் கொடைமை யானும்*** எனக் குறிப் பிடும் நச்சினார்க்கினியர் ***இடையீடு இல்லாத வண்புகழைப் பயக்கும் கொடை*** என்று அதற்கு விளக்கம் தருகிறார். இதில் அமைந்துள்ள வேறுபாட்டினைக் கொடையின கொடைமையான் எனச் சொல் நிலையில் மாற்றம் இருப்பினும்,

இடையில் வண்புகழ்க் கொடையி னானும் (தொல். பொருள்.புறம்.இளம்.நூ.17.19)

இடையில் வண்புகழ்க் கொடைமை யானும்(தொல். பொருள்.புறம்.நச்சர்.நூ.21.19) எனும் ஈரடிகளும் ஒரு பொருளையே குறித்து நிற்கின்றன எனலாம்.

இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே / இருபாற் பட்ட ஒன்பதிற்றுத் துறைத்தே

வாகைத்திணையின் துறைகளுள் ஒன்றான ***இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே*** என்பதற்கு இளம்பூரணர் ***இரண்டு கூறுபட்ட ஒன்பது துறைகளை உடையது*** என்று பொருளுரைக்கின்றார். ஆனால் இத்துறையை ***இருபாற் பட்ட ஒன்பதிற்றுத் துறைத்தே*** எனக் குறிப்பிடும் நச்சினார்க்கினியர் ***முன்னர் ஒன்பதும் பின்னர் ஒன்பது மாக இரண்டுகூறுபட்டபதினெட்டுத் துறையினை உடையது***

என்று உரையிலும் வேறுபட்டுப் பொருளுரைக்கிறார். இவ்வேறுபாட்டை,

இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே (தொல். பொருள். புறம்.இளம்.நூ.17.24)
இருபாற் பட்ட ஒன்பதிற்று துறைத்தே (தொல். பொருள். புறம்.நச்சர்.நூ.21.24) எனும் அடிகள் சுட்டி நிற்கின்றன.

முடிவுரை

மேற்கூறப்பட்டுள்ள செய்திகளின் மூலம் அரசர் வாகை மாலை சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணை என்பதையும் இதன் பதினெட்டு துறைகளில் மூன்று துறைகளிலும் எண்ணிக்கையில் ஓர் இடத்திலும் நச்சினார்க்கினியர் பாட வேறுபாடு கொண்டுள்ளார் என்பதையும், அப்பாடவேறுபாட்டினால் உரை வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன என்பதையும் நம்மால் அறியமுடிகிறது.

துணைநூற் பட்டியல்

இளம்பூரணர் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், பதினான்காம் பதிப்பு, 2016

சிவலிங்கனார்,ஆ. (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மீள்பதிப்பு, 2015.

சோமசுந்தரபாரதியார், நாவலர். ச., தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல்.

நச்சினார்க்கினியர் (உ.ஆ), சி.கணேசையர் (உ.வி), நா.பொன்னையா (ப.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், சுன்னாகம் திருமகள் அழுத்தகம், 1948.

பழனியப்பன், வெ. (ஆ), தமிழ் நூல்களில் பாட வேறுபாடுகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு 1990.

விநாயகமூர்த்தி, அ. (ஆ), மூலபாட ஆய்வியல், பாலமுருகன் பதிப்பகம், மதுரை.

வையாபுரிப்பிள்ளை,எஸ். (ப.ஆ.), திவ்யப் பிரபந்தம் முதலாயிரம், சாது அச்சுக்கூடம், சென்னை, முதற்பதிப்பு, 1955.

100ஆம் பக்கத் தொடர்ச்சி

துணைநூற் பட்டியல்

ஆனந்தன், சு., *தமிழ் இலக்கிய வரலாறு.* திருச்சி: கண்மணி பதிப்பகம், 2 ஆம் பதிப்பு, 2002.

இராமசாமி, ஆ.வே. *திருக்குறள் எளிய தெளிவுரையும் பொன்மொழியும்.* திருச்சிராப்பள்ளி: வல்வில் அச்சகம், 2012.

சடையப்பன், சு., *பெரியபுராணம்-சிவனடியார் அறுபத்துமூவர் வரலாறு* (*தொகையடியார் ஒன்பதின்மர் விளக்கத்துடன்*). சென்னை: அருணா பப்ளிகேஷன்ஸ், 3 ஆம் பதிப்பு, 2022.

சிவகாமசுந்தரி,சு., *அறம் வெல்லும்.* கோயம்புத்தூர்: நவஜோதி அச்சகம் ஆண்டு இல்லை.

தமிழ்ப்பிரியன் (உ.ஆ.), *குமரகுருபரர்அருளியநீதிநெறி விளக்கம் (மூலமும் உரையும்).* சென்னை: அருணா பப்ளிகேஷன்ஸ், முதற்பதிப்பு, 2015.

பாலசுப்பிரமணியன், சிற்பி. & நீல பத்மநாபன், *தமிழ் இலக்கியவரலாறு தொகுதி-2.* சென்னை: சாகித்திய அகாதெமி, 3 ஆம் பதிப்பு, 2019.

மாணிக்கம், ஆ. (உ.ஆ.), *பன்னிரு திருமுறைகள் (மூலமும் உரையும்) தொகுதி 19 (பாகம் 1), 21 (பாகம் 3), 23 (பாகம் 5),* சென்னை: வர்த்தமானன் பதிப்பகம், புதிய திருத்திய பதிப்பு 2010.

மூர்த்தி, அ.கி., *சைவசித்தாந்த அகராதி.* சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், முதற்பதிப்பு, 1998.

வேங்கடசாமி நாட்டார், ந.மு., *நிதி நூல்கள்: நறுந்தொகை* (பக்.109-140). (ப.ஆ.) கௌமாரீஸ்வரி, சென்னை: சாரதா பதிப்பகம், 2 ஆம் பதிப்பு 2019/7.

(123ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலுமி கப்பலை இயக்கு வதற்கும் சரியான திசையை நோக்கிச் செல்வதற்கும் கலங்கரைவிளக்கம் இன்றியமையாதது. அவ்வாறே மனித வாழ்விற்கு நீதி இலக்கியங்கள் கலங்கரை விளக்காக உள்ளன.

சான்றெண் விளக்கம்

1. நான்மணிக்கடிகை பாட்டும் உரையும் பக். 13
2. மேலது பக். 15
3. மேலது பக். 50
4. மேலது பக். 51
5. வளமான வாழ்விற்கு தத்துவ சிந்தனைகள் பக். 45, 50, 53, 57
6. நான்மணிக்கடிகை பாட்டும் உரையும் பக்.18
7. பழமொழிநானூறு பக். 31
8. மேலது பக். 19
9. மேலது பக். 18
10. மேலது பக். 13

துணைநூற்பட்டியல்

டாக்டர் வரதராசனார்.மு, திருக்குறள் தெளிவுரை, மு.ப.1949, 500வது பதிப்பு-2021, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட். சென்னை.

சிதம்பரனார்.சாமி (உரையாசிரியர்) நான்மணிக்கடிகை (பாட்டும் உரையும்), மு.ப.டிசம்பர் 2010, சாரதா பதிப்பகம், சென்னை.

புலியூர் கேசிகன் (தெளிவுரை) பழமொழிநானூறு (தெளிவான உரையுடன்) மு.ப.டிசம்பர் — 2017, ஏ.கே.எஸ். புக்ஸ் வேர்ல்டு, சென்னை-.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்கள், ஸ்ரீ தனலெட்சுமி புத்தக நிலைய அச்சகம், சென்னை.

சு.ஆறுமுகம், இன்னும் எத்தனைக் காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, மு.ப அக்டோபர் 2018, ஆச்சி பதிப்பகம் (பால்கன் டைம்ஸ்), நன்னிலம்.

ISSN 2320-4842

நீதி இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் அறங்கள்

சு. ஆறுமுகம்
முனைவர் பட்ட ஆய்வாளர், பெரியார் சிந்தனை உயராய்வு மய்யம்
பெரியார் மணியம்மை அறிவியல் & தொழில் நுட்ப நிறுவனம், வல்லம், தஞ்சை
நெறியாளர்: **முனைவர் ந. லெனின்**
உதவிப்பேராசிரியர் (SS), மொழிகள் துறை, பெரியார் மணியம்மை அறிவியல் & தொழில் நுட்ப நிறுவனம், வல்லம், தஞ்சை
துணை நெறியாளர்: **முனைவர் தெ. வெற்றிச்செல்வன்**
இணைப்பேராசிரியர், அயலகத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை

ஆய்வுச்சுருக்கம்

முன்னுரை-திருக்குறளில்-வாழ்வியல் அறங்கள்-நான்மணிக்கடிகையில் வாழ்வியல் அறங்கள்-ஒண்ணா இருக்க கத்துக்கனும்-வாழைக்குத்தான் ஈன்ற காய் கூற்றம் பெண்கள் கணவருடன் ஒன்றுபட்டு வாழ்தல்-அறிவு குறித்த சாக்ரடீஸ் சிந்தனைகள்-பழமொழியில் வாழ்வியல் அறங்கள்-வாழ்விலே உறுதி வேண்டும்-உயர்ந்தவரை உயர்ந்தவரே அறிவார்-மூடர்களின் உறவு கூடாது-அறிவு ஆடை போன்றது-முடிவுரை.

தரவுச் சொற்கள்: ஒரீஇ-வாள்நுதல்-காமுறுவர்-வழியெஞ்சல்-கழிமடம்-இசைநிறீ.

முன்னுரை

உலகளாவிய அளவில் தமிழுக்குப் பெருமை திருக்குறளைப் பெற்றமையால் உண்டாயிற்று எனலாம். ***வள்ளுவன் தன்னை உலகினுக்கே வான்புகழ் கொண்ட தமிழ்நாடு*** என்றார் பாரதியார். வாழ்வின் எப்பகுதியையும் வள்ளுவர் தொடாமல் விட்டது இல்லை. எந்தச் சிக்கலுக்கும் தீர்வு காணாமல் தள்ளியதும் இல்லை. ஓத எளிய நூல்; உணர அரிய நூல்; பற்றி நடக்க முற்றும் உதவும் நூல். தீமைக்கு தீமை செய்யாதே, தீமைக்கு நன்மை செய் என்கிறது திருக்குறள். வாழ்வியல் அறங்களையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் அற இலக்கியமான திருக்குறள் உணர்த்துகின்றது.

திருக்குறளில் வாழ்வியல் அறங்கள்

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர் (997)

மக்களுக்குரிய பண்பு இல்லாதவர்கள் அரம்போலக் கூர்மையான அறிவு உடையவரானாலும் ஓரறிவு உயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவார். ***படித்தவன் நாட்டைக் கூறுபோடுகிறான், படிக்காதவன் சோறுபோடுகிறான்*** என மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையார் கூறுவது இதன்பாற்பட்டதே, இதை உணர்த்தும் சம்பவம் ஒன்றை இனி காண்போம்.

நகரத்தில் வேலைபார்க்கிற அந்த மாப்பிள்ளை விடுமுறைநாளில் எண்ணெய் வணிகம் செய்துவரும் கிராமத்திலுள்ள தன் மாமனார் வீட்டிற்கு வருகின்றார். மாமனார் வீட்டுவாசலில் செக்கு இயங்கிக்கொண்டுள்ளது. செக்கு மாடுகள் சுற்றி வருகின்றன. மாப்பிள்ளையைக் கண்ட மாமனார் செக்குமாடுகளிலிருந்து விடுபட்டு, மாப்பிள்ளையை வரவேற்று வீட்டிற்குள் அழைத்துச் செல்கிறார். மாப்பிள்ளையின் வேலை மற்றும் அன்றாட வாழ்க்கை குறித்து நலம் விசாரிக்கிறார். பின்னர் மாப்பிள்ளைக்கு அறுசுவை உணவு பரிமாறப் படுகின்றது. இப்போது மாமனாரைப் பார்த்துக் கேட்டார். ***மாமா நீங்கள் இங்கு இருக்கின்றீர்கள் செக்கு அங்கு (வெளியில்) உள்ளது. நீங்கள் அங்கு இல்லாவிட்டால் மாடுகள் சுற்றி வராதே. செக்கு இயங்காதே?*** என கேள்விகளை தொடுக்கின்றார். ***மாப்ளே மாடுகளின் கழுத்தில் மணி கட்டியுள்ளேன் மாடுகள் சுற்றினால் மணிச் சத்தம் கேட்கும். நின்றால் சத்தம் இருக்காது அதை வைத்துக் கண்டுபிடித்துவிடுவேன். அவை பழக்கத்தின் காரணமாக செக்கு நுகத்தடியில் கட்டி விட்டாலே நான் அங்கு நின்றாலும், நிற்காவிட்டாலும் சுற்றிக்கொண்டு வருபவை*** என மாமனார் பதில் கூறுகிறார். ***மாமா அந்த மாடுகள் ஒரே இடத்தில் நின்றுகொண்டே செக்கைச் சுற்றாமல் தலையை ஆட்டியபடியே மணி ஓசையை எழுப்பலாம் அல்லவா?*** என்கிறார் மருமகன். ***இல்ல மாப்ளே அவைகள் அவ்வாறு செய்வதற்கு உங்களைப்போல் பி.ஏ.,எம்.ஏ. படிக்கல*** என்பார். இதைத்தான் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையார் குமாரராஜா என்ற திரைப்படத்தில்,

ஏட்டில் படித்த தோடு இருந்து விடாதே,
ஏன் படித்தோம் என்பதையும் மறந்து விடாதே
நாட்டின் நெறிதவறி நடந்துவிடாதே

நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்துவிடாதே
துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிட வேண்டும்
சோம்பலை கொல்லும் திறன் பெற்றிட வேண்டும்
வம்பு செய்யும் குணமிருந்தால் விட்டிட வேண்டும்
அறிவு வளர்ச்சியிலே வான் முகட்டினை தொட்டிட வேண்டும்என்பார்.உழைப்போடு இணைந்து செல்லும் கல்விதான் நாட்டை வளப்படுத்தும் என்பது கவிஞரின் ஆழமான நம்பிக்கையாகும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (45)

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று (49) எனும் திருக்குறளை மறவாதே, தீயவழி போகாதே; ***வாழ்க்கையென்னும் ஓடம் வழங்குகின்ற பாடம். மானிடரின் மனதினிலே மறக்க ஒண்ணா வேதம்*** என்று பூம்புகார் திரைப் படத்திலே பாடலாக வரும். கோவலன் வாழ்க்கை பிறர் பழிக்கிற சூழலுக்கு உள்ளான நிலையில் அப் பாடல் காட்சி வருகின்றது.

துடுப்புகள் இல்லா படகு இது
அடிக்கின்ற திசையெல்லாம் போகும்
தீமையை தடுப்பவரில்லா வாழ்க்கை
அந்த படகின் நிலைபோல ஆகும் என்று வாழ்வியல் அறங்கள் குறித்து அப்பாடலடிகள் இருக்கும். அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும். அதுவும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் விளங்கினால் மேலும் நன்மையாகும்.

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல் (குறள். 44)

பழிக்கு அஞ்ச வேண்டும் பகுத்து உண்ண வேண்டும் என்று கூறப்படுகின்றது.

காக்கா கூட்டத்த பாருங்க
அதுக்கு கத்துகொடுத்தது யாருங்க
ஒண்ணா இருக்க கத்துக்கணும் இந்த
உண்மையை சொன்னா ஒத்துக்கணும்
தன்னைப்போல பிறறை எண்ணும்
எண்ணம் வேண்டும்
அந்த தன்மை வரவேண்டுமெனில்
அன்பு வேண்டுமே என்ற வாழ்வியல் அறங்களை உணர்த்தும் திரையிசைப்பாடல் மேற்கண்ட 44வது திருக்குறளுக்கு வலிமை சேர்ப்பதாக உள்ளது.

நான்மணிக்கடிகை உணர்த்தும் வாழ்வியல் அறங்கள்

மனைக்குப் பாழ் வாள்நுதல் இன்மை; தான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்பாழ்
கற்றறிவு இல்லா உடம்பு.

மனைவியில்லாத வீடும் நண்பர் இல்லாத ஊரும், கற்றவர் இல்லாத சபையும், கல்வியறிவற்ற உடம்பும் பயனற்றவை. இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஏதுமில்லை நம்மைச் சுற்றிய நிகழ்வுகளும் நாமும் மகிழ்வுடன் இருக்க நல்ல நண்பர்கள் தேவை. நம் வாழ்வு நண்பர்களுடன் நல்ல உறவுடன் மகிழ்வோடு உள்ளது. நம்மை நாமே செதுக்கிக்கொள்ள நல்ல நண்பர்கள் தேவை. அதனால்தான் திருவள்ளுவர் *நட்பு* என்று ஒரு அதிகாரம் தந்து நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருகின்றது என்று பின்வரும் குறளில் கூறுகின்றார்.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (783)

பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருதல் நூலின் நற்பொருள் கற்கக்கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போன்றதாகும். ஆழமான நட்பு என்பது உள்ளத்திலிருந்து பொங்கி எழுவதாகும் என்பதை,

முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து;
அகம்நக நட்பது நட்பு (குறள், 786)

முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று; நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்புடன் நட்புச் செய்வதே நட்பு ஆகும் என்றும்

நமக்கு அழிவு வந்த காலத்தில் உடனிருந்து துன்பப் படுவதுதான் நட்பு என்பதை,

அழிவின் அவைநீக்கி ஆறு உய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு (குறள். 787) என்கிறது குறள்.அழிவைத் தரும் தீமைகளிலிருந்து நீக்கி நல்ல வழியில் நடக்கச்செய்து அழிவு வந்த காலத்தில் உடனிருந்து துன்பப்படுவதே நட்பாகும் என்பது அதன் பொருள். *தீ நட்பு, நட்பாராய்தல்* என்று கூடுதலான அதிகாரங்கள் வகுத்துள்ளார் வள்ளுவர்.

ஒண்ணா இருக்க கத்துக்கணும்

பிறருடன் ஒத்துவாழவில்லையெனில் ஒருவன் வலிமை அழிந்துவிடும் என்பதை நான்மணிக்கடிகை (21) பின்வருமாறு விளக்குகின்றது.

மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியை — பெய்த
கலம் சிதைக்கும் பாலின்சுவையை; குலம் சிதைக்கும்
கூடார்கண்கூடி விடின்.[2]

பிறருடன் ஒத்து வாழாமை ஒருவன் வலிமையை அழித்துவிடும். பொன்போன்ற அழகிய உடம்பை அவன் சொல்லும் பொய் வாடும்படி செய்யும். ஊற்றி வைக்கப்பட்ட பாத்திரம் பாலின் சுவையைக் கெடுத்துவிடும்.சேராதவர்களிடம் நட்பாகச் சேர்ந்துவிட்டால் அந்த நட்பு குலப்பெருமையைக் கெடுத்துவிடும்.

சேராதவர்களிடம் கர்ணன் சேர்ந்ததால் அவன் நற்குணமுடையவனாக இருந்தாலும் அவர்களைவிட்டு வெளியேற முடியவில்லை. செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடந்தனிலே சேர்ந்தான். வஞ்சக வலையில் வீழ்ந்தான். தீ நட்பு என ஒரு அதிகாரமே தந்து தீய நட்பின் கேடுகளை வள்ளுவர் பின் வருமாறு கூறுகின்றார்.

பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது (குறள். 811)

அன்பு மிகுதியால் பருகுவார்போல் தோன்றினாலும் நற்பண்பு இல்லாதவரின் நட்பு வளர்ந்து பெருகு வதைவிடத் தேய்ந்து குறைவது நல்லது.

மேற்கண்ட நற்பண்பு இல்லாதவரை மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையார்,

தர்மமென்பார் நீதியென்பார் தரமென்பார்
சரித்திரத்தைச் சான்று சொல்வார்
தாயன்புப் பெட்டகத்தைச் சந்தியிலே எறிந்துவிட்டுத்
தன்மான வீரரென்பார்
மர்மமாய் சதிபுரிவார் வாய்பேசா அபலைகளின்
வாழ்வுக்கு நஞ்சு வைப்பார்
கர்ம வினையென்பார் பிரமனெழுத்தென்பார்
கடவுள்மேல் குற்றமென்பார்
இந்தத் திண்ணைப் பேச்சு வீரரிடம் ஒரு
கண்ணாயிருக்கணும் அண்ணாச்சி - நம்ம
ஒண்ணாயிருக்கணும் அண்ணாச்சி என்று கூறுகின்றார்.

வாழைக்குத்தான் ஈன்ற காய் கூற்றம்

வீட்டிலிருக்கிற பெண் அறம் சாராத தீய வழிகளை மேற்கொண்டால் அப்பெண் கணவனுக்கே எமனாகி விடுகிறாள் என்பதனை வாழ்வியல் அறமாக நான் மணிக்கடிகை (83) பின்வருமாறு கூறுகின்றது.

கல்லா ஒருவர்க்குத் தம்வாயின் சொல்கூற்றம்;
மெல்இலை வாழைக்குத் தான்ஈன்ற காய்கூற்றம்;
அல்லவை செய்வார்க்கு அறம்கூற்றம்; கூற்றமே
இல்லத்துத் தீங்கு ஒழுகு வாள்.[3]

கல்வியறிவில்லாத ஒருவர்க்குத் தமது வாயிலிருந்து வரும் சொல்லே எமனாகும் மெல்லிய இலையை யுடைய வாழை மரத்திற்குத் தான் பெற்ற வாழைத் தாரே எமனாகும். பாவங்களைச் செய்கின்றவர்க்கு தருமதேவதையே எமனாகும் வீட்டிலிருந்துகொண்டு கெட்ட வழியில் நடக்கின்ற பெண் தன் கணவனுக்கு எமனாவாள்.

ஒன்றுபட்டு வாழ்தல்

ஆடிப்பாடி வேலை செஞ்சா அலுப்பிருக்காது, அதில் ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது என்கிறார் மக்கள் கவிஞர். மனைவி கணவனை உற்சாகப்படுத்துபவளாகவும் ஒன்றுபட்டு வாழ்பவளா கவும் இருக்க வேண்டும் என 85ஆவது பாடல் பின்வருமாறு கூறுகின்றது.

ஒன்று ஊக்கல் பெண்டிர் தொழில்நலம்; என்றும்
நன்றுஊக்கல் அந்தணர் உள்ளம்; பிறன் ஆளும்
நாடுஊக்கல் மன்னர் தொழில்நலம்; கேடு ஊக்கல்
கேளிர் ஒரீஇ விடல்.[4]

பெண்களின் நல்ல செயல் கணவருடன் ஒன்றுபட்டு வாழ்தலாகும். அவனை உற்சாகப்படுத்துதல் பெண் மக்கள் செயலின் சிறப்பாகும்.

எந்நாளும் நன்மையில் உற்சாகம் காட்டுதல் அறநெறி யாளரின் கருத்தாகும். மற்றவன் ஆளுகிற நாட்டைக் கைப்பற்ற முயலுதல் அரசரின் செயலின் சிறப்பா கும். சுற்றத்தாரைப் பிரிதலால் கேடு உண்டாகும்.

சாக்ரடீஸ் சிந்தனைகள்

உன்னையே நீ அறிவாய் என்கின்ற சாக்ரடீஸின் தத்து வம் உலகப் புகழ் பெற்றது ஏன்? எதற்காக? எப்படி? எதனால்? எவ்வாறு? என்னும் கேள்விகளால் மக்களின் சிந்தனையைத் தூண்டினார்.

எவர் கூற்றையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாதே. உன் அறிவால் சிந்தித்து நீயே அறிந்து கொள்.

உன் உலகம் என்பது உன்னிடமிருந்துதான் தொடங்கு கிறது. எனவே, நீ முதலில் பகுத்தறிவுச் சிந்தனையாள னாக மாற வேண்டும்.

அறியாமை, பெரும்பான்மையில் அரசாட்சி செய்கிற போது, அறிவு- அல்லலும் அவதியும் அடையும். அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று எதையும் சிந்திக் காமல் ஏற்றுக் கொள்ளாதே எவர் சொன்னதானாலும் ஏன்? எதற்கு? எவ்வாறு? என்று கேள்விகளை எழுப்பி உண்மையை உணர்ந்து கொள்.

அறிவை விதைத்தால், ஒழுக்கத்தை அறுவடை செய்ய லாம்.[5]

மேற்கண்டவாறு தத்துவமேதை சாக்ரடீஸ் அறிவு சார் கருத்துக்களைக் கூறுகின்றார். ***நானே சொன்னாலும் உன் அறிவு என்ன சொல்கின்றதோ அதன்படி நட. என் றும் அறிவாயுதம் ஏந்துவீர், அறிவுக்குத் தடையாக இருக் கும் அனைத்தையும் அழி*** என்று தந்தை பெரியார் கூறுகின்றார்.

கல்வி கற்பதனால் அறியாமை குறையும் என நான்மணிக்கடிகை (28) பின்வருமாறு கூறுகின்றது.

கற்பக் கழிமடம் அஃகும்; மடம் அஃகப்
புற்கம் தீர்ந்த இவ்வுலகின் கோள் உணரும்; கோள் உணர்ந்தான்
தத்துவமான நெறி படரும்; அந்நெறி
இப்பால் உலகின் இசைநிறீஇ உப்பால்
உயர்ந்த உலகம் புகும்.[6]

கல்வி கற்பதனால் மிகுந்த அறியாமை குறையும் அறியாமை குறைந்ததனால் அற்ப அறிவு நீங்கி இவ்வுலகத்தின் இயற்கையை அறிவான் இவ்வுலக இயற்கையை அறிந்தால் உண்மையான நெறிபடரும் வழியிலே நடப்பான் அந்த உண்மை நெறியினால் இவ்வுலகிலே புகழை நிலைநாட்டி அதன்பின்உயர்ந்த உலகத்தை அடைவான்.

பழமொழியில் வாழ்வியல் அறங்கள்

ஒவ்வொரு பழமொழியையும் சொல்லி அதன் அடிப் படையில் ஒரு நீதியையும் விளக்கும் ஒவ்வொரு செய்யுளாக நானூறு செய்யுட்களால் அமைந்துள்ளது பழமொழி நானூறு இதனை இயற்றியவர் முன்றுறை அரையனார்.

வாழ்வில் உறுதி வேண்டும்

இல்லறமோ, துறவறமோ தாம் உறுதியாக இரண்டி

லொன்றைமேற்கொண்டு ஒருவர் ஒழுகலாம். அப்படி ஒழுகாதவராகிச் சிறந்த வாழ்நாள் வீணாகச் கழிந்து போக, நடுவே எதனிலும் செல்லாமல் தடைப்பட்டு நின்று எல்லாவற்றையும் ஆழ்ந்து உறுதியாகத் துணிந்து ஒருவழியாகவே நடக்காதவர்கள் வாழ்வைப் பயனின் றிக் கழித்தவர்கள். அவர்களே, காவடியின் இரு பக் கத்திலுள்ள பொருள்களையும் நீக்கிவிட்டுத் தண்டினை மட்டுமே சுமந்து செல்பவர்களுக்குச் சமமானவர்கள்.

இல்வாழ்க்கை யானும் இலதானும் மேற்கொள்ளார்
நல்வாழ்க்கை போக நடுநின் எல்லாம்
ஒரு தலையாச் சென்று துணியா தவரே
இருதலையும் காக்கழித் தார்.[7]

இருவகை வாழ்க்கையினும் எதன்பாலும் முறையே ஈடுபட்டு நிலைத்து வாழாது வாழ்நாட்களைக் கழிப் பவர், பயனற்ற முறையில் வாழ்ந்தவராவர். ***இருதலை யும் காக் கழித்தார்*** என்பது பழமொழி.

மனதில் உறுதி வேண்டும்
வாக்கினில் தெளிவு வேண்டும் என்று மகாகவி பாரதி கூறுவது இதன்பாற்பட்டதே
வலிமையே வாழ்க்கை
பலவீனமே மரணம் என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

குறிக்கோளும் உறுதியுமற்ற வாழ்க்கை பயனற்றே போகும். நம்மைச் சுற்றியுள்ள வாழ்வியல் சம்பவங் களையே சான்றாகக் கூறலாம்.

உயர்ந்தவரை உயர்ந்தவரே அறிவார்

கற்றவரை கற்றவரே காமுறுவர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே
சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பவையெல்லாம் உயர்ந்தவரை உயர்ந்தவரே அறிவார் என்ற கருத்தே ஆகும்.

இனரோங்கி வந்தாரை என்னுற்றக் கண்ணும்;
உண்பவர் அஃதே உணர்ப; உணர்வார்க்கு
அணிமலை நாட! அளறாடிக் கண்ணும்
மணிமணியாகிவிடும்.[8]

மணிகளின் இயல்புகளை உணர்பவர்களுக்கு, அவை சேறாகி இருந்த காலத்திலும் மணிகளாகவே காணப் படும். அதுபோலவே, தொடர்ச்சி அறாது உயர்ந்து விளங்கும் நல்ல குடியிற் பிறந்தவர்களை அவர்க ளுக்கு என்ன தாழ்ச்சிகள் வந்த காலத்திலும் அறி வுடையவர், உயர்வாகவே எண்ணி மதிப்பார்கள்.

வறுமை முதலியவற்றால் தாழ்ச்சியடைந்த காலத்தி லும், குடிப்பிறப்பின் உயர்வு ஒருவரை விட்டு என் றும் மாறாது. சான்றோர் அவரை மதித்துப் போற்று வர் என்பதாம். ***அளறாடிக் கண்ணும் மணிமணியாகி விடும்*** என்பது பழமொழி.

மூடர்களின் உறவு கூடவே கூடாது

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதுஅறி கல்லா தவர் (குறள், 427)

அறிவுடையவர் எதிர்காலத்தில் நிகழப்போவதனை முன்னே எண்ணி அறியவல்லார், அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவர். ***முட்டாள்களுடன் விவா தம் செய்து கொண்டிருந்தால் யார் முட்டாள் என்பதே தெரியாமல் போய்விடும்*** என ஹிட்லர் கூறுகின்றார்.

இல்லற வாழ்வில் ஈடுபாடு கொண்டவன் அவனுக்கு வறுமை ஏற்படுகிறபோது அவனை ஒத்த இல்லறத் தானிடமே தன் சுக, துக்கங்களை பகிர்ந்துகொள்ள வேண்டும். மாறாக, பிச்சை எடுக்கும் பரதேசியிடம் அவன் ஆலோசனை பெற்றால் ***நீ ஏன் குழந்தை, மனைவி என்று உழல்கின்றாய் அவர்கள் பிழைத்துக் கொள்வார்கள். நீ என்னோடு வந்துவிடு உனக்கு ஒரு திருவோடு எனக்கு ஒரு திருவோடு*** என்பான். இதைத் தான் பின்வரும் பழமொழிப் பாடல் கூறுகின்றது.

தெரிவுடையா ரோடு தெரிந்துணர்ந்து நின்றார்
பரியார் இடைப்புகார், பண்பறிவார் மன்ற;
விரியா இமிழ்திரை வீங்குநீர்ச்சேர்ப்ப!
அரிவாரைக் காட்டா நரி.[9]

நெல் அரிபவர்களுக்கு அவ்வேலை கெடும்படியாக எவரும் நரியைக் காட்டமாட்டார்கள். அதுபோலவே, அனைத்தையும் ஆராய்ந்து அறிந்து உணர்ந்து அதில் நிலைபெற்றிருப்போர் நுண்ணறிவு இலாதோரிடையே செல்லமாட்டார்கள். ஆராய்ந்து அறிந்த அறிவுடை யோருடன் கலந்து நல்ல பண்புகளை மேலும் அறி வதிலேயே ஈடுபடுவர். அறிவுடையோர் அறிவுடை யோருடன் கலந்து பழக வேண்டுமே தவிர பய னற்ற அறிவற்றோர் கூட்டத்தில் சேரக்கூடாது.

அறிவு ஆடை போன்றது

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண் (குறள், 421)

அறிவு,அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; அன்றி யும் பகை கொண்டு எதிர்ப்பவர்க்கும் அழிக்க முடி யாத உள்ளரணும் ஆகும். இதைத்தான் பழமொழி நானூறு (11) அறிவு ஆடை போன்றது என்கின்றது.

அறிவினால் மாட்சியொன்று இல்லா ஒருவன்
பிறிதினால் மாண்டதெவனாம் - பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன,
அணியெல்லாம் ஆடையின் பின்.[10]

அறிவினாலே வந்த பெருமைகளே பெருமைகள். அவை ஒன்றும் இல்லாத ஒருவன், பிற செல்வங் களினாலே பெருமை உடையவனாதல் எங்ஙனம்?

பொலிவுபெறச் செய்தலையுடைய இரத்தின ஆபர ணமும், பொன்ஆபரணமும், சந்தனமும், மாலையும் எல்லாம் உடுத்தும், ஆடைக்குப் பின்னரே கருதி மதிக்கப்படும். ***அணியெல்லாம் ஆடையின் பின்*** என் பது பழமொழி. ஆடையே முதன்மையானது என்பது கருத்து.

முடிவுரை

திருக்குறள், நான்மணிக்கடிகை, பழமொழி ஆகிய அற இலக்கியங்கள் மனித வாழ்வைச் செம்மைப்படுத் தும் நோக்கில் எழுந்தவை. ***(தொடர்ச்சி: பக். 119)***

ISSN 2320-4842

Role of Infant-Directed Speech in the Holistic Development of a Child

Thulasidass Rajesh
PhD Research Scholar, CAS in Linguistics, Annamalai University
Assistant Professor, Career Development Centre, SRMIST
Kattankulathur 603 203

P. Manimaran
Associate Professor, CAS in Linguistics, Annamalai University
Annamalai Nagar 608 002

Abstract

A child born into the world is completely at the mercy of its environment to meet all its needs. This includes both the physical and the emotional needs. When it comes to emotional needs, the child needs to feel a sense of belonging through the acceptance of the caregivers. To ensure that, the child goes about developing nuances that come in handy in its attempts to scale this height. There are certain aspects of the environments that make this endeavour a plausible feat. One such aspect is the support extended by the caregivers in the way they try to meet the needs of the child. Though this care is felt in everything they do, it is fully manifested only in infant-directed speech (IDS), also called as baby talk. In this article we will discuss the different ways in which IDS supports the multiple aspects of a child's development.

Keywords: Child's development, baby talk, social bonding, emotional regulation, language acquisition

Introduction

"Nothing is as resourceful to an infant as a language".

A holistic development is one through which infants grow not only physically but also emotionally i.e. mentally and socially. This encapsulates various domains like physical, cognitive, emotional, and social development.

Physical Development: This involves the growth and changes in a child's body. It includes gross motor skills (crawling, walking, etc.) and fine motor skills (grasping objects, drawing, etc.). Changes in height, weight, muscle mass, and the development of sensory abilities also contribute to physical development.

Cognitive Development: The growth of thinking, learning, and problem-solving abilities includes processes such as memory, reasoning, perception, language development, and imagination. It is influenced by both biological maturation and environmental experiences.

Emotional Development: The growth of emotional regulation, understanding, and expression. It involves understanding and managing one's own emotions as well as empathising with those of others. Forming healthy relationships is at the core of it and thereby handle any mental issue through it.

Social Development: The acquisition of social skills, values, and behaviours essential for the effective interaction with others. This includes learning to communicate, cooperate, share, take turns, and empathize with others. Social development also involves understanding social norms, roles, and expectations within one's culture.

For an infant, all the above developments occur in stages, with each stage building upon the accomplishments of the previous stage and providing the foundation for subsequent developments. The roles of parents and caregivers is crucial in supporting and facilitating healthy child development by providing a nurturing environment, appropriate stimulation, guidance, and opportunities for exploration and learning. This is mainly because it is these people to whom child shares it needs in its own way. Further, this sharing needs a vehicle, which promotes child-centred approach. Through this article I wish to propose that infant-directed speech (IDS) is one of the best options. The small description of IDS is followed by the different ways in which it contributes to a child's overall development.

Infant-Directed Speech

Baby talk, also known as IDS or *motherese*, is a distinct way of speaking that adults use when communicating with infants. The unique aspects of IDS that make it suitable for children are mentioned below.

Higher Pitch: IDS typically involves using a higher pitch when compared to normal speech. This higher pitch which is often is more melodious and hence grabs the attention of infants.

Exaggerated Intonation: The exaggerated variations in intonation employed by caregivers when speaking in IDS can help maintain the infant's attention and convey emotions more vividly.

Simplified Vocabulary: IDS often contains simpler words and phrases that are easier for infants to process.

Repetition: Repetition is a common feature of IDS. Caregivers repeat sounds, syllables, or words which helps infants learn language patterns and develop their vocabulary.

Shorter Sentences: IDS tends to involve sentences whose length or wordcount increase gradually in line to present accommodate the psycholinguistic ability of the child. This allows infants to focus individual words more easily.

Emotional Expression: The care and concern of a caregiver constantly accompanies IDS which is often characterized by warmth, affection, and emotional expression. Caregivers often use it to reassure infants.

Facial Expressions and Gestures: Caregivers may accompany IDS with exaggerated facial expressions, gestures, and body language to enhance communication and engagement with the infant.

Attention-Grabbing: IDS is designed to capture and maintain the infant's attention. Caregivers may use exaggerated sounds, gestures, and vocalizations to keep the infant engaged in the interaction.

IDS plays a crucial role in laying the foundation for the infant's future language skills and social interactions by allowing the infant to tailor the speech of these caregivers to suit its unique needs. By doing so, the caregiver's end up providing an environment that is suitable for the infant's holistic development.

Social Bonding

Social bonding, the attachment and emotional connection formed between the caregivers and infants, is crucial for the infant's emotional and psychological development. While caregivers provide care, attention, and affection, infants respond with trust, comfort-seeking behaviours, and eventually, attachment. The key components of social bonding include the following.

Caregiver responsiveness: Prompt, consistent, and sensitive responses to the infant's needs promote a secure attachment.

Eye contact: Eye contact facilitates emotional bond and interaction between caregivers and infants.

Physical touch: Physical contact, such as cuddling and holding, raises feelings of safety and comfort in infants.

Baby talk serves as a mechanism for caregivers to engage with infants, convey warmth and affection. In turn, this strengthens the bond between caregiver and infant, promoting feelings of security, trust, and attachment.

Research suggests that infants are more responsive to IDS and hence prefer IDS to adult-directed speech (ADS), indicating its contribution to social bonding. Additionally, the quality of social bonding and interactions during infancy can have long-lasting effects on emotional regulation, social skills, and overall well-being throughout life. It also provides the prerequisite where the infant can perceive its environment to be secure and positive.

Emotional Regulation

Emotional regulation refers to the ability to manage and express one's emotions effectively, which is crucial for healthy social and psychological development. The way IDS can impact emotional regulation of an infant is given below.

Emotional Tone and Expression: The exaggerated intonation, emotional warmth, and expressiveness are the signatures of IDS. The melodic and nurturing tone employed by caregivers when speaking to infants, convey positive emotions such as love, comfort, and reassurance. Apart from ensuring that infants feel secure, understood, and emotionally connected to their caregivers it also lays the foundation for healthy emotional regulation.

Responsive Interaction: The adaptation that the speech and behaviours of Caregivers undergoes is based on the infant's cues and emotional states. Through prompt response and sensitivity to the infant's needs, caregivers acknowledge the infant's mental state and teach them how to regulate their own emotions through social cues and interactions.

Attachment and Security: The nurturing and affectionate communication style of IDS promotes attachment and feelings of security in infants which foster a strong emotional bond between caregivers and infants and serves as a secure base for exploring the world.

IDS plays a crucial role in promoting emotional regulation in infants and young children by fostering secure attachment, responsive interaction, and stress reduction. By creating a nurturing and supportive environment through IDS, caregivers contribute to the infant's emotional well-being and lay the groundwork for healthy emotional regulation skills that will benefit them throughout their life.

Language Development

The role of IDS is very crucial especially in the early stages when the infant is using acoustic cues to get hold of the expressions it is exposed to which it will try to recreate by making different sounds. This requires that the expressions of caregivers are in a form that is tailored to suit the psycholinguistic abilities of the infant. This is possible in IDS, only due to the constant feedback from the child which prompts the caregivers to conform in their future conversations. Other traits of IDS that make it the best bet for a child's language acquisition are listed below.

Simple Language: IDS involves using simplified language with easy-to-understand vocabulary and grammar structures. Caregivers instinctively modify their speech to match the linguistic abilities of infants, which helps them comprehend and process language more effectively. By exposing infants to simplified language through IDS, caregivers facilitate the initial stages of language learning.

Repetition and Reinforcement: IDS often includes repetition of sounds, syllables, and words, which reinforces language learning. Infants learn through repetition and exposure to language patterns, by providing a supportive and engaging context.

Phonological Development: IDS contributes to phonological development, which involves acquiring not only the sounds but also the phonemes of a language. Exaggerated speech sounds and intonation in baby talk make it easier for infants to distinguish between different sounds while learning the phonetic aspects of language.

Social Interaction and Turn-Taking: Social interaction and turn-taking between caregivers and infants, fostered by IDS, are essential for language development where they vocalize and respond to each other's cues. Further, infants are provided with opportunities to practice listening, imitating, and responding to language in a supportive and responsive environment through this interactive communication style.

Positive Reinforcement: Positive reinforcement in the form of smiles, eye contact, and physical affection always accompany IDS, which enhances the infant's motivation to engage in communication and language learning. Vocalizing and babbling by infants in response to the warmth and encouragement conveyed through IDS is more frequent which promotes active participation in language development.

Cognitive Stimulation: IDS provides the necessary stimulation for cognitive development by introducing infants to new words and linguistic structures. Cognitive processes such as memory, attention, and problem-solving, lay the foundation for later language and cognitive development.

IDS, overall, plays a crucial role in language development by providing infants with an engaging and linguistically rich environment. Thus IDS facilitates the acquisition of language skills and lays the groundwork for future linguistic abilities.

Summary

For an infant, a life of interactions, memories, experiences and fulfilling relationships begins with the urge to express. IDS hand holds the child in its baby steps into this unparalleled adventure. It provides a once-in-a-lifetime opportunity for the caregivers not only to appreciate the magical world of the child but also to partake as fellow magicians peddling their wares through the busy streets of a child’s mind.

(128ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆசையில் பெண்மையை மீறி அப்பெண்மைக்கே கலங்கம் ஏற்படுத்துகின்றனர் என்பதை கவிஞர் அப்துல் ரகுமான் கீழ்க்கண்ட கவிதை வழி எடுத்துரைக்கின்றார்.

மெல்லினமே:
வல்லினமாகம் முயற்சியில்
விகாரமாகிவிட்டாயே,
பரிதாபமான பறவையே!
முன்பு
சிறகு கத்திரிக்கப்பட்டாய்,
இப்போதோ
கூண்டென்று நினைத்துக்
கூட்டையே துறந்துவிட்டாயே்[7]

என இல்லற வாழ்க்கையின் பொறுப்புகளிலிருந்து விலகும் பெண்களைச் சாடுவதாக இக்கவிதை அமைந்துள்ளது. இன்றைய பெண்கள் சுதந்திரத்தை நன்றாக உணர்ந்து கடமை எது சுதந்திரம் எது என்று உணர்ந்து செயல்படவேண்டும் என்கிறார் கவிஞர் அப்துல்ரகுமான்.

முடிவுரை

கவிஞர் அப்துல் ரகுமான் கவிதைகளில் நேயர் விருப்பம், சுட்டு விரல், பித்தன் ஆகிய கவிதைகள் சமுதாய அவலங்களை எடுத்துரைப்பதாக உள்ளது. மேலும் இக்கவிதைகள் சமுதாய அவலங்களை எடுத்துரைப்பதோடு அதற்குத் தேவையான தீர்வினையும் மாற்று வழிகளையும் கொடுத்துச் செல்வதாக அமைந்துள்ளது. இக்கவிதைகள் மூலம் சமுதாய அவலங்களை இனம்காணவும் அதன் பாதிப்பினை உணரவும் முடிகின்றன.

சான்றெண் விளக்கம்

1. கி.நாகராஜன், கல்வி உளவியல், ப.235
2. அப்துல் ரகுமான், கவிக்கோ கவிதைகள் (பித்தன்) ப.435
3. மேலது ப.435.
4. மேலது, ப.194
5. மேலது, ப.194
6. மேலது, ப. 204
7. மேலது, ப.205

All the world's a stage, and all the men and women merely players. They have their exits and their entrances; And one man in his time plays many parts.

- William Shakespeare in *As You Like It*

ISSN 2320-4842

அப்துல் ரகுமான் கவிதைகளில் சமுதாய விழிப்புணர்வுச் சிந்தனைகள்

வே. சதீஷ்
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழாய்வுத் துறை
கந்தசாமிக் கண்டர் கல்லூரி, பரமத்தி வேலூர் 638 182

நெறியாளர்: **முனைவர் ந. திலகம்**
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை
கந்தசாமிக் கண்டர் கல்லூரி, பரமத்தி வேலூர் 638 182
(இணைவு: பெரியார் பல்கலைக்கழகம்)

முன்னுரை

நுட்பமான பொருள் புதைந்த, சாதி மத வேறுபாடின்றி முக்காலத்திற்கும் பொருந்தும் கருத்துக்களைக் கவிதையாகப் படைக்கும் ஆற்றல் பெற்றவர் கவிக்கோ அப்துல் ரகுமான். சமுதாயத்தில் நடக்கும் அநீதிகளைச் சுட்டிக்காட்டி விழிப்புணர்வு ஊட்டும் அவரது கவிதைகளுள், இன்றைய அரசியல் நிலை, கல்வியின் நிலை, பெண் சுதந்திரம் போன்ற தலைப்புகளில் ஆராய்ந்து எடுத்துரைக்கும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை படைக்கப்பட்டுள்ளது.

அப்துல் ரகுமான் - அறிமுகம்

தமிழ்நாட்டில் வாணியம்பாடியில் பிறந்த அப்துல் ரகுமான் வானம்பாடி இயக்கக் கவிஞர்களோடு இணைந்து இயங்கியவர். தொடக்கக் கல்வியையும் உயர்கல்வியையும் மதுரையில் முடித்துச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். கலைஞர் கருணாநிதி அவர்களால் 'கவிக்கோ' என்ற பட்டம் பெற்றவர். 40க்கும் மேற்பட்ட படைப்புகளுக்குச் சொந்தக்காரர். ஆலாபனை எனும் கவிதைத் தொகுப்பிற்குச் சாகித்ய அகாதெமி விருது பெற்றவர். இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த இவர் பொதுவுடைமைக் கருத்துக்களை மையப்படுத்திக் கவிதை எழுதுவதில் தனிச்சிறப்புப் பெற்றவர்.

இன்றைய கல்வியின் நிலை

கல்வி கற்பது என்பது இயற்கையான சூழல் சார்ந்து அமையவேண்டும். கற்றல் என்பது கற்பவர்களின் இயல்பான ஆர்வங்கள் மற்றும் திறமைகளின் அடிப்படையில் இருக்கவேண்டும். கல்வியானது நல்வழிப்படுத்தவும் தூய்மைப்படுத்தவும் சூழல் சார்ந்த சமூக இலக்குகளைப் பெறவும் உதவுகின்றது. இயற்கைக் கோட்பாடு இறுக்கமான கல்விச் சூழலை எற்பதில்லை.

ஏட்டுக்கல்வியை எதிர்த்த ரூசோ, ***இயற்கையின் மடியில் குழந்தையானது தனது நேரடி அனுபவங்கள் மூலம் கல்வி கற்கவேண்டும்***[1] என்கிறார். இதற்கு மாறாகப் புத்தகப் புழுவாக மாறியும் சுயசிந்தனையின்றியும் சமூக அக்கறையின்றியும் மதிப்பெண் பெறும் நிலை குறித்து அவரின் பாடலடிகள் வருமாறு:

உங்கள் புத்தகங்கள்
கண்களைத் திறப்பதில்லை
ஊற்றுக் கண்களைத்
தூர்த்து விடுகின்றன:
காகித ஓடங்களை
நம்பி இருப்பவர்களே!
நீங்கள் எப்படி
அக்கரை போய்ச் சேர்வீர்கள்?[2]

இன்றைய இளைஞர்கள் புத்தகங்களிலும் சமூக ஊடகங்களிலும் மட்டுமே சமுதாயத்தைப் பார்க்கின்றனர். நடைமுறை வாழ்க்கைப் பாடத்தை கற்பதில்லை என்று சாடுகின்றார். மேலும் இன்றைய நாளில் மாணவர்கள் கஷ்டம் தெரியாமல் வளர்கின்றனர். அது சிறந்தல்ல என்பதனைக் கீழ்க்கண்ட கவிதையில் கவிஞர் அப்துல் ரகுமான் எடுத்துரைக்கின்றார்.

உங்களுக்குக்
கண்ணீர் துளிகளைப்
படிக்கத் தெரிந்திருந்தால்
நீங்கள்

மனிதனின் சாரத்தை
அறிந்திருப்பீர்கள்
எழுத்துக்களால் அல்ல
காயங்களால் கற்பதே
கல்வி என்பதை
அறிந்து கொள்ளுங்கள்[3]

இவ்வாறு இன்றை கல்வி நிலை அனுபவங்களால் நிரம்பாத கல்வியாக உள்ளது என்பதை கவிஞர் அப்துல் ரகுமான் எடுத்துரைக்கின்றார்.

இன்றைய அரசியல் நிலை

இன்றைய மக்களின் வாழ்க்கை முன்னேற்றம் அரசியல்வாதிகளிடமே உள்ளது. அத்தகைய அரசியல் வாதிகளின் நிலையைச் ‘சுட்டுவிரல்’ கவிதையில் புதிய பாரதம் தலைப்பில் அன்றைய பாரத பூமியில் சகுனியின் சூதால் அரசியலைக் களங்கப்படுத்தினான். அதனால் பாரதப்போர் ஏற்பட முக்கிய காரணமாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் இன்றோ சகுனியால் அனைத்து இடங்களிலும் சூதாட்டம் உள்ளது கண்டு சகுனியே வியந்து கூறுவது போன்ற பாவனையில் இக்கவிதையை அமைத்துள்ளார் கவிஞர் அப்துல் ரகுமான்.

தேர்தல் வந்தால் அரசியலில் இருந்து விலகியவரும் திரும்ப வந்துவிடுவர் என்பதை இக்கவிதையில் கவிஞர் உரைநடை வழியில் எடுத்தாண்டுள்ளார்.

வணக்கம் தலைவரே! என்னைத் தெரிகிறதா?
சகுனி-அசல் சகுனி, என்ன அப்படி விழிக்கிறீர்கள்?
என்றைக்கோ செத்துபோனவன் இன்றைக்கு
எப்படி எழுந்துவந்தான் என்று
ஆச்சரியப்படுகிறீர்களா?
தேர்தல் வருகிறதல்லவா செத்துப்போனவர்கள்
எல்லாம் எழுந்து வரவேண்டியதுதானே![4]

சகுனி சூழ்ச்சிக்கு முக்கியமாகப் பயன்படுத்தியதெல்லாம் சூதாட்டம் ஒன்றுதான். ஆனால் இன்றோ அரசியலில் பல்வேறு துறைகளிலும் பலவித நிலைகளிலும் சூதாட்டம் வேறு வடிவில் காணப்படுகின்றன என்பதனைக் கீழ்க்கண்ட கவிதைவழிக் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

சூதில் மட்டுமல்ல, வாதிலும் வல்லவர்களாக
இருக்கிறீர்கள்
உங்களிடம் நான் பாடம் கற்றிருந்தால் என் கட்சி
தோல்வியைத் தழுவியிருக்காது
அரசியலில் சூதாட்டத்தை அறிமுகப்படுத்தியவன்
நான்தான், ஆனால் நீங்களோ அரசியலையே
சூதாட்டம் ஆக்கிவிட்டீர்கள்!
நான் பகடைகளைத்தான் உருட்டினேன், நீங்களோ
மக்களையே உருட்டுகிறீர்களே!
தருமனைத்தான் நான் வென்றேன், நீங்கள்
தருமத்தையே வென்றுவிடுகிறீர்களே![5] என்று இன்றைய அரசியல் நிலையின் அவலம் குறித்துக் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

பெண் சுதந்திரம்

உலகிலுள்ள அனைத்து உயிர்களிலும் ஆண்களுக்கு இணையான சிறப்பினை பெற்றது பெண்னினமாகும். அவ்வகையில் மானிட சமூக அமைப்பில் ஆணாதிக்கச்சமுதாயமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்தகு சமுதாயத்தளங்களில் பெண்கள் சிக்குண்டு போராடி வருகின்றனர். ‘கூடு துறக்கும் பறவைகள்’ எனும் கவிதையில் சமுதாய அமைப்பில் பெண்கள் தெய்வங்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர், இல்லையென்றால் பேயாகச் சித்தரிக்கப்படுகின்றனர்! அவர்கள் எப்பொழுது மனிதர்களாகப் பார்க்கப்போகின்றனர் என்று குறிப்பிடுகின்றார்.

பெண்ணே!
துருவங்களுக்கிடையே
ஊஞ்சலாட்டப்படுகிறவளே!
ஒன்று தெய்வமாகிறாய்:
இல்லையென்றால்
பேயாகிறாய்,
மனிதம் உனக்கு
எப்பொழுது வாய்க்கும்?[6] எனப் பெண்களின் அடிமை நிலை குறித்து மேற்கண்ட கவிதையில் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

சுதந்திரப் பெண்களின் நிலை

பெண்கள் சங்க காலத்தில் ஆணுக்குச் சரிநிகர் சமமான வாழ்க்கை வாழ்ந்தாலும் அதன்பின் அரசியல் மாற்றத்தாலும் அந்நியர் ஆட்சியாலும் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். இருப்பினும் கடந்த நூற்றாண்டிலிருந்தே பெண் சுதந்திரம் பேசும் பொருளாகவே இருந்தது. ஆனால் தற்பொழுது பெண்கள் சுதந்திரம் உறுதியாகிவிட்டது. இதற்காகப் பாடுபட்ட கவிஞர்கள், அரசியலறிஞர்கள், சுதந்திரப் போராட்ட தியாகிகள், எழுத்தாளர்கள், சமூக ஆர்வலர்கள் போன்றோரின் அயராத உழைப்பும் உயிர்த் தியாகமும் கொஞ்சமல்ல. இவ்வாறு உயிர்த் தியாகத்தாலும் உழைப்பாலும் வாங்கித் தந்த சுதந்திரத்தைப் பெண்கள் சிலர் தவறாகப் பயன்படுத்தவும் தொடங்கிவிட்டனர். குறிப்பாக, குடும்ப வாழ்க்கையை வெறுக்கும் பெண்ணின் நிலையைக் கீழக்கண்ட கவிதைவழிக் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

உனக்கு கிடைத்த சுதந்திரம்
இந்த நாட்டுக்குக் கிடைத்த
சுதந்திரம் போலவே ஆகிவிட்டது
முன்பு
உனக்கு
மறுக்கப்பட்டது
இப்பொழுது
அகத்தை நீ
மறுதலிக்கிறாய்[8]

பெண்கள் சிலர் ஆணுக்கு நிகராக வேண்டுமென்ற

(தொடர்ச்சி: பக். 126)

என் உடைந்த இதயத்தின் வலியை
எந்தச் சொற்களாலும் விளக்க முடியாது

நான் கடந்த காலத்திற்குப் போக விரும்புகிறேன்,
நான் நிம்மதியாகத் தூங்க முடிந்த
இரவுகளுக்குப் போக விரும்புகிறேன்.
எந்த அச்சமுமின்றி வெளியில் சென்று
என் வாழ்க்கையை அனுபவிக்க முடிந்த
நாட்களுக்குப் போக விரும்புகிறேன்.
நான் துயிலெழுந்து அலமாரிக்குச் சென்று
இன்று அலுவலகத்திற்கு எந்த ஆடை
அணிந்து செல்ல வேண்டுமென்று
நான் முடிவெடுக்க முடிந்த
நாட்களுக்குப் போக விரும்புகிறேன்.
மாதத்தின் கடைசி நாளில்
நான் வங்கிக்குச் சென்று,
நான் கடினமாக உழைத்து ஈட்டிய
என் ஊதியப் பணத்தை எடுத்துக்கொண்டு,
சந்தைக்குச் சென்று,
நான் விரும்பியதெல்லாம் வாங்க முடிந்த
நாட்களுக்குப் போக விரும்புகிறேன்.
பெண்ணாக இருப்பதில் பெருமிதம் கொள்ளவும்
பெண் என்ற போதிலும் எந்தத் தடையுமின்றி
என் நகரம் எங்கும் நடந்து செல்லவும் முடிந்த
நாட்களுக்குப் போக விரும்புகிறேன்.
நான் வீட்டை விட்டு வெளியே போகும்போதெல்லாம்
நகரம் எங்கும் மூவண்ணக் கொடியைக்
கண்டு மகிழ முடிந்த
நாட்களுக்குப் போக விரும்புகிறேன்.

நல்லதோர் எதிர்காலத்தைற்காக நம்பிக்கையுடனும்
ஆர்வத்துடனும் நான் வாழ முடிந்த
நாட்களுக்குப் போக விரும்புகிறேன்.
முன்பு போலவே இருண்ட இரவுக்குப் பிறகு
ஒளிமயமான நாளைய நாள் வர வேண்டும்
என்று நான் விரும்புகிறேன்,
ஆனால் இந்த இருண்ட இரவு
கடந்த ஒரு மாதமாக முடிவுறவில்லை.
என் கடவுளே, நான் தெய்வ நிந்தனையாகச்
சொல்லவில்லை,
ஆனால் நீ எங்களுக்கு மகிழ்ச்சியான
உலகளிக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.
ஒவ்வொருவரும் எதிர்காலத்தை நோக்கி
நகர நினைக்கிறார்கள்,
ஆனால் நானோ
கடந்த காலத்திற்குப் போக விரும்புகிறேன்.
இந்த நேரத்தில், மனிதாபிமானத்தைக்
காட்டியதற்காகச் சிலருக்கு
நன்றி சொல்ல விரும்புகிறேன்,
ஆனால் எனக்கும் நிறைய மனக்குறைகள் உண்டு...
என் உடைந்த இதயத்தின் வலியை
எந்தச் சொற்களாலும் விளக்க முடியாது.

– பெயர் தெரியாத ஆப்கான் அகதி
தமிழில்: வ. ஜெயதேவன்

Regd. R. Dist. No. 717/2007 RNI No. 17520/2007

இறக்குமதி கிரேக்கமொழிக் கவிதை

இசைப் பக்கவாத்தியம்

உன்னிடம் நான் சொல்ல விரும்புவது
கவிதையில் இல்லை
உன்னிடம் பேச விரும்பியதெல்லாம்
அவ்வளவு அதிகம் இல்லை

ஆனால்
இதயத்தை ஈர்க்கும் புத்தகத்தைத்
திறக்கும் ஒவ்வொரு முறையும்
புரியாமைகளின் போதாமையால் நான்
துண்டுதுண்டாக வெட்டப்படுகிறேன்

என் காதலை உறங்கவைத்தேன்
சூட்டிகையான குழந்தைகளுக்குக்
கனவுகள் நல்லது என்றனர்.
என்
உறங்காத பொழுதின்
ஒளிமயமான தருணத்தில் உன்முகம்
ஞாயிற்றுக் கிழமை ஒன்றின் பிற்பகலில்
இரகசியத் தொலைபேசி அழைப்பைப்போல.

நினைத்துப் பாரேன்
ஒவ்வொரு காலை நேரத்திலும் நீ
கண்விழிக்கும்போது
உன் தனிமையின் பழையதாகாத
உணர்வுப் பெருக்கோடு இருக்கிறாய்.

அதனால்தான்
உடைகளை மாற்றிக் கொள்கிறாய்
தலையைப் புதிய பாணியில்
வாரிக்கொள்கிறாய்.

பாராமுகமான கண்ணாடியில்
கவனமாக உன்னைப் பார்க்கிறாய்
அதன்பிறகு
அலுப்புத்தருகிற புத்தகங்களை எடுத்துகொண்டு
பாடத்திற்குள் போகிறாய்
உனக்கென்ன பயன் உன் பாடங்களால்?
எனக்கும்தான்
கவிதைகளால் என்ன பயன்?
காலைவணக்கம் கண்மணியே!

- வாசிலிஸ் ஸ்டெரியாதிஸ் [Vassilis Steriadis]
[1947-2003]